www.padippakam.com

# தமிழீழம்

## வரலாற்றுத் தேவை; வாழ்க்கையின் கட்டளை

தியாகு

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

2

# தமிழீழம்

## வரலாற்றுத் தேவை; வாழ்க்கையின் கட்டளை

தியாகு

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்
1434 (36/22), இராணி அண்ணா நகர்,
சென்னை - 600 078.
பேச : 9283222988

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழம்:
# வரலாற்றுத் தேவை;
# வாழ்க்கையின் கட்டளை

■

தியாகு

■

பதிப்பு : பிப்ரவரி 2008

■

வெளியீடு :
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்
1434 (36/22), இராணி அண்ணா நகர்,
சென்னை - 600 078.
பேச : 9283222988

■

120 பக்கங்கள்

■

ஒளியச்சும் வடிவமைப்பும்
விஜி கிராஃபிக்ஸ்
சென்னை.

■

விலை
ரூ. 40

படிப்பகம்

www.padippakam.com

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடாகிய சமூகநீதித் தமிழ்த் தேசம் ஏட்டைப் படிப்பதும் காப்பதும் பரப்புவதுமாகிய பணிகளைத் திறம்பட ஆற்றி வருபவர் அன்புத் தோழர் விசு (விசுவநாதன் / கரிகாலன்).

கவிதா – கரிகாலன் வாழ்க்கைத் துணைநல ஏற்பு நிகழ்ச்சியில் எனது நூல் ஒன்றை வெளியிட வேண்டும் என்று விரும்பி, இன்றைய சூழலுக்குப் பொருத்தமாகத் 'தமிழீழம்: வரலாற்றுத் தேவை; வாழ்க்கையின் கட்டளை' என்னும் இந்நூல் வெளிவருகிறது. இது ஈழம் தொடர்பாக நான் கடந்த ஈராண்டு காலத்தில் எழுதி வெளிவந்த சில கட்டுரைகளின் தொகுப்பு. நூலின் தலைப்புக்குரிய கட்டுரை மட்டும் இந்நூலிற்கெனப் புதிதாக எழுதிச் சேர்க்கப்பட்டு முதலில் இடம்பெறுகிறது. பிற கட்டுரைகள் யாவும் காலவரிசைப்படியே தரப்படுகின்றன.

'தீரன் திண்ணியன் தேசத் தலைவன்' – தமிழீழத் தேசியத் தலைவரின் 50ஆம் பிறந்தநாளை முன்னிட்டு ஈழமுரசு (பாரிஸ்) வெளியிட்ட சிறப்பு மலரில் இடம்பெற்றது. 'தென்கீழ் வானத்தில் தமிழீழச் செம்மீன்' 2006 பிப்ரவரியில் தமிழ் தமிழர் இயக்க வெளியீடாக வந்தது. இவற்றோடு, 2006–07 காலத்தில் தமிழர் கண்ணோட்டத்தில் வெளிவந்த நான்கு கட்டுரைகளும், 2007–08இல் தமிழ்த் தேசத்தில் நான் இதுவரை எழுதியிருக்கும் ஈழம் தொடர்பான கட்டுரைகள் – ஆசிரியவுரைகளும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

இத்தொகுப்பில் மொத்தம் 17 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. யாவும் ஈழம் தொடர்பானவை.

மணமக்கள் கவிதா – கரிகாலனுக்கு என் வாழ்த்து!

இந்நூலின் ஆக்கத்தில் பல வகையிலும் துணை நின்ற தோழர்கள் மு. கருப்பையா, சிவ. காளிதாசன், வே. பாரதி ஆகியோருக்கும், 'விஜி கிராஃபிக்ஸ்' நீ. தமிழேந்திக்கும், அச்சகத்தாருக்கும் நன்றி.

சென்னை
03-02-2008

– தியாகு

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே . . .


தமிழீழம்: வரலாற்றுத் தேவை; வாழ்க்கையின் கட்டளை – 5

தீரன் திண்ணியன் தேசத்தலைவன் – 9

இருதேசங்கள் – ஒரு தேர்தல் தமிழர் புறக்கணிப்பு – 15

தென்கீழ் வானத்தில் தமிழீழச் செம்மீன் – 19

போரைத் திணிக்கும் சிங்களம் பொங்கிச் சிவக்கும் தமிழீழம் – 35

இந்தியத் தலையீடு ஈழத் தமிழரைக் காக்குமா? – 44

செங்கொடி தூக்கிச் சிங்களம் காக்கும் சிபிஎம் – 50

தேன் சொல்லில் மறையுமா தீச்செயல்? – 60

ஆயுதம் ஏந்தட்டும் மீனவர் கைகள்! – 66

வெல்க வான்படை! – 70

இந்திய – சிங்களச் சதிவலை அறுப்போம்! – 72

'தமிழர் பிரச்சனை' முடுமந்திரமா? – 75

இன ஒடுக்குமுறையைக் காக்கவே ஈழ எதிர்ப்பு – 80

பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கு வீரவணக்கம்! – 90

பொருந்தாத் தடையின் பூச்சாண்டி மிரட்டல்! – 92

'இந்து'வின் படுகொலைப் பரிந்துரை! – 100

வீழ்த்தப்பட்ட வெண்புறா வேங்கையாய்ச் சிலிர்த்தெழும்! – 114


படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழம்:
# வரலாற்றுத் தேவை; வாழ்க்கையின் கட்டளை

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

- *திருக்குறள் (948)*

நோயையும் நாடாமல், நோய் முதலையும் நாடாமல், அது தணிக்கும் வாயையும் நாடாமல் செயல்புரிவோரைக் கள்ள மருத்துவர் என்போம். சமூக-அரசியல் சிக்கல்களிலும் கள்ள மருத்துவர்களுக்குப் பஞ்சமில்லை. இவர்கள் புற்றுநோய்க்குப் புனுகு தடவப் பார்ப்பார்கள், எய்ட்சுக்கு எண்ணெய் குடிக்கச் சொல்வார்கள்.

சிறிலங்காவின் சிங்கள ஆட்சியாளர்கள் அன்று தொட்டு இன்றுவரை தமது நாட்டின் தேசிய இனச் சிக்கலுக்குத் தீர்வுகாணக் குறித்துரைக்கும் மருந்துகளெல்லாம் முழுக்க முழுக்க கள்ள மருத்துவத்தின் பாற்பட்டவையே.

ஈழத் தமிழர்கள் வரலாற்று வழியில் ஒரு தேசிய இனமாக வளர்ந்து நிலைத்திருப்பதையோ, வழிவழியாக வரும் அவர்களின் தாயகத்தையோ, அவர்களுக்குப் பிறப்புரிமையாக வாய்க்கப் பெற்ற தன்தீர்வு (சுயநிர்ணயம்) உரிமையையோ கொள்கையளவில் அறிந்தேற்பதற்கும் கூட சிங்கள ஆட்சியாளர்களின் பேரினவாதம் இடந்தருவதில்லை.

அண்மையில் இனச்சிக்கலுக்குத் தீர்வு என்ற பெயரால் அனைத்துக் கட்சிப் பேராளர் குழு கொடுத்திருக்கும் தீர்வுத் திட்டமும் மேற்கூறிய பேரினவாத அணுகுமுறையின் மற்றுமொரு வெளிப்பாடுதான்.

புதிய மொந்தையில் பழைய கள் என்பார்கள். இந்தத் தீர்வுத் திட்டத்தை அப்படிக்கூடச் சொல்ல முடியாது. பழைய மொந்தையில் பழைய கள் என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். அந்தப் பழைய கள்ளும் கூட அளவிலும் தரத்திலும் வெகுவாகக் குறைந்து போய் விட்டது. எப்படி என்று பார்ப்போம்.

புதிய தீர்வுத் திட்டத்தின் சாரம் என்னவென்றால், சிறிலங்கா அரசமைப்புச் சட்டத்தின் 13ஆம் திருத்தத்தைச் செயலாக்க வேண்டும் என்பதே. 13ஆம் திருத்தச் சட்டம் என்பது இராசீவ் காந்தியும் செயவர்த்தனாவும் 1987இல் செய்து கொண்ட இந்திய-இலங்கை உடன்பாட்டையொட்டி இயற்றப்பட்டதாகும். இந்தத் திருத்தத்தின்படி தான், சிங்களமே ஆட்சிமொழி (அரச கரும மொழி) என்பதோடு

படிப்பகம்

www.padippakam.com



தமிழும் ஆங்கிலமும் கூட ஆட்சிமொழிகள் என்று வழிவகை செய்யப்பட்டது. ஏட்டில் உறங்கும் இந்த விதியை இப்போதும் தட்டியெழுப்பப் போகிறார்களாம்!

மேற்கூறிய 13ஆம் திருத்தச் சட்டத்தில் இன்னும் கூட முக்கியமான வழிவகை மாகாண சபைகள் ஏற்படுத்துவதாகும். கடந்த இருபதாண்டுகளாக சிங்களர் வாழும் பகுதிகளில் மாகாண சபைகள் (மொத்தம் ஏழு) இயங்கி வருகின்றன. தமிழர்கள் வாழும் வடக்கும் கிழக்கும் இந்திய-இலங்கை உடன்படிக்கையின்படி ஒன்றாக இணைக்கப்பட்டு அதற்கொரு மாகாண சபையும் ஏற்படுத்தப்பட்டது. இந்தியப் படையின் ஆதிக்க நிழலில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டதும், வரதராசப் பெருமாள் 'முதல்வ'ராக்கப்பட்டதும், இந்தியப் படை தமிழீழ மக்களின் பாரிய எதிர்ப்புக்கு முகங்கொடுக்க முடியாமல் பின்வாங்கிய போது வரதராசப் பெருமாளும் அவரது மாகாண சபையும் ஓடி ஒளிந்து கொண்டதும் தமிழீழ வரலாற்று மாணவர்கள் நன்கறிந்த செய்திகளே.

கேடுகெட்டு ஒழிந்து போன அந்த மாகாண சபையைத்தான் இப்போது மீண்டும் உயிர்ப்பிக்கப் போகிறார்களாம். இதிலும் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது. பழைய மாகாணசபை ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கானது. ஆனால் இப்போது முன்மொழியப்படுவது வடக்கிற்கு ஒன்று, கிழக்கிற்கு ஒன்று என வெவ்வேறு சபைகள். ஏனென்றால் வடக்கு-கிழக்கு என்பது இப்போது இணைந்த மாகாணம் அன்று. அது பழைய படி இரு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டதை இப்போதைய தீர்வுத் திட்டம் உறுதி செய்கிறது.

அதாவது இந்திய-இலங்கை உடன்படிக்கையினால் தமிழர்களுக்கு வாய்த்த முக்கிய நன்மை எனக் கருதப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பு நீக்கம் செய்யப்பட்டு விட்டது.

இந்திய-இலங்கை உடன்படிக்கையில் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு வழிவகை செய்யப்பட்ட போதிலும், சிறிலங்கா அதிபர் விரும்பினால் இவ்விணைப்பு குறித்து ஈராண்டு கழித்து கிழக்கில் மட்டும் வாக்கெடுப்பு நடத்த வழி செய்யப்பட்டிருந்தது. இந்திய-இலங்கை உடன்படிக்கை உண்மையில் படுதோல்வி அடைந்து, மாகாண சபையே ஓடிப்போய்விட்ட நிலையில் இப்படியான வாக்கெடுப்பு ஏதும் நிகழவில்லை. இணைப்பு மட்டும் பெயரளவுக்கு நீடித்து வந்தது. இதையும் சிங்கள இனவாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

ஜே.வி.பி. (ஜனத விமுக்தி பெரமுனா) இலங்கை உச்ச நீதிமன்றத்தில் வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தது. சிறிலங்கா உச்ச நீதிமன்றம் குடியரசுத் தலைவரின் ஆணைப்படியான வடக்கு-கிழக்கு இணைப்பு செல்லாது என்று தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பில் நீதிபதிகள் எடுத்துக் காட்டிய ஒரு செய்தி கருத்துக்குரியது. சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசமைப்பில் (unitary constitution) மொழி அடிப்படையில் மாகாணம் அமைப்பதற்கு இடமில்லை என்பதே அது. தமிழர்கள் வாழும் பகுதிகளை இணைத்து ஒரே ஆட்சியலகு ஆக்குவதற்குக் கூட இடமளிக்காத சிறிலங்காவின் அரசமைப்புக்கு

படிப்பகம்

www.padippakam.com



உட்பட்டு தமிழ்த் தேசிய இனச்சிக்கலுக்குத் தீர்வு காண்பது எப்படி? ஒற்றையாட்சி அரசமைப்பில் மொழிவழி மாகாணத்துக்கே இடமில்லை என்னும்போது இந்த அரசமைப்பு தமிழர் தாயகத்தைப் பாதுகாக்க உதவுவது எப்படி?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கு இணைப்புக்குச் சட்டமியற்றும்படி அதிபரை வலியுறுத்தினார்கள். எந்தப் பயனும் இல்லை. அப்படியே சட்டமியற்றியிருந்தாலும் அந்தச் சட்டத்தையும் ஒற்றையாட்சி அரசமைப்புக்கு எதிரானதாகக் கருதி உச்ச நீதிமன்றம் செல்லாதென அறிவிக்கலாம்.

ஒற்றையாட்சி அரசமைப்பைக் கூட்டாட்சி அமைப்பாக (federal constitution) மாற்றினால் என்ன? என்று கேட்கலாம். யார் மாற்றுவது? எப்படி மாற்றுவது? நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக உள்ள சிங்களர்கள் இந்த மாற்றத்தைச் செய்ய மாட்டார்கள். செய்தாலும் இத்தகைய அடிப்படையான மாற்றத்துக்குச் சிங்கள வாக்காளர்களிடம் வாக்கெடுப்பு நடத்தி ஒப்புதல் பெற வேண்டும். இதெல்லாம் கற்பனையே தவிர வேறல்ல. இந்தக் கற்பனை பிற்காலத்தில் என்றேனும் ஒரு நாள் மெய்ப்படுவதாகவே வைத்துக் கொள்வோம். அதுவரை தமிழர்கள் தங்கள் மீதான ஒடுக்குமுறையைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டிய தேவை என்ன?

ஒவ்வொரு தேசிய இனமும் தன் வாழ்வைத் தானே தீர்வு செய்து கொள்ள வேண்டும் என்பதுதான் சனநாயகம். தமிழ்த் தேசிய இனம் மட்டும் தன் வாழ்வைச் சிங்கள இனம் தீர்வு செய்யட்டும் எனக் காத்திருக்க வேண்டுமா? சிறிலங்காவின் அரசமைப்புக்குள் தீர்வு காண வேண்டும் என்பதன் பொருள்: தமிழர் வாழ்வைச் சிங்களர் தீர்வு செய்யட்டும் என்பதே தவிர வேறல்ல.

பிரித்தானியரிடமிருந்து அரசியல் அதிகாரம் கை மாறிய பின் சிறிலங்கா மூன்று அரசமைப்புகளைக் கண்டுள்ளது: 1) வெள்ளையர் வகுத்தளித்த சால்பரி அரசமைப்பு; 2) 1972இல் சிறிமா பண்டாரநாயக்கா இயற்றிய அரசமைப்பு; 3) 1978இல் செயவர்த்தனா இயற்றிய அரசமைப்பு. இந்த அரசமைப்புகளிடையே பல வேறுபாடுகள் இருப்பினும் மூன்றுமே ஒற்றையாட்சி அரசமைப்புகள்தாம்.

கூட்டாட்சி அரசமைப்பு விரும்பத்தக்கது என்றால், அதற்கான முதல்படியே தமிழீழ விடுதலைதான். தமிழீழ விடுதலைக்குப் பின் சிங்கள தேசத்திலும் பேரினவாதத்தை விட்டொழித்த சனநாயக அரசு அமையலாம். தனித்தனியே இறையாண்மை பெற்ற தமிழ் அரசும் சிங்கள அரசும் விரும்பினால் தங்களுக்கிடையே கூட்டாட்சி அமைத்துக் கொள்ளலாம். தமிழினம் தேசிய அடிமைநிலையில் இருந்து வரும்வரை சிங்களத்தோடு கூட்டாட்சி அரசமைப்புக்கு வாய்ப்பே இல்லை.

கோட்பாட்டு வகையில் மட்டுமின்றி வரலாற்று நடைமுறை வகையிலும் இதுவே உண்மை. தந்தை செல்வா (எஸ்.ஜெ.வி. செல்வநாயகம்) முதலில் கூட்டாட்சிக் கோரிக்கைக்காகவே போராடினார். தமிழரசுக் கட்சி எனப்பட்ட அவரது கட்சியின் ஆங்கிலப் பெயரே பெடரல் பார்ட்டி (federal Party) என்பதுதான்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழரசுக் கட்சி நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இதற்காகப் போராடியது. இந்தப் போராட்டங்களின் விளைவாக அரசுடன் சில உடன்படிக்கைகளும் உருவாயின. ஆனால் சிங்களப் பேரினவாதம் எல்லா உடன்படிக்கைகளையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது.

இலங்கைப் பிரதமராக இருந்தவர் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா. மேலை நாடுகளில் படித்தவர். கிறித்தவராய் இருந்து அரசியலுக்காகவே பௌத்தத்துக்கு மாறியவர். தமிழைப் புறக்கணித்து விட்டுச் சிங்களத்தை மட்டும் வலியுறுத்துவது நாட்டை இரண்டாக்கி விடும் என்று அவர் தன் இனத்தாரை எச்சரித்தார். 'இரு மொழிகள் - ஒரு நாடு, ஒரு மொழி - இரு நாடுகள்' என்றார். ஆட்சிக்கு வந்தபின் 1956இல் பண்டாரநாயகா - செல்வநாயகா உடன்படிக்கை ஏற்பட்டது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் சிங்களப் பேரினவாதக் கூச்சலுக்கு அஞ்சி பண்டாரநாயக்கா தாமே அந்த உடன்படிக்கையைக் கிழித்தெறிந்தார்.

1965இல் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த டட்லி சேனநாயகா. இவரும் செல்வநாயகத்துடன் உடன்படிக்கை செய்துகொண்டார். ஆனால் சுதந்திரக் கட்சியின் எதிர்ப்புக்கு அஞ்சி, தாமே அந்த உடன்படிக்கையைக் கிழித்துப் போட்டார்.

1977இல் ஆட்சிக்கு வந்த ஜெ.ஆர். ஜெயவர்த்தனா மாவட்ட அபிவிருத்தி சபை என்ற திட்டத்தை முன் வைத்தார். போராளிகள் இத்திட்டத்தைப் புறந்தள்ளிய அதேபோது தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் இந்தச் சபைகளுக்கான தேர்தலில் பங்கேற்றார். இது தமிழீழ விடுதலைக் குறிக்கோளுக்கு அவர் செய்த துரோகமாகவே கருதப்பட்டது. அரசே இந்தத் திட்டத்தையும் கைவிட்டது.

1987இல் இந்திய-இலங்கை உடன்படிக்கை தமிழர்களின் தாயகத்தை அறிந்தேற்பது போல் பாவனை செய்தது. ஆனால் அதற்கு விலையாகத் தமிழீழ மக்களின் தற்காப்பைப் பறித்தெடுக்க முயன்றது.

1975 வரை தனிநாடு கோரிக்கையை எழுப்பாத - சொல்லப் போனால் அந்தக் கோரிக்கையை எதிர்த்து வந்த - தந்தை செல்வாவே 1976இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தனித் தமிழீழம் தவிர வேறு வழியில்லை என்ற முடிவைத் தீர்மானமாக்கினார். அக்கோரிக்கைக்குத் தமிழீழ மக்களின் ஆதரவு முத்திரையையும் சனநாயக வழியில் பெற்றுத்தந்தார்.

அன்று முதல் இன்று வரையிலான போராட்டங்களும் இணக்க முயற்சிகளும் உணர்த்துகிற பாடம் ஒன்றே ஒன்றுதான்: தமிழீழ விடுதலைக்கு மாற்று ஏதுமில்லை. அது ஒரு வரலாற்றுத் தேவை, வாழ்க்கையின் கட்டளை!

அந்த வரலாற்றுத் தேவையை நிறைவு செய்ய, வாழ்க்கையின் கட்டளையைச் செய்து முடிக்கப் போராடுகிறவர்கள் வெல்வது உறுதி!

- தியாகு
*03-02-2008*

படிப்பகம்

www.padippakam.com

# தீரன் திண்ணியன் தேசத்தலைவன்

களம்புகல் ஓம்புமின் தெவ்வீர்!
எம்மிலும் உண்டு ஒரு பொருநன்
வைகல் எண்டேர் செய்யும் தச்சன்
திங்கள் வழித்த கால் அன்னோனே.

- (புறநானூறு)

"நாள் ஒன்றுக்கு எட்டுத் தேர் செய்யும் தச்சன் ஒரு மாத காலம் முயன்று உழைத்துச் செய்த தேர்ச் சக்கரத்தின் ஆரக்கால் போன்ற போர்வீரன் எம்மிடம் உள்ளான். சண்டைக்கு முண்டியடித்து வராதீர், பகைவரே!"

பகையரசின் அகந்தையை அறுத்திட இவ்விதம் எச்சரித்தாள் ஔவை. தமிழ் என்றால் வீரம் என்று பெருமிதம்கொள்ளும் வண்ணம் இத்தகைய இலக்கியச் சான்றுகள் எத்தனை எத்தனை!

தமிழீழ மக்களின் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் - ஔவை சொன்னவாறான ஒரு போர்வீரன் அல்லன், அவ்வாறான பல்லாயிரம் வீரர்களுக்குத் தலைவீரன்! கொடும்பகைக்கு முகங்கொடுத்து விடுதலைக்காகப் போரிடும் தேசிய இனத்தின் தலைவன் வீரனாய், பெருவீரனாய், வீரமுதல்வனாய் இருந்தாக வேண்டும். அதற்கும் மேலே எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியனாகவும் இருத்தல் வேண்டும்.

எழுபதுகளின் பிற்பகுதியிலும் எண்பதுகளின் முற்பகுதியிலும் - அப்போது சிறையில் அடைபட்டிருந்த எனக்கும் தோழர்களுக்கும் - பிரபாகரன் அறிமுகமாகி அறியப்பட்டவரானது வீரனாகவும் புலிப்படையின் வீரத் தலைவனாகவுமே!

தமிழகத்தில் கருவிப் போராட்டவழி புரட்சி நடத்தும் கருத்தில் துணிந்து செயல்பட்டு இளம்வயதில் சிறைபட்டிருந்த எங்களுக்குத் தமிழீழத்தில் ஓர் இளைஞன், இளந்தலைவன் வெற்றிகரமாக விடுதலைப் போர் தொடுத்து வீரம் விளைத்து வரும் செய்திகள் பெரிதும் ஈர்ப்பாயின.

மறுபுறம் தமிழீழ மக்கள் மீது சிங்களப் பேரினவாத அரசு நடத்திய இன ஒடுக்குமுறையும் அடக்குமுறையும் பற்றிய செய்திகள் வெளியில்

படிப்பகம்

www.padippakam.com



போலவே சிறைக்குள்ளேயும் கொந்தளிப்பு உண்டாக்கின. இந்தக் கொடிய ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் எதிராக பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் நடத்தி வந்த வீரஞ்செறிந்த போராட்டத்தில் நாங்கள் கொண்டிருந்த ஈடுபாடும் வளர்ந்தது.

வந்தது '83. இன அடக்குமுறை, இன அழிப்பாகி, அரச பயங்கரவாதம் கொலைத் தாண்டவமாடிற்று. கறுப்பு - சூலையில் வெளிக்கடைச் சிறையில் நடந்த கொடுவதைகளும் கோரக் கொலைகளும் நாகரிக உலகை அதிரச் செய்தன. தமிழகத்தைக் கொதிக்கச் செய்தன. கொதிப்பின் உச்சநிலை சிறைகளிலேதான். இங்கே சிறைத் தமிழர்களைப் பொறுத்த வரை ஆத்திரத்தோடு ஆற்றாமையும் சேர்ந்து கொண்டது - சட்டத்தால் தளையிடப்பட்டு அடைபட்டுக் கிடக்கிறவனால் சுவர் தாண்டிக் கடல் கடந்து கை நீட்டி கண்ணீரைத் துடைக்க முடியுமா?

தசையெலும்பைப் பூட்டி வைக்கலாம். தளும்பும் மனவுணர்ச்சிகளைக் கூடவா பூட்டி வைக்க முடியும்? மதுரைச் சிறையில் சிங்கள அரசதிபருக்குக் கொடும்பாவி கட்டிக் கொளுத்தினார்கள். திருச்சிராப்பள்ளிச் சிறையில் சிறைப்பட்ட அனைவரும் திரண்டு மவுன ஊர்வலம் நடத்தி மையத் திடலில் பொதுக்கூட்டமும் நடத்தினோம். எல்லாச் சிறைகளிலும் ஒரு நாள் உண்ண மறுத்து அந்த உணவின் மதிப்பைத் தமிழக முதல்வரின் தமிழீழ அகதிகள் உதவிநிதிக்கு அனுப்பி வைத்தோம். அதிகார வர்க்கம் வறட்டு விதிமுறைகளைக் காட்டி இதற்கெல்லாம் தடையிட்ட போது எதிர்த்துப் போராடினோம். 1983 ஆண்டிறுதியில் தமிழக அளவில் எல்லா மையச் சிறைகளும் சேர்ந்து போராடிய போது, முதல் கோரிக்கையே இலங்கைத் தமிழர்களுக்கு உதவும் உரிமை வேண்டும் என்பதுதான்.

தமிழீழ விடுதலைக் குறிக்கோளை ஆதரிப்பவர்களாகவும், புலிப்படையோடு ஒருமைப்பாடு கொண்டவர்களாகவும், தம்பியை நேசிப்பவர்களாகவும் நாங்கள் மாறிப் போனதில் ஒரு முரண்பாடு இருக்கவே செய்தது - எங்களின் நிலைப்பாடு நாங்கள் சார்ந்திருந்த மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சிக்கு அடியோடு ஒவ்வாதது. இந்தியாவில் தேசிய இனச் சிக்கல் குறித்தும், தமிழ்த் தேசிய இனத்தின் தன்தீர்வுரிமை (சுயநிர்ணய உரிமை) குறித்தும் கட்சித் தலைமையோடு எங்களுக்கு மாறுபாடுகள் இருந்தாலும், தமிழீழப் போராட்டம்தான் எங்கள் புரிதலைக் கூர்மையாக்கி முடிவை விரைவுபடுத்தியது. தமிழீழப் போராட்டத்தின் வரலாற்று நியாயத்தைக் காண விடாமல் மறைக்க சிவப்புத் திரைகளுக்கும் கூட உரிமையில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து ஆழ்ந்தகன்ற விவாதங்கள் நடைபெற்றன. எங்களுக்குள்ளே மட்டுமன்றி, தமிழீழம் தொடர்பான கோரிக்கைகளுக்காகவும் வேறு கோரிக்கைகளுக்காகவும் அறப் போராட்டம் நடத்திச் சிறைக்கு வந்த வேறு பல கட்சித் தலைவர்களோடும் கூட விவாதித்தோம். விடுதலையாகி வெளியே வந்த பிறகும் விவாதித்தோம். இதனால் தமிழீழ விடுதலை ஆதரவு நிலைப்பாடு உறுதிப்பட்டதோடு, தம்பி மீதான மதிப்பும் உயர்ந்தது.

படிப்பகம்

www.padippakam.com



வீரத்துக்காக வியந்து வணங்கும் நிலை மாறி, விடுதலை அரசியல் பற்றிய தெளிவு வளர்ந்தது.

விடுதலை அரசியலின் நீட்சியே விடுதலைப் போர்.

விடுதலை அரசியல் என்பது வரலாற்று நோக்கில் விடுதலை தேவைப்படும் நிலையிலுள்ள வெகுமக்களை அறிவும் உணர்வும் ஊட்டி அணிதிரட்டிப் போராடச் செய்வதும், நட்பைச் சேர்த்துக் கொள்வதும், பகையைத் தனிமைப்படுத்துவதுமான முயற்சிகளைக் குறிக்கும். இம்முயற்சிகளைத் தொடரக் கருவியெடுக்கும் கட்டாயம் நேரிடும் போது விடுதலை அரசியல் விடுதலைப் போராக வடிவெடுக்கும்.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். *(திருக்குறள்)*

அரசியலுக்கும் அதே போல் போருக்கும் வழிகாட்டும்படியான இந்த இலக்கணத்துக்கு இலக்கியமாக அன்று முதல் இன்று வரை பிரபாகரனின் வழிநடத்தல் விளங்கி வருகிறது, எனலாம்.

இந்தத் தலைவன் வெறும் வீரனல்லன் என்பதை 1987 நிகழ்ச்சிகள் மெய்ப்பித்தன. அப்பம் பிரித்த குரங்கின் வேலையைச் செய்ய முற்பட்டது இந்திய அரசு. இராசீவ் காந்தி - செயவர்த்தனா உடன்படிக்கையின் பேரால் இந்தியப் படை யாழ்ப்பாணத்தில் கனத்த கால் பதித்தது. ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சூழ்ந்தது ஒரு புதிய நெருக்கடி - இந்தியா நண்பனா? பகைவனா?

தமிழீழப் பேராட்டம் தொடர்பான இந்திய அரசின் அணுகுமுறைக்கு இரு பக்கங்கள் உண்டு. இந்திய மக்களின் நலனையும், தமிழக மக்களின் உணர்வையும் பிரதிபலிப்பதாக இருக்கும் வரை இந்திய அரசு தமிழீழ மக்களின் நண்பனாய் இருக்க முடியும். ஆனால் தேசிய இனங்களை ஒடுக்கும் இந்திய ஆளும் சக்திகளின் நலனையும், தெற்காசியா மீதான மேலாதிக்க நோக்கத்தையும் பிரதிபலிக்கிற அளவில் இந்திய அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கெடுக்கவே முற்படும். அடுத்தும் கெடுக்கலாம். எதிர்த்தும் கெடுக்கலாம்.

காலங்காலமாய் இந்தியாவை நண்பனாகவே பார்த்துப் பழகிய தமிழீழ மக்கள் இப்போது 1987இலும் இந்தியப் படைகளின் வருகையைத் தங்கள் மீட்சிக்குத் துணை என்றே பார்ப்பது போலிருந்தது. இந்திய அரசின் உள்நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்ட பிரபாகரனின் தலைமை மக்களின் நாடித் துடிப்பை அறிந்து செயல்பட்டது. சுதுமலை அம்மன் திடலில் பிரபாகரன் ஆற்றிய உரை விடுதலை அரசியலில் அவரது தெளிவான தொலைநோக்கைக் காட்டியது.

கருவிமேல் காதலில்லை. மக்களின் பாதுகாப்புக்காகவே கருவி என்பதால் கருவியைப் பாதுகாப்பதற்காக மக்களை இழக்க வேண்டியதில்லை. கருவியைக் கையளிக்கிறோம் என்றால் எமது மக்களின் பாதுகாப்பைக் கையளிக்கிறோம் என்று பொருள்.

படிப்பகம்

www.padippakam.com



முதிர்ச்சியின் முத்திரை தாங்கிய இந்த அணுகுமுறை பழுத்த அரசியல் நோக்கர்களையே வியந்து நோக்கச் செய்தது. சொலல் வல்லன் சோர்விலன். அஞ்சான் இவனே எனப் போற்றினோம்.

இந்தியப் படையின் செயல்பாடு... இது மீட்க வந்த படையா? மிதிக்க வந்த படையா? என்று மக்களைச் சிந்திக்க வைத்தது. புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட பன்னிருவர் சிங்களப் படையால் சிறைப்பிடிக்கப்பட்டு நஞ்சுண்டு மாண்ட போது இந்தியா வேடிக்கை பார்த்த அவலம் தமிழீழ மக்களை அதிர்ச்சியடையச் செய்தது, உடன்படிக்கையைச் செயலாக்குவதில் ஒப்புக்கொண்ட சிற்சிலவற்றைக் கூட நடைமுறைப்படுத்தாமல் இந்திய அரசு இழுத்தடித்ததை அம்பலமாக்கும் வகையில் புலிகளின் அழைப்பை ஏற்று தமிழீழ மக்கள் அறப்போராட்டம் நடத்தினார்கள். கொல்ல வந்தவரைக் கொஞ்ச வந்தவராகப் பார்க்கச் செய்த பனிப்படலம் விரைந்து விலகலாயிற்று. இந்த அறப்போராட்டத்தின் உச்சம்தான் திலீபனின் பட்டினிப் போர். அது இறுதியாகவும் உறுதியாகவும் தில்லிக் கழுகின் புறாச் சிறகைக் கழற்றிப் போட்டது.

திலீபனின் ஈகம் உலக வரலாற்றிலேயே தனித்துவமானது. இந்தத் தனித்துவமான தியாக மறவனை வளர்த்தெடுத்த தலைமையின் மகத்துவத்தை என்னென்பது! இறந்தும் வென்ற திலீபனின் போராட்டம் இந்தியாவின் அரசியல் தோல்வியைக் குறித்தது, அந்த அரசியல் தோல்வியை இராணுவத் தோல்வியாக மாற்றத்தான் ஒன்றரை ஆண்டுக்கு மேல் பிரபாகரன் தலைமையில் புலிப்படை வீரப் போர் புரிந்தது. மண்ணையும் மக்களையும் சார்ந்து நின்று போர் புரிந்தால் எவ்வளவு பெரிய வல்லடிப் படையையும் முறியடிக்க முடியும் என்ற வரலாற்றுப் படிப்பினையை வியத்நாமுக்குப் பிறகு உலகுக்குணர்த்தியது தமிழீழம்.

திலீபனின் ஈகம் ஏற்படுத்திய தாக்கம் கருதியும், தமிழீழப் போராட்டத்தைக் கொள்கைவழி நின்று ஆதரிக்கும் நோக்கம் கருதியும் 1990 செப்டெம்பரில் என்னை அமைப்பாளராகக் கொண்டு தமிழகத்தில் திலீபன் மன்றம் நிறுவப்பட்டது, அதன் மூன்று நிலைப்பாடுகள்: 1) தமிழீழ விடுதலை ஒரு வரலாற்றுத் தேவை, 2) இராசீவ் - செயவர்த்தனா உடன்படிக்கை ஈழத் தமிழர் நலனுக்குப் பகை, 3) தமிழீழ விடுதலைப் போரில் விடுதலைப் புலிகளை ஆதரிப்போம்! அரசும் காவல் துறையும் செய்த கெடுபிடிக்கும் நெருக்கடிக்கும் இடையில் திலீபன் மன்றம் தனக்குரிய பங்கினை ஆற்றிவந்தது.

திலீபன் மன்றமும் விடுதலைக் குயில்களும் தமிழ் தமிழர் இயக்கமாக இணைந்த பிறகும் மேற்கூறிய நிலைப்பாடுகளில் எவ்வித மாற்றமும் இல்லை. தடைச் சட்டங்கள், அடக்குமுறை நெருக்கடிகள், அதிகாரக் கெடுபிடிகள் யாவற்றுக்குமிடையே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து நிற்கிறோம். பிரபாகரனின் தலைமை மீது உறுதியான நம்பிக்கை வைத்துள்ளோம். எந்நிலையிலும் இதில் எமக்கு ஊசலாட்டமில்லை.

படிப்பகம்

www.padippakam.com



இது வெறும் வீரவணக்கமோ நாயக வழிபாடோ அல்ல என்பதைத் தெளிவுபடுத்தியாக வேண்டும். வரலாற்றை உருவாக்குபவர்கள் வெகுமக்களே. எவ்வளவு பெரிய தலைவனாயினும் வீரனாயினும் வரலாற்றின் கருவியே என்பதில் ஐயமில்லை. தமிழீழ விடுதலைப் போர் வரலாறு கண்டெடுத்த தலைசிறந்த கருவி பிரபாகரனே. வரலாற்றால் கண்டெடுக்கப்பட்டு வரலாற்றை வடிப்பவராகத் திகழ்வதால் அவரே வரலாற்று நாயகன்.

தேசியத் தலைவர் என்பது அலங்காரப் பட்டமன்று. அது கடினமான பெரும் பொறுப்பு. இந்தப் பொறுப்பை உணர்ந்து இன்னல்களையும் இடர்மிகுந்த திருப்பங்களையும் கடந்து தன் மக்களை வழிநடத்தி வருவது பிரபாகரனின் தலைமைச் சிறப்பே.

தமிழகத்தில் தமிழ்த் தேசியப் புரட்சிக்காக உழைத்துவரும் எம்மைப் போன்றோர் பிரபாகரனின் போராட்ட வரலாற்றிலிருந்து நிறையக் கற்கவும் கடைப்பிடிக்கவும் வேண்டியதிருப்பதாகக் கருதுகிறோம். ஒரு சிலவற்றை ஈண்டு குறிப்பிடலாம்.

ஒரு மக்களினத்தை ஒன்றுபடச் செய்து பகைவனுக்கு எதிராக அணிதிரட்ட வேண்டுமானால் அவ்வினத்திற்குள்ளான முரண்பாடுகளைப் பூசிமெழுகுவதன்று வழி. அவற்றுக்கு முறையாகத் தீர்வு காணவேண்டும். பிரபாகரனின் தலைமை சிங்களப் பேரினவாதத்தையும், அதற்கு துணைவந்த பிறரையும் எதிர்த்துப் போராடும் போதே, தமிழீழ மக்களின் ஒர்மையைச் சிதைத்து ஒற்றுமையைக் கெடுக்கும் சாதியத்தையும் ஆணாதிக்கத்தையும் எதிர்த்துப் போராடியுள்ளது. இந்தப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் கண்டுள்ளது. தமிழீழ மக்களின் வெல்லற்கரிய வலிமைக்கு இந்தப் புரட்சிகர ஒற்றுமையே அடித்தளமாகும். தமிழ்த் தேசியத்துக்கான போராட்டம், சாதியொழிப்பு அல்லது சமூகநீதிக்கான போராட்டம் இவ்விரண்டின் இடையுறவையும் புரிந்து உள்வாங்கிக் கொள்ள தமிழீழம் நமக்குதவும்.

பிரபாகரன் மிகச் சிறந்த படைத் தளபதி என்பதை மாற்றாரும் மறுக்க மாட்டார். ஆனால் வெறும் படைத் தளபதியல்ல்ர், மக்கள் விடுதலைப் போரின் தலைவர் அவர் என்பதை அவரின் போருத்திகளே காட்டும். ஆள் வலிமை, அறிவியல் - தொழில்நுட்ப வலிமை, ஆயுத வலிமை என்று அனைத்து வகை வலிமையோடும் அடக்கி ஒடுக்கும் ஆதிக்கத்தை எதிர்த்து மக்களாதரவை மட்டுமே சார்ந்து போராடுவதற்கான உத்தியாக உலக வரலாற்றில் கெரில்லாப் போர்முறை வளர்த்தெடுக்கப்பட்டது. நெல்லியடியில் மில்லர் தொடக்கி வைத்த தற்கொடைப் போர் முறை கெரில்லாப் போர்முறையின் உச்சக்கட்ட வளர்ச்சியாகும்.

ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் தன்னந்தனியாக நின்று பேரினவாத அரசையும் அதற்குத் துணையாக வரும் வல்லாதிக்கச் சக்திகளையும் எதிர்த்துப் போராடுவது எளிதன்று. தன் தரப்புக்கு ஆகக்குறைந்த இழப்போடு பகைத் தரப்பை ஆகப் பெருமளவுக்கு நொறுக்கிச்

படிப்பகம்

www.padippakam.com



சிதறடிக்கும் தற்கொடைப் போர்முறையே இந்தக் கடினமான பயணத்தில் திறமிகு தடைநீக்கி என்பதை தமிழீழப் போராட்ட வரலாறு மெய்ப்பிக்கிறது. எந்தப் படையாலும் கரும்புலிகளின் உயிராயுதத்திற்கு எதிர்நிற்க முடியாது. இதுவே தற்கொடையின் அரசியல். தற்கொடைப் போர்முறையை வகுத்து வழிநடத்துவதில் பிரபாகரனின் போர்த்திறன் மட்டுமல்ல, விடுதலை அரசியலின் வித்தக நோக்கும் முன்னிற்கிறது.

விடுதலைப் போராளிகள் அமைதியையே விரும்புகின்றனர் - அது இடுகாட்டு அமைதியாய் இருந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கையோடு! உரிமைகளோடு சேர்ந்து வரும் மெய்யமைதிக்காகவே அவர்கள் போராடுகிறார்கள். விடுதலைப் போராளி தன் இரு கைகளையும் உயர்த்திக் காட்டுகிறான். ஒரு கை அமைதிக்காக! ஒரு கை போருக்காக! எந்தக் கை வேண்டுமென்று பகைவனே முடிவு செய்யட்டும். அமைதி என்றால் அமைதி! போர் என்றால் போர்! எது வேண்டும் சொல் பகையே! இதுவே விடுதலைப் போராளியின் அணுகுமுறை.

பிரபாகரன் சண்டைப் பிரியர், சமாதானத்தின் பகைவர் என்றெல்லாம் பாக்கு நீரிணையின் அப்பக்கமும் இப்பக்கமும் வறட்டுத் தவளைகள் போல் கத்திக் கொண்டிருந்தவர்கள் எங்கே? பிரபாகரனின் இப்போதைய அமைதி முயற்சி மெய்யான சண்டைப் பிரியர்களை காட்டிக் கொடுத்து விட்டது.

தமிழீழத் தாயகத்திற்கான போராட்டம் போர்வழி நடந்தது. இப்போது அமைதி வழி தொடர்கிறது. எப்படியும் அது முன்னேறிச் செல்கிறது. வீரனாகவும், அதற்கும் மேலே விடுதலைப் போர் வித்தகனாகவும் மக்களைக் கைப்பிடித்து அழைத்துச் செல்லும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டுதலில் இறுதி வெற்றி உறுதி, அது ஒரு தேசத்தின் வெற்றி, விடுதலை நாடும் அனைவரின் வெற்றியும் கூட!

**ஒளிக் கதிர்களுக்கு எல்லைகள் உண்டோ?**

**- தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் 50ஆம் பிறந்த நாளை முன்னிட்டு ஈழமுரசு (பாரிஸ்) வெளியிட்ட சிறப்பு மலரில் இடம்பெற்றது.**

படிப்பகம்

www.padippakam.com

# இருதேசங்கள் - ஒரு தேர்தல் தமிழர் புறக்கணிப்பு

இலங்கையின் ஏழாவது குடியரசுத் தலைவராக மகிந்த இராசபட்சர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இலங்கை சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான அவருக்கு 50.29 விழுக்காடு வாக்குகள் கிடைத்துள்ளன. ஐக்கியத் தேசியக் கட்சியின் வேட்பாளர் இரணில் விக்கிரமசிங்கரைக் காட்டிலும் இரண்டு விழுக்காட்டுக்கும் குறைவான பெரும்பான்மையே இது.

சிங்கள தேசத்தின் அரசதிகாரத்துக்காக இரு சிங்களத் தலைவர்களுக்கு இடையே இரு சிங்களக் கட்சிகளுக்கு இடையே நடைபெற்ற இத்தேர்தலில் சிங்கள மக்கள் பெருவாரியாக வர்க்களித்தார்கள். இயல்பாகவே தமிழீழ மக்கள் யாருக்கும் வாக்களிக்காமல் தேர்தலைப் புறக்கணித்து விட்டார்கள். எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஏழு இலக்கம் பதிவு பெற்ற வாக்காளர்களில் 8,525 பேர் மட்டுமே வாக்களித்தார்கள்.

தமிழர்கள் இப்படித் தேர்தலைப் புறக்கணிக்காமல் இரணில் விக்கிரமசிங்கருக்கு வாக்களித்திருந்தால் அவர் வெற்றி பெற்றிருப்பார் என்பது ஓர் எளிய கணக்கு. இந்தக் கணக்கை வைத்துக் கொண்டு 'இந்து' ஆங்கில நாளேடு (2005 நவம்பர் 19 ஆசிரியவுரை) தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சூழ்ச்சிக் குற்றம் சுமத்துகிறது.

குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இராசபட்சருக்கு விடுதலைப் புலிகள் விடுத்துள்ள சவாலாம் இது! எப்படி? சிங்களக் கடும்போக்கு அரசியல் வளர்வதே தனக்கு நல்லது என்று புலிப்படை நினைக்கிறதாம்! அதுவே இலங்கையைப் பிரித்து ஈழம் அமைக்கும் திட்டத்தை நியாயப்படுத்துவதற்கு உதவுமாம்! 'இந்து' சொல்கிறது:

"புதிதாகத் தேர்வு பெற்றுள்ள குடியரசுத் தலைவரும் அவருக்கு நெருங்கிய கூட்டாளியான ஜனதா விமுக்தி பெருமனா (ஜே.வி.பி.) அமைப்பினரும் 2002இல் ஏற்பட்ட போர் நிறுத்தத்தை எதிர்க்கின்றனர். (நாட்டிற்குத் தெரியாமலே அவசரகோலமாய்ச் செய்த நகர்வு அது என்கின்றனர்) மேலும் கூட்டாட்சியே சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வாகும் என்ற கருத்தையும் பொதுவாக எதிர்த்துப் பேசுகின்றனர். அவர்களின் இந்த நிலைப்பாட்டைப் பயன்படுத்தி எல்டிடிஇ இந்தக் கொடிய சூழ்ச்சித் திட்டத்தை வகுத்துள்ளது."

படிப்பகம்

www.padippakam.com



கடந்த 2001 இறுதியில் புலிப்படைதான் போர் நிறுத்தத்தை அறிவித்தது. போரில் புலிப்படையை வெல்ல முடியாத நிலையிலும், சிங்கள மக்களே அமைதிக்குத் தந்த அழுத்தத்தாலும், உலக அரங்கில் நிலவிய பொதுக் கருத்தின் நெருக்குதலாலும் சிங்கள அரசும் வேறு வழியின்றி போர் நிறுத்தத்துக்கு இணங்கிற்று. சற்றொப்ப நான்காண்டு காலமாக எத்தனையோ ஆத்திரமூட்டும் நிகழ்ச்சிகளுக்கிடையிலும் புலிப்படைதான் போர்நிறுத்தத்தை நேர்மையாகவும் உறுதியாகவும் கடைப்பிடித்து வருகிறது. புலிப்படைக்கும் தமிழீழ மக்களுக்கும் இரண்டகம் செய்து ஓடிப்போன கும்பலை ('இந்து'வின் மொழியில் எல்டிடிஇ கிழக்குப் பிரிவு) சிங்கள அரசின் இராணுவமும் உளவுத்துறையும் பாதுகாத்து வளர்த்து வருவது உறுதியான பிறகும் தமிழீழ மக்களின் சார்பில் புலிப்படை அமைதி காத்தே வருகிறது.

ஆனால் அமைதிக்காகவே அமைதி என்பதன்று. தமிழீழ மக்கள் மீதான தேசிய ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டும் வகையில் தேசிய இனச்சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காணாமல் உண்மையான உறுதியான அமைதிக்கு வாய்ப்பில்லை. இந்த நோக்கில் அப்போதைய தலைமையமைச்சர் இரணில் விக்கிரமசிங்கரோ, அவரைத் தள்ளிவிட்டு முழுஅதிகாரத்தையும் கையில் எடுத்துக் கொண்ட அதிபர் சந்திரிகாவோ உருப்படியான (தமிழ் மக்கள் நம்பி ஏற்கும்படியான) எந்த முன்மொழிவையும் தரவில்லை என்பதே உண்மை. அடிப்படைத் தீர்வு, நிரந்தரத் தீர்வு என்பதெல்லாம் இருக்கட்டும், முறையான இடைக்காலத் தீர்வு ஒன்றைக்கூட அவர்களால் முன்மொழிய இயலவில்லை.

இப்போது அதிபராகியுள்ள இராசபட்சர் சந்திரிகாவால் தலைமையமைச்சர் பதவிக்குப் பொறுக்கியெடுக்கப்பட்டவர். இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆகவே எவ்வித அரசியல் தடையுமின்றி அவர்களால் ஒரு தீர்வை முன்மொழிந்திருக்க முடியும். ஆனால் அவர்கள் எதுவும் செய்யவில்லை. புலிப்படையை அழித்தொழித்துத் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கும் ஆசைத் திட்டத்தைக் கைவிடவும் இல்லை. அதனால் புலிகளோடு உடன்பாடு காண்பதை விடவும் இந்தியாவோடு இராணுவ உடன்படிக்கை செய்து கொள்வதில்தான் சந்திரிகா அக்கறை காட்டினார்.

புலிப்படை போர் நிறுத்தத்தை உண்மையாகக் கடைப்பிடித்தது மட்டுமல்ல, தன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மக்கள் சார்ந்த குடியியல் ஆட்சியமைப்பை நிறுவியது மட்டுமல்ல, இடைக்காலத் தீர்வுக்கான முன்மொழிவுகளையும் வெளிப்படையாக அறிவித்தது. சென்ற ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் புலிப்படையின் இந்த முன்மொழிவுகளை ஆதரித்த தமிழ்த்தேசிய முன்னணி வேட்பாளர்களே தமிழ்ப் பகுதிகளில் பெருவாரியாக வெற்றிபெற்றார்கள். தமிழீழ மக்களின் சனநாயகக் கட்டளையைப் பெற்ற இந்த முன்மொழிவுகளை ஏற்று, அந்த அடிப்படையில் இடைக்கால ஆட்சிமன்றம் அமைக்கவோ, குறைந்தது அது பற்றிப் பேச்சு நடத்தவோ சந்திரிகா - இராசபட்சர் ஆட்சி முன்வந்ததா என்றால் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



புலிப்படையின் முன்மொழிவுகள் தமிழீழ மக்களின் சனநாயகக் கட்டளையைப் பெற்ற பிறகும் சிங்கள அரசு அவற்றை ஏற்க முன்வரவில்லை என்பது குறித்து 'இந்து' என்ன சொன்னது? புலிகளின் முன்மொழிவு இடைக்காலத் தனிநாட்டுக்கானதே தவிர, இடைக்கால ஆட்சி மன்றத்துக்கானது அல்ல என்று பழித்தது.

இப்போது இராசபட்சரே ஒற்றையாட்சிக் கொள்கை கொண்டவர் என்றும், விக்கிரமசிங்கரைக் கூட்டாட்சிக் கொள்கையிலும் அதிகாரப் பகிர்விலும் நம்பிக்கை கொண்டவர் என்றும் படம் பிடிக்க முயல்கிறது 'இந்து'. விக்கிரமசிங்கரைப் பற்றிய இந்தப் படப்பிடிப்பு உண்மையென்றால், புலிகளின் முன்மொழிவுகளை அவர் ஆதரித்திருக்க வேண்டும். அந்த முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சு நடத்தவாவது கோரியிருக்க வேண்டும்.

உண்மை என்னவென்றால், சந்திரிகா, விக்கிரமசிங்கா, இராசபட்சர் எல்லாருமே அடிப்படையில் சிங்களப் பேரினவாதிகள்தாம். இவர்களுக்கிடையில் அவ்வப்போது வெளிப்படும் வேறுபாடுகள் அணுகுமுறை தொடர்பானவையே தவிர அடிப்படைக் கொள்கை தொடர்பானவை அல்ல. வழிமுறைப் போரானாலும் பேச்சுவார்த்தை யானாலும் சிங்களப் பேரின ஒடுக்குமுறையைப் பாதுகாப்பதே இவர்களின் குறி.

இலங்கையின் இனச்சிக்கலுக்கு எந்தத் தீர்வு காணப்பட்டாலும் அது சிங்கள மக்களின் ஏற்பைப் பெற்றதாக இருக்க வேண்டும் என்பதே சிங்களத் தலைவர்கள் கடைப்பிடிக்கும் சனநாயகத்தின் (?) எல்லைக்கோடு. அதாவது தமிழர்களின் வருங்காலத்தை சிங்ளர்கள் உறுதி செய்யட்டும் என்று பொருள். இரு சிங்களத் தலைவர்களில் ஒருவரை ஆதரிக்க வேண்டும் என்று பரிந்துரைப்பதன் மூலம் இந்தப் பேரினவாத அணுகுமுறையையே 'இந்து'வும் பகிர்ந்து கொள்கிறது.

இனச் சிக்கலுக்கு எந்தத் தீர்வு கண்டாலும் அது தமிழ் மக்களின் ஏற்பைப் பெற்றதாக இருக்க வேண்டும் என்பதே புலிப்படையின் பார்வை. தமிழ் மக்களின் வருங்காலத்தைத் தமிழ் மக்களே தீர்வு செய்யட்டும் என்பது இதன் பொருள். இது நியாயமானது, வரலாற்று ஏரணம் கொண்டது மட்டுமல்ல, உலகமும் பன்னாட்டுச் சட்டங்களும் அறிந்தேற்றுள்ள, 'சுயநிர்ணய உரிமை'க் கொள்கையின்படியும் சரியானது.

இந்தச் சனநாயகத் தீர்வைத்தான் இனவாதம், பிரிவினைவாதம் எனத் தூற்றுகிறது 'இந்து'. இவ்வகைத் தீர்வுக்கான போராட்டத்தைத்தான் அது பயங்கரவாதம் என்கிறது.

கடந்த 1977 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழீழத் தனியரசுக்கான சனநாயகக் கட்டளையைத் தமிழ்மக்கள் வாக்குப் பெட்டி வழியாக வழங்கினார்கள். அன்று தொட்டு இன்று வரை எந்தத் தேர்தலிலும் இரு சிங்களப் பேரினவாதக் கட்சிகளில் எந்தவொன்றையும் அவர்கள் ஆதரித்ததில்லை. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தொடக்கத்தி லிருந்தே ஒவ்வொரு தேர்தலையும் புறக்கணித்தே வந்துள்ளனர். சிங்கள அரசு நடத்திய தேர்தல்களை மட்டுமல்ல இந்திய அமைதிப் படை திணித்த தேர்தல்களையும் கூட அவர்கள் புறக்கணிக்கவே செய்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஆதிக்க அரசு நடத்தும் தேர்தல்களைப் புறக்கணிப்பதே உலகெங்கும் விடுதலை இயக்கங்களின் பொதுமரபு.

தேர்தல் தொடர்பான புலிகளின் அணுகுமுறையில் புதிய மாற்றம் ஏதும் வராதபோது, கொடிய சூழ்ச்சித் திட்டம் என்று எப்படிக் குற்றஞ்சாட்ட முடியும் ஒரு விடுதலை இயக்கம் தன் குறிக்கோளை அடைவதற்கு மேற்கொள்ளக் கூடிய எந்த அணுகுமுறையையும் வெளியிலிருந்து குற்றம் சொல்லிக் கொண்டிருக்க மற்றவர்கள் யார்?

ஓடையின் கீழ்ப்பக்கத்தில் தண்ணீர் குடிக்கும் ஆடுதான் மேல்பக்கம் தண்ணீரைக் குழப்பிவிட்டது என்று ஓநாய் குற்றஞ்சாட்டிய கதையாக... கடந்தகாலத் தேர்தல்களில் தமிழீழ மக்கள் இரு சிங்களக் கட்சிகளில் எந்த ஒன்றையும் ஆதரிக்க மறுத்ததற்கும்கூட புலிகளின் கொடிய சூழ்ச்சித் திட்டமே காரணம் என்று 'இந்து' வாதிடக் கூடும்.

சிங்களக் கட்சிகளில் எது குறைந்த தீமை என்று பார்த்து அதைத் தேர்ந்தெடுக்கிற சந்தர்ப்பவாதம் புலிகளிடம் என்ன, தமிழீழ மக்களிடமே எடுபடாது. சிங்கள அரசு நடத்தும் தேர்தலைப் புறக்கணிக்கும்படி அவர்களுக்கு யாரும் சொல்லித்தர வேண்டியதில்லை. வரலாறு ஏற்கெனவே சொல்லித் தந்து விட்டது. இரு முக்கிய வேட்பாளர் களுக்கும் இடையே வேறுபாடு ஏதுமில்லை என்று புலிகள் ஏற்கெனவே தெளிவாக அறிவித்த பின், விக்கிரமசிங்கரைத் தோற்கச் செய்து போருக்கு வழிகோலுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

'இந்து'வுக்குப் பிடித்தமான இந்திய இடதுசாரிக் கட்சிகள் சோனியாவை நம்புவது போல், விடுதலைப் புலிகள் விக்கிரமசிங்கரை நம்ப வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் ஈழ மக்களை அறியாதவர்கள், அவர்களின் வரலாற்றையும் அறியாதவர்கள்.

இராசபட்சரும் அவரை ஆதரித்த சிங்கள இனவெறிக் கட்சியினரும் தேர்தல் பரப்புரையில் போர் நிறுத்தத்தை எதிர்த்தும் கூட்டாட்சிக் கொள்கையை எதிர்த்தும் முழங்கினார்கள் என்பதால் நாளையே அவர்கள் போர் தொடுத்துவிட முடியாது. அரசியல் களத்திலும் போர்க்களத் திலும் புலிகளின் வலிமையை அவர்கள் கணக்கில் கொள்ள வேண்டியிருக் கும். அது மட்டுமல்ல, சிங்கள மக்களின் அமைதி விருப்பத்தை மீறுவதும் எளிதன்று. இந்தியா, நார்வே, அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் என்று பல காரணிகளைப் பற்றியும் யோசிக்க வேண்டியிருக்கும்.

சிங்களப் பேரினவாத அரசு இறுதியில் போர் என்ற வழிமுறையைக் கையிலெடுக்குமானால், அதற்கான பழியைப் புலிகள் மீது சுமத்துவதற்கு இப்போதே 'இந்து' தயாராகிறது. அல்லது புலிகளை நம்பாதே, புலி களுடன் பேசாதே, தயங்காமல் போர் தொடு! என்று இராசபட்சரைத் தூண்டிவிடும் கொடிய சூழ்ச்சித் திட்டமாகவும் இருக்கலாம்.

'இந்து' தன் சூழ்ச்சியை மறைக்கத்தான் புலிகள் மீது சூழ்ச்சிப் பழி சுமத்துகிறதோ?

சந்திரிகாவின் சிங்கள இரத்தினம் (சிறிலங்கா ரத்னா) என். ராமிடமிருந்து வேறு எதை எதிர்பார்ப்பது.

**- தமிழர் கண்ணோட்டம், திசம்பர் 2005**

படிப்பகம்

www.padippakam.com

# தென்கீழ் வானத்தில் தமிழீழச் செம்மீன்

"புலிகள் பழைய நினைப்பில் இலங்கைப் படைகளுடன் மோத வேண்டாம். இப்பொழுது இலங்கையிடம் இருப்பது அமெரிக்காவில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட இராணுவம். அமெரிக்காவழங்கிய நவீனப் போர்க் கருவிகள் இலங்கைப் படைவசம் உள்ளன. போர் மூண்டால் புலிகள் படுகேவலமாகத் தோற்றுப் போவார்கள்."

- கடந்த 2006 சனவரி 11ஆம் நாள் கொழும்பில் நடந்த தொழில்வணிகக் கருத்தரங்கில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜெப்ரி லூன்ஸ்டெடு இப்படிப் பேசினார். தமிழீழ மக்களை அடக்கி ஒடுக்கும் போரில் சிங்களப் படைக்கு அமெரிக்க வல்லாதிக்க அரசு உதவி வழங்குவது புதிய செய்தியன்று. சில ஆண்டுகளுக்கு முன்பு பச்சைத் தொப்பிகள் எனப்படும் அமெரிக்கப் படையினர் சிங்களப் படையினருக்குப் பயிற்சி அளித்து வந்தார்கள். புலிகளின் அதிரடித் தாக்குதலுக்குப்பின் 'போதுமடா சாமி' என்று அவர்கள் ஓடிப் போனார்கள். ஆனையிரவுப் போரில் புலிப்படையிடம் தோற்றுப் போன சிங்களப் படை அமெரிக்காவால் பயிற்றுவிக்கப்பட்டது மட்டுமல்ல, அமெரிக்கா வழங்கிய நவீனப் படைக்கலன்களும் அதனிடம் இருந்தன. அந்தப் படைக்கலன்கள் யாவும் வென்ற புலிப்படைக்கே பரிசுகள் ஆயின.

## இந்தியாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பில் லூன்ஸ்டெடு பேசிய அடுத்த சில நாளில், சனவரி 25ஆம் நாள், இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் டேவிட் முல்ஃபோர்டு தில்லியில் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த நேர்காணலில் இப்படிச் சொன்னார்:

"வருகிற பிப்ரவரி 2ஆம் நாள் நடைபெறும் பன்னாட்டு அணுவாற்றல் முகமையின் (IAEA) ஆளுநர்கள் கூட்டத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும். நாங்கள் ஏற்கெனவே இது பற்றித் தெளிவுபடுத்தியிருக்கிறோம். பன்னாட்டு அணுவாற்றல் முகமையின் விதிமுறைகளை ஈரான் மீறிவிட்டது என்பதுதான் செப்டெம்பர் 18 தீர்மானம். அத்தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்தது. இந்தியாவிற்கு அருகில் இப்போதே அணு ஆயுத நாடுகள் இருக்கின்றன. ஈரான் என்ற இன்னொரு நாடும் அணு ஆயுதம் வைத்திருப்பதை இந்தியா விரும்பாது என்றே நம்புகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



"நாங்கள் ஏற்கெனவே இரண்டு கருத்துகளை இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளோம். முதலாவதாக, ஈரானின் அணுவாற்றல் குறித்த சிக்கலை ஐநா பாதுகாப்பு மன்றத்திற்கு எடுத்துச் செல்லப் பன்னாட்டு அணுவாற்றல் முகமைக் கூட்டத்தில் இந்தியா எங்களோடு சேர்ந்து வாக்களிக்க வேண்டும். இரண்டாவதாக, ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களிக்க மறுத்தால் இந்தியாவின் குடியியல் அணுவாற்றல் முயற்சிகள் தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் முடிவு இந்தியாவிற்கு நாசகர விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்."

## அமெரிக்கா சொன்னபடி இந்தியா வாக்களிப்பு

அமெரிக்கத் தூதரின் இந்தப் பேட்டி இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரானது என்று முன்னாள் பிரதமர் வாஜ்பேயி சுட்டிக்காட்டினார். வேறு பல தலைவர்களும் இதேபோல் கண்டனம் தெரிவித்தனர். இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இது தேவையற்றது, துரதிருஷ்டவசமானது என்று பணிவுடன் முனகினார். இந்திய அரசு ஈரானுக்கு எதிராகவும் அமெரிக்காவுக்கு ஆதரவாகவும் வாக்களிக்கக் கூடாதென்று இடதுசாரிக் கட்சிகள் கடுமையாக எச்சரித்தன. எதற்கும் அஞ்சாமல், எதற்கும் கலங்காமல் இந்திய அரசு பன்னாட்டு அணுவாற்றல் முகமையின் ஆளுநர்கள் கூட்டத்தில் ஈரானுக்கு எதிராகவும் அமெரிக்கா சொன்னபடியும் வாக்களித்து விட்டது.

சனவரி 11ஆம் நாள் கொழும்பில் அமெரிக்கத் தூதர் லூன்ஸ்டெடு விடுதலைப் புலிகளை மிரட்டியதும், சனவரி 25ஆம் நாள் தில்லியில் அமெரிக்கத் தூதர் முல்ஃபோர்டு இந்திய அரசை எச்சரித்ததும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இரு செய்திகளைப் போல் தோன்றினாலும், இரண்டும் சேர்ந்து நமக்குப் பல உண்மைகளைப் புலப்படுத்துகின்றன.

## அமெரிக்க வல்லாதிக்க மிரட்டலின் பொருள்

முதலாவதாக, அமெரிக்க வல்லாதிக்கம் (ஏகாதிபத்தியம்) தமிழீழ விடுதலைப் போரை நசுக்கத் துடிக்கிறது. அது சிங்களப் பேரினவாத அரசைத் தன் கூட்டாளியாகக் கருதுகிறது. இது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உலகளாவிய முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது.

தேசிய இன விடுதலைப் போர்கள் அனைத்துக்கும் கொடும்பகையாக அமெரிக்க வல்லாதிக்கம் இருந்து வருகிறது. அதுவே உலகப் பிற்போக்கின் தலைமைப்பீடம். புலிப்படைக்கு அமெரிக்கா விடுத்த எச்சரிக்கையை இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடுவது என்ற அளவில்கூட இலங்கை அரசோ இந்திய அரசோ கண்டிக்கவில்லை.

## இந்தியத் தேசிய இடதுசாரிகளின் ஈழ எதிர்ப்பு

ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஊறித் திளைத்த இந்தியத் தேசிய இடதுசாரிகளும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரின் எச்சரிக்கையைக் கண்டுகொள்ளவில்லை. தேசிய இன விடுதலைப் போராட்டத்தை,

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாகக் காண்பதில் இவர்கள் வல்லாதிக்கத்துடன் ஒத்துப்போவது இதிலிருந்து தெளிவாகிறது. இந்திய ஒருமைப்பாடு, இலங்கை ஒருமைப்பாடு என்ற பெயரில் தேசிய இன விடுதலைப் போராட்டங்களைப் பிரிவினைவாதமாகக் காட்டிவருவது இவர்களை தேசிய இன ஒடுக்குமுறையின் ஆதரவாளர்களாக மாற்றியுள்ளது. பாரத மாதாவின் பல்லக்குத் தூக்கிகளான இந்தியத் தேசிய இடதுசாரிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மூர்க்கமாக எதிர்த்து வருவதற்கு இதற்கு முன்பும் பல சான்றுகளைக் காட்டலாம். இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியும் (சிபிஐ), மார்க்சியக் கட்சியும் (சிபிஎம்) சென்ற ஆண்டு நடத்திய தத்தமது அனைத்திந்தியப் பேராயங்களுக்கு வேறு பல நாடுகளிலிருந்தும் தோழமைக் கட்சிகளின் பேராளர்களைப் பார்வையாளர்களாக அழைத்திருந்தன. இவ்வகையில் இரு கட்சிகளுமே தோழமையுடன் அழைத்திருந்த இயக்கங்களில் ஒன்று - இலங்கையைச் சேர்ந்த ஜனத விமுக்தி பெரமுன- இது ஒரு சிங்களப் பேரினவாதக் கட்சி. தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வோ வேறு சலுகையோ வழங்கக் கூடாது என்றும், புலிகளுடன் இப்போதுள்ள போர் நிறுத்த உடன்படிக்கையை மாற்ற வேண்டும் என்றும் நிபந்தனை விதித்து அந்த அடிப்படையில் அதிபர் தேர்தலில் இராசபட்சரை ஆதரித்த கட்சி.

இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பேரில் தமிழீழத்தின் மீது இந்தியா படையெடுத்ததையே நியாயப்படுத்தியவர்கள்தாம் இந்த இடதுசாரிகள் என்பதையும் மறப்பதற்கில்லை. இதே ஏரணப்படி நாளை ஈழத்தின் மீது அமெரிக்கா படையெடுத்தால் அதற்கும் நியாயம் சொல்லமாட்டார்கள் என்ற உறுதி இல்லை.

அமெரிக்கா புலிகளுக்கு விடுத்த மிரட்டலைக் கண்டுகொள்ளாத இந்தியத் தேசிய இடதுசாரிகள் அதே அமெரிக்கா இந்திய அரசுக்கு விடுத்த எச்சரிக்கையை வன்மையாகக் கண்டித்ததன் பொருள் என்ன? பன்னாட்டு அணுவாற்றல் முகமையின் கூட்டத்திலும் இந்தியா ஈரானை எதிர்த்தும் அமெரிக்காவை ஆதரித்தும் வாக்களிக்கக் கூடாது என்று வலியுறுத்தியதன் பொருள் என்ன? உள்ளபடியே அமெரிக்கா சொன்னபடி இந்திய அரசு வாக்களித்தபின் அதை எதிர்த்து அவர்கள் தீவிரமாக முழங்குவதன் பொருள் என்ன?

### கூச்சலும் குற்றக்கூண்டும்

இடதுசாரிகளால் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கூச்சல் போடுவதற்கு மேல் வேறொன்றும் செய்துவிட முடியாது என்பது மன்மோகன் சிங்கிற்கும் தெரியும், சோனியாகாந்திக்கும் தெரியும். ஏன், இடதுசாரிகளுக்கே அது தெரிந்ததுதான். இதற்கு நாம் சான்று தரலாம்.

மார்க்சியக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத்து நாடாளுமன்றத்தில் இந்திய அரசைக் கூண்டிலேற்றுவோம் என்று முழங்குகிறார். கூண்டு என்றால் சாட்சிக் கூண்டு அல்ல. குற்றவாளிக்கூண்டு. ஒருவரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி

படிப்பகம்

www.padippakam.com



விசாரித்தால் அதன் முடிவு என்னவாக இருக்கும் என்று நமக்குத் தெரியும். ஒன்று, அவரைக் குற்றமற்றவர் என்று விடுதலை செய்ய வேண்டும். அல்லது, அவரைக் குற்றவாளி என்று தீர்மானித்து தண்டனை வழங்க வேண்டும். இந்திய அரசு குற்றம் புரிந்துள்ளது என்பதில் காரத்துக்கோ, ஏ.பி. பரதனுக்கோ, பிற இடதுசாரித் தலைவர்களுக்கோ எவ்வித ஐயப்பாடுமில்லை.

அப்படியானால் அவர்கள் வழங்கப்போகும் தண்டனை என்ன? அரசுக்கு அளித்துவரும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போகிறார்களா? அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப் போகிறார்களா? எதுவுமில்லை. நீ குற்றவாளிதான். ஆனால் உன்னை நாங்கள் தண்டிக்கப் போவதில்லை. நீ தொடர்ந்து குற்றம் செய்யலாம். நாங்கள் கண்டிப்போமே தவிர தண்டிக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்வதுபோல் உள்ளது.

## மன்மோகன் சிங்கின் (அமெரிக்க) நாட்டுப் பற்று

இந்திய அரசின் அமெரிக்கச் சார்பு ஒன்றும் திடீர் நிகழ்வு அல்ல. இந்திய - அமெரிக்க அணு ஒப்பந்தம் குறித்து எதிர்க்கட்சிகளும் ஏடுகளும் மட்டுமல்ல, ஐ.நாவுக்கான முன்னாள் இந்தியப் பிரதிநிதி, இந்திய அரசின் முன்னாள் அயலுறவுச் செயலர் உள்ளிட்ட பல முன்னாள் தூதுவர்களும் கேள்விமேல் கேள்வி எழுப்பி வருகிறார்கள். இந்திய அரசிடமிருந்து உருப்படியான பதிலில்லை. ஒப்பந்த விவரங்கள் இந்திய நாடாளுமன்றத்திற்கே தெரியாத இரகசியங்களாய் வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சியின் நாட்டுப்பற்றை நம்புங்கள் என்று சமாதானம் சொல்கிறார் மன்மோகன்சிங். நடந்துவரும் நிகழ்ச்சிகளைப் பார்த்தால் இந்த அரசின் அமெரிக்கப் பற்றைத் தாராளமாக நம்பலாம்.

சிரியாவின் எண்ணெய் வயல்களில் இந்தியா பெருந்தொகை முதலீடு செய்வதை மறுபரிசீலனை செய்யச் சொல்கிறது அமெரிக்கா. இந்திய - ஈரான் எரிவாயுக் குழாய்த் திட்டத்தை அது கடுமையாக எதிர்க்கிறது. இந்த எதிர்ப்புகளும் எச்சரிக்கைகளும் பலிக்காமல் போய்விடவில்லை. ஈரான் எரிவாயுக் குழாய்த் திட்டத்தை இந்தியா ஏற்கெனவே கிடப்பில் போட்டு விட்டது. சிரியா மீதான அமெரிக்காவின் பொருளாதார முற்றுகையிலும் இந்தியா அமெரிக்காவுக்கு உடந்தையாகவே இருந்து வருகிறது. எப்படியேனும் அமெரிக்காவின் தயவைப் பெற்று ஐ.நா. பாதுகாப்பு மன்றத்தில் நிரந்தர உறுப்பு நாடாகத் துடிக்கிறது இந்தியா.

இந்திய அரசின் இந்த அமெரிக்க ஆதரவுப் போக்கைத் தடுத்து நிறுத்தவோ தள்ளிப்போடவோகூட இந்திய இடதுசாரிகளால் முடியவில்லை. அவர்கள் அடிப்பதுபோல் அடிக்க, மன்மோகன்சிங் அரசு அழுவதுபோல் அழுதுவிட்டுத் தொடர்ந்து அமெரிக்கக் கட்டளைகளுக்கு அடிபணிந்து கொண்டுதான் இருக்கிறது.

## பார்ப்பன-பனியா அரசின் வல்லாதிக்கச் சார்பு

இந்தியாவை ஆளும் பார்ப்பன-பனியா ஆற்றல்களின் நலனுக்கு வல்லாதிக்கச் சார்பு இன்றியமையாதது என்பதை நினைவிற்கொள்ள

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். ஆளும் கட்சி எதுவானாலும், தலைமை அமைச்சர் எவரானாலும் இதில் எவ்வித மாற்றமும் இல்லை. இந்த ஆளும் ஆற்றல்களின் நலன் காக்கும் அமைப்புதான் இந்திய அரசமைப்பு. அவர்களின் கருத்தியல்தான் இந்தியத் தேசியம். இந்த அரசமைப்பிற்கு உட்பட்டும், இந்தியத் தேசியத்தில் கால்பதித்து நின்று கொண்டும் வல்லாதிக்கச் சார்பை எதிர்த்து முறியடிக்க எவராலும் இயலாது. உலகமயத்தையும் தனியார்மயத்தையும் தாராளமயத்தையும் எதிர்ப்பதாகச் சொல்லும் இடதுசாரிகள் செயலளவில் அவற்றிற்கு உள்குத்தகையாளர்களாக இருந்துவரும் அவலத்திற்கு இதுவே காரணம். மார்க்சியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா உலகமயத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறார். அவரே இந்திய அளவிலும் உலக அளவிலுமான பன்னாட்டு மூலதனத்திற்கு ஏங்கித் தவிக்கிறார்.

## இடதுசாரிகளது மௌனத்தின் பொருள்

தேசிய இன விடுதலைக்கும் சமூகநீதிக்குமான போராட்டங்களை ஒதுக்கிவிட்டு இந்தியத் தேசிய வட்டத்திற்குள் நின்று வல்லாதிக்கத்தை உறுதியாக எதிர்க்கவோ இறுதியாக முறியடிக்கவோ முடியாது என்பதைத்தான் இடதுசாரிகளின் அனுபவம் காட்டுகிறது. உரிய காலத்தில் தவறுகள் திருத்தப்படாவிட்டால் இடதுசாரிகளின் சொல்லளவிலான வல்லாதிக்க எதிர்ப்பும்கூட ஊமையாகிப் போய்விடும். அமெரிக்கா இந்திய அரசுக்கு எச்சரிக்கை விடும்போது துள்ளிக் குதிக்கும் இடதுசாரிகள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எச்சரிக்கை விடும்போது கண்டுகொள்ள மறுப்பது இதைத்தான் மெய்ப்பிக்கிறது.

இந்திய அரசுக்கு அமெரிக்கத் தூதர் விடுத்த எச்சரிக்கை இந்திய இறையாண்மையை மீறுவதாக வருத்தப்பட்ட வாஜ்பேயியும்கூட பன்னாட்டு அணுவாற்றல் முகமையில் ஈரானை எதிர்த்தும் அமெரிக்காவை ஆதரித்தும் இந்தியா வாக்களித்தது சரிதான் என்று கூறியிருப்பது கருத்துக்குரியது. ஆர்எஸ்எஸ்சின் நிலைப்பாடும் இதுதான்.

ஆப்கானிஸ்தான் மீதும் ஈராக் மீதும் படையெடுத்ததுபோல் ஈரான் மீதும் தாக்குதல் தொடுப்பதற்கு அமெரிக்க வல்லாதிக்கம் அணியமாகி வருகிறது என்ற நியாயமான ஐயப்பாடு எழுந்துள்ள சூழலில், இந்தியாவை ஆளும் காங்கிரசும் எதிர்க்கட்சியான பாரதிய சனதாக் கட்சியும் அதன் இந்துத்துவத் தலைமைப் பீடமான ஆர்எஸ்எஸ்சும் ஒரே குரலில் அமெரிக்க வல்லாதிக்கத்தை ஆதரிக்கும்போது இடதுசாரிகள் ஒப்புக்குச் சப்பாணியாக எதிர்ப்புக் குரல் கொடுப்பதற்கு மேல் வேறொன்றும் செய்ய முடியவில்லை என்பதைப் பார்க்கிறோம். ஈரான் சிக்கலுக்கு மன்மோகன் சிங் அரசு சமயச்சாயம் பூசுவதாகவும் இடதுசாரிகள் வருத்தப்படுகிறார்களாம். சமயச் சார்பின்மைக்காகவே காங்கிரசை ஆதரித்து, ஐக்கிய சனநாயகக் கூட்டணி அரசுக்கு முட்டுக் கொடுத்தவர்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



## ஆதிக்க முக்கூட்டு அல்லது அச்சு

கொழும்பிலும் தில்லியிலும் அமெரிக்கத் தூதர்கள் விடுத்த எச்சரிக்கைகளும், பன்னாட்டு அணுவாற்றல் முகமையில் இந்திய அரசு அமெரிக்க வல்லாதிக்கத்திற்கு ஆதரவாகக் கைதூக்கியிருப்பதும் - முன்னிகழ்ந்த பலவற்றோடும் சேர்ந்து - தெற்காசியாவில் ஓர் ஆதிக்க முக்கூட்டு அல்லது அச்சினை வெளிப்படுத்தியுள்ளன. இந்த அச்சில்

1. அமெரிக்க வல்லாதிக்க அரசு,
2. இந்தியப் பார்ப்பனிய அரசு,
3. சிங்களப் பேரினவாத அரசு

ஆகியவை கைகோத்துள்ளன.

இந்த மூன்று அரசுகளும் தமிழீழ மக்களின் விடுதலைப் போரை ஒழித்துக்கட்ட முனைந்துள்ளன என்ற வரலாற்று உண்மையை உள்வாங்காமல், தமிழீழ விடுதலைக்குத் துணைநிற்கவோ தமிழீழ மக்களைப் பாதுகாக்கவோ முடியாது.

## சோசலிசத் தமிழீழம் நோக்கி

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது ஒரு தேசிய இனம் தனது தன்தீர்வுரிமையை (சுயநிர்ணய உரிமையை) நிலைநாட்டிக் கொள்வதற்காக நடத்துகின்ற சனநாயகப் போராட்டமாகும். அது சிங்களப் பேரினவாத அரசை உடனடிப் பகையிலக்காகக் கொண்டு நடத்தப்பட்டாலும், தொலைநோக்கில் அது உலக முதலாளியத்துக்கும் அதன் தலைமையான வல்லாதிக்கத்துக்கும் எதிரானது. ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தக்கு சோசலிசக் குறிக்கோள் முன்னிபந்தனையாக முடியாது என்றாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முதல் கொள்கைத் திட்டத்துக்கு சோசலிசத் தமிழீழம் நோக்கி எனப் பெயரிட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழர் தேசிய இயக்கத் தலைவரும், தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளரும் ஆகிய திரு பழ. நெடுமாறன் 1985 அக்டோபரில் தமிழீழமெங்கும் சுற்றுப்பயணம் செய்தார். அவர் உயிரைப் பணயம் வைத்து ஈழப் பரப்பெங்கும் சென்று திரட்டிய செய்திகளைத் தொகுத்து போர்முனையில் புலிகளுடன் என்ற நூலை எழுதியுள்ளார்.

இந்நூலில் புலிப்படையின் இளம் வீரர்களுடன் உரையாடியது பற்றி நெடுமாறன் இப்படிச் சொல்கிறார்:

“தமிழீழத்தின் விடுதலைக்கான போராட்டம் என்று மட்டும் அவர்கள் தங்கள் போராட்டத்தைக் கருதவில்லை. தென்னாசியப் பகுதிகளில் ஏகாதிபத்தியங்களின் காலடிச் சுவடே இல்லாமல் அழிக்கும் போராட்டமாகவும், இந்தப் பகுதிக்கான சோசலிசப் புரட்சிக்கு வித்திடும் போராட்டமாகவும் அவர்கள் தங்கள் போராட்டத்தைக் கருதுவது கண்டு பெருமிதம் அடைந்தேன்.”

படிப்பகம்

www.padippakam.com



யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒருவரின் வினாவையும் நெடுமாறன் எடுத்துக் காட்டுகிறார்:

"பாலத்தீனம், நமீபியா விடுதலைப் போராட்டங்களை அங்கீகரித்துள்ள இந்திய அரசு எங்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க ஏன் மறுக்கிறது? எங்களை இந்திய அரசு அங்கீகரிக்குமாறு செய்யத் தமிழ்நாட்டு மக்கள் போராட வேண்டும்... எங்களது விடுதலைப் போராட்டம் சோசலிசத்துக்கான போராட்டமாக இருப்பதால் இதை அங்கீகரிக்க இந்திய அரசு தயங்குகிறதா?"

இருபதாண்டு முன்பே தமிழீழ இளைஞர்களும் மாணவர்களும் இத்துணைத் தெளிவாகத் தங்கள் விடுதலைப் போராட்டத்தின் திசைவழியைக் கணித்தார்கள் என்பது கருத்துக்குரிய செய்தி.

## கியூபா, வியத்நாம் வரிசையில் தமிழீழம்

புரட்சிகரமான தேசிய விடுதலைப் போர் என்ற வகையில் கியூபா, வியத்நாம், தென் ஆப்பிரிக்கா, தென்மேற்கு ஆப்பிரிக்கா (நமீபியா), பாலத்தீனம் முதலான நாடுகளின் விடுதலைப் போர்களது வரிசையில் இடம் பெறத்தக்கதாகும் தமிழீழ விடுதலைப் போர். சட்டத்தின் குண்டுச் சட்டிக்குள் சந்தர்ப்பவாதக் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கும் இந்தியத் தேசிய இடதுசாரிகள் எவ்வளவுதான் இந்த உண்மையை மறைக்கப் பாடுபட்டாலும், வல்லாதிக்கங்கள் எதிர்வகையாகவேனும் நமக்கு வெளிச்சம் தருகின்றன.

உலக வரலாற்றில் அழுத்தமாய் முத்திரை பதிந்துள்ள மேற்சொன்ன விடுதலைப் போர்களையெல்லாம் பயங்கரவாதக் கலகங்களாகப் படங்காட்டிய அமெரிக்க வல்லாதிக்கம்தான் தமிழீழ விடுதலைப் போரையும் பயங்கரவாதமாகச் சித்திரிக்க முற்பட்டுள்ளது. பிடல் காஸ்ட்ரோ, ஹோ சி-மின், நெல்சன் மண்டேலா, சாம் நுயோமா, யாசர் அராபத் ஆகியவர்களின் வரிசையில்தான் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனையும் அது பயங்கரவாதியாகக் காட்ட முற்பட்டுள்ளது.

## தென்னாசியாவில் தடி சுழற்றும் இந்தியா

அமெரிக்க வல்லாதிக்கம் உலகக் காவல் துறையாகத் தன்னைத்தானே அமர்த்திக் கொண்டிருப்பதுபோல் இந்திய வல்லாதிக்கம் தன்னால் முடிந்த வரை தென்னாசியப் பகுதியில் காவல்துறையாகத் தடி சுழற்ற முனைந்துள்ளது.

கியூபாவை அமெரிக்க வல்லாதிக்கம் தன் நெஞ்சில் குத்திய முள்ளாகக் கருதுவது போலவே, தமிழீழப் போராட்டத்தை இந்திய வல்லாதிக்கம் பார்க்கிறது. தமிழீழம் மலரும்போது அது தென்னாசியாவின் கியூபாவாக அமைந்து விடும் என்பதை எண்ணி வல்லாதிக்கங்கள் அஞ்சி நடுங்குகின்றன. அந்த ஆபத்தை முளையிலேயே கிள்ளியெறியத் துடிக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



இராசீவ் - ஜெயவர்த்தனா உடன்படிக்கை ஆயினும், வெளிப்படையாகவும் உட்படையாகவும் சிங்கள அரசுக்கு இன்றளவும் இந்தியா வழங்கி வரும் படைக்கல உதவிகள், பயிற்சி உதவிகள் ஆயினும், அமெரிக்கத் தூதர் லூன்ஸ்டெடு எடுத்துக்காட்டும் ஒத்துழைப்பு ஆயினும், அவர் விடுத்துள்ள மிரட்டல் ஆயினும், எல்லாமே இந்த வல்லாதிக்கத் துடிப்பின் வெளிப்பாடுகள்தாம்.

தங்கள் மக்களின் விடுதலைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளை 'இந்து' ஆங்கில நாளேடு இந்திய விரோதச் சக்தி என்று வன்மத்துடன் தாக்குவதைக் கருதிப் பார்க்க வேண்டும். புலிகளுக்கு எதிராக 'இந்து' கக்கும் நஞ்சில் பொங்கி வழிவது இந்தியப் பார்ப்பனியத்துக்கும் சிங்களப் பேரினவாதத்துக்குமான கொலைகாரக் கலப்பே தவிர வேறல்ல.

## இந்து ஏட்டின் சிங்களச் சேவை

கொழும்பில் அமெரிக்கத் தூதர் லூன்ஸ்டெடு தமிழீழ விடுதலைப் புலிகளை அச்சுறுத்திப் பேசிய செய்தியை 'இந்து' மறைத்தும் திரித்தும் வெளியிட்டது. பிரபாகரன் தும்மினால்கூட அதற்கோர் ஆசிரியவுரை எழுதும் 'இந்து' லூன்ஸ்டெடின் மிரட்டல் குறித்து ஒரு வார்த்தைகூட எழுதவில்லை. அடுத்த சில நாளில் புதுதில்லியில் அமெரிக்கத் தூதர் முல்ஃபோர்டு இந்திய அரசுக்கு விடுத்த எச்சரிக்கையை 'அமெரிக்காவின் ஃபத்வா' என்று துள்ளிக் குதித்து 'இந்து' கண்டித்ததை இதனுடன் ஒப்புநோக்கலாம். அமெரிக்க வல்லாதிக்கம் தலையிட்டாவது தமிழீழ விடுதலைப் போரை நசுக்க முடிந்தால் 'இந்து'வுக்கு நிம்மதி! இந்து 'ராம்' சந்திரிகாவின் சிங்கள இரத்தினமாக விருது பெற்றதன் காரணம் புரிகிறதா?

வல்லாதிக்கத்திலிருந்து விடுதலை என்பது ஒடுக்குண்ட வெகுமக்கள் தேசிய விடுதலைக்காகவும் சமூகநீதிக்காகவும் களத்தில் போராடிப் பெறுவதாகுமே தவிர, சந்தர்ப்பவாதக் கூட்டணிகளாலோ நாடாளுமன்ற விவாதங்களாலோ நாளேடுகளின் ஆசிரியவுரைகளாலோ வாய்ச்சொல் வீரர்களின் அடுக்குமொழிச் சொற்பொழிவுகளாலோ வந்து கிடைப்பதன்று. எழுத்தும் பேச்சும் போராட்டத்துக்குத் துணையாகலாம், மாற்றாக மாட்டா.

## அமெரிக்காவின் நிலை

விடுதலை இயக்கங்களை அச்சுறுத்தும் அமெரிக்க வல்லாதிக்கத்தின் இன்றைய நிலை என்னவென்று பார்ப்போம்.

வியத்நாமில் உதைபட்டு ஓடிய அமெரிக்க வல்லாதிக்கம் அதனால் திருந்தி விடவில்லை என்பதை மறந்துவிடக் கூடாது. சோவியத்து ஒன்றியம் சிதைந்து, சோசலிச முகாம் கலைந்து போய் விட்ட நிலைமையைப் பயன்படுத்தி அமெரிக்க வல்லூறு தன் போர்ச் சிறகுகளைப் புதிதாய் அகல விரித்துக் கொண்டு வருகிறது. ஆப்கானிஸ்தானத்திலும் இராக்கிலும் அமெரிக்க வல்லாதிக்கமும், துணைக்கு பிரித்தானிய வல்லாதிக்கமும் படை நடத்திக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருக்கின்றன. வல்லாதிக்கப் படையெடுப்புக்கு அடுத்த இலக்கு ஈரான் அல்லது சிரியாவாக இருக்கலாம். அல்லது ஹமாசின் தேர்தல் வெற்றியைக் காட்டி இசுரேலிய சயோனிசப் படையை பாலத்தீனத்தின் மீது ஏவுவதாக இருக்கலாம்.

அமெரிக்க வல்லாதிக்கம் எண்ணெய் வளங்கொழிக்கும் அரபு நாடுகளையும் படைவலிமையால் வளைத்துப் போட முயன்று கொண்டிருக்கிறது. இந்தியா போன்ற நாடுகளைப் பொருளியல் வலிமையால் வழிக்குக் கொண்டு வருகிறது. தமிழீழம் போன்று தேசிய இன விடுதலைக்காகப் போராடும் மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, தன்னோடு முழுக்க ஒத்துப்போகாத பிரான்சு போன்ற வல்லரசுகளையும் பலவகையில் நெருக்கிக் கொண்டிருக்கிறது.

## இலத்தீன் அமெரிக்காவில் வல்லாதிக்கப் பிடி தளர்வு

பழைய உலகம் என்றும் கிழக்கு அரைக்கோளம் என்றும் அறியப்படும் புவிக்கோளின் ஒரு பாதியில் அமெரிக்க வல்லாதிக்கம் இப்படியெல்லாம் ஆட்டம் போட்டுக் கொண்டிருக்க, புதிய உலகம் என்றும் மேற்கு அரைக்கோளம் என்றும் அறியப்படும் புவிக்கோளின் மறுபாதியில் - அமெரிக்காவின் சொந்தப் பாதியில் - வல்லாதிக்கப் பிடி நாளும் தளர்ந்து கொண்டிருக்கிறது. அமெரிக்க வல்லாதிக்கத்தின் கொலைக் கைகள் எல்லாப் பக்கமும் நீண்டு கொண்டிருக்கும்போதே அதன் காலடி மண் சரிந்து கொண்டிருக்கிறது.

## மன்றோ கொள்கை

அண்மைக் காலம் வரை இலத்தீன் அமெரிக்கா முழுவதும் அமெரிக்க வல்லாதிக்கத்தின் தனிப்பட்ட செல்வாக்கு மண்டலமாகக் கருதப்பட்டது. எந்த இலத்தீன் அமெரிக்க நாட்டில் என்ன நடந்தாலும் அது தன் பாதுகாப்பு நலன்களைப் பாதிப்பதாக அமெரிக்கா கருதிக் கொள்ளும் என்று 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஒரு கொள்கை அறிவிக்கப்பட்டது. அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த மன்றோ இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அய்ரோப்பிய வல்லரசுகள் தலையிடுவதைத் தடுப்பதற்காக இந்தக் கொள்கையை வகுத்தார். இந்த மன்றோ கொள்கை இருநூறு ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் பெருமளவில் ஆட்டம் கண்டுள்ளது.

## கியூபாவில் புரட்சி

கடந்த 1959இல் கியூபாவில்: பிடல் காஸ்ட்ரோ, சே குவேரா தலைமையிலான புரட்சி அமெரிக்க அடிவருடிச் சர்வாதிகாரி பாத்திஸ்டாவை வீழ்த்தியது. இது அமெரிக்கக் கண்டத்தில் அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு விழுந்த முதல் அடி. கியூபப் புரட்சி இலத்தீன் அமெரிக்கா முழுவதையும் குலுக்கவே செய்தது என்றாலும் அடுத்து வந்த நீண்ட காலத்திற்கு கியூபா தனித்தே நிற்க வேண்டியிருந்தது. சிலி நாட்டின் சோசலிஸ்டுத் தலைவர் சால்வடார் அலெண்டே தேர்தலில்

படிப்பகம்

www.padippakam.com



வென்று ஆட்சிக்கு வந்த போது அமெரிக்க உளவு நிறுவனம் (சிஐஏ) ஓர் எதிர்ப் புரட்சிக் கலகத்தைத் தூண்டி, அலெண்டேயைக் கொலை செய்து, இராணுவச் சர்வாதிகார ஆட்சியை நிறுவியது. நிகராகுவாவில் 1979இல் நடைபெற்ற சாண்டினிஸ்டுப் புரட்சி கியூபாவுக்கும், இதர இலத்தீன் அமெரிக்கத் தேசங்களுக்கும் பேருக்கமாய் அமைந்தது. எல் சால்வடாரிலும் வேறு சில இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் புரட்சிகர இயக்கங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டன.

## இலத்தீன் அமெரிக்காவில் வல்லாதிக்க எதிர்ப்பு அலை

அமெரிக்காவின் முற்றுகைக்கு நடுவில் கியூபா தாக்குப் பிடித்து நின்றதோடு சுதந்திரமான ஒரு புதிய வாழ்வைக் கட்டியெழுப்பிய விதம் உலகெங்கும், குறிப்பாக இலத்தீன் அமெரிக்காவில் மக்கள் நம்பிக்கையைச் சுடர்விடச் செய்தது. வல்லாதிக்க உலகமயத்தால் வறுமைப் படுகுழியில் தள்ளப்பட்ட இலத்தீன் அமெரிக்கத் தேசங்கள் பலவற்றிலும் இப்போது வல்லாதிக்க எதிர்ப்புப் பேரலை ஒன்று வீசியடித்துக் கொண்டிருக்கிறது. வல்லாதிக்கத்தை எதிர்த்து வெகு மக்கள் போராட்டங்களின் அடிப்படையில் இந்த நாடுகள் பலவற்றிலும் அமெரிக்க வல்லாதிக்க எதிர்ப்பாளர்கள் ஆட்சிக்கு வந்துள்ளார்கள். இவர்கள் துணிந்து அமெரிக்க வல்லாதிக்கத்தை எதிர்த்துப் பேசுகிறார்கள். செயல்படவும் செய்கிறார்கள். வெனிசுவேலா அதிபராகியுள்ள ஹியூகோ சாவேஸ் இவர்களில் குறிப்பிடத்தக்கவர். பிரேசிலில் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா என்ற ஆலைத் தொழிலாளி நாட்டின் அதிபராகியிருக்கிறார். பொலிவியாவில் முதல்முறையாக அந்த மண்ணின் மக்களான மாயன் பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவர், ஈவோ மொரேல்ஸ் ஆட்சிக்கு வந்துள்ளார். கோக்கா விவசாயியான அவர் 'அமெரிக்கர்களே வெளியேறுங்கள்' என்று முழங்குகிறார். அலெண்டே கொலை செய்யப்பட்ட அதே சிலி நாட்டில் மிஷேல் பச்சேலெட் என்னும் பெண்மணி ஆட்சிக்கு வந்துள்ளார். அமெரிக்க வல்லாதிக்க அரசில் இதுவரை எந்தப் பெண்ணும் அதிபர் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அர்ஜெண்டைனாவில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நெஸ்டர் கிர்ச்னர் தீவிர அமெரிக்க எதிர்ப்பாளர். உலகப் புகழ்பெற்ற கால்பந்தாட்ட வீரர் தீகோ மாரடோனாவும் இப்போது தீவிர அமெரிக்க எதிர்ப்புக் கிளர்ச்சியாளராக மாறியுள்ளார். அமெரிக்க மேலாதிக்கத்தை வெறுப்பவர்களுக்கு இலத்தீன் அமெரிக்காவில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் புதிய நம்பிக்கை தருவதாக உலக அரசியல் நோக்கர்கள் கூறி வருகிறார்கள்.

## ஈழத்துக்கு கியூபா பாடம்

இலத்தீன் அமெரிக்காவில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளும் கவனிக்கத் தவறவில்லை. விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான கா.வே. பாலகுமாரன் சொல்கிறார்:

படிப்பகம்

www.padippakam.com



"கியூபப் புரட்சி நடந்தது 1959ஆம் ஆண்டு. தொடக்கத்திலேயே அந்தப் புரட்சியை நசுக்குவதற்கு இராணுவரீதியாக பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன... அந்தப் படையெடுப்பு தோற்றது. பிறகு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு பல்வேறு வகையிலே சொல்லப்பட முடியாத தாக்குதல்களை மேற்கொண்டு 40 வருட காலமாக உலகத்திலேயே மிக நீண்ட பொருளாதாரத் தடையில் சிக்கிய கியூபா நாடு, இன்று மெல்ல மெல்லத் தலைநிமிர்ந்து வருகிறது...

கியூபா எங்களுக்கு ஒரு பாடமாக இருக்கிறது. நாளை நாங்கள் விடுதலை பெற்றாலும்கூட தொடக்கத்திலே எங்களுக்கு இப்படிப்பட்ட சில தடைகள் வரக்கூடும். இவற்றைத் தாண்டுவதற்காக வெறும் ஆர்வம் மாத்திரமல்லாமல் ஆக்கப்பூர்வமாகச் செயல்படக்கூடிய அணியே உலகத்தில் இருப்பதை நாங்கள் பார்க்கிறோம். இது எங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக இருக்கிறது..."

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் வளர்ந்து வரும் வல்லாதிக்க எதிர்ப்பு அணியை மனத்திற் கொண்டே தோழர் பாலகுமாரன் இவ்வாறு பேசியுள்ளார்.

## போரும் அமைதியும்

தமிழீழ விடுதலைப் போர் எவ்வளவுதான் தென்னாசிய அளவிலும் உலக அளவிலும் முக்கியத்துவம் ஈட்டினாலும், அதன் வெற்றி முதன்மையாகத் தங்கி நிற்பது தமிழீழ மக்களிடமே என்பதை மறந்து விடலாகாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் முப்பதாண்டுப் போராட்ட வரலாற்றில், அவர்கள் போருக்கு ஓய்வு கொடுத்து அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கு பெறும் வாய்ப்பை ஒருபோதும் தவற விட்டதில்லை. அதேபோது அமைதியின் பெயரால் தமது குறிக்கோளுக்குப் புறம்பான சமரசத்தை ஏற்றுக் கொண்டு போராட்டத்தைக் கைவிட இணங்கியதுமில்லை.

கடந்த 2001 இறுதியில் விடுதலைப் புலிகள்தாம் போர்நிறுத்தம் அறிவித்தார்கள். ஆனையிரவு வெற்றிக்குப் பின் போர்க்களத்தில் வலுவான நிலையில் இருந்து கொண்டு அவர்கள் இப்படிச் செய்தார்கள். போரில் புலிப்படையை வெல்ல முடியாத நிலையிலும், சிங்கள மக்களே அமைதிக்குத் தந்த அழுத்தத்தாலும், உலகச் சூழலின் காரணத்தாலும் சிங்கள அரசும் வேறு வழியின்றி போர் நிறுத்தத்திற்கு இணங்கிற்று. சற்றொப்ப நான்காண்டு காலமாக எத்தனையோ ஆத்திரமூட்டும் நிகழ்ச்சிகளுக்கிடையிலும் புலிப்படை போர் நிறுத்தத்தை நேர்மையாகவும் உறுதியாகவும் கடைபிடித்து வருகிறது. புலிப்படைக்கும் தமிழீழ மக்களுக்கும் துரோகம் செய்து ஓடிப்போன கருணா கும்பலை சிங்கள அரசின் இராணுவமும் உளவுத்துறையும் பாதுகாத்து வளர்த்து வருவது போர்நிறுத்த உடன்பாட்டை மீறுவதாகும் என்ற போதிலும், புலிப்படை அமைதி காத்தே வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



## உடன்பாட்டை மீறும் சிங்களம்

போர்நிறுத்த உடன்பாட்டில் ஒப்புக்கொண்டபடி சிங்கள இராணுவம் கல்வி நிலையங்களிலிருந்தும், பொதுக் கட்டடங்கள், வீடுகளிலிருந்தும், நகரங்களில் மக்கள் புழங்கும் பகுதிகளிலிருந்தும் விலக்கிக் கொள்ளப்படவில்லை என்ற போதிலும் புலிப்படை அமைதி காத்தே வருகிறது.

கடலோரப் பகுதிகளில் தமிழ் மீனவர்களுக்கான சிங்கள இராணுவத்தின் கெடுபிடிகள் கிஞ்சிற்றும் தளர்த்தப்படவில்லை. அம்மீனவர்களின் வாழ்வுரிமை மறுக்கப்பட்ட நிலையே தொடர்கிறது.

சிங்கள இராணுவத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்த இஎன்டிஎல்எஃப் போன்ற குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பது போர் நிறுத்த உடன்பாட்டின் ஒரு முக்கியக் கூறு. சிங்கள அரசு இதைச் செய்யத் தவறியதோடு, புதிதாக ஒரு ஆயுதக் குழுவையும் உண்டாக்கித் தீனி போட்டு வளர்த்து வருகிறது. இந்தக் குழுவினர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மட்டுமல்லாமல், புலிகள் ஆட்சி செய்யும் பகுதிகளில்கூட தமிழ் மக்களைத் தாக்கிக் கொன்று கிளியூட்ட முயன்று வருகின்றனர். இத்தனைக்குப் பிறகும் புலிகள் போர்நிறுத்தத்தைக் கைவிடவில்லை.

## தீர்வுக்கு வழி சொல்லாத சிங்களம்

ஆனால் அமைதிக்காகவே அமைதி என்பது எந்த விடுதலை இயக்கத்துக்கும் கொள்கையாக இருக்க முடியாது. தமிழீழ மக்கள் மீதான தேசிய ஒடுக்குமுறைக்கு முடிவுகட்டும் வகையில் தேசிய இனச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காணாமல் உண்மையான உறுதியான அமைதிக்கு வாய்ப்பில்லை. இப்படியொரு தீர்வுக்கு உருப்படியான எந்த முன்மொழிவையும் சிங்கள அரசால் தர முடியவில்லை என்பதே உண்மை. இந்த வகையில் இலங்கை சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்த வேறுபாடும் இல்லை. ரணில் விக்ரமசிங்கருக்கும் சந்திரிகாவிற்கும் இப்போதைய அதிபர் இராசபட்சருக்கும் எந்த வேறுபாடும் இல்லை. அடிப்படைத் தீர்வு, நிரந்தரத் தீர்வு என்பதெல்லாம் இருக்கட்டும், முறையான இடைக்காலத் தீர்வு ஒன்றைக்கூட அவர்களால் முன்மொழிய முடியவில்லை.

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்காக சிங்கள அரசும் விடுதலைப் புலிகளும் ஏற்படுத்திய ஆழிப் பேரலை துயர்துடைப்புக் கட்டமைப்பு நிறுவப்பட்டது. ஆனால் சிங்களப் பேரினவாதிகள் நீதிமன்றத்தின் வாயிலாக இந்தக் கட்டமைப்பையும் சீர்குலைத்து, தமிழ் மக்களுக்கு உதவி கிடைக்கவிடாமல் செய்தார்கள்.

## புலிகளின் ஆட்சிக் கட்டமைப்பு

புலிப்படை போர்நிறுத்தத்தைக் கடைபிடித்தபோதே, தன் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்கள் சார்ந்த குடியியல் ஆட்சியமைப்பை

படிப்பகம்

www.padippakam.com



நிறுவியது. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் பற்றிய முன்மொழிவையும் அது வெளியிட்டது. நாடாளுமன்றத் தேர்தலில் புலிப்படையின் முன்மொழிவுகளை ஆதரித்த தமிழ்த் தேசிய முன்னணி வேட்பாளர்களே பெருவாரியாக வெற்றி பெற்றார்கள். தமிழீழ மக்களின் இந்த சனநாயகக் கட்டளையை சிங்கள அரசு இம்மியளவும் மதிக்கவில்லை.

## இராசபட்சர் ஆட்சியில் வன்முறைகள்

இப்போதைய அதிபர் இராசபட்சர் சிங்கள இனவெறிக் கட்சிகளின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்துள்ளார். நார்வே அனுசரனையுடன் ஏற்பட்ட போர் நிறுத்தத்தை எதிர்த்தும், எந்த வடிவத்திலுமான கூட்டாட்சி மற்றும் அதிகாரப் பகிர்வை எதிர்த்தும் பேசியே அவர் சிங்கள மக்களிடம் வாக்குச் சேகரித்தார் என்பதை மறுப்பதற்கில்லை. இராசபட்சர் பொறுப்பேற்ற பிறகு சிங்களப் படையினரின் போர்நிறுத்த மீறல்களும் பொதுமக்களுக்கெதிரான அட்டூழியங்களும் அதிகரித்தன. பல்கலைக்கழக மாணவி தர்ஷிணி சிங்களப் படையினரின் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு படுகொலையும் செய்யப்பட்டார். நீதி கேட்டுப் போராடிய பல்கலைக் கழக மாணவர்களும் ஆசிரியர்களும் - துணைவேந்தர் உட்பட - தாக்கப்பட்டார்கள்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கிறிஸ்துமஸ் வழிபாட்டின்போது தேவாலயத்திலேயே கொலை செய்யப்பட்டார். புலிப்படையைச் சேர்ந்த முக்கியத் தளபதிகள், அரசியல் ஊழியர்கள், ஆதரவாளர்கள் பலரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரும் ஆயுதக் குழுக்களும் நடத்திவரும் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க தமிழ் மக்கள் அனைவரும் ஆயுதமேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள எதிர் நடவடிக்கைகள் மேற்கொண்டனர். இந்த நடவடிக்கைகளைத்தான் புலிகளின் போர்நிறுத்த மீறலென்று சிங்கள அரசும், இந்தியாவில் அதன் ஊதுகுழலாகச் செயல்படும் 'இந்து' போன்ற ஏடுகளும் அவதூறு பரப்பி வருகின்றன.

## ஜெனிவாவில் பேச்சு

நார்வேயின் அனுசரனையுடன் பேச முடியாது. ஆசிய நாட்டில்தான் பேச்சு நடத்த முடியும் என்றெல்லாம் அடம்பிடித்துக் கொண்டிருந்த இராசபட்சரின் கூப்பாடு தோற்று விட்டது. நார்வே தலையிட்டு ஜெனிவாவில் பேச்சு நடத்துவதற்கு இரு தரப்பினரையும் இணங்க வைத்துள்ளது. ஆனால் இந்தப் பேச்சுவார்த்தை போர் நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவது பற்றி மட்டுமே என்பதை விடுதலைப் புலிகள் தெளிவாக அறிவித்துள்ளனர்.

இராசபட்சரின் அரசு இனச்சிக்கலுக்கு அமைதிவழித் தீர்வு காண விரும்பவில்லை. அது போர் புரிந்து புலிகளை ஒழித்துக் கட்டி தமிழீழ

படிப்பகம்

www.padippakam.com



மக்களின் விடுதலைப் போரை நசுக்கி அழிக்கவே ஆசைப்படுகிறது. ஆசைப்பட்டால் மட்டும் போதாதென்று அதற்குத் தெரியும். புலிகளைப் போரில் வெல்ல முடியாது என்பதைத் திரும்பத் திரும்பப் பட்டறிந்த சிங்களப் படை மீண்டும் போரில் இறங்கத் துணியாது. சிங்கள மக்களும் மீண்டும் ஒரு முறை போரினால் வரும் உயிரிழப்பு களையும் பொருளியல் நெருக்கடிகளையும் தாங்கும் நிலையில் இல்லை.

இதைத் தெரிந்து வைத்துக் கொண்டுதான் சந்திரிகாவே இந்தியாவின் உதவியை நாடினார். இந்தியாவுடன் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டால், அது சிங்கள தேசத்துக்குப் போரிடும் துணிவைத் தரும் என்று கணக்கிட்டார். இந்திய அரசு அப்படி ஓர் இராணுவ ஒப்பந்தத்தை வெளிப்படையாகச் செய்து கொள்ளவில்லையே தவிர, சிங்கள அரசுக்கு ஒப்பந்தம் இருந்தால் செய்யக்கூடிய எல்லா உதவிகளையும் செய்துகொண்டுதான் இருந்தது, இருக்கிறது. இந்தியாவின் அப்போதைய அயலுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங் கொழும்பில் இதை வெளிப்படையாகவே அறிவித்தார்.

## இந்தியா தயங்குவது ஏன்?

ஆனால் இந்திய அரசு மீண்டும் ஒரு முறை தமிழீழத்திற்குப் படையனுப்ப முன்வரவில்லை என்றால் அதற்கொரு காரணம் முன்பு மூக்குடைந்ததாக இருக்கலாம். முக்கியமான மற்றொரு காரணம் இந்தியச் சிறையை உடைத்துக் கொண்டு வெளியேற முற்பட்டுள்ள தேசிய இனங்களின் போராட்டங்களை அடக்க வேண்டிய தேவை எனலாம். ஈழத்தில் கால் வைத்தால் காசுமீரத்தில் தலை போய்விடுமென்று இந்திய ஆளும் வர்க்க அஞ்சுவதாக இருக்கலாம்.

இராசபட்சரும் ஆட்சிக்கு வந்தவுடனே சிங்கள இனவெறிக் கட்சித் தலைவர்களின் புடைசூழ தில்லிக்கு வந்து, இந்திய அரசின் உதவியை நாடினார். வெளிப்படையாக அவருக்கு எந்த வெற்றியும் கிட்டவில்லை. தமிழகத்தில் தமிழீழ ஆதரவு உணர்வுகளை விழிக்கச் செய்தது ஒன்றே அவரது பயணம் கண்ட பலன் போலும்.

## அமெரிக்க மிரட்டலின் நற்பயன்

இந்தப் பின்னணியில்தான் அமெரிக்கத் தூதர் லூன்ஸ்டெடின் அச்சுறுத்தல் வந்துள்ளது. அவரே சொல்லியிருப்பது போல் அமெரிக்கா சிங்கள இராணுவத்திற்குப் பயிற்சியும் படைக்கலன்களும் கொடுத்து வருகிறது. இவை அதன் நோக்கத்தை நிறைவேற்றப் போதுமானவை அல்ல என்று தெரிய வரும்போது நேரடியாகத் தலையிடுவது பற்றியும் அது கருதிப் பார்க்கலாம். லூன்ஸ்டெடின் அச்சுறுத்தல் தமிழகத்தில் அமெரிக்க எதிர்ப்பு உணர்வுகளைக் கிளறிவிட்டுள்ளது. அந்த அளவில் இதுவும் நன்மைக்கே எனக் கருதலாம்.

## அச்சை முறிக்கும் வலிமை

அமெரிக்க வல்லாதிக்கம் - இந்தியப் பார்ப்பனியம் - சிங்களப் பேரினவாதம் என்ற முக்கூட்டு அச்சு தமிழீழ மக்களின் விடுதலைப்

படிப்பகம்

www.padippakam.com



போருக்கு எதிராக எடுத்துவரும் கெடுமுயற்சிகள் எதிர்காலத்தில் எவ்வாறெல்லாம் உருவெடுக்கும் என்பதை இப்போதே உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் இந்த அச்சை முறித்து தமிழீழ விடுதலைப் போரை முன்னெடுத்துச் சென்று இறுதி வெற்றி பெறும் வலிமை தமிழீழ மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கும் உண்டு என்பது மட்டும் உறுதி.

அமெரிக்க-இந்திய-சிங்கள அச்சை முறித்துப் போடுவதில் தமிழீழ மக்களுக்கு அடுத்தபடி இரண்டாவது பங்கு தமிழக மக்களைச் சாரும். தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவாக தமிழக மக்கள் எந்த அளவுக்கு அணிதிரண்டு போராடுகிறார்களோ, அந்த அளவுக்கு தமிழீழ விடுதலைப் போராட்டம் விரைவு பெறும். அந்த அளவுக்கு அந்தப் போரின் வலிகள் குறையும். மறுபுறம் தமிழீழத்தின் வெற்றி வல்லாதிக்கத்துக்கும் பார்ப்பனியத்துக்கும் தேசிய இன ஒடுக்குமுறைக்கும் எதிரான நமது போராட்டத்திற்குப் பேருக்கம் தரும்.

## தமிழக ஆதரவின் பொருள்

தமிழீழ மக்களுக்குத் தமிழகம் ஆதரவு தருவது என்றால் என்ன? இது குறித்து நமக்கொரு தெளிவான பார்வை வேண்டும்.

பாலத்தீன விடுதலைப் போராட்டத்திற்கு அரபு நாடுகளின் பேராதரவு எவ்வாறு இயல்பான ஒன்றோ, அவ்வாறே தமிழீழப் போராட்டத்திற்கு தமிழக மக்கள் ஆதரவளிப்பதும் இயல்பானதே. ஆனால் அரபு நாடுகளுக்குள்ள அரசுரிமையும் இறையாண்மையும் தமிழ்நாட்டிற்கு இல்லை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். நமதினிய தமிழ்த்தேசம் இந்தியாவில் ஒரு மாநிலமாக ஒடுங்கிக் கிடப்பதால், தமிழீழ மக்களுக்கு உதவும் நம் தேசிய உரிமையை முழுமையாகப் பயன்படுத்த இயலாதவர்களாய் உள்ளோம்.

நமக்கிருக்கும் ஒரே வழி நம்மை ஆளும் இந்திய அரசோடு போராடி அதனை நெருக்கி நிர்ப்பந்தித்து தமிழீழ மக்களுக்கு எதிராக அது செயல்படவிடாமல் கட்டிப் போடுவதே ஆகும். ஆறு கோடிக்கு மேற்பட்ட தமிழக மக்களின் உணர்வுகளை எளிதில் புறக்கணிக்க முடியாத நிலையை இந்திய அரசுக்கு ஏற்படுத்த வேண்டும். தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்கும்படி கோர வேண்டும். சிங்களப் பேரினவாத அரசுக்குத் துணை போகாதிருக்கும்படி வலியுறுத்த வேண்டும்.

## புலிகள் மீது தடையை நீக்கு!

போராடும் தமிழீழ மக்களுக்கு உதவுவதும் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவாகத் தமிழ் மக்களை அணி திரட்டுவதும் தமிழர்களின் தேசியக் கடமையும் உரிமையும் ஆகும். இப்படிச் செய்வதற்கான நம் சனநாயக உரிமையை முழுமையாக மீட்க வேண்டுமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசு விதித்திருக்கும் தடையை நீக்கச் செய்ய வேண்டும். இலங்கைத் தீவில்

படிப்பகம்

www.padippakam.com



தமிழீழ விடுதலைக்காகப் போராடுவதைக் காரணமாய்ச் சொல்லி இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்கச் சட்ட நியாயம் ஏதுமில்லை என்பதால், விடுதலைப் புலிகள் இந்தியாவின் ஒரு பகுதியைப் பிரிக்கவும் அதனை அயல்நாட்டுடன் சேர்க்கவும் பாடுபடுவதாகப் பொய் சொல்லித்தான் இந்திய அரசு அவ்வியக்கத்தைத் தடை செய்துள்ளது. இந்தப் பொய்யைத் தமிழக மக்களிடமும் உலக அரங்கிலும் அம்பலப்படுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை இந்திய அரசு உடனே நீக்கும்படிக் கோராமல் ஈழத் தமிழர் பாதுகாப்பு என்றெல்லாம் பொத்தம்பொதுவாகப் பேசுவது தமிழீழ விடுதலையை முழுமையாகவும் உறுதியாகவும் ஆதரிப்பதாகாது.

## தமிழீழம் மலரும்

தமிழீழ விடுதலை ஒரு வரலாற்றுத் தேவை என்பதையும், இந்தத் தேவையை நிறைவு செய்யும் போராட்ட ஆற்றலாய்த் தமிழீழ விடுதலைப் புலிகளையே வரலாறு கண்டெடுத்துள்ளது என்பதையும் தெளிவாக உணர்ந்து, புலிகள் மீதான தடையை நீக்கு! என்பதைத் தமிழ் மக்களின் பெருமுழக்கமாக மாற்றுவோமானால், தமிழீழ விடுதலைப் போரின் வெற்றி விரைவில் கைகூடும்.

அப்போது வாசிங்டன் - தில்லி - கொழும்பு ஆதிக்க அச்சு முறியும்!

தென்கீழ் வானத்தில் தமிழீழச் செம்மீன் ஒளிரும்!

*- பிப்ரவரி 2006*

படிப்பகம்

www.padippakam.com

# போரைத் திணிக்கும் சிங்களம் பொங்கிச் சிவக்கும் தமிழீழம்

சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் இராணுவத் தலைமையகத்திற்குள் சென்ற ஏப்ரல் 25 பிற்பகல் 1.30 மணியளவில் மனிதவெடிகுண்டாக ஒரு பெண் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் அந்நாட்டின் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா படுகாயமுற்றார். பத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்தார்கள். அடுத்த சில மணி நேரத்திற்குள் நாட்டின் கிழக்குப் பகுதியில் திரிகோணமலைக்கு அருகே சம்பூர் பகுதியில் சிறீலங்காவின் போர் விமானங்கள் குண்டுமாரிப் பொழிந்தன. அதே நேரத்தில் சிறீலங்கா கடற்படையைச் சேர்ந்த அதிவேக போராப் படகுகள் மக்கள் குடியிருப்புகள் மீது பீரங்கித் தாக்குதல் நடத்தின. தரைப்படையின் ஆர்ட்டிலறித் தளங்களிலிருந்தும் கண்மூடித் தனமாகச் சுட்டனர். இந்த முப்படைத் தாக்குதலில் 12க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்ததாகவும், 26க்கு மேற்பட்டோர் காயமுற்றதாகவும், பல இலட்சம் சொத்து இழப்பு ஏற்பட்டதாகவும் பல்லாயிரம் தமிழ் மக்கள் இடப்பெயர்வுக்கு ஆளாகியிருப்பதாகவும் முதலில் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தளபதி மீது நடைபெற்ற தாக்குதலை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி 'அப்பட்டமான பயங்கரவாதச் செயல்' என்று கண்டித்துள்ளார். இந்தத் தாக்குதல் குறித்து இந்தியப் பிரதமரின் சார்பில் அவர், இலங்கை அதிபர் மகிந்த இராசபட்சரை அழைத்து இத்தாக்குதல் குறித்து அதிர்ச்சி தெரிவித்தாராம். ஆனால் திரிகோணமலையில் அப்பாவித் தமிழ்மக்கள் மீது நடைபெற்ற முப்படைத் தாக்குதல் பற்றி முகர்ஜி மூச்சும் விடவில்லை. அமெரிக்க அயலுறவுத்துறையும் பொன்சேகா மீதான தாக்குதலைக் கண்டித்துத் தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளதே தவிர, திரிகோணமலைத் தமிழ்மக்கள் மீதான தாக்குதலைக் கண்டிக்கவோ, தாக்குதலில் இறந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கவோ இல்லை. சிங்களப் பேரினவாதத்தின் செல்லக்குட்டியான ஆங்கில நாளேடு 'இந்து'வோ இராணுவத் தளபதியின் மீதான தாக்குதலை இழிவான தாக்குதல் என்று காரசாரமாகக் கண்டித்திருப்பதோடு சிங்களப் பேரினவாத அரசின் பதிலடித் தாக்குதலை நியாயப்படுத்திக் கட்டுரையும் வெளியிட்டுள்ளது (இந்து, ஏப்ரல் 27). இத்தனைக்கும் அதே இந்து ஏட்டில் சிறீலங்காவின் வான்படைத் தாக்குதலில் உயிர்ப்பலியாகிக் கிடக்கிற ஒருவரின் படம்

படிப்பகம்

www.padippakam.com



வெளிவந்துள்ளது. பார்த்தாலே தெரிகிறது, செத்துக் கிடக்கும் அந்த இளைஞர் (அல்லது சிறுவன்) அப்பாவித் தமிழன் என்பது.

இந்திய மார்க்சியக் கட்சியின் (சிபிஎம்) அரசியல் குழுவும் பொன்சேகா மீதான தாக்குதலைக் கண்டித்துள்ளதே தவிர, தமிழ் மக்கள் மீதான குண்டு வீச்சைக் கண்டிக்கவில்லை. விடுதலைப் புலிகளை இந்தியா மிரட்ட வேண்டும் என்று சிபிஎம் ஆசைப்படுகிறது. போர் நிறுத்த உடன்பாட்டை சிங்கள அரசு நிறைவேற்றவில்லை என்பதெல்லாம் அக்கட்சிக்கு ஒரு செய்தியே இல்லை போலும்!

இராணுவத் தளபதி மீதான தற்கொலைத் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தியிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் திரிகோணமலை மூதூர் கிழக்கில் முப்படைத் தாக்குதல் நடத்தியது சிறீலங்கா அரசுதான் என்பதில் ஐயத்திற்கிடமில்லை. விடுதலைப் புலிகளை அச்சுறுத்தித் தடுப்பதற்கான தாக்குதல்கள் இவையென்று சிறீலங்கா அரசே அறிவித்துள்ளது. இந்தத் தாக்குதல்கள் தொடரும் என்றும் அது வெளிப்படையாகக் கூறியுள்ளது. அப்படியானால் சிங்களப் பேரினவாத அரசு கடந்த நான்காண்டாய்ச் செயலில் இருந்துவரும் போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக் கொள்கிறதா? அப்படி எந்த அறிவிப்பையும் இராசபட்சரின் அரசு வெளியிடவில்லை. போர் நிறுத்தம் தொடர்வதாகவும், அதில் உறுதியுடன் இருப்பதாகவும் அறிவித்துக்கொண்டே அது தமிழ் மக்கள் மீது குண்டு வீசுகிறது. உதட்டளவில் அமைதி பேசிக் கொண்டே செயலளவில் போர்ப்பறை கொட்டுகிறது. இந்திய அரசோ அமெரிக்க அரசோ இந்த இழிமுயற்சியைக் கண்டிக்கவில்லை. இந்நிலைப்பாட்டில் அடங்கியுள்ள முரண்பாட்டை சுட்டிக்காட்டவும்கூட இல்லை.

சிங்கள அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தையால் அனுசரணையாளராக இருந்து வந்த நோர்வேயைச் சேர்ந்த எரிக் சோல்கைம் மட்டுமே இலங்கைத் தீவில் மீண்டும் வன்முறை வளர்ந்து வருவதைக் கண்டிப்பதாகக் கூறியுள்ளார். அதாவது அமெரிக்காவும், இந்தியாவும் செய்திருப்பது போல் இலங்கை அரசின் பக்கம் நின்று அவசர அவசரமாக விடுதலைப் புலிகளை மட்டும் குற்றஞ்சாட்டிக் கண்டிக்கும் ஓரவஞ்சனை அவரிடம் இல்லை. பொன்சேகா தாக்கப்பட்டது வன்முறையென்றால் திரிகோணமலையில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டதும் வன்முறைதான் என்ற முறையில் அவரது கண்டனம் அமைந்துள்ளது.

பொன்சேகா மீதான தாக்குதலை யார் நடத்தியிருப்பினும் அது ஓர் இராணுவ இலக்கின் மீதான தாக்குதல் என்பதில் ஐயமில்லை. அண்மையில் விடுதலைப் புலிகளின் படகுகள் தாக்கியழிக்கப்பட்டதற்கும் அதியுயர் பாதுகாப்பு வலையம் என்ற பெயரில் மக்களைத் தொடர்ந்து துன்புறுத்தி வருவதற்கும் இந்தத் தாக்குதல் ஒரு பதிலடியாக இருக்கலாம் என்பது ஊடகங்களின் கருத்து.

ஆனால் திரிகோணமலையில் சிங்கள அரசின் முப்படைத் தாக்குதலுக்கு இலக்காகியிருப்பது அப்பாவிப் பொதுமக்கள். சிறீலங்கா இராணுவ செய்தித் தொடர்பாளர் பிரசாத் சமசரசிங்கர்

படிப்பகம்

www.padippakam.com



விமானப்படைத் தாக்குதலில் உயிரிழந்தோர் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்று சொல்கிறார். ஏனென்றால் அது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி என்கிறார். ஆகவே அது கண்மூடித் தனமான வெறித்தாக்குதல் என்பது தெளிவாகிறது.

தங்கள் இராணுவத் தலைமையகத்தை விடுதலைப் புலிகள் தாக்கியதாக இலங்கை அரசு கருதி பதிலுக்கு விடுதலைப் புலிகளின் இராணுவத் தலைமையகத்தைத் தாக்கியிருந்தால், பதிலடித் தாக்குதல் என்று சொல்வதில் பொருளுண்டு. இராணுவத் தளபதியைத் தாக்கியதற்குப் பதிலடியாக அப்பாவிப் பொதுமக்கள் மீது குண்டுவீசி விட்டு அது அச்சுறுத்தித் தடுக்கும் நடவடிக்கை என்று நியாயப்படுத்துவது சிறீலங்கா அரசின் இனப்படுகொலை மனப்போக்கையே வெளிப்படுத்துகிறது.

இராசபட்சரின் சிங்களஅரசு பொன்சேகா தாக்கப்பட்ட அடுத்த சில மணி நேரத்தில் திரிகோணமலைத் தமிழ் மக்கள் மீது முப்படைத் தாக்குதல் நடத்தியது மட்டுமல்ல, மட்டக்களப்பு வவுனித்தீவிலும் பீரங்கித் தாக்குதல் நடத்தியுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தப்படி போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்ட பாதைகளையும் மூடியுள்ளது. குறிப்பாக வவுனியா வழியாக யாழ் மாவட்டத்திற்கும் வன்னிப் பகுதிகளுக்கும் செல்லக்கூடிய ஏ-9 சாலையை மூடியதன் மூலம் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வுக்கு நெருக்கடி உண்டு பண்ணியுள்ளது.

நான்காண்டுகளுக்கு முன் விடுதலைப் புலிகளின் முன்முயற்சியில்தான் போர் நிறுத்தம் ஏற்பட்டது என்பதையும் சிங்கள அரசு வேறு வழியின்றி அதை ஏற்றுக்கொள்ள நேரிட்டது என்பதையும் மறந்துவிடக் கூடாது. இனச்சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னர் மக்களின் இயல்பு வாழ்வை மீட்டமைக்க வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தினர். இந்த நோக்கில்தான் போர் நிறுத்த உடன்பாட்டில் மூன்று முக்கியக் கூறுகள் இடம்பெற்றன.

1. அதியுயர் பாதுகாப்பு வலையங்களிலிருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ள வேண்டும். அதாவது கல்வி நிலையங்களிலும், வழிபாட்டிடங்களிலும், காலியாகக் கிடந்த வீடுகளிலும் இராணுவம் புகுந்து முகாமடித்துக் கொண்டு, தமிழர்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தி இயல்பு வாழ்க்கையை முடக்கிப் போட்ட நிலைக்கு முடிவுகட்ட வேண்டும். கல்விக் கூடங்களிலிருந்து 160 நாட்களிலும், பொதுக் கட்டிடங்கள், வீடுகளில் இருந்து 30 நாட்களிலும், நகரங்களில் மக்கள் புழக்கமுள்ள பகுதிகளிலிருந்து 60 நாட்களிலும் இராணுவத்தை விலக்கிக் கொள்ள வேண்டும்.

2. மீன் பிடிப்பதற்கான தடைகள் நீக்கப்பட வேண்டும். கடலோரத் தமிழர்களின் உயிர் வாழ்க்கைக்கு ஒரே ஆதாரம் மீன்பிடித் தொழில்தான். இந்தத் தொழிலையே தடை செய்து முடக்கிப் போட்டது இராணுவம். இந்தத் தடையை விலக்குவதற்கும் இயல்பு நிலையை மீட்பதற்கும் இராணுவத்திற்குத் தரப்பட்ட கால அவகாசம் 90 நாள்.

படிப்பகம்

www.padippakam.com



*3.* சிறீலங்கா இராணுவத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்த ஆயுதக் குழுக்களிலிருந்து ஆயுதங்களை 30 நாளைக்குள் பறிமுதல் செய்ய வேண்டும்.

போர் நிறுத்த உடன்பாட்டின் இந்த மூன்று முக்கியக் கூறுகளும் இந்த நான்காண்டுக் காலத்தில் எவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளன? அதியுயர் பாதுகாப்பு வலையங்கள் அப்படியேதான் உள்ளன. அவற்றிலிருந்து இராணுவம் வெளியேறவில்லை. அதனால் யாழ்ப்பாணத்தில் மட்டும் 30 ஆயிரம் குடும்பங்கள் வீடு திரும்ப முடியாத நிலை. வடக்கிலும் கிழக்கிலும் 156 பள்ளிக் கூடங்களில் இராணுவம் முகாமடித்துள்ளது. யுனிசெப் நிறுவனம் எடுத்துள்ள ஆய்வின்படி வன்னிப் பகுதியில் மட்டும் பள்ளிக்குச் செல்லும் வயதுள்ள சிறுவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இதனால் பள்ளிப் படிப்பையே நிறுத்தி விட்டனர்.

மீன்பிடிப்பதற்கான தடைகள் இன்றுவரை நீக்கப்படவில்லை. கடலோரப் பகுதி மக்கள் தங்கள் தொழிலை இழந்ததால் ஏராளமாய் இடம்பெயர்ந்துள்ளனர். 90 விழுக்காட்டினர் படகுகளையும் மீன்பிடி இயந்திரங்களையும் இழந்து விட்டனர். 12 ஆயிரம் மீனவர்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

இராணுவத் துணைப்படைகளான ஆயுதக் குழுக்கள் கலைக்கப்படவில்லை. இந்திய உளவு நிறுவனத்தின் கள்ளக் குழந்தையான இ.என்.டி.எல்.எப், டக்ளஸ் தேவா தலைமையிலான ஈ.பி.டி.பி., சித்தார்த்தன் தலைமையிலான புளோட் ஆகிய துரோகக் குழுக்கள் தொடர்ந்து தமிழ் மக்களுக்கெதிரான நாசவேலைகளைச் செய்து வருகின்றன. இவை கலைக்கப்படவில்லை என்பதோடு, விடுதலைப் புலிகளுக்குத் துரோகம் செய்துவிட்டு ஓடிய கருணா குழுவும் புதிதாகச் சேர்ந்துள்ளது.

இந்த ஆயுதக் குழுக்கள் விடுதலைப் புலிகளையும் அவர்களுக்கு ஆதரவான பொதுமக்களையும் அரசியல் தலைவர்களையும் அடுக்கடுக்காய்க் கொலை செய்து வருகின்றனர். இவர்களைச் சிங்கள இராணுவம் தீனிபோட்டு வளர்த்து வருகிறது.

போர் நிறுத்த ஒப்பந்தம் ஒருபுறமிருக்க வடகிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால அதிகார சபை ஒன்றை ஏற்படுத்தும் திட்டத்தை புலிகள் முன்மொழிந்தார்கள். 2004 நாடாளுமன்றத் தேர்தலில் இந்த முன்மொழிவுகளை முன்னிறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டது. அக்கூட்டமைப்பிற்கும், அதன் வழியாக புலிகளின் முன்மொழிவுகளுக்கும் தமிழ் மக்கள் சனநாயகக் கட்டளை தந்தார்கள். இந்தக் கட்டளையைச் சிங்கள அரசு துளியளவும் மதிக்கவில்லை. இந்த வகையில் சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இரணில் விக்கிரமசிங்கருக்கும் வேறுபாடு ஒன்றுமில்லை. இராசபட்சரைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை.

சென்ற ஆண்டு அதிபருக்கான தேர்தல் நடைபெற்றபோது இராசபட்சர் தமிழர்களின் உரிமைகளை எதிர்த்ததோடு, போர் நிறுத்த ஒப்பந்தத்தையே கண்டித்துப் பேசி சிங்கள மக்களிடம் வாக்குச்

படிப்பகம்

www.padippakam.com



சேகரித்தார். அவரை ஆதரித்த கூட்டணிக் கட்சிகள் 'ஜனத விமுக்த பெரமுனா'வும், 'ஜாதிக ஹெல உறுமை'யாவும் அப்பட்டமான சிங்கள இனவெறிக் கட்சிகள். அதிகாரப் பரவலாக்கத்தை மறுதலித்தல், இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பை முழுமையாகப் பாதுகாத்தல், போர் நிறுத்த உடன்பாட்டை நீக்குதல் அல்லது அரசுக்கு ஆதரவான முறையில் மாற்றுதல் - இவையே இந்தக் கட்சிகளது குறைந்தபட்சப் பொதுத் திட்டம்.

சிங்களப் பேரினவாதத்தின் போர் வெறிமுகம்தான் இராசபட்சர் என்பதற்கு அவரின் தேர்தல் பரப்புரையே சான்று. இதற்கும் மேலே ஆட்சிப் பொறுப்பேற்ற பின் அவரது அரசின் ஒற்றை வேலைத் திட்டம் போர் நிறுத்த அமைதியைக் குலைப்பதாகவே இருந்துள்ளது.

இராசபட்சர் பொறுப்பேற்றபின் இந்தக் குறுகிய காலத்தில் சிங்களப் படையினரும், துரோகத் தமிழ்க் குழுக்களும் சிங்கள இனவெறியர்களும், நடத்தியுள்ள கொலைகள் ஏராளம்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் கிறிஸ்துமஸ் நாளில் வழிபாட்டுக் கூட்டத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். பி.பி.சி. செய்தியாளர் நிர்மலாராஜன், ஈழத்து இதழாளர் அய்யாத்துரை நடேசன், தேர்ந்த படையியல் ஆய்வாளர் சிவராம தராக்கி போன்ற ஊடகத் துறையினர் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

யாழ்ப்பாணம் புங்குடுத் தீவில் இளம்பெண் தர்சிணியை இலங்கைக் கடற்படையினர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி உடல் உறுப்புகளைச் சிதைத்து கொலை செய்தனர். தர்சிணிக்கு நிகழ்ந்த கொடுமையை எதிர்த்துக் கண்டனப் பேரணி நடத்திய யாழ் பல்கலைக் கழக மாணவர்களும், ஆசிரியர்களும் துணைவேந்தரே கூட தாக்கப்பட்டனர்.

இலங்கை இராணுவ உளவுத்துறை ஆயுதக் குழுக்களை எவ்வாறு இயக்கி வழிநடத்துகிறது என்பது பற்றிப் பல சான்றுகள் வெளிவந்துள்ளன. நோர்வே, ஜப்பான் போன்ற அரசுகள் இராணுவத் துணைப் படைகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளன. அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளின் தூதுக் குழுவினர் முன்வைத்த ஆதாரங்களைப் பார்த்த பின் அமெரிக்க அரசின் அயலுறவுத் துறை அமைச்சர் காண்டலிசா ரைஸ் அம்மையாரே இந்த வகையில் இலங்கை அரசைக் கடிந்து கொண்டார்.

இராசபட்சர் அதிபரானபின் அமைதி முயற்சியைக் குலைப்பதற் கென்றே புதுப்புதுச் சிக்கல்களைக் கிளப்பினார். இனச்சிக்கலுக்கு எந்தத் தீர்வையும் முன்வைக்காமலே ஓர் ஆசிய நாட்டில் பேச்சு நடத்தலாம் என்றார். போர் நிறுத்த உடன்பாட்டை முழுமையாக மதித்து நடப்பது பற்றி முதலில் பேசுவோம். கிளிநொச்சியில் பேசுவோம், அல்லது ஒஸ்லோவில் பேசுவோம் என்றனர் புலிகள்.

நோர்வே தலையிட்டு ஜெனிவாவில் பேசுவதற்கு வழி செய்தது.

படிப்பகம்

www.padippakam.com



ஜெனிவாவில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சில், இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தமே இலங்கையின் அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என்பதுதான் இலங்கைத் தூதுக் குழுவினரின் முதல் நிலைப்பாடு. எப்படியோ ஒரு வழியாக அவர்கள் போர் நிறுத்த உடன்பாட்டை முழுமையாகச் செயலாக்கவும் முதல் நடவடிக்கையாக இராணுவத் துணைப் படைகளைக் கலைக்கவும் உடன்பட்டு ஒப்பமிட்டனர்.

போர் நிறுத்த உடன்பாட்டின்படி துரோகத் தமிழ்க் குழுக்கள் உள்ளிட்ட இராணுவத் துணைப் படைகளைக் கலைக்கட்டும், அடுத்தபடியாக மீன்பிடித் தொழிலுக்கான தடைகளைப் பற்றிப் பேசுவோம் என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஜெனிவாவிலேயே தெளிவாகச் சொன்னார்.

இதற்கிடையில் அடுத்த சுற்று ஜெனிவா பேச்சுவார்த்தைக்கான முன்னேற்பாடுகள் நடைபெற்றன. ஆனால் ஒப்புக்கொண்டபடி இராணுவத் துணைப்படைகளைக் கலைப்பதற்கு இராசபட்சரின் அரசு ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. ஒருபுறம் ஜனத விமுக்தி பெரமுனாவும், ஜாதிக ஹெல உறுமையாவும் போர் நிறுத்த உடன்பாட்டை நீக்கும்படி நெருக்குதல் கொடுத்தன. மறுபுறம் இராசபட்சர் அமைதித் தீர்வுக்காகப் பாடுபடுகிறேன் என்று சொல்லிக் கொண்டே தமிழ் மக்களுக்கும் புலிகளுக்கும் ஆத்திரமூட்டும் வேலைகளைச் செய்தார்.

சென்ற ஏப்ரல் 12ஆம் நாள் திருகோணமலை நகரில் ஒரு குண்டு வெடிப்பைச் சாக்கிட்டு சிங்களக் காடையர்கள் தமிழர் வீடுகளையும், கடைகளையும் அடித்து நொறுக்கினார்கள். சிங்கள இராணுவமும் காவல் துறையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றன. அடுத்த நான்கு நாளில் 7 பெண்கள் உட்படத் தமிழர்களும் முஸ்லீம்களும் சிங்களருமான 20 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். 100 வீடுகள் அழிக்கப்பட்டன. 3000 பேர் வீடு இழந்தனர். இந்த நிகழ்ச்சிகள் பற்றி மனித உரிமைக் கண்காணிப்பக அறிக்கை சொல்கிறது.

தமிழர்கள் கொல்லப்பட்ட போதும் எரிக்கப்பட்ட போதும் சிறீலங்கா காவல் துறையினரும் படைத் தரப்பினரும் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தனர். 45 முதல் 90 நிமிடம் வரை காத்திருந்த பிறகே அவர்கள் செயல்பட்டனர். ஹட்டன் நேஷனல் வங்கியின் எச்சரிக்கை மணி 2 மணி நேரம் ஒலித்த பிறகும் நடவடிக்கை இல்லை. இலங்கை வங்கியின் பாதுகாப்புக்காக நின்ற ஊர்க்காவல் படையினரும் வன்முறையாளர்களைத் தடுக்கவில்லை.

இந்தப் பின்னணியில் தமிழ் மக்கள் ஆங்காங்கே தம்மைத் தற்காத்துக் கொள்ள ஆயுதமேந்த முற்பட்டுள்ளார்கள். அவர்கள் புதிய படைக் குழுக்களை அமைத்துள்ளார்கள். சில நாள் முன்னதாக யாழில் நடைபெற்ற இரு கொலைகளுக்கு “எல்லாளன் படை” உரிமை கொண்டாடியுள்ளது. புலிகளைப் போல் நாங்கள் பொறுமை காக்க முடியாது என்று கூறியுள்ள “மட்டு - அம்பாறை பொங்கியெழும்

படிப்பகம்

www.padippakam.com



படை" சிங்களப் படைக்கு எதிராகத் தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்படும்" என்று அறிவித்துள்ளது.

இராசபட்சரின் அரசு போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு அண்மையில் ஒரு புதிய தடையைத் தோற்றுவித்தது. புலிப்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளும் பொறுப்பாளர்களும் இயக்கத் தலைமையோடு கலந்து பேசுவதற்காக வருவதற்கும் திரும்பிச் செல்வதற்கும் நான்காண்டுகளாக நடைமுறையில் இருந்து வரும் ஏற்பாடு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் சேர்ந்து வான் பயணம் செய்வதேயாகும். இந்த வான் பயணத்தை இப்போது இராசபட்சரின் அரசு தடை செய்துவிட்டது. அப்படியானால் எங்கள் கடற்படைக்குச் சொந்தமான கலங்களில் நாங்கள் பயணம் செய்து கொள்கிறோம் என்று புலிகள் கூறிவிட்டனர். பயணத்தின்போது எங்கள் பாதுகாப்பிற்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுதியளிக்க வேண்டும் என்றனர். ஆனால் சிங்கள அரசு அதற்கும் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களது படகுக்கு எங்களது கடற்படை வழிக்காவலாக வரும் என்றது. இதைப் புலிகள் ஏற்க மறுத்து விட்டதில் வியப்பில்லை. நிலமாயினும் கடலாயினும் புலிகள் தம் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சிங்களப் படையின் ஒரு துணுக்கைக் கூட அனுமதிக்க மாட்டார்கள்.

இதுவரை நடைமுறையிலிருந்த வான் பயண ஏற்பாட்டைச் சீர்குலைத்த சிங்களத்தின் மீது சீறவில்லை நம்மூர் 'இந்து'. ஒரு பயங்கரவாதக் குழு எந்த அரசை எதிர்த்துப் போராடுகிறதோ அந்த அரசே அக்குழுவின் ஊழியர்களை ஏற்றி வருவதற்கு இராணுவ ஹெலிகாப்டர்களை வழங்குமென்று எதிர்பார்க்கலாமா? என்பது 'இந்து'வின் கேள்வி. பயங்கரவாதக் குழுதான் என்பது 'இந்து'வின் முடிந்த முடிவாக இருக்குமானால் அது பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும், அமைதித் தீர்வுக்கு இணங்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்ப்பது ஏன்? மோதிப் பார்க்க வேண்டியதுதானே? மோதிப் பாருங்கள் என்று சிங்கள அரசுக்கு அறிவுரை சொல்ல வேண்டியது தானே? ஜனத விமுக்தி பெரமுனாவும், ஜாதிக ஹெல உறுமையாவும் முரட்டுத் தனமாகச் சொல்வதை 'இந்து' நளினமாகவும் நாசூக்காகவும் சொல்ல முற்பட்டுள்ளது போலும்!

ஒரு பேச்சுவார்த்தை என்றால் அதில் ஈடுபடும் இரு தரப்புகளுக்குமிடையே முழுமையான சமத்துவம் இருக்க வேண்டும். அந்தச் சமத்துவத்தை இரு தரப்புகளும் அங்கீகரிக்க வேண்டும். சிங்கள அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமத்துவத்தை இந்தியப் பார்ப்பனியத்தால் அங்கீகரிக்க முடியவில்லை. இந்துப் பார்ப்பனியத் தாலும் அங்கீகரிக்க முடியவில்லை. அதேபோது புலிகளின் விடுதலை வேட்கையை ஒழித்துக் கட்டுவதற்கு பேச்சுவார்த்தை என்னும் சூழ்ச்சி இவர்களுக்குத் தேவைப்படுகிறது. இந்தச் சூழ்ச்சி விடுதலைப் புலிகளிடமும், தமிழீழ மக்களிடமும் தலைவர் பிரபாகரனிடமும் பலிக்கவில்லை என்பதால்தான் 'இந்து' கொதிக்கிறது, குதிக்கிறது, உளறிக் கொட்டுகிறது.

புலிகளுக்கு அரசு ஹெலிகாப்டர் தர முடியுமா? இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இப்படிச் சொல்கிறார்:

படிப்பகம்

www.padippakam.com



அமைதி முயற்சிக்கு உலங்கு வானூர்திகளை ஏன் பயன்படுத்தக் கூடாது? 20 ஆண்டுகளாகப் போருக்குத்தானே இவை பயன்பட்டு வந்தன? இப்போது அமைதிக்குப் பயன்படட்டுமே!

சிவாஜிலிங்கத்தின் தமிழ்க் குரலுக்கு விடை சொல்லட்டும் ஆங்கில இந்து.

சிங்கள இராணுவத்தின் துணைகொண்டு ஆயுதக் குழுக்கள் நடத்திவரும் படுகொலைகளுக்குக் கடைசியாகப் பலியானவர் தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன். கொலை செய்யப் படுவதற்கு சிலநாள் முன்னதாகத்தான் 'திருகோணமலை தமிழர் தாயகத்தின் தலைநகர்' என்று அவர் முழங்கியிருக்கிறார். திருகோணமலை நகரசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிட்டத்தட்ட 75.6 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது. அதே திருகோணமலையில்தான் இப்போதைய முப்படைத் தாக்குதலும் நடந்துள்ளது. தாயக மீட்புப் போராட்டம் அடுத்து வரும் காலத்தில் திருகோணமலையில் மையம் கொள்ளக்கூடும். இதைத்தான் க.வே. பாலகுமாரன் திருமலையைக் காக்க வேண்டிய கால எல்லை எங்களை நோக்கி நகர்கிறது என்கிறார்.

பேச்சுவார்த்தை தொடர்பான சிங்களப் பேரினவாத அரசின் அணுகுமுறைக்கு இருமுனைகள் இருப்பதாக பாலகுமாரன் சொல்கிறார். ஒன்று அமைதி நடிப்பு. மற்றொன்று தமிழீழ மக்கள் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் சர்வதேச அழுத்தம் ஏற்படச் செய்வது.

கனடாவில் அண்மையில் பொறுப்பேற்ற கன்சர்வேட்டிவ் கட்சி அரசு அங்கு புலிகள் இயக்கத்திற்கு தடை விதித்திருப்பதை இந்து குதூகலத்துடன் எடுத்துக்காட்டுகிறது. செப்டம்பர் 11 (நியூயார்க் இரட்டைக் கோபுரம் தகர்ப்பு) நிகழ்ச்சிக்குப் பிறகான உலகின் பார்வையைச் சொல்லி அது அச்சுறுத்துகிறது. இன்றைய உலகில் அமெரிக்காவும் கனடாவும் மட்டுமல்ல, கியூபாவும் வெனிசுவேலாவும் இருக்கத்தான் செய்கின்றன. செப்டம்பர் 11க்குப் பிறகும் உலகின் பலதேசங்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டுதான் இருக்கின்றன.

உலகச் சூழல் ஒருபுறமிருக்க, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை இறுதியாகத் தீர்மானிக்கப் போவது அம்மக்களின் உறுதியான ஆதரவும் பங்கேற்பும்தானே தவிர, சர்வதேசச் சமூகம் என்ற பெயரிலான வல்லாதிக்க அரசுகளின் தயவோ தாராள மனமோ அல்ல. அது சிங்கள அரசுக்குத் தெரியுமோ தெரியாதோ புலிகளுக்கு மிக நன்றாகத் தெரியும்.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழீழ வானில் போர் மேகங்கள் திரளத் தொடங்கிவிட்டன.

போர் நிறுத்தத்தில் இராசபட்சரின் அரசுக்கு உண்மையான அக்கறை இல்லை என்பதை இனியும் மறைக்க முடியாது. சிங்களப் பிரதமர் இரத்தின சிறி விக்கிரம நாயகா ஏற்கெனவே போர் வெறியரென்று அறியப்பட்டவர். அவர் சீன நாட்டுக்குப் போய் அங்கு ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, போர் நிறுத்த ஒப்பந்தம் குறைபாடுள்ளதே

படிப்பகம்

www.padippakam.com



என்று பேசுகிறார். சிறீலங்கா அரசு போருக்குத் தயாராகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் எச்சரிக்கிறார்.

உலகத்திலேயே என்னைப்போல் பொறுமைகாத்த தலைவர் யாருமேயில்லை என்கிறார் மகிந்த இராசபட்சர். பொறுமை காத்துப் போருக்குத் தயாராகிறார் என்று புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அவரது நெருங்கிய கூட்டாளி ஜாதிக ஹெல உறுமையாவின் ஓமல்பே சோபித தேரர் அறைகூவுகிறார்: 'புலிகளைத் தடை செய்து போருக்குத் தயாராகுங்கள். இனி எதற்குப் போர்நிறுத்த ஒப்பந்தம்?' என்பது ஜனத விமுக்தி பெரமுனாவின் கேள்வி.

'பகிரங்கப் போர்ப் பிரகடனத்தையும் பயங்கரவாதப் படுகொலைகளையும் சர்வதேசச் சமூகம் கண்டிக்காமலிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது' என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அறிக்கை விடுத்துள்ளது.

ஆக சிங்களம் மீண்டுமொருமுறை தமிழீழத்தின் மீது போரைத் திணிப்பது ஏறத்தாழ உறுதியாகிவிட்டது. அந்தப் போருக்கு முகங்கொடுப்பதைத் தவிர தமிழீழ மக்களுக்கு வேறு வழியில்லை. போரின் வருகையைத் தள்ளிப் போடக்கூடுமே தவிர முடிவாகத் தடுத்து விட முடியாது.

மாவீரர் நாள் உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் எச்சரித்ததை நினைவிற் கொள்வோம்.

"இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி நிலையான அமைதியுமின்றி நிம்மதியான வாழ்வுமின்றி நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்து சிறைப்பட்டுக் கிடக்க முடியாது. சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை. அதே சமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங் கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபிட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழ முடியாது. பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக் கோடுகள் உள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம்."

*- தமிழர் கண்ணோட்டம், மே 2006*

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியத் தலையீடு ஈழத் தமிழரைக் காக்குமா?

பிள்ளைக்கறி தின்னும் சிங்களக் கொலைவெறி மீண்டும் ஒரு முறை கோரமாய் வெளிப்பட்டுள்ளது. இந்த ஆகஸ்டு 14ஆம் நாள் முல்லைத் தீவில் செஞ்சோலைப் பள்ளி மீது சிங்களப் போர் விமானங்கள் குண்டு வீசியதில் பூக்களும் பிஞ்சுகளுமாய் 61 சிறுமியர் கருகி மாண்டனர். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயமுற்றுக் கிடக்கின்றனர்.

முதலில் மறுக்கவும், பிறகு படையிலக்கு என்று சொல்லி நியாயப்படுத்தவும் சிங்களப் பேரினவாத அரசு செய்த முயற்சிகள் தோற்றுவிட்டன. யுனிசெஃப் அமைப்பினரும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் சிங்கள அரசின் பொய்மையைப் புறந்தள்ளி உண்மையை உலகறியச் செய்துவிட்டனர்.

அரசியல் எல்லைகளைக் கடந்து உலகமே கண்டிக்க வேண்டிய இந்தக் கொடுஞ்செயலை தமிழகத்தின் எல்லாத் தரப்பினரும் கண்டித்துள்ளனர். தமிழகச் சட்டப் பேரவையின் ஒருமனதான கண்டனத் தீர்மானம் தமிழக மக்களது உணர்வின் எதிரொலி என்றுதான் சொல்ல வேண்டும்.

அம்பத்தூரில் தாய்த் தமிழ்ப் பள்ளி உள்ளிட்ட ஐந்து பள்ளிகளைச் சேர்ந்த 5,000 பள்ளிக் குழந்தைகள் சென்ற ஆகஸ்டு 17இல் நடத்திய மௌன அஞ்சலி, மனிதச் சங்கிலி, பல்வேறு அரசியல் கட்சியினரும் தமிழ் அமைப்பினரும் நடத்தி வரும் கறுப்புக் கொடி ஊர்வலங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்கள், பட்டினிப் போராட்டங்கள், நினைவேந்தல் கூட்டங்கள் என்று தமிழகத் தமிழர்களின் குரல் உலகத் தமிழர்களின் குரலோடு இணைந்துள்ளது.

சிங்கள அரசு அறவே தனிமைப்பட்டு நிற்கும் நிலையில் தமிழீழ ஆதரவு, குறிப்பாகத் தமிழகத்தில் வளர்ந்து வருகிறது. ஆனால் அதேபோது தமிழீழ மக்கள்பால் பரிவு காட்டுவது போல நடித்து அவர்களது போராட்டத்தைக் கெடுத்தழிக்கும் முயற்சிகளும் நடைபெறுவது குறித்து நாம் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். கூட்ட நெரிசலில் பட்டைக்காரர்கள் (பிக்-பாக்கெட் திருடர்கள்) புகுந்து விளையாடுவது போல் இவர்கள் நம்மோடு உரசியே நம்மிடமிருந்து களவாட முனைந்துள்ளார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



சிங்களப் படைத் தளபதி சரத் பொன்சேகா சிறிது காலம் முன்பு ஒரு மனிதக் குண்டுத் தாக்குதலுக்கு ஆளானபோது அவசரமாகக் கண்டித்த இந்திய அரசு இம்முறை முல்லைத் தீவில் சிங்கள நெருப்பில் பொசுங்கிய குழந்தைகளுக்காக இரங்கல்கூடத் தெரிவிக்கவில்லை. இந்திய நாடாளுமன்றத்துக்கும் இந்தக் குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்த ஒரு நிமிடம் கிடைக்கவில்லை.

ஆனால், முல்லைத் தீவுப் படுகொலைக்குப் பின் தமிழ்நாட்டுக் கட்சிகள் சில "இந்தியா தலையிட்டு ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று பேசி வருகின்றன. எப்படித் தலையிட்டு எப்படிக் காப்பாற்ற வேண்டும் என்று தெளிவாகச் சொன்னால் நன்றி.

தொல். திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் 'இந்திய இராணுவத்தைப் பயன்படுத்தி ஈழத் தமிழர்களைக் காப்பாற்று' என்று எழுப்பப்பட்ட கோரிக்கை கூட முல்லைத் தீவுப் படுகொலைக்கான உடனடி எதிர்வினையாக இருக்குமே தவிர, தீர ஆய்ந்து வகுக்கப்பட்ட திட்டமாகத் தோன்றவில்லை.

எல்லாம் சொன்ன தமிழக முதலமைச்சர் கருணாநிதி இறுதியில் "முடிவை இந்திய அரசிடமே விட்டு விடலாம்" என்று பரிந்துரை செய்துள்ளார்.

ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற முதல்வர் எடுக்கும் முயற்சிகளை வரவேற்பதாக திமுகவின் தோழமைக் கட்சியினர் சட்டப் பேரவையில் பேசியுள்ளனர்.

முல்லைத் தீவு படுகொலையை சிபிஐ, சிபிஎம் கட்சிகளும் கண்டித்துள்ளன. சிபிஎம் அரசியல் தலைமைக் குழு வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையில் முல்லைத் தீவு நிகழ்ச்சி பற்றி மட்டும் வருத்தம் தெரிவித்தால் சிங்கள உள்ளம் சங்கடப்படுமே என்ற கவலையோடு, புலிகள் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடக் கூடாது என்ற கோரிக்கையும் சேர்க்கப்பட்டுள்ளது (நீங்கள் மாவிலாற்று மதகை மூடியதால்தான் அவர்கள் முல்லைத் தீவுப் பள்ளி மீது குண்டு வீசினார்கள் என்று வெளிப்படையாகவே சொல்லியிருக்கலாம்). அரசியல் வழிகளிலும் தூதரக வழிகளிலும் இந்திய அரசு முயற்சிகள் செய்து போரைத் தடுக்க வேண்டும் என்பது சிபிஎம் கட்சியின் வேண்டுகோள். பிறகு ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காண உதவ வேண்டுமாம்!

தமிழ்நாட்டில் சிங்களருக்காக நடத்தப்படும் ஆங்கில 'இந்து' ஏடும் சிங்கள அரசு பள்ளிக் குழந்தைகள் மீது குண்டு வீசிய குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டால் போரில் பின்னடைவு ஏற்படுமே என்று கவலை தெரிவித்து, புலிகளின் போர் வலையில் விழுந்து விடாமல், நீதியான கூட்டாட்சித் தீர்வை அறிவித்துப் புலிகளை சமாளிக்கும்படி அறிவுரை கூறியது.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கைச் சிக்கல் குறித்து இந்தியத் தலைமையமைச்சர் சார்பில் தமிழக முதல்வரைச் சந்தித்த நாராயணன் "இலங்கைச் சிக்கலில் நேரடியாகத் தலையிட மாட்டோம்" என்று கூறியது பொருள் பொதிந்தது. மறைமுகமாகத் தலையிடுவோம் என்று இதற்குப் பொருள்.

தமிழக முதல்வருடன் நாராயணன் என்ன பேசினார் என்பது இரகசியம், அதை வெளியில் சொல்ல முடியாது என்றார் தமிழக அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி. ஆனால் அந்த இரகசியம் சில நாள் கூடத் தாங்கவில்லை.

இந்தியாவைப் பின்பற்றி இலங்கை அரசு தன் மாநிலங்களுக்கு அதிகாரப் பகிர்வு செய்ய வேண்டும் என்று தில்லி அரசு கொழும்புக்கு அறிவுரை கூறியுள்ளதாம். மாநில அதிகாரங்கள் தொடர்பான சர்க்காரியா ஆணையத்தின் பரிந்துரைகளை அனுப்புகிறோம். அவற்றைப் புரிய வைக்க சட்ட வல்லுநர்களை அனுப்புகிறோம் என்றெல்லாம் இந்தியா தெரிவித்துள்ளதாம்.

நாராயணன் சென்னைக்கு வருவதற்கு முன்பே இந்திய அரசின் அயலுறவுத் துறைச் செயலர் சியாம் சரண் கொழும்புக்குச் சென்று அதிபருடனும் எதிர்க்கட்சித் தலைவருடனும் அதிகாரிகளுடனும் பேச ஆரம்பித்து விட்டார். அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கர் தில்லி வந்து நான்கைந்து நாள் தங்கி சோனியா காந்தி, மன்மோகன் சிங் உள்ளிட்டவர்களைச் சந்தித்துப் பேசினார்.

கொழும்பில் இரு பெரிய கட்சிகளையும் உள்ளடக்கிய 'தேசிய அரசு' அமைக்கும்படிச் செய்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரை வெற்றிகரமாக நடத்தத் துணை செய்வதுதான் இந்தியாவின் திட்டம் என்று அரசியல் ஆய்வாளர்கள் ஊகிப்பதற்குக் காரணம் உண்டு.

கொழும்பில் தேசிய அரசு அமைக்கும் முயற்சி வெற்றி பெறவில்லை. ஆளும் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குமான கடும்போட்டி, குறிப்பாக இராசபட்சருக்கும் விக்கிரம சிங்கருக்குமான கடும் பகை இதற்குத் தடையாயிற்று. அண்மையில்தான் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறுவரைக் கட்சி மாறச் செய்து அத்தனை பேரையும் அமைச்சர்களாக்கினார் இராசபட்சர்.

தேசிய அரசு அமைக்க முடியாவிட்டாலும், இருக்கிற அரசே ஏதோ ஒரு அதிகாரப் பரவலாக்கத் தீர்வை அறிவிக்கும்படிச் செய்வது அதை விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்தால் அதையே சாக்கிட்டு அவர்களைத் தனிமைப்படுத்தி தாக்கியழிக்கத் துணை செய்வது, இதுவே இந்தியாவின் திட்டமாக இருக்க வேண்டும். இதுவும் கூட எளிதன்று.

முதலில் இராசபட்சர் இந்தியாவின் யோசனைக்கு இணங்குவது கடினம். அப்படி அவர் இணங்கினால் கூட்டணிக் கட்சிகளான ஜனத விமுக்தி பெரமுனா, ஜாதிக ஹேல உறுமய ஆகியவற்றின் ஆதரவை இழப்பதோடு பௌத்த பிக்குகளின் எதிர்ப்பையும் ஈட்ட நேரிடும்.

படிப்பகம்

www.padippakam.com



இந்நிலையில் ரணில் தூய சிங்கள பௌத்தத் தேசியத்தின் காவலராகக் களமிறங்கி இராசபட்சரைத் தனிமைப்படுத்துவார்.

இராசபட்சர், விக்கிரமசிங்கர் இருவரும் ஒன்றுபட்டு ஒருமனதாக ஒரே குரலில் ஏதோ ஒரு தீர்வை அறிவிப்பதாக வைத்துக் கொண்டாலும், அந்த அறிவிப்பைச் செயலாக்குவதற்கு சிறீலங்காவின் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டியிருக்கும். இதற்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை பெற்றால் போதாது, மக்களிடம் கருத்துக் கணிப்பு எடுத்து அதிலும் பெரும்பான்மை பெற வேண்டும்.

இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்று மாணவன்கூடச் சொல்வான். இதெல்லாம் நடக்கவே நடக்காது என்று. இந்திய அரசின் தகுதி - திறமை வாய்ந்த அதிகார பீடங்கள் குளிர்பதன அறைக்குள் உட்கார்ந்து களநிலைமைக்குத் தொடர்பே இல்லாமல் வகுக்கும் சூழ்ச்சித் திட்டங்கள் கானல் நீர் வேட்டையாகுமே தவிர வேறல்ல.

இதெல்லாம் ஒரு புறமிருக்க, இந்தியா தலையிட்டுத் தமிழர்களைக் காக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்புகிறவர்கள் இந்தியா கடந்த காலத்தில் தலையிட்டதையும் நிகழ்காலத்தில் தலையிட்டுக் கொண்டிருப்பதையும் மறந்து விடுகிறார்கள்.

கடந்த 1987 இராசிவ் - செயவர்த்தனா உடன்படிக்கையும், ஈழத்தின் மீதான இந்தியப் படையெடுப்பும் (அமைதிப்படையா, அமளிப்படையா) தலையீடு கிடையாதா? தோற்றுப் பின்வாங்கிய பிறகும் சிங்கள அரசுக்குச் செய்துவரும் இராணுவ உதவிகள், படைக்கல விற்பனை, படையினருக்குப் பயிற்சி, காவல் துறைப் பயிற்சி, ராடார் வழங்குதல். இதெல்லாம் தலையீடு இல்லையா?

தமிழீழ மக்களின் பாதுகாப்புப் படையாகிய புலிப்படைக்கு பொய்க் காரணங்களைக் காட்டி இந்தியாவில் தடை விதித்திருப்பது தலையீடு இல்லையா?

இவற்றைக் காட்டிலும் இந்தியத் தலையீடு ஒன்று உண்டு. அதுதான் கொள்கைத் தலையீடு. தமிழக மக்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காண வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது, இலங்கையின் ஒருமைப்பாட்டையும், அரசமைப்பையும் எந்தத் தீர்வுக்கும் முன்நிபந்தனையாக்குவது. இந்தக் கொள்கைத் தலையீடுதான் பிறவகைத் தலையீடுகளுக்கெல்லாம் அடிப்படை. இந்திய ஆளும் வர்க்கத்தின் இந்தத் தலையீட்டுக்குப் பக்க வாத்தியம் வாசிப்பதுதான் சிபிஎம் கட்சியும் 'இந்து' ஏடும் செய்கிற வேலை. இப்படித் தலையிட இவர்களுக்கு உரிமை கொடுத்தது யார்?

கடந்த 1971-72இல் வங்க தேச மக்களைப் பார்த்து பாகிஸ்தானின் அரசமைப்புக்குள் தீர்வு காணுங்கள் என்று இந்திய அரசு கூறியதா? சிபிஎம் கூறியதா? கிழக்கு திமோர் மக்கள் இந்தோனேசிய அரசமைப்புக்குள்ளேயும், பாலத்தீன மக்கள் இசுரேலிய அரசமைப்புக்குள்ளேயும், நமீபிய (தெ.மே. ஆப்பிரிக்க) மக்கள் தென்

படிப்பகம்

www.padippakam.com



ஆப்பிரிக்க அரசமைப்புக்குள்ளேயும்தான் தீர்வு காண வேண்டும் என இவர்கள் கோரியதுண்டா? லெபனானில் ஹிஸ்புல்லா இயக்கம் லெபனானிய அரசமைப்புக்குக் கட்டுப்பட வேண்டும் என்றாவது இவர்களால் சொல்ல முடியுமா?

தமிழீழ மக்கள் மட்டும் இலங்கையின் அரசமைப்புக்குள்தான் தீர்வு காண வேண்டும் என்று நிபந்தனை விதிப்பது, இல்லையேல் உன்னை ஒழித்து விடுவோம் என்று அச்சுறுத்துவது கயவாளித்தனமே தவிர வேறல்ல.

தமிழீழ மக்களை காப்பதற்காக இந்தியா தலையிட வேண்டும் என்று கோரிக்கை வைக்கும் நண்பர்களில் சிலர் உண்மையில் நல்லெண்ணத்தின் பாற்பட்டு இப்படிச் சொல்லலாம். ஆனால் தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியா தலையிட வேண்டுமானால் அதற்கு முன் இரண்டு காரியங்கள் செய்ய வேண்டும்.

1. ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் தீர்வு, இலங்கையின் அரசமைப்புக்குள்தான் தீர்வு என்று நிபந்தனை விதிப்பதை இந்தியா கைவிட வேண்டும். தங்களுக்கு எது வேண்டும் எது வேண்டாம் என்பதை முடிவு செய்யும் உரிமை தமிழீழ மக்களுக்குத்தான் உண்டு என்பதை அறிந்தேற்க வேண்டும். வேண்டுகோளாக என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும், ஏற்பதும் மறுப்பதும் அவர்கள் உரிமை!

2. இந்தியா ஏதோ ஒரு தீர்வைச் சொல்லி அதைச் சிங்கள அரசே ஏற்றுச் செயல்படுத்துவதாக ஒப்புக்கொண்டாலும் அதனால் பயனில்லை. தராசில் மற்றொரு தட்டும் இருப்பது நினைவிருக்கட்டும்.

சிங்கள அரசோடு பேசுவது போலவே விடுதலைப் புலிகளோடும் பேச வேண்டும். எந்தப் பேச்சுவார்த்தையிலும் இரு தரப்புகளையும் சரிநிகர் சமமாகக் கருத வேண்டும். புலிகள் ஏற்றுக்கொள்ளாத எந்தத் தீர்வும் ஒன்று செயலுக்குதவாது, அல்லது வேறு உள்நோக்கத்தை அடையவே உதவும்.

விடுதலைப் புலிகளோடு இந்தியா பேச வேண்டும் என்றால் முதலில் அவர்கள் மீதான தடையை விலக்கிக் கொள்ள வேண்டும். தங்களைத் தடைசெய்துள்ள அரசைத் தன்மானமுள்ளவர்கள் மதிக்க மாட்டார்கள். ஐரோப்பிய அரசுகளிடமிருந்து இந்திய அரசு கற்றுக் கொள்ளட்டும். சிங்கள அரசே புலிகள் மீதான தடையை விலக்கிக் கொண்ட பின் இந்திய அரசு தடையை நீடிப்பதில் பொருளில்லை.

போரினால் பாதிப்புற்ற ஈழத் தமிழ் மக்களுக்கு இந்திய அரசு உணவு, மருந்து, உடை முதலான உதவிகள் அனுப்புவதானால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகள் மூலம் அனுப்பலாம். இந்த உதவிகளைத் தலையீடு என்று குறிப்பிடத் தேவையில்லை.

ஆனால், ஈழத் தமிழர்களை சிங்கள அரசின் இனப்படுகொலையி லிருந்து காப்பாற்ற இந்தியா தலையிட வேண்டும் எனக் கோரும்

படிப்பகம்

www.padippakam.com



நண்பர்கள் அதற்கு முன்னதாக இரு கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டும்.

1. இந்திய அரசே! தமிழீழ மக்களின் தன்தீர்வுரிமை (சுயநிர்ணய உரிமை)யை ஏற்றுக்கொள்!

2. இந்திய அரசே! தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குக!

இந்த இரு நோக்கங்களையும் ஏற்காமல் இந்தியா தலையிடுவது என்பது தமிழீழ மக்களுக்கு எதிரானதாகவே இருக்க முடியும்.

கொள்கைத் தெளிவும் கோரிக்கைத் தேர்வும் இல்லையேல் நம்மையறியாமல் பகைவனுக்கு உதவியர்களாகிவிடுவோம்.

- தமிழர் கண்ணோட்டம், செப்டெம்பர் 2006

படிப்பகம்

www.padippakam.com

# செங்கொடி தூக்கிச் சிங்களம் காக்கும் சிபிஎம்

அனைத்து வகை ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடி அனைத்து நிலைகளிலும் விடுதலைக்கு வழிகாட்டும் கருத்துப் பேரொளி மார்க்சியம். அந்த மார்க்சியத்தின் பெயரால் மார்க்சிஸ்ட் என்று ஒரு தத்துவார்த்த மாத இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்சிஸ்டு) தமிழ்நாடு மாநிலக் குழு சார்பில் வெளியிடப்படும் மார்க்சிஸ்ட் செப்டெம்பர் (2006) இதழில் அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான தோழர் கி. வரதராசன் 'இலங்கைப் பிரச்சனை - ஒரு பார்வை' என்றொரு கட்டுரை வரைந்துள்ளார். மற்றொரு தலைவரும் இதழ் ஆசிரியருமான தோழர் வே. மீனாட்சிசுந்தரம் 'இலங்கைப் பிரச்சனையும் இன்றைய உலக அரசியலும்' என்றொரு கட்டுரை வரைந்துள்ளார்.

கட்டுரையாளர்கள் இருவரும் சிபிஎம் கட்சியின் முக்கியத் தலைவர்கள், தத்துவ ஆசான்கள் என்ற முறையிலும் இக்கட்டுரைகளை வெளியிட்டிருப்பது அக்கட்சியின் தத்துவார்த்த ஏடு என்ற முறையிலும் இவற்றிலிருந்து சிபிஎம் கட்சியின் நிலைப்பாடுகளைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும் என்று எதிர்பார்ப்பது நியாயமே.

இரு கட்டுரைகளின் தலைப்புகளிலும் இலங்கைப் பிரச்சனை என்ற சொற்றொடர் இடம்பெறுகிறது. அது என்ன இலங்கைப் பிரச்சனை? தேசிய இனப் பிரச்சனையா? வர்க்கப் பிரச்சனையா? குடும்பப் பிரச்சனையா அல்லது வேறு வகைப் பிரச்சனையா?

இந்தக் கேள்விக்கு ஒரு திட்டவட்டமான விடை இரு கட்டுரை களிலுமே கிடைக்கவில்லை. சிக்கல் இன்னதென்று வரையறுத்துச் சொல்லாமலே அதற்குத் தீர்வு சொல்லப் புறப்பட்டிருக்கிறார்கள் வரதராசனும் மீனாட்சிசுந்தரமும்.

வரதராசன் கட்டுரையில் இலங்கைக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் தேவகுணசேகராவின் கருத்துகளை மேற்கோளாகத் தந்துள்ளார். அந்த மேற்கோளில் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கூற்று இடம் பெறுகிறது. காலங்காலமாக நீடிக்கின்ற இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சி கூறுவதையும் வரதராசன் மேற்கோளாகத் தந்துள்ளார். தேவகுணசேகராவும் கம்யூனிஸ்டுக் கட்சியும்

www.padippakam.com



இனப்பிரச்சனை என்று கூறுவது தேசிய இனப்பிரச்சனை என்ற பொருளில்தானா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இனக்குழுப் பிரச்சனை (ethnic problem) அல்லது மரபினப்பிரச்சனை (racial problem) என்ற பொருளிலும் இனப்பிரச்சனை என்ற தொடரைப் பயன்படுத்த முடியும். ஆனால் இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சியும் தேவகுணசேகராவும் குறிப்பிடுகிற அளவுக்காவது இனப் பிரச்சனை என்பதை வரதராசன் வரையறுத்துச் சொல்கிறாரா என்றால் இல்லை.

ஒரு தேசிய இனச் சிக்கலை தேசிய இனச் சிக்கலாகவே புரிந்து கொண்டு அதன் புறநிலை, அகநிலைக் காரணிகளை முன்வைப்பதுதான் மார்க்சிய ஆய்வுக்கு அடிப்படையாக இருக்க முடியும். இலங்கைத் தீவு இரு தேசிய இனங்களை - இரு தேசங்களை - உள்ளடக்கியது என்ற புறநிலை உண்மையிலிருந்துதான் இந்த ஆய்வு தொடங்க வேண்டும். மாறாக வல்லாதிக்க (ஏகாதிபத்திய) சூழ்ச்சி, வரலாற்றுத் திரிபுகள், அரசியல் இயக்க நிலைபாடுகள், போர்த் துயரங்கள் போன்ற அகநிலைக் காரணிகளை ஒன்றுக்கொன்று தொடர்பின்றி அள்ளிப்போட்டு, இவ்வளவுதான் பிரச்சனை என்று காட்ட முற்படுகிற கண்கட்டி வித்தையில் ஈடுபடுகிறார் வரதராசன்.

இலங்கைப் பிரச்சனை ஒரு தேசிய இனச் சிக்கல்தான் என்பதை ஏற்றுக் கொண்டு விட்டால் அச்சிக்கலுக்கு மார்க்சிய - லெனினிய நோக்கில் தீர்வு சொல்லவும், அத்தீர்வை நியாயப்படுத்தவும் வேண்டியிருக்கும். இந்த வம்பில் சிக்கக் கூடாது என்பதற்காகவே வரதராசன் சிக்கலைத் திட்டவட்டமாக வரையறுக்காமலே தீர்வு சொல்ல அவசரப்படுகிறார்.

மீனாட்சிசுந்தரத்தின் கட்டுரைத் தலைப்பில் மட்டும்தான் இலங்கைப் பிரச்சனை உள்ளது. மற்றபடி ஒரு தேசிய இனச் சிக்கலாக அதனை அணுகும் முயற்சிகூட அவரிடம் இல்லை.

உள்நாட்டுப் போரால் மக்களின் வாழ்வு சின்னாபின்னமாகும் இலங்கை என்கிறார் மீனாட்சிசுந்தரம். 'வைரமுத்துவின் கன்னத்தில் முத்தமிட்டால் பாடலைக் கேளுங்கள், இழப்பின் வேதனையை ஓரளவு உணர முடியும்' என்கிறார். இலங்கை வாழ் மக்களின் துயரங்களுக்குக் காரணங்களாக இருக்கும் பொதுவான ஏகாதிபத்தியம் விளைவிக்கும் அரசியல் வினைகள், தனித்துவமான மத, இன, மொழி முரண்பாடுகள் உருவாக்கும் சிக்கல்கள் என்கிறார்.

என்னே துல்லியம்! சிக்கல் என்ன என்பதை எவ்வளவு தெளிவாகக் காட்டுகிறார் பாருங்கள். ஏகாதிபத்தியம், மதம், இன, மொழி முரண்பாடுகள் எல்லாவற்றையும் ஒரு குடுவையில் போட்டு, நன்றாய்க் குலுக்கி, ஒன்றாய்க் கலக்கி, இவ்வளவுதான் இலங்கைப் பிரச்சனை என்று நம் தலையில் கொட்டி விடுகிறார்! தேசிய இனம், தேசம் என்ற கூறுகள் தப்பித் தவறிக்கூட இந்தக் கலவையில் சேர்ந்து விடாமல் கவனமாக இருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலையை ஆதரிப்பவர்கள் யார்? மீனாட்சிசுந்தரத்தின் பார்வையில் அவர்கள் தமிழ்நாட்டு அரை வேக்காட்டு அதிதீவிரவாதிகளும் சுயநிர்ணய உரிமை சூத்திரத்தைப் புரியாமலே முணுமுணுக்கும் தனிநபர்களும், சில அரசியல் வியாபாரிகளும், உலக அரசியல் நுணுக்கங்களில் தெளிவு இல்லாத சில அறிவுஜீவிகளும்... இத்யாதியினர் மட்டுமே என்கிறார்.

முழுவேக்காட்டு மிதவாதியாகிய மீனாட்சிசுந்தரம் சுயநிர்ணய உரிமைச் சூத்திரத்தைப் புரிந்து முழங்குவாரானால் நாமும் விளங்கிக் கொள்ளலாம். இலங்கைப் பிரச்சனை என்பதற்கு சுயநிர்ணய உரிமைக் கொள்கையை எப்படிப் பொருத்திப் பார்ப்பது என்ற விளக்கம் மீனாட்சிசுந்தரத்தின் கட்டுரையில் எட்டிப் பார்க்கவே இல்லை. உலக அரசியல் நுணுக்கங்களில் தெளிவுபெற்ற அறிவுஜீவியாகிய அவர் உலகெங்கும் சுயநிர்ணய உரிமைக் கொள்கையின் இன்றையப் பொருத்தப்பாடு என்ன என்பதை எடுத்துக்காட்டி, அக்கொள்கை தமிழீழத்துக்கும் (தமிழகத்துக்கும் கூட) ஏன் பொருந்தாது என்பதை விளக்கியிருந்தால் நாம் விவாதம் செய்வதற்காவது உதவியாக இருந்திருக்கும்.

வரதராசன், மீனாட்சிசுந்தரம் இருவருமே இலங்கையின் வரலாற்றில் தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் எதிராகவும் சிங்கள மொழிக்கும் இனத்துக்கும் ஆதரவாகவும் இடம்பெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளையும் நிகழ்ச்சிப் போக்குகளையும் எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் இவற்றைச் சிங்களப் பேரினவாதம் என்று வரையறுத்துச் சொல்ல மறுக்கிறார்கள். நாங்கள் சிங்களச் சார்பானவர்களோ தமிழர்களுக்கு எதிரானவர்களோ அல்ல என்று காட்டிக் கொள்வதும் அதேபோது சிங்களப் பேரினவாதத்தைப் பகையிலக்கென்று இனங்காட்டாமல் பாதுகாப்பதுமே இவர்களின் உள்நோக்கம். திருடனின் கூட்டாளிகளே திருடனைத் துரத்துகிறவர்களோடு சேர்த்து திருடன் திருடன் என்று கூச்சலிட்டு அனைவரையும் ஏமாற்றுகிற அதே பழைய தந்திரம்தான் இது.

இலங்கைத் தீவில் சிங்களர்கள் பெரும்பான்மைத் தேசிய இனமாகவும், தமிழர்கள் சிறுபான்மைத் தேசிய இனமாகவும் இருப்பதால் அங்கு அனைவருக்கும் வாக்குரிமை என்ற ஏற்பாடே சிறுபான்மைத் தேசிய இனத்தின் மீதான பெரும்பான்மைத் தேசிய இனத்தின் ஆதிக்கத்துக்கு வழிவகுத்து விடுகிறது. இதுபோன்ற சூழலில் குடிமக்களிடையிலான அரசியல் சமத்துவம் மட்டும் சனநாயகத்தை நிறைவு செய்திடாது. அதற்குத் தேசிய இனங்களிடையிலான அரசியல் சமத்துவமும் ஒவ்வொரு தேசிய இனத்திற்குமான பிரிந்து செல்லும் உரிமை உள்ளிட்ட தன்தீர்வுரிமை (சுயநிர்ணய உரிமை)யும் இன்றியமையாத் தேவைகளாகும். இந்த மார்க்சிய - லெனினிய நிலைப்பாட்டின் அடிப்படையில் இலங்கைப் பிரச்சனையை அணுகித் தீர்வு சொல்ல தங்களை மார்க்சியர்களாகக் கருதிக் கொள்ளும் வரதராசனும் மீனாட்சிசுந்தரமும் முன்வருவார்களா?

படிப்பகம்

www.padippakam.com



இலங்கைப் பிரச்சனை ஒரு தேசிய இனச் சிக்கல் என்பதையோ, சிங்களரும் தமிழரும் இரு வேறு தேசிய இனங்கள் என்பதையோ, இலங்கை அரசின் தமிழர் விரோத அரசமைப்பும் சட்டங்களும் அடுக்கடுக்கான பல நடவடிக்கைகளும் சிங்களப் பேரினவாதத்தின் பாற்பட்டவை என்பதையோ கண்டுகொள்ளாமல் வரதராசனும் மீனாட்சிசுந்தரமும் ஆய்வு செய்து தீர்வும் சொல்ல முற்பட்டிருப்பது இருட்டு வீட்டில் குருட்டுப் பூனைகள் விட்டத்தில் பாய்ந்தாற் போல் உள்ளது.

இவர்கள் முன்வைக்கும் தீர்வு என்ன என்பதைத் தெரிந்து கொள்ளும் முன் தமிழீழ மக்களின் போராட்டத்தை எப்படிப் பார்க்கிறார்கள் என்று காண்போம்.

தந்தை செல்வநாயகம் குறித்தும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (TULF) குறித்தும் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட போராளிக் குழுக்கள் குறித்தும் ஆங்காங்கு சில குறிப்புகளைத் தந்துள்ளார்களே தவிர, தனித் தமிழீழம் என்பது விடுதலைப் புலிகளின் பிடிவாதமான கோரிக்கை என்று காட்டுவதில்தான் வரதராசனும் மீனாட்சிசுந்தரமும் குறியாக உள்ளார்கள். 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்ட தனித் தமிழீழக் கோரிக்கைக்கு 1977 பொதுத் தேர்தலில் தமிழீழ மக்கள் ஒப்புதல் தெரிவித்து, சனநாயகக் கட்டளை இட்டார்கள் என்ற வரலாற்று உண்மையைத் திட்டமிட்டே மறைத்து விடுகிறார்கள். தமிழீழத்திற்கான சனநாயகக் கட்டளையை மீறுவதைத் தமிழீழ மக்களுக்குச் செய்யப்படும் துரோகமாகக் கருதுவதில் என்ன தவறு இருக்க முடியும்? என்பது நம் வினா.

பேசித் தீர்ப்பது பற்றி பேசிக் கொண்டே இருக்கும் இந்தப் பேச்சுவார்த்தை மார்க்சியர்கள், அப்படிப் பேசித் தீர்ப்பதற்கென்று தமிழீழ மக்கள் சார்பில் அனைத்து இயக்கங்களும் சேர்ந்து முன்மொழிந்த் நான்கு அடிப்படைக் கொள்கைகள் குறித்து மட்டும் பேசுவதே இல்லை. கடந்த 1985இல் திம்பு நகரில் (பூட்டான்) நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), ஈழப் புரட்சி அமைப்பு (EROS), தமிழீழ விடுதலை அமைப்பு (TELO) (இவை நான்கும் சேர்ந்ததே தமிழீழஷத் தேசிய விடுதலை முன்னணி), தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (PLOTE) ஆகிய போராளி இயக்கங்களும், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியும் (TULF) சேர்ந்து முன்வைத்த அந்த நான்கு அடிப்படைக் கொள்கைகள் என்ன என்பதாவது வரதராசனுக்கும் மீனாட்சி சுந்தரத்திற்கும் தெரியுமா? இப்போதாவது தெரிந்து கொள்ளட்டும்:-

1. தமிழீழ மக்கள் ஒரு தனித் தேசிய இனம் ஆவர்.

2. இலங்கைத் தீவின் வடக்கும் கிழக்கும் சேர்ந்த பகுதி தமிழீழத் தேசிய இன மக்களின் வரலாற்றுத் தாயகமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



*3.* தமிழீழத் தேசிய இனம் தன் தாயகத்தின் வாழ்வைத் தீர்வு செய்யும் சுயநிர்ணய உரிமை உடையதாகும்.

*4.* இலங்கை முழுவதிலும் வாழக்கூடிய தமிழர்கள் எல்லா வகையிலும் மற்றவர்களோடு சமஉரிமை படைத்தவர்கள்.

இந்த நான்கு அடிப்படைக் கொள்கைகளும் பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மட்டும் சொந்தமானவை அல்ல, தமிழீழ மக்கள் அனைவருக்கும் உரியவை என்பதால் இவற்றுக்குப் புறம்பான எந்தத் தீர்வை யார் திணிக்க முற்பட்டாலும் எதிர்த்து முறியடிக்கிற உரிமை அம்மக்களுக்கு உண்டு. வரதராசனும் மீனாட்சி சுந்தரமும் இந்த நான்கு அடிப்படைக் கொள்கைகளையும் ஏற்கிறார்களா? மறுக்கிறார்களா? எதுவாயினும் வெளிப்படையாகச் சொல்லி வாதிடட்டும். இப்படி நான்கு கொள்கைகள் இருப்பதையே மூடி மறைத்து வரலாற்றைப் புரட்ட வேண்டாம்.

எல்லா அமைப்புகளும் சேர்ந்து தங்களின் மக்கள் சார்பில் வெளிப்படையாக ஏற்றுக்கொண்ட கொள்கைகளிலிருந்து ஒரு சில அமைப்புகள் பின்வாங்குமானால், இந்தக் கொள்கைகளுக்குப் புறம்பான ஒரு தீர்வைத் திணிக்கும் முயற்சிக்கு உடந்தையாக இருக்குமானால், இந்தக் கொள்கைகளுக்கு உறுதியாகக் களமாடுகிறவர்களைக் காட்டிக் கொடுக்குமானால், அது துரோகமா, இல்லையா? சொல்லுங்கள் தோழர்களே!

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்ற இயக்கத்தவர்களைக் கொலை செய்து விட்டார்களாம்! மற்ற இயக்கத்தவர்கள் விடுதலைப் புலிகளைக் கொலை செய்த ஒரு நிகழ்ச்சிகூட வரதராசனுக்கும் மீனாட்சிசுந்தரத்துக்கும் தெரியாதா? நீங்கள் நடத்துகிற தொழிற்சங்க அரசியலிலும் தேர்தல் அரசியலிலுமே எத்தனையோ கொலைகள் நடந்திருக்கும் போது, ஆயுதப் போராட்ட அரசியலில் சில நேரம் சரியாகவும், சில நேரம் தவறாகவும்கூட கொலைகள் நடப்பது உண்டுதான். கம்யூனிஸ்டுகள் தலைமையேற்று நடத்திய தெலங்கானா மக்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றை எடுத்துப் பாருங்கள், யாரும் யாரையும் கொலை செய்யாத ஆயுதப் போராட்டம் ஏட்டில் நடக்கலாமே தவிர, நாட்டில் நடக்காது என்று விளங்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்ற இயக்கத்தவர்களை எல்லாம் ஒழித்துக்கட்டி விட்டார்கள் என்ற பொய்யைத் திரும்பத் திரும்ப சொல்வதாலேயே அது உண்மையாகி விடாது. திரு. பாலகுமாரன் தலைமையிலான ஈரோஸ் அமைப்பு புலிகள் அமைப்புடன் இணைந்து விட்டது. பாலகுமாரன் இன்று விடுதலைப் புலித் தலைவர்களில் ஒருவர். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, டெலோ, ஈபிஆர்எல்எஃப், அனைத்து இலங்கைத் தமிழ்க் காங்கிரசு முதலான அமைப்புகள் சேர்ந்ததுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (பசஅ) என்பதும், இந்தக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழீழ மக்களின் ஒரே பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டிருப்பதும் வரதராசனுக்கும் மீனாட்சிசுந்தரத்துக்கும் தெரியாதா?

படிப்பகம்

www.padippakam.com



இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு 22 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சார்பில்தான் ஐவர் குழு ஒன்று அண்மையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திப்பதற்காகத் தில்லி வந்தது. சிங்களரும் சிபிஎம் தலைவர்களும் மனங்குளிரும் வகையில் மன்மோகன்சிங் அவர்களைச் சந்திக்க மறுத்ததை ஈண்டு குறிப்பிடலாம்.

புலிகளின் வன்முறையைக் கண்டித்துப் பொங்கி எழும் வரதராசனும் மீனாட்சிசுந்தரமும் இந்திய அமைதி காப்புப் படை என்ற பெயரில் தமிழீழத்தின் மீது படையெடுத்த இந்தியப் படை நிகழ்த்திய கொடுமைகள் பற்றி மூச்சும் விடுவதில்லை. இந்திய அமைதி காக்கும் படை என்பது உண்மையில் அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் படைதான் (IPKF means Innocent People Killing Force) என்று நம்மதிப்புக்கும் இந்த மார்க்சியர்களின் மதிப்புக்கும் உரிய உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் சுட்டிக் காட்டினாரே, மேற்கு வங்க இடது முன்னணி அரசின் முன்னாள் நிதி அமைச்சர் அசோக் மித்ரா குத்திக் காட்டினாரே, இது பற்றியெல்லாம் இவர்கள் கருதிப் பார்த்ததாவது உண்டா?

வரதராசனும் மீனாட்சிசுந்தரமும் 1987ஆம் ஆண்டு இந்திய இலங்கை (ராசீவ் - செயவர்த்தனா) உடன்படிக்கை குறித்தோ, ஈழத்தில் இந்தியப் படையின் செயற்பாடுகள் குறித்தோ, இதில் சிபிஎம் கட்சி எடுத்த இந்திய - சிங்கள ஆளும் வர்க்க ஆதரவு நிலைப்பாடு குறித்தோ மீளாய்வு செய்வார்களா? தங்களைக் குற்றக் கூண்டில் ஏற்றும் வரலாற்று உண்மைகளையெல்லாம் மூடி மறைத்துவிட்டு, வெறும் தப்பெண்ணங்களையும் காழ்ப்புணர்ச்சிகளையுமே முன்னிறுத்தி ஒளிந்து கொள்வது நேர்மையாகாது.

தனித் தமிழீழக் கோரிக்கையை எதிர்ப்பதற்கு வரதராசன் தேடிக் கண்டுபிடித்திருக்கும் மாபெரும் காரணம் இலங்கையின் மற்ற பகுதிகளிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதுதான். இந்த மாபெரும் காரணத்திற்குச் சான்றுதர மக்கள் தொகைக் கணக்கும் விழுக்காடுமாக அட்டவணை போட்டுக் கொடுக்கும் அவரது அறிவியல் அணுகுமுறை அசத்தலானது.

தமிழீழ மக்கள் தாயக உரிமையற்று அடிமைகளாக நீடித்திருப்பது தான் மலையகத் தமிழர்களுக்கும் கொழும்புத் தமிழர்களுக்கும் நல்லது என்பதுதான் வரதராசவாதத்தின் ஏரண நீட்சி!

இதே ஏரணப்படி காவிரி நீர் உரிமைக்காக தமிழ்நாட்டுத் தமிழர்கள் போராடாமல் இருப்பதுதான் கர்நாடகத் தமிழர்களுக்கு நல்லது! முல்லைப் பெரியாற்று உரிமை கோராமல் இருப்பதுதான் கேரளத்தில் வாழும் தமிழர்களுக்கு நல்லது! இந்தித் திணிப்பை எதிர்க்காமல் இருப்பதுதான் தில்லிவாழ் தமிழர்களுக்கு நல்லது! இந்தியாவில் எந்தப் புரட்சியும் செய்யாமல் இருப்பதுதான் அமெரிக்காவில் வேலை செய்யும் இந்தியர்களுக்கு நல்லது!

படிப்பகம்

www.padippakam.com



சிபிஎம் ஏன் மேற்சொன்ன சிக்கல்களில் போராட மறுக்கிறது, புரட்சியைத் தவிர்க்கிறது என்று புரிகிறதா? எல்லாம் எல்லாரும் நன்றாய் இருக்க வேண்டும் என்பதற்காகவே! இதுவல்லவா 'அக்மார்க்' சர்வதேசியம்?

உலகில் தமிழர்களுக்கென்று ஓர் அரசு உருவாவது உலகெங்கும் வாழும் தமிழர்களின் நலனுக்குத் துணை செய்யுமே தவிர, ஊறு செய்யாது என்பதில் நாம் தெளிவாக இருக்கலாம். இதுவும் சர்வதேசியம்தான்! புரட்சிகரமான தமிழ்ச் சர்வதேசியம்தான்!

வரதராசனும் மீனாட்சிசுந்தரமும் விடுதலைப் புலிகள் மீது வெறுப்பை உமிழ்கிறார்கள். அதிலும் குறிப்பாகக் கரும்புலிகளைத்தான் கடுமையாகச் சாடுகிறார்கள். விடுதலைப் புலிகளின் தற்கொடைப் போர்முறையை இயன்றவரை இழிவுபடுத்துகிறார்கள்.

ஆள்வலிமை, அறிவியல் தொழில்நுட்ப வலிமை, ஆயுத வலிமை என்று அனைத்து வகை வலிமையோடும் அடக்கி ஒடுக்கும் ஆதிக்கத்தை எதிர்த்து மக்கள் ஆதரவை மட்டுமே சார்ந்து போராடுவதற்கான உத்தியாக உலக வரலாற்றில் கெரில்லாப் போர் முறை வளர்த்தெடுக்கப்பட்டது. இந்த கெரில்லாப் போர்முறையின் உச்சகட்ட வளர்ச்சிதான் நெல்லியடியில் மில்லர் தொடக்கி வைத்த தற்கொடைப் போர் முறை. ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் ஒப்பளவில் சிறியதொரு நாட்டில் சிறும (minimum) இழப்புகளோடு பெரும (maximum) வெற்றிகளை ஈட்டுவதற்கு இப்போர்முறை உதவுகிறது.

வியத்நாமிய விடுதலைப் போராட்டத்திலும் சிறு அளவில் தற்கொடைப் போர்முறை பயன்படுத்தப்பட்டது. இசுரேலிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான மண்மீட்புப் போரில் லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கம் பெருமளவில் தற்கொடைப் போர்முறையைப் பயன்படுத்தக் கண்டோம். பாலத்தீனத்தில் ஹமாஸ் இயக்கமும் இந்தப் போர்முறையைப் பயன்படுத்தியது.

தற்கொடைப் போர்முறையைச் சொல்லிப் புலிகளை அல் காய்தாவுடன் ஒப்பிடுகிறார் மீனாட்சிசுந்தரம். பாலத்தீன ஹமாஸ் இயக்கத்தை அல்காய்தாவுடன் ஒப்பிடும் முயற்சிக்கு ஹமாசின் ஆன்மீகத் தலைவர் ஷேக் அகமது யாசின் இப்படிப் பதிலளித்தார்:

"எமது இயக்கம் இசுரேலிய இலக்குகளை எதிர்த்துத் தற்கொலைத் தாக்குதல் நடத்துவது நியாயமானது. ஏனென்றால் நாங்கள் காலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். மறுபுறம், அமெரிக்காவில் இரட்டைக் கோபுரங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் எந்தக் குறிக்கோளுக்காகவும் அப்படிச் செய்யவில்லை."

'தற்கொலைத் தாக்குதல் என்பது ஒரு போர்முறை. அதனை விடுதலைப் போராளிகளும் பயன்படுத்தலாம், பயங்கரவாதிகளும் பயன்படுத்தலாம். தாக்கப்படுவது யார்? தாக்குதலின் குறிக்கோள் என்ன?' என்பதைப் பொறுத்தே அச்செயலின் தன்மை

படிப்பகம்

www.padippakam.com



தீர்மானிக்கப்படும். சிங்களப் படையினர்க்குப் பயிற்சி தருவதற்காக அனுப்பப்பட்ட அமெரிக்கப் பச்சை தொப்பிப் படையைப் புலிகளின் தற்கொடைப் போர்முறைதான் விரட்டியடித்தது என்ற செய்தியாவது மீனாட்சிசுந்தரத்திற்குத் தெரியுமா?

புலிகளையும் சிங்களப் படையினரையும் சமநிலையில் வைத்துப் பேசுவது சிங்களர்களைப் பாதுகாக்கவும் புலிகளைக் கொச்சைப்படுத்தவும் மீனாட்சிசுந்தரம் கையாள்கிற உத்தியாகும். அவர் சொல்கிறார் :

"இலங்கை இராணுவம் விமானம் மூலம் குண்டுவீசி, குழந்தைகளைக் கொல்கிறது. ஈழப் புலிகளோ குழந்தைகளை இராணுவத்தில் சேர்த்து உயிர்ச் சேதத்தை விளைவிக்கிறது.

செஞ்சோலைக் குழந்தைகளை குண்டுவீசிக் கொன்றதோடு அந்தக் கொலை பாதகத்தை நியாயப்படுத்தவும் செய்த சிங்கள அரசின் வெறிச் செயலும், தமிழீழ விடுதலைப் போரில் உரிய வயதடையாத இளம்படியர்கள் சிலரும்கூட ஈடுபட்டுள்ள சூழலும்... மீனாட்சிசுந்தரத்திற்கு ஒன்றுதான். முன்னது வினை, பின்னது எதிர்வினை.

உலகின் எந்த நாட்டிலும், எந்தச் சூழலிலும் உரிய வயதடையாத இளம்படியர்கள் (குழந்தைகள்) படையில் சேர்க்கப்படுவதோ போரில் ஈடுபடுத்தப்படுவதோ நல்லதில்லை. விரும்பத்தக்கதில்லை. ஆனால் குழந்தைகளின் படிப்புக்கு வழி செய்யாமல் அவர்களைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கிக் கொண்டிருப்பது இதைவிடவும் மோசமான குழந்தை உரிமை மீறலாகும்.

கொடிய அடக்குமுறையாளன் பால் வேறுபாடோ வயது வேறுபாடோ கருதாமல் ஆண்கள் - பெண்கள், குழந்தைகள் - வயோதிகர்கள் என்று அனைத்துத் தரப்பினரையும் அழித்தொழிக்க முயலும்போது, அதற்கெதிராக அனைத்து மக்களும் பால் வேறுபாடும் வயது வேறுபாடும் கருதாமல் அணிதிரண்டு போராட வேண்டிய கட்டாயம் நேர்கிறது.

புலிகளைப் பொடியன்கள் என்று கொச்சைப்படுத்தியதற்கு ஓர் இளம்புலி தந்த மறுமொழி இதுதான்:

"தாயை நேசிப்பதற்கு மீசை முளைக்கத் தேவையில்லை"

உரிய வயதடைவதற்கு முன்பே, இளம்படியர்கள் போருக்குத் தள்ளப்படுகிற அவலத்திற்கான முதன்மைப் பொறுப்பு போரைத் திணித்த ஆதிக்க ஆற்றல்களைச் சாருமே தவிர விடுதலைப் படையைச் சாராது. இப்படி ஒரு நிலை இதற்கு முன்பே பல நாடுகளிலும் ஏற்பட்டதுதான். பாலத்தீனத் தாயக மீட்புப் போராட்டத்தில் இசுரேலிய டாங்கிகளையும் பீரங்கிகளையும் எதிர்த்து யோர்தான் மேற்குக் கரையிலும் காசா முனையிலும் தெருக்களில் சண்டையிட்ட இளம் வீரர்களின் வயதை அளந்து பார்த்தாரா மீனாட்சிசுந்தரம்?

படிப்பகம்

www.padippakam.com



இன்று நேற்றல்ல, உலகின் முதல் தொழிலாளி வர்க்கப் புரட்சியாகிய பாரிஸ் கம்யூனிலேயே (1871) இளம்படியர்கள் போர்புரிந்தார்கள் என்ற வரலாறு இந்தச் சட்டவாத மார்க்சியர்களுக்குத் தெரியுமா? பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இராணுவ வேலைத்திட்டம் என்ற கட்டுரையில் லெனின் இவ்வாறு எழுதுகிறார்:

"பாரீஸ் கம்யூனில் ஆண்களோடுகூட பெண்களும் பதின்ம வயதுக் குழந்தைகளும் (teen-age children) போர் புரிந்தார்கள். முதலாளி வர்க்கத்தைத் தூக்கி எறிவதற்காக வரவிருக்கும் போர்க் களங்களிலும் இதுவேதான் நிகழும்." (V.I. Lenin, Selected Works Vol. I.p. 773)

ஆண் தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்தின் ஆயுதப் படைகளால் சுட்டு வீழ்த்தப்படும்போது பாட்டாளி வர்க்கப் பெண்கள் கை கட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று லெனின் இதற்கு விளக்கமளித்தார். வெறுங்கையர்களாய் நின்ற தங்கள் தாய்தந்தையரை சிங்களக் காடையரும் அரசப் படையினரும் கொடிய முறையில் கொன்று போட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த ஈழத்து இளம்படியரும் கையில் கருவி எடுத்தார்கள்... தங்கள் உயிரையும் தங்கள் தேசத்தின் மானத்தையும் காப்பதற்காக!

இலங்கைப் பிரச்சனையையும், அதை ஒட்டி எழுந்துள்ள முரண்பாடுகளையும் போராட்டங்களையும் இப்படியெல்லாம் கொச்சைப்படுத்தியுள்ள இந்தக் கட்டுரையாளர்கள் இறுதியில் இதற்கு என்னதான் தீர்வு சொல்கிறார்கள்?

வரதராசன் தன் கட்டுரையின் கடைசிப் பத்தியில் இப்படிச் சொல்கிறார்: "அண்டைய நாடான இலங்கையில் ஒரு அமைதிச் சூழல் ஏற்பட இந்திய அரசும் அமைதித் தீர்வு காண உதவ வேண்டும்."

எவ்வளவு தெளிவான தீர்வு பாருங்கள்! அமைதிச் சூழல் ஏற்பட வேண்டுமாம்! அதற்கு அமைதித் தீர்வு காண வேண்டுமாம்! அமைதிச் சூழலுக்கு அமைதித் தீர்வு! அமைதித் தீர்வுக்கு அமைதிச் சூழல்!

வரதராசன் எதுவும் பேசாமல் அமைதியாகவே இருந்து விட்டால் அதுவே இச்சிக்கலை விளங்க வைப்பதற்கு அவர் செய்கிற பேருதவியாக இருக்கும்.

மீனாட்சிசுந்தரம் அஞ்சாநெஞ்சர் - பொய் சொல்வதில்! அவர் சொல்கிறார் : "இங்குள்ள சில பைத்தியக்கார அரசியல்வாதிகள் பழைய நினைப்போடு பிரிவினை உணர்வை நெஞ்சிலே வளர்க்கிறார்கள். இவர்களை நம்பி அரசியல் ஞானமற்ற பிரபாகரனும் ஈழம் என்ற நாட்டின் எல்லையை வடவேங்கடம் வரை நீட்டிட தற்கொலைப் படைகள் மூலம் சாத்தியமாகும் எனக் கனவு காண்கிறார்."

இந்திய உளவுத் துறை வாந்தியெடுத்த புளுகை அள்ளி விழுங்கி மறுவாந்தி எடுக்கிறார் மீனாட்சிசுந்தரம்! புலிகளின் ஈழ வரைபடத்தைப் பார்த்ததுண்டா மீனாட்சிசுந்தரம்? ஈழ நாட்டை வடவேங்கடம் வரை

படிப்பகம்

www.padippakam.com



நீட்ட பிரபாகரன் கனவு காண்பதற்கு ஒரே ஒரு சிறிய சான்றாவது தர முடியுமா தளும்பத்தளும்ப அரசியல் ஞானம் நிறைந்த மீனாட்சி சுந்தரத்தால்? எல்லார்க்கும் தெரியும் ஈழத்திற்கு எல்லை உண்டு. மீனாட்சிசுந்தரம் அவிழ்த்துவிடும் பொய்களுக்குத்தான் எல்லையே இல்லை என்று தெரிகிறது.

மீனாட்சிசுந்தரம் சொல்கிறார்: "ஈழமா? ஒன்றுபட்ட இலங்கையா? என்பதை இலங்கை மக்களின் அரசியல் இயக்கங்கள்தான் தீர்மானிக்க முடியும். வெளியார் தலையீட்டின் மூலமோ இராணுவ நடவடிக்கை மூலமோ ஈழம், சிங்களம் என்று பிரிக்க முடியாது."

சிபிஎம்மின் சிங்களத் தோழமை ஆகிய பேரினவாத ஜேவிபியின் குரலே இது.

ஈழமா, ஒன்றுபட்ட இலங்கையா என்பதைத் தமிழீழ மக்கள்தான் முடிவுசெய்ய வேண்டும். அது அவர்களின் உரிமை என்பதுதான் மார்க்சிய ஆசான் லெனின் நமக்குக் கற்றுத்தந்த பாடம். இதை முடிவு செய்ய வேண்டியது இலங்கை மக்களின் அரசியல் இயக்கங்கள்தான் என்று சொல்வதன் மெய்ப்பொருள் என்ன? சிங்களர்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்பதே அது. தமிழர்களின் வருங்காலத்தை சிங்களர் தீர்மானிக்கட்டும் என்கிறார் மார்க்சிஸ்ட் மீனாட்சிசுந்தரம். தமிழ்நாட்டில் தங்களுக்கென்று ஒரு கட்சி இல்லையே என்ற கவலை சிங்களர்களுக்கு இனி வேண்டாம். இருக்கவே இருக்கிறது இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்சிஸ்ட்) - சிபிஎம்: சிங்கள பேரினவாதத்தின் தமிழ்நாட்டு ஊதுகுழல்!

- தமிழர் கண்ணோட்டம், அக்டோபர் 2006

படிப்பகம்

www.padippakam.com

# தேன் சொல்லில் மறையுமா தீச்செயல்?

"இலங்கைத் தமிழர்களின் நலன் காக்கப் பேச்சுவார்த்தைகளின் மூலம் சுமுகத் தீர்வு காண வேண்டியது அவசரத் தேவையாகும். இது இலங்கை அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது."

- காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி முதல்வர் கருணாநிதிக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு கூறியுள்ளார். பேச்சுவார்த்தை மூலம் சுமுகத் தீர்வு காண்பதற்கு அடிப்படையான கொள்கை அணுகுமுறை என்ன என்பதை சோனியா தெளிவுபடுத்தவில்லை என்றாலும், அவர் அளித்துள்ள ஓர் உறுதிமொழி குறிப்பிடத்தக்கது:

"எந்தச் சூழ்நிலையிலும் எத்தகைய ஆயுதங்களும் இலங்கைக்கு வழங்கக் கூடாது என்பதில் அரசு உறுதியாக உள்ளது."

இலங்கைத் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என்பதே காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு என்றும் சோனியா எழுதியுள்ளார்.

சிங்களப் பேரினவாத அரசுக்கு இராணுவ உதவியேதும் வழங்கக் கூடாது என்பது தமிழகத்திலுள்ள தமிழீழ ஆதரவாளர்களின் நெடுநாளையக் கோரிக்கை. இந்தக் கோரிக்கையை ஏற்கும் வகையில் சோனியா காந்தியின் உறுதிமொழி காப்பாற்றப்படுமானால் அதை நாம் வரவேற்கலாம்.

சோனியா கடிதம் எழுதிய சில நாள்களுக்குள்ளேயே, 2006 திசம்பர் 20ஆம் நாள் இலங்கை நாடாளுமன்றத்தின் தமிழ் உறுப்பினர்கள் ஐவர் தமிழக முதல்வரைச் சந்தித்தார்கள். திசம்பர் 22ஆம் நாள் தில்லியில் இந்தியத் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங்கை அவர்கள் சந்தித்தார்கள். இந்தச் சந்திப்பின்போது மன்மோகன் சிங், "தமிழீழ மக்கள் கண்ணியத்தோடும் சுயமரியாதையோடும் பாதுகாப்போடும் வாழ வேண்டுமென்பதில் இந்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது" என்று கூறியதாகச் சந்திப்பில் உடனிருந்த தோழர் சுபவீ எழுதியுள்ளார்.

மூன்று மாதம் முன்பு இதே நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க மறுத்த இந்தியத் தலைமையமைச்சர் இப்போது அவர்களைச் சந்திக்க இணங்கியதன் மூலம் ஒரு தவறு திருத்தப்பட்டுள்ளது என்ற அளவில் மகிழலாம்.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் ஈழத் தமிழ் மக்கள் கண்ணியத்தோடும் சுயமரியாதையோடும் பாதுகாப்போடும் வாழ்வது என்றால் என்ன? அப்படி அவர்கள் வாழ வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகச் சொல்லும் இந்திய அரசு அந்த அக்கறையை எப்படி வெளிப்படுத்தப் போகிறது?

இந்த வினாக்களுக்குரிய விடைகளை அதே நாளில் சென்னையில் இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தந்துள்ளார். இலங்கையில் அமைதித் தீர்வு காண்பதற்கான எல்லா முயற்சிகளையும் இந்தியா தொடர்ந்து ஆதரிக்கும் என்று கூறியவர் வேறொன்றையும் தெளிவுபடுத்தியுள்ளார்:

"இலங்கைத் தமிழர்களின் நியாயமான ஆவல்களையும் இனக் குறிக்கோள்களையும் நிறைவு செய்யும்போதே சிறிலங்காவின் அரசமைப்புக்கும் அதன் ஆட்சிப் பரப்பியல் கட்டுக்கோப்புக்கும் உட்பட்ட ஒரு தீர்வையே இந்தியா ஆதரிக்கிறது."

சோனியா காந்தியும் மன்மோகன் சிங்கும் பிரணாப் முகர்ஜியும் தீர்வு, தீர்வு என்கிறார்களே, என்ன தீர்வு? எதற்கான தீர்வு? தேசிய இனச் சிக்கலுக்கான தீர்வு, தேசியத் தன்தீர்வுரிமையின் அடிப்படையிலான தீர்வு என்று நாம் சொல்கிறோம். அவர்கள் என்ன சொல்கிறார்கள்? ஏதோ சிக்கல், ஏதோ தீர்வு என்பதுதான் இந்த மாபெரும் தலைவர்களின் தெளிவான அணுகுமுறையா?

இலங்கைத் தமிழர் இனப் பிரச்சனை என்ற அளவுக்காவது இவர்களுக்கு ஒரு புரிதல் இருக்குமானால், அதற்கோர் உண்மையான தீர்வை முன்வைத்துப் பார்ப்பார்கள்.

இலங்கைத் தமிழர்கள் கண்ணியத்தோடும் சுயமரியாதையோடும் பாதுகாப்போடும் வாழ வேண்டும் என்று தலைமையமைச்சர் சொல்கிறார். இந்த நோக்கத்தை சிறிலங்காவின் அரசமைப்புச் சட்டத்திற்கும் அதன் ஆட்சிப் பரப்பியல் கட்டுக்கோப்புக்கும் உட்பட்டு அடைவது எப்படி என்பதை பிரணாப் முகர்ஜி விளக்குவாரா? இலங்கைத் தமிழர்களின் துயரத்திற்கு சிறிலங்காவின் அரசமைப்புச் சட்டமோ ஆட்சிப் பரப்பியல் கட்டுக்கோப்போ காரணமில்லை என்று பிரணாப் கருதுகிறாரா? இவை காரண மில்லை என்றால் வேறு என்ன காரணம் என்று அவர் விளக்கிச் சொல்வாரா?

சோனியாவும் மன்மோகனும் கூறிய கருத்துகளோடு பிரணாப் முரண்பட்டிருப்பாரானால், அதற்காக் அவர்கள் அவரைக் கடிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி எந்தச் செய்தியும் வரவில்லை. சோனியா காந்தியின் கடிதம் யாருக்கு எழுதப்பட்டதோ, யாருடைய முயற்சியால் இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையமைச்சரைச் சந்திக்க முடிந்ததோ, தமிழக முதல்வராகிய அவரும் பிரணாபின் கூற்றுக்கு மறுப்பு ஏதும் சொன்னதாகச் செய்தியில்லை.

படிப்பகம்

www.padippakam.com



ஏன்? ஏனென்றால் சோனியாவோ மன்மோகன் சிங்கோ தங்கள் கருத்துக்கு மாறுபட்ட ஒன்றை பிரணாப் சொல்லி விட்டதாகக் கருதவில்லை. பார்க்கப் போனால் அவர்களின் கருத்துகளுக்கு பிரணாப் 'பொழிப்புரை' வழங்கியுள்ளார், அவ்வளவுதான்.

சோனியா தலைமையிலான காங்கிரஸ் கட்சிக்கும் சரி, மன்மோகன் தலைமையிலான இந்திய அரசுக்கும் சரி, சிறிலங்காவின் அரசமைப்பும் அதன் ஒருமைப்பாடும் புனிதமானவை, மீறவொண்ணாதவை. இந்த அரசமைப்பும் ஒருமைப்பாடுமே சிக்கலின் ஒரு பகுதியாக இருப்பது தெரிந்தே இவற்றிற்கு உட்பட்டுத்தான் தீர்வு காண வேண்டும் என்று தமிழீழ மக்களைக் கட்டாயப்படுத்த முயல்கிறார்கள்.

தமிழர்கள் கண்ணியத்தோடும் சுயமரியாதையோடும் பாதுகாப்போடும் வாழ வேண்டும், ஆனால் சிறிலங்காவின் அரசமைப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அவர்கள் உட்பட்டுத்தான் ஆக வேண்டும் என்று நிபந்தனை விதிப்பது ஒருவரைப் பார்த்து, "நீ சுதந்திர மனிதனாக இருப்பதை விரும்புகிறேன், ஆனால் அந்தச் சுதந்திரத்தை சிறைக்குள்ளேதான் அனுபவிக்க வேண்டும்" என்று சொல்வதைப் போன்றதே. அல்லது ஒரு நோயாளியைப் பார்த்து, "நீ மருந்து சாப்பிடலாம், ஆனால் நோய் மட்டும் தீர்ந்துவிடக் கூடாது" என்று சொல்வதைப் போன்றதே.

சிறிலங்காவின் அரசமைப்பு, அதன் இறையாண்மை, அதன் ஆட்சிப் பரப்பியல் கட்டுக்கோப்பு, அதன் ஒருமைப்பாடு இவற்றுக்கு உட்பட்டுத்தான் தீர்வு காண வேண்டும் என்று நிபந்தனை விதிப்பது பிரணாப் முகர்ஜியும் அவருக்கு மேலிருக்கும் சோனியாவும் மன்மோகனும் மட்டுமல்ல, அமெரிக்க வல்லாதிக்கமும் இப்படித்தான் நிபந்தனை விதிக்கிறது. பிரித்தானிய வல்லாதிக்க மும், பல ஐரோப்பிய அரசுகளும் கூட இப்படித்தான் நிபந்தனை விதிக்கின்றன. இந்தியாவிலிருக்கும் இந்தியத் தேசிய இடதுசாரிக் கட்சிகளும் (சிபிஎம் போன்றவை) வலதுசாரிக் கட்சிகளும் (பாசக போன்றவை) இப்படித்தான் நிபந்தனை விதிக்கின்றன.

இனச் சிக்கல் என்பது இலங்கைக்கு மட்டும் உரியதன்று. அது உலகின் பல நாடுகளில் ஏற்படக் கூடியதுதான். அங்கெல்லாம் இவர்கள் இதேபோல் நிபந்தனை விதிப்பார்களா? குறிப்பாக இந்திய அரசு உலகில் ஒவ்வொரு நாட்டின் அரசமைப்பையும் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் புனிதமானவை யாகக் கருதிக் கட்டிக் காப்பாற்ற உறுதி எடுத்துள்ளதா?

கடந்த 1971-72இல் வங்கதேச விடுதலைப் போர் வெடித்த போது, பாகிஸ்தானின் அரசமைப்பையும் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் இந்தியா மதித்ததா? இந்தியக் கட்சிகள் மதித்தனவா? பாலத்தீனத் தாயக மீட்புச் சிக்கலை இசுரேலிய அரசமைப்புச் சட்டத்திற்குட்பட்டுத்தான் தீர்க்க வேண்டுமென இவர்கள் கேட்பார்களா? இசுரேலே அப்படிக் கேட்காது என்பதுதான் உண்மை.

படிப்பகம்

www.padippakam.com



வங்கதேச மக்களுக்கும், நமீபிய மக்களுக்கும், கிழக்கு திமோர் மக்களுக்கும், பாலத்தீன மக்களுக்கும் விதிக்காத நிபந்தனையை தமிழீழ மக்களுக்கு மட்டும் விதிப்பது நியாயம்தானா?

சிறிலங்காவின் அரசமைப்புச் சட்டம் பற்றி பிரணாப் முகர்ஜி வகையறாவுக்கு என்ன தெரியும்? இலங்கையில் இந்தியா போன்ற கூட்டாட்சி அமைப்பை ஏற்படுத்தலாம் என்று மேற்போக்காகப் பேசிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு அந்நாட்டின் ஒற்றையாட்சி அமைப்பை மாற்றவே முடியாது என்று தெரியுமா?

இலங்கையில் கடந்த 58 ஆண்டுகளில் அடுத்தடுத்து மூவேறு அரசமைப்புச் சட்டங்கள் ஆட்சி செய்துள்ளன. இவற்றிற்கிடையே வேறுபாடுகள் உண்டென்றாலும் எல்லாமே ஒற்றையாட்சி முறையில் உறுதியாக இருப்பவை. அதேபோல் சிங்கள மொழிக்கும் பௌத்த சமயத்திற்கும் முன்னுரிமை கொடுப்பவை.

கடந்த 1978 முதல் செயல்பட்டு வரும் இப்போதைய அரசமைப்புச் சட்டத்தின்படி, கூட்டாட்சியும் சுயாட்சியும் கிடக்கட்டும், தமிழ் மக்களுக்கென்று ஒரு மாகாணம் அமைக்கக் கூட முடியாது என்பது அண்மையில் அந்நாட்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலிருந்து தெளிவாகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பில் இந்தியாவுக்கு எப்போதும் மாற்றுக் கருத்து இல்லை என்று இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மன்மோகன் கூறினாராம். வடக்கு-கிழக்கு இணைப்பைக் கூட அனுமதிக்காத சிறிலங்காவின் அரசமைப்பைத் தீர்வுக்கு நிபந்தனையாகத் திணிக்கிற வேலையை மன்மோகன் கைவிடட்டும், பிறகு பேசட்டும் தமிழீழ மக்களின் கண்ணியம், சுயமரியாதை, பாதுகாப்பு பற்றி.

சிறிலங்காவின் இந்த அரசமைப்புச் சட்டத்தைத் திருத்திக் கூட்டாட்சி முறையை ஏற்படுத்த முடியாதா? என்று சிலர் கேட்கக் கூடும். சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கை நாடாளுமன்றம் இத்தகையத் திருத்தத்தை அனுமதிப்பது முயற்கொம்பே. நாடாளுமன்றம் இப்படி ஒரு திருத்தத்தை இயற்றுவதாக வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும், அந்தத் திருத்தம் சட்டமாக வேண்டுமென்றால் பொது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு இசைவு பெற வேண்டும் என்பது விதி. இதன் பொருள் என்னவென்றால், தமிழ் மக்களுக்கு உரிமை வழங்க சிங்கள மக்களிடம் அனுமதி பெற வேண்டும் என்பதே. சிங்களப் பெரும்பான்மையினர் மனமிறங்கும் வரை தமிழ்ச் சிறுபான்மையினர் தமக்கெதிரான பாகுபாட்டையும் ஒடுக்குமுறையையும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பதே. அவர்கள் இனப் படுகொலைக்கே ஆளானாலும், குழந்தைகள் மீதே குண்டு வீசப்பட்டாலும், பிரிந்து போய் தமக்கான அரசை உருவாக்கிக் கொள்ளாமல் சிங்களப் பேரினவாத அரசுக்கு அடிமைப்பட்டிருக்க வேண்டுமென்பதே. அதாவது மன்மோகன் வசனத்தில் இடம்பெறும் கண்ணியம், சுயமரியாதை, பாதுகாப்பு எதையும் நாடக் கூடாது என்பதே.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்றும், இந்தியா தலையிட்டுத் தமிழீழ மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும் அவ்வப்போது சில கோரிக்கைகள் எழக் காண்கிறோம். இந்தியா தலையிடாமல் ஒதுங்கி இருப்பதாக இந்தக் கோரிக்கையாளர்கள் கருதிக் கொள்கிறார்கள். இந்திய அரசு அன்றும் இன்றும் என்றும் தலையிட்டுக் கொண்டுதான் இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. மொத்தத்தில் இந்தத் தலையீடு தமிழர்களுக்கு எதிராகவும், சிங்களப் பேரின ஒடுக்குமுறைக்கு ஆதரவாகவும் இருக்கிறது என்பதே நம் கவலை.

இந்திய அரசு ஈழத்தின் மீது படை யெடுத்ததும், சிங்கள அரசுக்குப் போர்த் தளவாடங்கள் வழங்கியதும், இராணுவப் பயிற்சி கொடுப்பதும் தலையீடுகளே. ஆனால் இந்தத் தலையீடுகளுக்கெல்லாம் மூலமான ஒரு தலையீடு உள்ளது. அதுவே கொள்கைத் தலையீடு - ஈழத் தமிழர்கள் சிறிலங்காவின் அரசமைப்புக்கும் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்ற கொள்கையைத் திணிக்கின்ற தலையீடு!

இந்தக் கொள்கைத் தலையீட்டைக் கைவிடாத வரை சோனியா, மன்மோகன் சிங் போன்றவர்கள் இலங்கைத் தமிழர்களிடம் பரிவு காட்டுவதை நம்புவதற்கில்லை. இவர்களின் தேன் தடவிய சொற்கள் ஒரு தீய சூழ்ச்சியை மறைப்பதற்குத்தானோ என்று ஐயுறாமல் இருக்க முடியாது.

ஏனென்றால் சோனியாவும் மன்மோகன் சிங்கும் தெரிவித்த கருத்துகளுக்குச் சென்னையில் 'பொழிப்புரை' வழங்கிய பிரணாப் முகர்ஜி இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் (புனேயில்) பயிற்சி கொடுத்து வருவதை ஒப்புக் கொண்டிருப்பது மட்டுமல்ல, அது பற்றிப் பெருமைப்படுவதாகவும் கூறியுள்ளார்.

இலங்கை இராணுவம் பயிற்சி பெறுவது எந்த அயல்நாட்டுப் படையிடமிருந்து தங்கள் நாட்டைப் பாதுகாப்பதற்காக? இலங்கை இராணுவம் அமெரிக்காவை எதிர்த்தோ பாகிஸ்தானை எதிர்த்தோ சீனத்தை எதிர்த்தோ போரிடப் போகிறதா? அதற்கான வாய்ப்பும் சூழலும் உள்ளனவா? சிறிலங்கா இராணுவம் அதன் வரலாற்றில் ஒரு முறையாவது அயல்நாட்டுப் படைகளுடன் சமர் புரிந்தது உண்டா? அது தன் வரலாற்றில் சனத விமுக்தி பெரமுனா (ஜேவிபி) நடத்திய புரட்சியின்போது பல்லாயிரம் சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்தது. கடந்த 30 ஆண்டுகளாகத் தமிழர்கள் மீது போர் தொடுத்து வருகிறது. இந்தப் போரில் தமிழர்கள் தங்களுக்கான தேசியப் படையை அமைத்துக் கொண்டுள்ளார்கள். அதுவே புலிப் படை.

தமிழ் மக்கள் மீது இன்றளவும் போர் நடத்திக் கொண்டிருக்கும் சிங்கள இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சியளிப்பது பற்றி பிரணாப் வெட்கப்பட வேண்டும். ஆனால் அவரோ பெருமைப்படுகிறார்! இந்தப் பெருமையில் சோனியாவுக்கும் மன்மோகன் சிங்கிற்கும் பங்குண்டா? என்பதைத் தமிழக முதல்வர்தான் கேட்டுச் சொல்ல வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



அது மட்டுமல்ல, சிங்களப் படைக்கு அனுப்பப்பட்டுத் தமிழ்நாட்டில் கைப்பற்றப்பட்ட வெடிமருந்துகளைப் பற்றி நொண்டிச் சமாதானம் சொல்கிறார் பிரணாப்.

எந்தச் சூழ்நிலையிலும் எத்தகைய ஆயுதங்களும் இலங்கைக்கு வழங்கப்படாது என்று சோனியா சத்தியம் செய்தார். ஆனால் பிரணாபோ "நாங்கள் அவர்களுக்குக் கொலைக் கருவிகள் (Lethal Weapons) வழங்கவில்லை" என்கிறார்.

ராடார் போன்ற சாதனங்களை வழங்கி சிங்கள அரசின் போர் முயற்சிக்குத் துணை செய்துவிட்டு, ராடார் கொலைக் கருவி அல்லவே என்று சொல்லி விடுவார்கள்.

தமிழீழ மக்களின் கண்ணியத்துக்கும் சுயமரியாதைக்கும் பாதுகாப்புக்குமான போராட்டமென்பது அவர்களின் விடுதலைப் போராட்டமே! இந்தப் போராட்டத்திற்கு இந்திய அரசு உதவும்படி செய்ய முடிந்தால் நல்லதுதான். ஆனால் அது முடியாத போது இந்தியா சிங்கள அரசோடு சேர்ந்து தமிழ் மக்களுக்கெதிராக சூழ்ச்சி செய்வதையாவது உணர்ந்து கொண்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைக்கும் இந்தியாவின் வாடிக்கையான தீச்செயலைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அப்படித் தடுத்து நிறுத்த வேண்டுமானால், இந்திய அரசிடம் தெளிவான கோரிக்கைகளை முன்வைத்துப் போராட வேண்டும்:

1) தமிழீழ மக்களின் தன்தீர்வு உரிமையையும் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் ஏற்றுக்கொள்க!

2) தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குக!

தமிழீழ விடுதலை ஆதரவாளர்களுக்குத் தேவை விழிப்புணர்வு! கொள்கைத் தெளிவு!

- *தமிழ்த்தேசம், தை 2007*

படிப்பகம்

www.padippakam.com

# ஆயுதம் ஏந்தட்டும் மீனவர் கைகள்!

அலைகடலில் கொலைப்படலம் தொடர்கிறது. சிங்களக் கடற்படை தமிழக மீனவர்களைச் சுட்டுக்கொல்லும் நிகழ்ச்சிகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. தமிழக மீனவர்கள் கொதித்துப் போய் உள்ளனர். உண்மையில் தமிழக மக்கள் அனைவருமே கொதித்துப் போயிருக்க வேண்டும். இந்தப் படுகொலைச் செய்திகள் நீண்ட பல ஆண்டுகளாய் அடிக்கடி வந்து வந்து அதனால் தமிழ் மக்களின் உணர்வுகள் மரத்துப் போயினவா? அல்லது மீனவர்களை மற்றவர்கள் தமக்குச் சமமாக மதிக்காத உள்மனம் வேலை செய்கிறதா? மீனவர்களின் உயிர்கள் மனித உயிர்களே என்பதைப் பலருக்கும் நினைவூட்ட வேண்டியிருப்பது பெரிய அவலம்.

கடற்பரப்பில் சிங்களக் கடற்படையினர் சுட்டுப் பொசுக்கி நம் மீனவர்கள் பிணமாகவோ குற்றுயிராகவோ கரை திரும்பும் போதெல்லாம் மீனவ மக்கள் கொந்தளித்துப் போராடுவதும், அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டன அறிக்கை விடுப்பதும், தமிழக முதல்வர் இந்தியத் தலைமை அமைச்சருக்கு மடல் தீட்டுவதும் வாடிக்கை நிகழ்வுகள் ஆகிவிட்டன.

சிங்களக் கடற்படையினர் உலகில் வேறு எந்த நாட்டுக் கடற்படையோடும் போரிடுவதற்குப் பழக்கப்பட்டவர்களோ, பயிற்சி பெற்றவர்களோ அல்லர். அவர்களின் சுடுபயிற்சிக்கு அன்றும் இன்றும் அங்கும் இங்கும் தமிழர் நெஞ்சங்களே குறி.

சிங்களக் கடற்படை தமிழ்நாட்டுத் தமிழர்களைச் சுட்டுச் சாய்ப்பது 1950களிலேயே தொடங்கி விட்டது. பாக்கு நீரிணையிலும் மன்னார் வளைகுடாவிலும் சிங்களக் கடற்படையின் நரவேட்டையால் எத்தனைத் தமிழர் பிணங்கள் மிதந்துள்ளன? அக்கரையிலுள்ள சொந்தபந்தங்களைக் கண்டு உறவாடக் கடலோடிய தமிழர்களைக் கள்ளத்தோணிகள் என்றும் கடத்தல்காரர்கள் என்றும் முத்திரையிட்டு விரட்டி விரட்டிக் கொன்றது சிங்களப் படை.

தமிழீழ மக்களின் விடுதலைப் போர் 1970களில் மூண்டெழுந்த பின்னர் சிங்களக் கடற்படை தான் சுட்டுக் கொல்லும் தமிழர்களுக்குப்

www.padippakam.com



'போராளிகள்' என்றும் 'பயங்கரவாதிகள்' என்றும் புதுப்பட்டம் சூட்டியது.

1971இல் தெற்காசியாவில் இந்திய மேலாதிக்கத்தை நோக்கமாகக் கொண்ட புவிசார் அரசியலின் ஒரு கூறாகத் தலைமை அமைச்சர் இந்திராகாந்தி கச்சத்தீவை எடுத்து சிங்கள அரசிடம் கையளித்தார். இது சிங்களக் கொலைப்படைக்கு மேலும் ஒரு வாய்ப்பாயிற்று. தமிழக மீனவர்கள் அத்துமீறியதாகச் சொல்லி அவர்களைச் சுட்டுக் கொல்ல முனைந்தது சிங்களக் கடற்படை.

உண்மையில் பலமுறை அத்துமீறி இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்த சிங்களக் கடற்படையைத் தட்டிக் கேட்க யாருமில்லை. சிங்களக் கடற்படையினர் ஒருமுறை பாம்பன் தீவுக்குள் நுழைந்து, ஓலைக்குடா என்னும் கரையோர மீனவக் கிராமத்தையே தீயிட்டுக் கொளுத்தினர். கேட்க நாதியில்லாமல் தமிழக மீனவர்கள் தம் எல்லைக்குள்ளேயே வதங்கி இறந்தனர். தம் குடிசைகளும் வலைகளும் எரியப் பார்த்துக் கொண்டிருந்தனர். தப்பியவர்கள் தறிகெட்டு ஓடினார்கள்.

வரலாறு நெடுகிலும் முழுக்க முழுக்கத் தமிழர்களுக்கே சொந்தமான கடற்பரப்பில் சிங்களக் கடற்படை கடந்த 60 ஆண்டுகளாகத் தமிழர்களைச் சுட்டுக்கொன்று வெறியாட்டம் போடுகிறது. இந்தியக் கடற்படை அல்லது கடலோரக் காவல்படை ஒருமுறைகூட தமிழர்களைக் காப்பாற்றியது இல்லை. சிங்களப் படையைத் திருப்பியடித்து விரட்டியதில்லை.

சிங்கள மீனவர்களும்கூட மீன்பிடிப்பதற்காக இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தது உண்டுதான். அவர்களில் எவரும் சுடப்பட்டதும் இல்லை; அவர்களின் படகுகள், வலைகள், மீன்பிடிபாடுகள் கைப்பற்றப்பட்டதும் இல்லை.

பரந்து விரிந்த கடற்பரப்பில் யாரும் எல்லைக்கோடு வரைந்து வைக்கவில்லை. தெரிந்தோ தெரியாமலோ மீனவர்கள் எல்லை கடப்பது உலகெங்கும் நிகழக்கூடியதுதான். இந்தியக் கடற்பரப்பில் பாகிஸ்தானிய மீனவர்கள், வங்கதேச மீனவர்கள், தாய்லாந்து மீனவர்கள் என்று பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதும், அவர்கள் தளைப்படுத்தப்பட்டு பிறகு விடுவிக்கப்படுவதும் அதிசய நிகழ்வுகள் அல்ல. இதேபோலத்தான் அந்த நாடுகளும் இந்திய மீனவர்களை நடத்துகின்றன. பக்கத்து நாட்டு மீனவர்களைச் சகட்டுமேனிக்கு சுட்டுத் தள்ளுவது சிங்களக் கடற்படை மட்டுமே. இது தமிழின அழிப்புக் கொள்கையின் நீட்டமே தவிர வேறல்ல.

அண்மையில் தமிழக முதல்வர் இந்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதோடு, கொழும்பு அரசையும் கடுமையாக எச்சரித்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



ஆளும் திமுக முன்நின்று சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தியுள்ளது.

தமிழகமெங்கும் பல்வேறு அமைப்புகள், குறிப்பாகத் தமிழ்த்தேசிய அமைப்புகள் சிங்கள அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தியுள்ளன. மதுரையில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் 06-03-2007இல் ஒருங்கிணைத்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு தமிழ் அமைப்பினர் எழுச்சியுடன் கலந்து கொண்டனர். இராமேசுவரம் பகுதியில் 12-03-2007இல் நடைபெற்ற பெருந்திரள் பட்டினிப் போராட்டத்திலும் இயக்கத் தோழர்கள் மீனவ மக்களுடன் இணைந்து பங்கேற்றனர்.

இந்த முறை தமிழக முதல்வர் தெரிவித்துள்ள ஒரு கருத்து முகாமையானது. "மீனவர்களின் கைகள் மீன்பிடித்துக் கொண்டு மட்டும் இருக்கமாட்டா" என்று அவர் சிங்களரை எச்சரித்துள்ளார். இந்த எச்சரிக்கை வாய்மொழியாகவே நின்றுவிடக் கூடாது என்பது நம் கவலை. இதற்கொரு செயல்வடிவம் தர வேண்டிய அவசரத் தேவை உள்ளது.

தமிழக மீனவர்களைப் பாதுகாக்க இந்தியக் கடலோரக் காவல் படை இருக்கிறது என்று தமிழக முதல்வராலேயே சொல்ல முடியவில்லை. இந்தியப் படை தங்களைத் தொல்லைப்படுத்தாமல் விட்டாலே போதும் என்பதுதான் மீனவர்களின் பட்டறிவு சார்ந்த உணர்வு. அவர்கள் இந்தியக் கடற்படையையோ, கடலோரக் காவல் படையையோ எள்முனையளவும் நம்புவதற்கு அணியமாயில்லை.

இந்தப் பின்னணியில்தான் இந்தியப் படையும் சிங்களப் படையும் கூட்டுக்காவல் புரிவது என்று சந்தடிசாக்கில் வண்டி ஓட்டிப் பார்க்கிறது சிங்கள அரசு. அதன் விருப்பம் ஈடேறுமானால் இந்தியப் படையும் சிங்களப் படையும் சேர்ந்து அங்குள்ள தமிழர்களையும் இங்குள்ள தமிழர்களையும் தாக்கக்கூடிய நிலை வரும். விடுதலைப் புலிகளின் கடற்படையுடன் இந்தியப் படை மோதக் கூடிய சூழல் உருவாகும். இவ்விதம் இராசபக்சேயின் ஆசைத் திட்டம் அரங்கேறும். கூட்டு ரோந்து எனப்படும் கூட்டுக்காவல் என்பது கூட்டுக் கொலை புரிவதற்கான கூட்டுச் சதித்திட்டமே தவிர வேறல்ல. தமிழர்கள் விழிப்போடிருந்து இதனை முறியடிக்க வேண்டும்.

தமிழக மீனவர்களை எப்படிக் காப்பது? அவர்கள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்வது தவிர வேறு வழியில்லை. அதற்கான ஆயுதங்களும், அந்த ஆயுதங்களைக் கையாள்வதற்கான பயிற்சியும் அவர்களுக்குத் தேவை. மீனவனின் கை மீன்பிடித்துக் கொண்டு மட்டும் இருக்காது என்று கூறிய முதல்வர் மீனவர்கள் தற்காப்புக்காக ஆயுதம் ஏந்தும் உரிமையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



பாகிஸ்தான் எல்லையோரத்தில் உள்ள இராஜஸ்தானத்துச் சிற்றூர்களில் இந்திய அரசே மக்களுக்கு ஆயுதம் கொடுத்திருப்பது போல் தமிழக மீனவர்களுக்கும் கொடுக்க வேண்டும். இதை தில்லி ஆட்சியாளர்களிடம் தமிழக முதல்வர் வலியுறுத்த வேண்டும்.

இதை சட்டப்படி செய்ய முடியுமா? என்ற கேள்வி எழலாம். முடியும் என்பதே நம் விடை. இந்தியக் கடலோரக் காவல்படையில் தமிழக மீனவர் பாதுகாப்புப்படை என்ற பிரிவை ஏற்படுத்தி அதில் தமிழக மீனவ இளைஞர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்குச் சிங்களப் படையிடமிருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதற்கான படைக்கலன்களும் படைப் பயிற்சியும் இந்திய அரசே வழங்க வேண்டும்.

இந்திய அரசும் தமிழக அரசுமே முன்னின்று இதைச் செய்ய வேண்டும். இல்லையேல் "எங்களால் உங்களைப் பாதுகாக்க முடியாது. நீங்களே உங்களைக் காத்துக் கொள்ள உங்களால் இயன்றதைச் செய்து கொள்ளுங்கள்" என்று தெளிவாகச் சொல்லி விடட்டும்.

எது எப்படியானாலும், குட்டக் குட்டக் குனிகிற முட்டாள்களாக மீனவர்கள் இனியும் இருக்கக்கூடாது. தூண்டில் பிடித்தும் துடுப்பிட்டும் வள்ளம் ஓட்டியும் வலை வீசியும் காய்த்துப் போன மீனவர் கைகள் ஆயுதம் ஏந்தட்டும்! ஓடி ஒளியட்டும் சிங்களக் கோழைகள்!

- *தமிழ்த்தேசம், பங்குனி 2007*

படிப்பகம்

www.padippakam.com

# வெல்க வான்படை!

- தமிழீழ வரலாற்றில் முதல் முறை!
- தமிழர் வரலாற்றில் முதல் முறை!
- விடுதலை இயக்கங்களின் வரலாற்றில் முதல் முறை!

இப்படித்தான் தமிழீழ வான்படையை உலக ஊடகங்கள் வியப்புடன் குறிப்பிட்டுள்ளன. இப்படையின் இரண்டு தாக்குதல் வானூர்திகள் கொழும்பு சென்று படையிலக்குகளைத் தாக்கி விட்டு எவ்விதச் சேதமும் இன்றி வன்னித்தளம் திரும்பியிருப்பது கொழும்பு அரசை அதிர்ச்சியில் உறையச் செய்துள்ளது. இந்தியா கொடுத்துதவியவை உட்பட கொழும்புவிடமுள்ள 'ரடார்' கருவிகளால் 400 கிலோமீட்டர் பயணம் செய்த புலிப்படை வானூர்திகளைக் கண்டுபிடிக்க முடியாமல் போயிற்றே என்று சிங்களம் அலறித் துடிக்கிறது.

குறிக்கோளுக்கு இரண்டகம் செய்த சிலர் இயக்கத்தை விட்டு வெளியேறியதால் புலிப்படை நலிந்து போய் விட்டதாகச் செய்தி போட்டு தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்ட 'இந்து' வகையறா இப்போதாவது உண்மை நிலையைக் காணுமா? காட்டுமா?

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்பைப் படைவலிமை கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகக் கைப்பற்ற மனப்பால் குடித்துக் கொண்டிருந்த இராசபட்சே அரசு "புலிகள் பதுங்கியது பாய்வதற்காகவே" என்பதை இப்போதாவது உணர்ந்து, இராணுவத் தீர்வு காணும் அசட்டு முயற்சியைக் கைவிட்டுத் தமிழர்களின் வாழ்வுரிமையை மதிக்க முன்வருமா?

'பயங்கரவாதிகள்' என்றும் 'தீவிரவாதிகள்' என்றும் முத்திரை குத்தித் தடை நடவடிக்கைகளைக் கொண்டு ஒரு மக்களினத்தின் தேசிய விடுதலை இயக்கத்தை ஒழித்துவிட முடியாது என்பதை அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற அரசுகள் இப்போதாவது உணருமா?

ஆண்டுக்கணக்கில் இரவு பகல் எந்த நேரமும் வான்படைக் குண்டுவீச்சுகளுக்கு அஞ்சியும் ஆளாகியும் துடித்த தமிழ்மக்கள் சார்பில் இப்போதுதான் சிறிய அளவில் திருப்பியடிப்பது தொடங்கியுள்ளது என்பதை உணர்ந்து சிங்கள மக்கள் தமிழ் மக்களின் வாழ்வுரிமையை மதித்துப் போற்ற முன்வருவார்களா?

படிப்பகம்

www.padippakam.com



சிங்களப் போர்விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீதும் மருத்துவமனைகள், தேவாலயங்கள், திருக்கோயில்கள், கல்வி நிலையங்கள் மீதும் குண்டு வீசிக் கொலைகள் புரிந்ததை, அநாதைக் குழந்தைகள் வாழும் செஞ்சோலை மீதுகூட குண்டுவீசி 60க்கு மேற்பட்ட பூக்கள் பிஞ்சுகளைக் கருக்கியதை... இப்போது தமிழீழ வான்படை படையிலக்கை மட்டுமே தாக்கிவிட்டுத் திரும்பியிருப்பதுடன் அனைவரும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளட்டும்.

எது எப்படி ஆயினும், முப்படையாகிவிட்ட புலிப்படை அதன் நீண்ட நெடிய விடுதலைப் போரில் ஒரு புதிய ஆற்றலை ஈட்டியுள்ளது. இது வெற்றியை விரைவுபடுத்தும் என்பதில் ஐயமில்லை.

தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டுதலில் தமிழீழ வான்படை ஓர் அதிரடித் தாக்குதலோடு பிறந்திருப்பது உலகத் தமிழர்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சிக்குரியது. இந்த மகிழ்ச்சியில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமும் பங்கேற்று, தமிழீழ மக்களுக்குப் புரட்சி வாழ்த்தினை உரித்தாக்குகிறது.

- தமிழ்த்தேசம், பங்குனி 2007

படிப்பகம்

www.padippakam.com

# இந்திய - சிங்களச் சதிவலை அறுப்போம்!

மீனவர்கள் மீன் பிடிக்க வலை வீசுவார்கள். இந்திய அரசின் உளவுத் துறையோ மீனவர்களை வைத்துச் சதிவலை பின்ன முற்பட்டுள்ளது - புலி பிடிக்கும் ஆசையில்!

சென்ற மார்ச்சு 4ஆம் நாள் கன்னியாகுமரியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள் கரை திரும்பவில்லை. மார்ச்சு 29ஆம் நாள் நடுக்கடலில் தமிழக மீனவர்கள் மீது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஐவர் உயிரிழக்கின்றனர்.

இந்த இரு நிகழ்ச்சிகளையும் சாக்கிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பழி சுமத்தவும், தமிழக மக்களிடையே அவர்களுக்குள்ள ஆதரவைக் கெடுக்கவும் இந்திய அரசின் உளவுத் துறை திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. அடுத்தடுத்து வெளிவந்த முரண்பட்ட செய்திகளைப் பார்த்தாலே இது விளங்கும்.

மார்ச்சு 29இல் ஐந்து மீனவர்களைச் சுட்டுக் கொன்றதற்காக சிங்கள கடற்படையினரைக் கண்டித்துத் தமிழக மீனவர்கள் பெருமளவில் போராடுகிறார்கள். சென்னையில் சிங்கள அரசைக் கண்டித்து திமுக ஆர்ப்பாட்டம் செய்கிறது. அப்போதே சிங்களத் தூதரக அதிகாரி கடலில் சிங்களப் படையும் இந்தியப் படையும் கூட்டுக் காவல் புரியலாம் என்று முன்மொழிகிறார். தமிழக மீனவர்களைச் சிங்களக் கடற்படை சுட்டுக் கொன்றதாகவே எல்லா நாளேடுகளும் தெரிவிக்கின்றன. இதை மார்ச் 30ஆம் நாள் சிங்கள அரசு மறுக்கிறது. மறு நாளே இந்த மறுப்பை இந்தியக் கடற்படையின் தலைமை அதிகாரியும் எதிரொலிக்கிறார். ஒப்புக்கு ஒரு துளிச் சான்றும் இல்லாமல் அவர் புலிகள் மீது பழிபோடப் பார்க்கிறார். தமிழக மீனவர்களைத் தக்கபடி எச்சரிக்கவில்லை என்று தமிழக அரசையும் குறைசொல்கிறார்.

ஏப்ரல் முதல் நாள் - புலிகள் சார்பில் இளந்திரையன் தங்கள் மீதான குற்றச்சாட்டைத் திட்டவட்டமாக மறுக்கிறார். தமிழீழத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களுக்குமான நல்லுறவை விரும்பாத தீய சக்திகள் சிங்கள அரசோடு இணைந்து நடத்தும் சதி இஃதென்று சாடுகிறார்.

ஏப்ரல் 11ஆம் நாள் - இந்தியக் கடலோரக் காவல்படை தூத்துக்குடி அருகே கடல்பரப்பில் ஆறு ஈழத் தமிழ் மீனவர்களையும் ஆறு தமிழக

www.padippakam.com



மீனவர்களையும் தளைப்படுத்தி, அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்கிறது. ஈழத் தமிழ் மீனவர்களின் படகில் மரியா என்று பெயர் எழுதப்பட்டிருந்தது. மார்ச்சு 29 துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களின் படகிலும் இதே பெயர் எழுதப்பட்டிருந்ததாக உயிர் தப்பிய மீனவர்கள் கூறியிருந்தனர். இதனால் ஐயம் எழுந்து, தூத்துக்குடி மாவட்டக் காவல்துறை அதிகாரி ஜான் நிக்கல்சன் பிடிபட்டவர்களிடம் விசாரணை செய்ததோடு, உயிர் தப்பிய மீனவர்களையும் அழைத்து வந்து காட்டுகிறார். சுட்டவர்கள் இவர்களில்லை, அவர்கள் வந்த படகும் இதுவன்று என மீனவர்கள் கூறிவிடுகின்றனர். அந்த ஈழத் தமிழர்கள் மீனவர்களே என்பதும், அவர்களிடம் ஆயுதம் ஏதும் இல்லை என்பதும் உறுதி செய்யப்படுகிறது.

ஏப்ரல் 17ஆம் நாள் - சென்னையில் உள்ள சிங்களத் துணைத் தூதரகம் மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுக்கும் இலங்கை அரசுக்கும் தொடர்பில்லை என்று அறிவிக்கிறது. மறுநாள் இலங்கைக் கடற்படை அதிகாரி கொழும்பில் செய்தியாளர்களிடம் மீனவர்களைச் சுட்டது புலிகள்தான் என்று அறிவிக்கிறார்.

ஏப்ரல் 20ஆம் நாள் - பத்து நாள் முன்பு சிறையில் அடைக்கப்பட்ட ஈழ மீனவர்களைக் காவல் துறை வெளியே எடுத்து விசாரிக்கிறது. ஏப்ரல் 23ஆம் நாள் அவர்களை உளவுப் பிரிவினர் (க்யூ பிரிவுக் காவல்துறை) விசாரணைக்கு எடுக்கின்றனர்.

ஏப்ரல் 27ஆம் நாள் - தமிழகக் காவல் துறைத் தலைவர் முகர்ஜி, "தமிழக மீனவர்களைச் சுட்டது விடுதலைப் புலிகள்தான்" என்று அறிக்கை விடுகிறார். தமிழக முதல்வரும் சட்டப் பேரவையில் இதை உறுதி செய்கிறார்.

மே 18 - கடத்தப்பட்ட 11 மீனவர்கள் திரும்பி வந்து சேருகின்றனர். அவர்களை உடனடியாக 'கியூ' பிரிவுக் காவல்துறை விசாரித்து விட்டுச் சென்னைக்கு அழைத்துப் போகிறது. மே 19 - அவர்கள் முதல்வரைச் சந்திக்கின்றனர். பிறகு காவல்துறைத் தலைவரின் முன்னிலையில் செய்தியாளர்களிடம் "புலிகள் எங்களைக் கடத்தினார்கள்" என்று மீனவர்களில் ஒருவர் தெரிவிக்கிறார். வேறு கேள்வியும் இல்லை, பதிலும் இல்லை.

அடுத்த சில நாளில் மீனவர்களின் சொந்த ஊருக்குச் சென்ற செய்தியாளர்களிடம் அனிஸ்தன் என்ற 13 வயது மீனவச் சிறுவன் சொல்கிறான் :

"நாங்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது எங்களைப் பிடித்துச் சென்றவர்கள் முகமூடி அணிந்த ஆட்கள்... திடீரென வெள்ளிக்கிழமை எங்களைச் சிலர் அழைத்து வந்து இலங்கைக் கடற்படையின் படகில் ஏற்றினார்கள். முதலில் கடத்திய முகமூடி ஆட்களும் அந்தப் படகில் இருந்தார்கள். இராமேசுவரம் நோக்கி வரும்போது வழியில் சிங்களக் கடல் படையினர் எங்களை நோக்கிச் சுட முயன்றனர். அப்போது எங்களுடன் படகில் இருந்தவர்கள் 'வயர்லெஸ்' மூலம்

படிப்பகம்

www.padippakam.com



தொடர்புகொண்டு 'நாங்களும் சிங்களப் படையினர்தான், மீனவர்களை விடுவிக்கச் செல்கிறோம்' என்று கூறினார்கள். அந்தக் கப்பல் எங்களைத் தாக்காமல் போய்விட்டது."

பெரியவர்கள் அஞ்சி மறைக்கும் உண்மையைச் சிறுவன் உடைத்துப் பேசுகிறான் என்று தெளிவாகத் தெரிகிறது.

இந்தப் பின்னணியில்தான் இந்திய வல்லாதிக்கச் சூழ்ச்சியின் மொத்த உருவமான எம்.கே. நாராயணன் சென்னை வருகிறார். முதல்வரைச் சந்திக்கிறார். புலிகளால் இந்தியாவுக்கு ஆபத்து என்கிறார். இலங்கைக் கடற்படையுடன் இந்தியக் கடற்படை ஒருங்கிணைந்து காவல் புரிவது பற்றிப் பேசுகிறார். இந்தியாதான் தெற்காசியாவின் வல்லரசாம்! இலங்கை, பாகிஸ்தானிடமோ சீனத்திடமோ செல்லாமல் இந்தியாவிடமே உதவி கேட்க வேண்டும் என்கிறார்.

நாராயணனின் மலையாள மாந்திரீகம் தமிழக முதல்வரிடம் பலித்ததா இல்லையா, நாமறியோம். இந்திய உளவுத் துறை மீனவர்களை மையப்படுத்தி நடத்திய கடத்தல் நாடகத்தின் நோக்கம் இப்போது வெளிப்பட்டு விட்டது. தமிழகத்தில் புலிகளுக்குள்ள ஆதரவைக் கெடுக்க வேண்டும்; சிங்கள அரசின் இனக் கொலைப் போருக்கு இந்திய அரசு மென்மேலும் துணை போவதற்குத் தமிழ்நாட்டில் எதிர்ப்பு வராமல் செய்ய வேண்டும். குறிப்பாக, இந்திய, சிங்களக் கடற்படைகளிடையே ஏதேனும் ஒரு பெயரில் கூட்டுறவை வலுப்படுத்திப் புலிகளின் கடற்படை வலிமையை அழிக்க வேண்டும்.

தமிழீழ மக்களுக்கு எதிராகக் கடந்த காலத்தில் இந்திய உளவுத் துறை பின்னிய சதி வலைகள் அறுத்தெறியப்பட்டது போலவே இந்தச் சதிவலையும் அறுத்தெறியப்படும் என்பது உறுதி. உண்மை அவ்வளவு கூரியது. ஆனால் அந்த உண்மை தமிழ்க மக்களிடம் போய்ச் சேரவேண்டுமே? போய்ச் சேரும்படி செய்வது தமிழீழ மக்களையும் அவர்களது போராட்டத்தையும் நேசிக்கிற அனைவரின் கடமையும் ஆகும்.

"உண்மை ஒரு நாள் வெளியாகும் - அதில்
உள்ளங்கள் யாவும் தெளிவாகும்
பொறுமை ஒரு நாள் புலியாகும் - அதில்
பொய்யும் புரட்டும் பலியாகும்"

*- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்*

**- தமிழ்த்தேசம், வைகாசி 2007**

படிப்பகம்

www.padippakam.com

# 'தமிழர் பிரச்சனை' மூடுமந்திரமா?

மார்க்சியக் கட்சி (சிபிஎம்) நாளேடாகிய தீக்கதிர் 2007 ஜூன் 22 இதழில் அக்கட்சியின் மையக் குழு உறுப்பினர் தோழர் உ.ரா. வரதராசன் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். கட்டுரையின் தலைப்பு - *'இலங்கை: மீறப்படும் மனித உரிமையும் தமிழர் பிரச்சனையும்.'*

எப்பொருள் பற்றிய கட்டுரை என்பது தலைப்பிலிருந்தே தெரிகிறது. இலங்கைத் 'தமிழர் பிரச்சனை' என்ன என்பதை வரையறுத்துச் சொல்லி அப்பிரச்சனையின் வேர்களை வெளிப்படுத்தி, அதற்கொரு தீர்வு சொல்வார் உ.ரா.வ. என்ற எதிர்பார்ப்பைக் கட்டுரைத் தலைப்பு உண்டாக்குகிறது. 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்னும் குறளைக் கசடறக் கற்றவராயிற்றே!

'தமிழர் பிரச்சனை' என்று உ.ரா.வ. எதைச் சொல்கிறார்? என்று நாம் அவரது கட்டுரையில் தேட முற்படலாம் -

*"இலங்கையில் கடந்த 1983 ஆம் ஆண்டு சிங்கள இனவெறியர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய இனப்படுகொலையைத் தொடர்ந்து, இன்று வரை, இலங்கைத் தமிழர் பிரச்சனை எந்தத் தீர்வும் காணப்பட முடியாத துயர நிகழ்வாகத் தொடர்கிறது."* - இப்படித்தான் கட்டுரையைத் தொடங்குகிறார் உ.ரா.வ.

'தமிழர் பிரச்சனை' பிறந்த ஆண்டு 1983 என்பதுதான் அவரது புரிதல் போலும்! இல்லை, 1983 என்பது இனப் படுகொலை நிகழ்ந்த ஆண்டுதான், 'தமிழர் பிரச்சனை' அதற்கு முன்பே இருந்தது என்று உ.ரா.வ. சொல்வாரானால், அது எப்போது எப்படிப் பிறந்தது என்பதற்கு அவர் விடை சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லப் போனால் 'தமிழர் பிரச்சனை' என்பதன் உட்பொருளை விண்டுரைக்க வேண்டிவரும்.

1983இல் என்ன நடந்தது? *'சிங்கள இனவெறியர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய இனப்படுகொலை'* என்கிறார் உ.ரா.வ. அந்த அளவில் சரி! ஆனால் அவர் சொல்லும் இன வெறியர்களில் இலங்கை அரசினர் உண்டா? இல்லையா? உண்டு என்றால் அது

படிப்பகம்

www.padippakam.com



அரச பயங்கரவாதம் அல்லவா? 'இலங்கை' அரசு தமிழர்களுக் கெதிராக இனப்படுகொலையிலும் அரச பயங்கரவாதத்திலும் ஈடுபட்டிருந்தால் அதனைச் சிங்களப் பேரினவாத அரசு என்று வரையறுப்பீர்களா?

இன ஒடுக்குமுறை என்ற அடிப்படையே இல்லாமல் இனப்படுகொலை நிகழ்ந்தது என்றால் அது வெறும் விபத்தா? 1983 இனப் படுகொலை தற்செயலே என்று வைத்துக் கொண்டாலும், அந்தத் தற்செயல் எந்தத் தேவையின் (அவசியத்தின்) வெளிப்பாடு. தேவையும் தற்செயலுமாகிய மார்க்சியக் கருத்தினங்கள் உ.ரா.வக்குத் தெரியாமலிருக்காது.

1983 இனப் படுகொலை என்பது வரலாற்றில் திடீரென்று வந்து குதித்த நிகழ்வன்று. இதைப் புரிந்து கொண்டால், அதன் வேர்கள் தமிழர்கள் மீதான சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையில் பொதிந்திருப்பதை விளங்கிக் கொள்ளலாம். அப்போது ஒன்று தெளிவாகி விடும்: உ.ரா.வ. வகையறா 'தமிழர் பிரச்சனை' என்று மூடுமந்திரமாய்க் குறிப்பிடுவது தேசிய இனச் சிக்கலைத்தான். இந்த வரையறைக்கு வந்து விட்டால், அதாவது தேசிய இனச் சிக்கலைத் தேசிய இனச் சிக்கலாகவே அறிந்தேற்றால், அதற்குரிய தீர்வு சொல்ல வேண்டும்.

ஈழத் தமிழர்கள் ஒரு தேசிய இனம், தமிழீழம் ஒரு தேசம், அது சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு ஆளாகியிருக்கிறது, அந்த ஒடுக்குமுறைக்கு எதிராகத் தன்தீர்வுரிமைக் (சுயநிர்ணய உரிமை) கொள்கையின்படி தேசிய விடுதலைக்காக அது போராடிக் கொண்டிருக்கிறது என்ற தெளிவான எளிய உண்மைகளை 'தமிழர் பிரச்சனை' என்ற போர்வைக்குள் மறைக்கவே உ.ரா.வ. முயல்கிறார்.

வரலாற்று வழிவந்த எந்தச் சிக்கலை ஆய்ந்தாலும் வரலாற்றினைப் பின்னோக்கிச் சென்று பார்க்கத்தான் வேண்டும். எதுவரை செல்வது வசதியோ, அதுவரை சென்றால் போதாது. எதுவரை சென்றால் சிக்கலின் வேர்காண முடியுமோ அதுவரை சென்றாக வேண்டும். உ.ரா.வ.வின் வரலாற்றுப் பயணம் 1983இல் நின்று விடுகிறது. அதற்குப் பின்னால் போவது அவருக்கும் அவரது கட்சியின் குதர்க்க நிலைப்பாட்டுக்கும் வசதியாய் இருக்காது என்பதே காரணம்.

தோழர் உ.ரா. வரதராசன் சொல்கிறார் :

*"ஒரு பக்கம் இலங்கை அரசும், மறு பக்கம் விடுதலைப் புலிகள் இயக்கமும் நேருக்கு நேர் இராணுவ மோதல்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளது, இலங்கைத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதைச் சிக்கலாக்கியுள்ளது."*

இங்கேயும், இலங்கைத் 'தமிழர் பிரச்சனை' என்றால் என்ன? என்பதற்கு உ.ரா.வ. விளக்கமளிக்கவில்லை எனினும், இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமான மோதல்தான் பிரச்சனை என்று

படிப்பகம்

www.padippakam.com



அவர் சொல்ல முற்படவில்லை. இராணுவ மோதல்கள் பிரச்சனையைச் சிக்கலாக்கியுள்ளன என்பதுதான் அவரது வருத்தம். ஆகவே இராணுவ மோதல் வேறு, பிரச்சனை வேறு. எது முதலில் வந்தது? எது பிறகு வந்தது? பிரச்சனைதான் முதலில் வந்தது, அதன் விளைவாகத்தான் மோதல் வந்தது என்பதை உ.ரா.வ. ஏற்றுக் கொள்வார். உ.ரா.வ. இராணுவ மோதல்கள் என்று சொல்வது ஏறத்தாழ 25 ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரைத்தான். கால் நூற்றாண்டு காலமாய்த் தொடரும் போருக்கு இட்டுச் சென்ற அந்தப் 'பிரச்சனை' என்ன? தெளிவாகச் சொல்லுங்கள், உ.ரா.வ!

சென்ற சூன் 7ஆம் நாள் கொழும்பிலிருந்து தமிழர்களை வெளியேற்றும் நடவடிக்கையில் சிங்கள அரசு ஈடுபட்டது. இதைக் கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் இராமதாசு அளித்த பேட்டியில் கூறியதற்கு உ.ரா.வ. எதிர்ப்புத் தெரிவிக்கிறார். மருத்துவர் கூறியதாவது :

*'தனி ஈழம்தான் இப்பிரச்சனைக்குத் தீர்வு.'*

*'இலங்கையின் இறையாண்மையைப் பற்றிக் கவலைப்படும் கட்சிகள் இதைப் பற்றிச் சிந்தித்துக் குரல் கொடுக்க முன்வர வேண்டும்.'*

உ.ரா.வ.வையும் அவரது கட்சியையும் இக்கருத்து குத்துவதில் வியப்பில்லை. ஏனென்றால் தேசிய இனங்களின் தன்தீர்வு உரிமை பற்றிய லெனினியக் கொள்கையைக் காட்டிலும் இவர்களுக்கு இலங்கையின் இறையாண்மைதான் புனிதமானது. தமிழன் வாழ்ந்தால் என்ன, செத்தால் என்ன, இலங்கையின் இறையாண்மை யில் ஒரு கீறல்கூட விழுந்து விடக் கூடாது என்பதே இவர்களின் கவலையெல்லாம்.

மருத்துவர் இராமதாசுக்கு மறுப்புரைக்கும் போதாவது 'தமிழர் பிரச்சனை' என்ற மூடுமந்திரத்தை உ.ரா.வ. விடுவிக்கிறாரா? என்றால் இல்லை. பிரச்சனை, பிரச்சனை என்று ஆலாபனை செய்கிறாரே தவிர, என்ன பிரச்சனை என்பதை மட்டும் சொல்ல மறுக்கிறார். இலங்கைத் 'தமிழர் பிரச்சனையில்' தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் எடுத்து வந்துள்ள நிலைப்பாடுகளை மூன்றாக வகைப்படுத்தி, முதலில் சிபிஎம் கட்சியின் நிலைப்பாட்டை எடுத்துரைக்கிறார்:

*"இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி தொடர்ந்து உறுதியாக எடுத்து வந்துள்ள நிலைப்பாடு, இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு என்பது சாத்தியமல்ல; அரசியல் தீர்வு காண்பதே சாலச் சிறந்தது. ஒன்றுபட்ட இலங்கைக்கு உள்ளிட்டு, வடக்கு-கிழக்கு மாகாணங்களின் தமிழர் பகுதிகளுக்குப் பரவலான சுயாட்சி அதிகாரம் வழங்கப்படுவதை உத்தரவாதம் செய்யும் வகையில் அந்த அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே அந்த நிலைப்பாடு."*

தீர்வு என்னவாக இருக்க வேண்டும்? எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? அதனை எவ்வழியில் காண வேண்டும்? என்பதையெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



வரிசையாகச் சொல்லி, 'இது எங்கள் உறுதியான நிலைப்பாடு' என்று மார்தட்டும் உ.ரா.வ. எவ்வகைப் பிரச்சனைக்கான தீர்வு இது என்பதை மட்டும் சொல்லவில்லை.

தோழர் உ.ரா.வ. அவர்களே! 'தமிழர் பிரச்சனை' என்கிறீர்களே, அது என்ன பிரச்சனை? வர்க்கப் பிரச்சனையா? தொழிற்சங்கப் பிரச்சனையா? தேர்தல் கூட்டணிப் பிரச்சனையா? கூட்டுறவுச் சங்கப் பிரச்சனையா? கள்ள வாக்குப் பிரச்சனையா? தெரு விளக்குப் பிரச்சனையா? கொசுக்கடிப் பிரச்சனையா? நிலப்பட்டா பிரச்சனையா? சந்தா பிரச்சனையா? லெவிப் பிரச்சனையா?

தமிழர் பிரச்சனை என்பது தேசிய இனப் பிரச்சனைதான் என்றால் அதை உடைத்துச் சொல்லுங்கள். இல்லை என்றால் வேறு என்ன பிரச்சனை என்பதை எங்களுக்கு விளங்குகிற முறையில் சொல்லுங்கள்.

மருத்துவத்தின் முதற்படி நோய் நாட்டம் (நோய் இன்னதென்று கண்டறிவது). நோய் நாட்டமே இல்லாமல் நோய் நீக்கத்துக்கு வழி தேடுவது நல்ல மருத்துவம் ஆகாது. மார்க்சியக் கட்சி என்று பெயர் வைத்துக் கொண்டு அறிவியலுக்குப் புறம்பான அரசியல் மருத்துவத்தில் ஈடுபடுகிறீர்களே, இது கள்ள மருத்துவத்துக்கு நிகரான குற்றமல்லவா?

சிபிஎம் கட்சியின் உறுதியான நிலைப்பாட்டுக்கு உ.ரா.வ. வரலாற்றுச் சான்று தருகிறார்: 1983 இனப் படுகொலையைத் தொடர்ந்து அன்றைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். தலைமையில் அனைத்துக் கட்சிக் குழு தில்லி சென்றது. அந்தக் குழு பிரதமர் இந்திரா காந்தியிடம் ஒரு கோரிக்கை வைத்தது. இந்திய அரசு தன் படைகளை அனுப்பி, தமிழ் ஈழம் தனிநாடாக உருவாவதற்கு உதவ வேண்டும்; அது ஒன்றே இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு இறுதித் தீர்வு பயக்கும் என்பதே அந்தக் கோரிக்கை!

தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் இந்தக் கோரிக்கைக்கு இசைவு தெரிவித்தபோது, மார்க்சிஸ்ட் கட்சி மட்டுமே அதற்கு மாறுபாடான நிலை எடுத்தது என்று மார்தட்டுகிறார் உ.ரா.வ. மார்க்சிஸ்டுக் கட்சியின் மூத்த தலைவர் பி. ராமமூர்த்தி தனியாகப் பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்து, இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவது விவேகமான நடவடிக்கை ஆகாது; அது சர்வதேச அரங்கில் பாததூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று எடுத்துரைத்தாராம்.

உ.ரா.வ. பெருமிதத்துடன் எழுதுகிறார்:

*"ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுக் காலம் கடந்த பின்னரும், மார்க்சிஸ்ட் கட்சியின் இந்த நிலைபாடு மாற்றமின்றித் தொடர்கிறது."*

1983 - 2007. இந்த 25 ஆண்டுகளில் சிபிஎம் நிலைப்பாடு மாறவே இல்லையாம். 1983இல் இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பக் கூடாது என்று தனியாக வலியுறுத்திய கட்சி, 1987இல் ராசீவ் -

படிப்பகம்

www.padippakam.com



செயவர்த்தனா உடன்படிக்கைப்படி இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டதை ஆதரித்ததே எப்படி? இந்திய இராணுவம் தமிழ் ஈழத்தின் மீது படையெடுத்து அங்கு நிகழ்த்திய கொடுமைகளை நியாயப்படுத்தியதே, ஏன்?

1983க்கும் 2007க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் 1987 முதலான ஆண்டுகளை மறந்துவிட்டாரா உ.ரா.வ? அவருக்குத் தெரிவு மறதி நோய் (Selective amnesia) இருக்குமோ?

1983இல் இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பக் கூடாதென்று வலியுறுத்திய சிபிஎம் 1987இல் தமிழீழத்தின் மீதான இந்தியப் படையெடுப்பை ஆதரித்தது ஏன்? இந்த வினாவிற்கு விடை சொல்லமாட்டார் உ.ரா.வ. விடை காணாமல் விடமாட்டோம் நாம். அந்த விடையில் தெரிய வரும் உ.ரா.வ. சொல்லும் 'தமிழர் பிரச்சனை' மூடுமந்திரத்தின் உண்மைப் பொருள்.

அஃதென்ன? ஆவணியில் பார்ப்போம்...

- தமிழ்த்தேசம், ஆடி 2007

படிப்பகம்

www.padippakam.com

# இன ஒடுக்குமுறையைக் காக்கவே ஈழ எதிர்ப்பு

ஏறத்தாழ 25 ஆண்டுகளாக 'இலங்கைத் தமிழர் பிரச்சனை' குறித்து சிபிஎம் கட்சியின் நிலைபாடு மாற்றமின்றித் தொடர்வதாக அக்கட்சியின் மையக் குழு உறுப்பினர் தோழர் உ.ரா. வரதராசன் தீக்கதிர் 2007 சூன் 22 இதழில் பெருமைப்படக் கண்டோம். கால் நூற்றாண்டுக் காலமாய் மாற்றமின்றித் தொடரும் அந்த உறுதியான(?) நிலைபாட்டின் கூறுகளை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்வோம்:

1. இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பக் கூடாது, 2. இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாண இந்தியா ஆக்கப்பூர்வமான ராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

1983 முதல் இந்த 2007ஆம் ஆண்டு முடிய இதுதான் சிபிஎம் கட்சியின் மாற்றமில்லாத நிலைப்பாடு என்கிறார் உ.ரா.வ. அப்படியானால் 1987இல் இராசீவ் காந்தியும் செயவர்த்தனாவும் செய்து கொண்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையின்படி அமைதிக் காப்புப் படை (IPKF) என்ற பெயரில் இந்திய இராணுவம் இலங்கைக்குச் சென்றதை சிபிஎம் கட்சி ஆதரித்தது ஏன்? 'மாற்றமில்லாத' நிலைபாட்டில் இப்படி ஒரு மாற்றம் செய்ததற்கு உ.ரா.வ. விளக்கம் தருவாரா?

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண இந்தியா ஆக்கப்பூர்வ முயற்சிகள் செய்ய வேண்டும் என்பதும் சிபிஎம் கட்சியின் மாற்றமில்லாத நிலைபாடாம்! அப்படியானால் 1987 உடன்படிக்கையின்படி அமைதிக் காப்புப் படை என்ற பெயரில் இந்திய இராணுவம் இலங்கைக்குச் சென்றது அரசியல் தீர்வுக்காகவா, இராணுவத் தீர்வுக்காகவா? இந்திய - இலங்கை உடன்படிக்கையையும், அதன்படி இந்தியப் படை இலங்கைக்குச் சென்றதையும், அது அங்கு நடத்திய போரையும் சிபிஎம் ஆதரித்தது ஏன்?

ஏறத்தாழ இலட்சம் படையினர் தமிழீழத்தின் மீது படையெடுத்ததுதான் அரசியல் தீர்வுக்கான முயற்சியா? ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்ததுதான் ராஜ தந்திரமா? நூற்றுக்கணக்கான தமிழச்சிகளைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதுதான் ஆக்கப்பூர்வ நடவடிக்கையா?

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் தீர்வு காண வேண்டும் என்று இதோபதேசம் செய்து கொண்டிருந்த சிபிஎம் கட்சி இராணுவத் தீர்வு காண்பதற்காக இராசீவ் காந்தி படை அனுப்பிய போது கண்டித்திருக்க வேண்டுமல்லவா? கண்டிக்கவில்லை என்பது மட்டுமல்ல, ஆதரித்து நியாயப்படுத்தியதே, என்ன காரணம்?

இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது : அரசியல் தீர்வா, இராணுவத் தீர்வா? என்பதைக் காட்டிலும், இந்திய ஆளும் வர்க்கத்திற்கு ஏற்ற தீர்வா, இல்லையா? என்பதே சிபிஎம்மின் முதற்கவலை. இந்திய வல்லாதிக்க அரசு அரசியல் தீர்வை முன்வைத்தால் சிபிஎம் அதை ஆதரிக்கும். இராணுவத் தீர்வை முன்வைத்தால் அதையும் ஆதரிக்கும். காற்று வீசுவதற்கேற்ப பறக்கிற பட்டம் தன் கட்டளைப்படியே காற்று வீசுவதாகக் கற்பனை செய்து கொண்டால் எப்படி இருக்குமோ, அதேபோலத்தான் சிபிஎம் கட்சியும் தன் கொள்கைப்படியே இந்திய அரசு செயல்படுவதாகக் கற்பனை செய்து பெருமைப்பட்டுக் கொள்கிறது.

கொள்கையளவிலும் நடைமுறையளவிலும் சிபிஎம் வரிந்து கட்டிக் கொண்டு ஆதரித்த இந்திய - இலங்கை - உடன்படிக்கை (1987) என்னாயிற்று? இலங்கையின் இரு தேசிய இனங்களான சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மறுதலித்துவிட்ட இந்த உடன்படிக்கையை ஆதரித்தமைக்காக சிபிஎம் என்றைக்காவது வருத்தப்பட்டதுண்டா?

இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை மார்க்சிஸ்டுக் கட்சி தொடர்ந்து கண்டித்து வந்திருப்பதாக உ.ரா.வ. சொல்வதை நம்பி ஏற்றுக் கொள்வோம். ஆனால் தமிழீழத்தில் இந்தியப் படை அமைதி காப்பதன் பெயரால் நிகழ்த்திய கொடுமைகளை எதிர்த்து சிபிஎம் தலைமை முணுமுணுத்ததாவது உண்டா? இந்திய இராணுவம் ஈழத் தமிழர்கள் மீது நடத்திய போர் குறித்த செய்திகள் ஏதும் உ.ரா.வ.வுக்குத் தெரியாதா? சிங்களக் கட்சிகளும் ஏடுகளும்கூட இந்தியப் படை செய்த கொடுமைகளை ஓரளவாவது வெளிப்படுத்தியிருக்க, இவற்றை முழுமையாக மூடி மறைத்து இந்திய ஆளும் வர்க்கத்தின் ஊதுகுழலாக செயல்பட்ட ஏடு 'தீக்கதிர்' ஒன்றே.

இந்திய இராணுவம் எந்தத் தவறும் செய்யவில்லை, அது அமைதிக் காப்புப் பணியை அடக்க ஒடுக்கமாகச் செய்தது என்று நம்மை நம்பச் சொல்கிறாரா உ.ரா.வ.? இந்தியப் படை மீது சிபிஎம் கட்சிக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்குமானால், தெலங்கானா, புன்னப்பரா-வயலார் போன்ற போராட்ட வரலாறுகளைப் பொய்யென்று அழித்து விட வேண்டியதுதான்! அவ்வளவு ஏன், மேற்கு வங்கத்தில் இந்திரா காந்தி ஏவிய அரைப்பாசிச ஆட்சியின் கொடுமைகளையும் திரிபுராவில் இந்திய இராணுவம் செய்த அட்டூழியங்களையும் மறந்து விட வேண்டியதுதான்! அன்றைக்கு ஈழத்தில், இன்றைக்கும் காசுமீரில் இந்தியப் படையின் கொலை பாதகங்களை மூடி மறைத்துச் சப்பை கட்டும் வேலையைத்தானே சிபிஎம் சிரமேற் கொண்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



மதிமுக, பாமக, திராவிடர் கழகம், தமிழர் தேசிய இயக்கம் (இந்தப் பெயரை தமிழ்த் தேசிய காங்கிரஸ் என்று உ.ரா.வ. தவறாகச் சொல்கிறார்) இவையன்றி பல்வேறு நக்சலைட் குழுக்களும், முழுக்க முழுக்க விடுதலைப் புலிகளை ஆதரித்து 'தனித் தமிழீழம்' என்ற நிலைப்பாட்டை எடுத்து வருவதாக உ.ரா.வ. சுட்டிக் காட்டுகிறார்.

இந்த அமைப்புகளின் நிலைப்பாடு குறித்து அவர் சொல்கிறார் :

**"இவர்கள், இலங்கைத் தமிழர்கள் என்றால் அது விடுதலைப் புலிகள் மட்டுமே என்று கருதுகின்றனர். இது யதார்த்த நிலையல்ல. இலங்கையில் தனி ஈழம் கோருகிற அமைப்புகள் பலவும் உண்டு; விடுதலைப் புலிகள் மட்டுமேயல்ல. இலங்கைத் தமிழ் மக்களில் ஒரு கணிசமான பகுதியினராக உள்ள இஸ்லாமிய மக்கள், விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிப்பவர்கள் அல்ல. இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அன்றி, தெற்கேயும், பிற பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் ஏகப்பிரதிநிதி நாங்கள் மட்டுமே என்று விடுதலைப் புலிகள் உரிமை பாராட்டுவதும், மற்ற இயக்கங்களுக்கு எதிராகக் கொலைவெறித் தாக்குதலைத் தொடுப்பதும் மார்க்சிஸ்ட் கட்சிக்கு ஏற்புடையதல்ல."**

தமிழீழ மக்கள் மீதான தேசிய ஒடுக்குமுறைக்குத் தமிழீழ விடுதலைதான் ஒரே தீர்வு என நாம் உறுதியாக நம்புகிறோம். இந்த விடுதலைக்கான போராட்டத்தில் தமிழீழ மக்களை வழிநடத்தும் இயக்கம் என்ற வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளை நாம் உறுதியாக ஆதரிக்கிறோம். ஆனால் நாமும் சரி, இதே நிலைப்பாடு கொண்டுள்ள மற்றவர்களும் சரி, உ.ரா.வ. சொல்வது போல் இலங்கைத் தமிழர்கள் என்றால் அது விடுதலைப் புலிகள் மட்டுமே என்று கருதவில்லை. இலங்கைத் தமிழர்கள் என்றால் அது விடுதலைப் புலிகள் மட்டுமே என்று யார் கூறினாலும் அது முட்டாள்தனமே. இந்த முட்டாள்தனத்துக்குச் சொந்தக்காரர்கள் யார் என்பதை உ.ரா.வ. அவர்களே தக்க சான்றுடன் எடுத்துக்காட்டட்டும். இலங்கையில் தனி ஈழம் கோருகிற அமைப்புகள் பலவும் உண்டு என்கிறார் உ.ரா.வ. ஆனால் விடுதலைப் புலிகள் தவிர ஓரமைப்பின் பெயரைக்கூட அவர் குறிப்பிடவில்லை. தனி ஈழம் கோரும் அமைப்புகள் பல இருந்தன என்பது உண்மை. அவற்றில் பெரும்பாலானவை சிங்கள, இந்திய ஆளும் வர்க்கச் சூழ்ச்சிகளுக்கு இரையாகித் திசைமாறி வழிதவறிப் போய் விட்டன என்பதும் உண்மை.

இலங்கைத் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரான இஸ்லாமிய மக்கள் புலிகள் இயக்கத்தை ஆதரிப்பவர்கள் அல்ல என்கிறார் உ.ரா.வ. பிற தமிழ் மக்களிடம் காணப்படும் அதே அளவில் இஸ்லாமிய மக்களிடம் புலிகளுக்கு ஆதரவு காணப்படவில்லை என்று கருதி அவர் இப்படிச் சொல்லியிருக்கலாம். கேரளத்தில் பிற மலையாளிகளிடம் காணப்படும் அதே அளவில் இஸ்லாமிய மலையாளிகளிடம் சிபிஎம் கட்சிக்கு ஆதரவு காணப்படவில்லை என்பதை உ.ரா.வ. மறுக்க மாட்டார். இதை

படிப்பகம்

www.padippakam.com



மட்டும் வைத்து கேரளத்தில் இஸ்லாமியர் சார்பில் சிபிஎம் பேச முடியாது என்று சொல்லி விடமுடியுமா? தமிழீழத்தில் தமிழ் முஸ்லீம்களுக்குள்ள தனித்துவமான நிலைமைகளையும், அவற்றிலிருந்து எழும் தனிக் கோரிக்கைகளையும் விடுதலைப் புலிகள் இயக்கம் அறிந்தேற்றுள்ளது என்பதும், இவற்றின் தீர்வுக்கான திட்டங்களை முன்வைத்துள்ளது என்பதும் உ.ரா.வரதராசனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தெரியாவிட்டால் இனியாவது தெரிந்து கொள்ளட்டும். தெரிந்து கொண்டு எழுதட்டும்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அன்றி, தெற்கேயும் பிற பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஏகப் பிரதிநிதி நாங்கள் மட்டுமே என்று விடுதலைப் புலிகள் உரிமை பாராட்டுவதாக ஒரு புதிய கண்டுபிடிப்பையே வெளியிட்டிருக்கிறார் உ.ரா.வ. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழத்தின் எல்லைகளைத் தெளிவாக வரையறுத்துள்ளது. இந்த வரையறையில் இலங்கையின் தெற்குப் பகுதிக்கோ மையப் பகுதிக்கோ இடமே இல்லை.

வடக்கு - கிழக்கு அல்லாத பிற பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கும் நாங்கள் மட்டுமே பிரதிநிதிகளென்று விடுதலைப் புலிகள் ஒருபோதும் உரிமை கொண்டாடியதில்லை. ஈழப் போராளிக் குழுக்களில் சில இலங்கையில் தமிழர் வாழும் மைய மாகாணம் போன்ற சில பகுதிகளையும் தமிழீழத்தில் சேர்க்க வேண்டும் என்ற கருத்தை முன்மொழிந்தபோது அதை உறுதியாக மறுதலித்து விட்டவர்கள்தாம் புலிகள்.

விடுதலைப் புலிகளே தமிழீழத்தின் பிரதிநிதி என்று சொல்வதன் பொருள் என்ன? தமிழர்கள் எல்லாரும் விடுதலைப் புலிகள் என்பதோ, அவர்களிடையே வேறு அமைப்பைச் சார்ந்தவர்களே இல்லை என்பதோ அல்ல. ஈழத் தமிழர்கள் நூற்றுக்கு நூறு புலிகளை ஆதரிக்கிறார்கள் என்று நாம் சொல்லவில்லை. மற்றத் தமிழ்க் குழுக்களை மட்டுமல்ல, சிங்களப் பேரினவாதக் கட்சிகளை ஆதரிக்கக் கூடிய சிலரும்கூட தமிழ் மக்களிடையே இருக்கலாம்தான். அப்படியானால், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் பிரதிநிதி என்று சொல்வதன் பொருள் என்ன? வரலாற்று வழியில் உருப்பெற்று வலுப்பெற்ற தமிழீழ மக்களின் தேசியக் கோரிக்கைக்காகத் தொடர்ந்து உறுதியாகப் போராடி அவர்களை அணிதிரட்டி, அவர்கள் சார்பில் பேசவும் செயல்படவும் உரிமை பெற்றிருப்பவர்கள் புலிகளே என்பதுதான் அது.

தனித் தமிழீழம் என்ற கோரிக்கையை புலிகளே இட்டுக்கட்டிப் புனைந்தது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த உ.ரா.வ. போன்றவர்கள் செய்யும் முயற்சி பலிக்காது. அது தமிழீழ மக்களின் வரலாற்றுக் கோரிக்கை என்ற உண்மையை வரதராசன்களின் தூவல் மையால் அழித்துவிட முடியாது. *1948* சுதந்திரம் என்ற பெயரிலான அரசியல் அதிகாரக் கைமாற்றத்திலிருந்து உருவான சிங்கள அரசுக்கு எதிராகத் தமிழ் மக்கள் தொடுத்த உரிமைப் போராட்டம் தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சியால் வழிநடத்தப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



இணக்கத்திற்கான எல்லா முயற்சிகளும் முறியடிக்கப்பட்ட நிலையில் 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் வாயிலாகத் தனித் தமிழீழக் கோரிக்கை பிறந்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உருவாயிற்று. இந்த வரலாற்றை உ.ரா.வ. திரும்பிப் பார்க்கட்டும்.

1977 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழீழ மக்கள் தனித் தமிழீழ கோரிக்கைக்கு வழங்கிய சனநாயகக் கட்டளையை நிறைவேற்றத் தான் விடுதலைப் புலிகள் இன்றளவும் களமாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சனநாயகக் கட்டளையை நிறைவேற்றத்தான் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் இளம் பெண்களும் மண்ணிற் சாய்ந்து மாவீரர்களாகி யிருக்கிறார்கள் என்பதை எல்லாம் மார்க்சியக் கட்சி அணிகள் தெரிந்து கொள்ளட்டும்.

"அரசியல் தீர்வுக்குப் பேச்சுவார்த்தை மூலம் விரைவாக முயற்சி மேற்கொள்ள" இருதரப்பினரையும் வலியுறுத்த வேண்டும் என்கிறார் உ.ரா.வ.

அது என்ன அரசியல் தீர்வு? தமிழீழ மக்களின் கூட்டு விருப்பம் என்ன என்பது 1977 தேர்தலில் வாக்குப்பெட்டி மூலமாக வெளிப்படுத்தப்பட்டது போலவே, 1985 திம்பு பேச்சுவார்த்தை மூலமாகவும் உறுதிசெய்யப்பட்டது. இந்தப் பேச்சு வார்த்தையில் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE), ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி (EPRLF), ஈழப்புரட்சி அமைப்பு (EROS), தமிழீழ விடுதலை அமைப்பு (TELO), தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (PLOTE), தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (TULF) ஆகிய எல்லா அமைப்புகளும் சேர்ந்து நான்கு அடிப்படைக் கொள்கைகளை முன்வைத்தன :

1. தமிழீழ மக்கள் ஒரு தனித் தேசிய இனம் ஆவர்.
2. இலங்கைத் தீவின் வடக்கும் கிழக்கும் சேர்ந்த பகுதி தமிழீழத் தேசிய இன மக்களின் வரலாற்றுத் தாயகமாகும்.
3. தமிழீழத் தேசிய இனம் தன் தாயகத்தின் வாழ்வைத் தீர்வு செய்யும் தன்தீர்வுரிமை சுயநிர்ணய உரிமை உடையதாகும்.
4. இலங்கை முழுவதிலும் வாழக்கூடிய தமிழர்கள் எல்லா வகையிலும் மற்றவர்களோடு சமஉரிமை படைத்தவர்கள்.

இந்த நான்கு அடிப்படைக் கொள்கைகளும் புலிகளுக்கு மட்டும் சொந்தமானவையல்ல. இவை தமிழீழ மக்கள் அனைவருக்கும் உரியவை. அரசியல் தீர்வு என்பதாக ஒன்று காணப்பட வேண்டுமானால், அது இந்த நான்கு அடிப்படைக் கொள்கைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். எப்படியும் அந்தத் தீர்வு இந்தக் கொள்கைகளுக்குப் புறம்பானதாய் இருக்கக் கூடாது. அரசியல் தீர்வு, அரசியல் தீர்வு, அரசியல் தீர்வு... என்று மூச்சு விடாமல் முழக்கமிடும் உ.ரா.வ. இந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறாரா? அவரது கட்சி இந்தக் கொள்கைகள் குறித்து என்ன சொல்கிறது? ஏற்றுக் கொள்கிறதா, அல்லது மறுதலிக்கிறதா? இந்தக் கொள்கைகள் சரியெனக் கருதுகிறதா,

படிப்பகம்

www.padippakam.com



பிழையெனக் கருதுகிறதா? எதுவானாலும் தெளிவாகச் சொல்லி வாதம் புரியட்டும்.

திம்புவில் அனைத்துத் தமிழீழ மக்கள் சார்பிலும் முன்வைக்கப்பட்ட நான்கு அடிப்படைக் கொள்கைகள் சரி என்றால், அவற்றின் அடிப்படையில் அரசியல் தீர்வு காணும்படி வலியுறுத்த வேண்டும். அவை தவறானவை என்றால், எவை சரியான கொள்கைகள் என்று சொல்லி, அவற்றின் அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்த வேண்டும். கொள்கை எல்லாம் வேண்டாம், ஏதோ ஒரு தீர்வு, எப்படியோ கண்டால் சரி என்ற போக்கு மார்க்சியர்களுக்கு அழகன்று.

எல்லா அமைப்புகளும் சேர்ந்து தமிழீழ மக்கள் சார்பில் வெளிப்படையாக ஏற்றுக் கொண்ட திம்பு கொள்கைகளிலிருந்து ஒருசில அமைப்புகள் பின்வாங்குமானால், இந்தக் கொள்கைகளுக்குப் புறம்பான ஒரு தீர்வைத் திணிக்கும் இந்திய - சிங்கள முயற்சிக்குத் துணை போகுமானால், இந்தக் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்காகப் போராடுகிறவர்களைக் காட்டிக் கொடுக்குமானால் அது இரண்டகமா இல்லையா? சொல்லுங்கள் உ.ரா.வ.!

புலிகள் மற்ற இயக்கங்களுக்கு எதிராகக் கொலைவெறித் தாக்குதல் தொடுக்கிறார்களாம்! இந்திய - சிங்கள ஆட்சியாளர்களின் அவதூறு வாந்தியை வழித்துத் தின்று மறு வாந்தி எடுக்கிறார் உ.ரா.வ.! மற்ற இயக்கத்தவர்கள் புலிகள் மீது தொடுத்த கொலைவெறித் தாக்குதல் எதைப் பற்றியும் உ.ரா.வ. கேள்விப்பட்டதே கிடையாதா? தொழிற்சங்க அரசியலிலும் தேர்தல் அரசியலிலும் கூட கொலைகள் நடப்பதுண்டுதான். இடதுசாரிக் கட்சிகளுக்கிடையிலேயே கொலைத் தாக்குதல் நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்ட வேண்டுமா? இப்படி இருக்க, ஆயுதப் போராட்ட அரசியலில் சில நேரம் சரியாகவும், சில நேரம் தவறாகவும் கொலைகள் நடப்பதை ஈழத்தில் மட்டுமல்ல, உலகெங்கும் பார்க்கத்தான் செய்கிறோம். இவற்றை நாம் நியாயப்படுத்த வேண்டாம். அதேபோது இவற்றை மட்டுமே முன்னிறுத்தி விடுதலை இயக்கங்களைக் கொச்சைப்படுத்தத் தேவையில்லை. முதிர்ச்சி பெற்ற ஓர் விடுதலை இயக்கமான ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸ் (ANC) இவ்வகைத் தவறுகள் செய்திருப்பதை நெல்சன் மண்டேலாவே ஏற்றுக் கொண்டிருப்பது உ.ரா.வ. வகையறாவுக்குத் தெரியுமா?

இன்றளவும் பாலத்தீனப் போராட்டக் களத்தில் நடந்து கொண்டிருக்கும் 'சகோதரக் கொலைகள்' கவலைக்குரியவையே. ஆனால் இவற்றைக் காரணமாய்க் காட்டி பாலத்தீன விடுதலையை மறுக்க ஒப்புவோமா?

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தோழர் வே. பாலகுமாரன் தலைமையிலான ஈரோஸ் அமைப்பு இணைந்து விட்டது, அவர் இன்று விடுதலைப் புலித் தலைவர்களில் ஒருவர் என்ற செய்தியே உ.ரா.வ.வுக்குத்

www.padippakam.com



தெரியாதா? தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, டெலோ, ஈபிஆர்எல்எப், அனைத்து இலங்கைத் தமிழ் காங்கிரஸ் முதலான அமைப்புகள் சேர்ந்ததுதான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (TNA). இந்தக் கூட்டமைப்புக்கு இலங்கை நாடாளுமன்றத்தில் 22 உறுப்பினர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமிழீழ மக்களின் ஒரே பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டிருப்பதும், புலிகள் முன் வைக்கும் தீர்வுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருவதும், இதனாலேயே ஜோசப் பரராஜசிங்கம் முதலானவர்கள் இரண்டகக் குழுக்களின் கொலைவெறித் தாக்குதலுக்கு ஆளானதும் உ.ரா.வ. வகையறாவுக்குத் தெரியாதா?

உ.ரா.வ. சொல்லும் அரசியல் தீர்வுதான் என்ன?

அவர் சொல்கிறார்:

**"ஒன்றுபட்ட இலங்கைக்கு உள்ளிட்டு, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழர் பகுதிகளுக்குப் பரவலான சுயாட்சி அதிகாரம் வழங்கப்படுவதை உத்திரவாதம் செய்யும் வகையில் அந்த அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும்."**

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பே இலங்கையின் அரசமைப்புச் சட்டப்படி செல்லாது என்று இலங்கையின் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் பொருளென்ன? **தமிழர் பகுதிகள்** என்று உ.ரா.வ. சொல்கிறார். இலங்கையின் எந்தப் பகுதியையும் மொழிவழிப் பெயரிட்டு அமைக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறி விட்டது. தமிழ் இலங்கையின் இரு தேசிய மொழிகளில் ஒன்றாய் இருப்பினும், தமிழ் மாகாணம், தமிழ் மாவட்டம், தமிழர் பகுதி என்று எதையும் இலங்கையின் அரசமைப்பு ஏற்றுக் கொள்ளாது. தமிழர் பகுதி என்பதையே ஏற்றுக் கொள்ளாத ஓர் அரசமைப்பில் தமிழர் பகுதிகளுக்கு சுயாட்சி அதிகாரம், அதுவும் பரவலான சுயாட்சி அதிகாரம் பெற்றுத் தரும் வித்தையைக் கற்றுக் கொடுப்பாரா உ.ரா.வ.?

அவ்வளவு ஏன், சிபிஎம்மின் சிங்களத் தோழமைக் கட்சியான ஜனத விமுக்தி பெரமுனாவை (JVP) தமிழர் பகுதி என்ற கருத்தாக்கத்தையாவது ஏற்றுக் கொள்ளும்படிச் செய்ய முடியுமா? அதிகாரம் என்றால் என்ன? சுயாட்சி அதிகாரம் என்றால் என்ன? பரவலான சுயாட்சி அதிகாரம் என்றால் என்ன? வரையறுத்துச் சொல்வாரா வரதராசன்?

சிபிஎம் தலையில் வைத்துக் கொண்டாடிய இந்திய - இலங்கை உடன்படிக்கையின்படி இந்தியப் படையின் பாதுகாப்பு வளையத்திற்குள் ஒரு மாகாண மன்றம் அமைக்கப்பட்டு வரதராசப் பெருமாள் முதலமைச்சர் ஆக்கப்பட்டாரே, அவர் வகித்த அதிகாரத்தைத்தான் பரவலான சுயாட்சி அதிகாரம் என்று சொல்கிறாரா உ.ரா.வ.? சிபிஎம் கட்சியின் இரகசிய விருப்பமெல்லாம் பிரபாகரனை வரதராசப்பெருமாளாக்கி, விடுதலைப் புலிகளை இந்திய

படிப்பகம்

www.padippakam.com



வல்லாதிக்கத்தின் பாதந்தாங்கிகளாக்கிவிட வேண்டும் என்பதே. இதைத்தான் அந்தக் கட்சி அரசியல் தீர்வென்று சொல்லி இனிப்புத் தடவி ஈடேற்ற முயல்கிறது.

விடுதலைப் புலிகள் இலங்கைத் தமிழர்களின் இளம் பிள்ளைகளை - பெண்களை வலுக் கட்டாயமாகத் தங்கள் படைப் பிரிவுகளில் சேர்த்துப் பயன்படுத்துகிறார்களாம்! விடுதலைப் புலிகளே இதை ஒப்புக் கொண்டு விட்டார்களாம்! இதைக் கருணா தலைமையிலான துரோகக் குழுவின் செயலோடு ஒப்பிட்டு மகிழ்கிறார் உ.ரா.வ.!

உலகின் எந்த நாட்டிலும், எந்தச் சூழலிலும் குழந்தைகளும் இளம்படியரும் படையில் சேர்க்கப்படுவதும் போரில் ஈடுபடுத்தப்படுவதும் விரும்பத்தக்கதல்ல. ஆனால் கொடிய அடக்குமுறையாளன் ஆண்கள் - பெண்கள், குழந்தைகள் - முதியோர் என்று சகட்டுமேனிக்கு அனைவரையும் தாக்கி அழிக்க முயலும் போது, அதற்கெதிராக அனைத்து மக்களும் ஆண், பெண் வேறுபாடும் வயது வேறுபாடும் கருதாமல் அணிதிரண்டு போராடக் கூடிய கட்டாயம் நேர்கிறது.

இப்படிப் பெண்களும் குழந்தைகளும்கூட போருக்குள் தள்ளப்படும் அவலத்திற்கான முதன்மைப் பொறுப்பு போரைத் திணித்த ஆதிக்க ஆற்றல்களைச் சாருமே தவிர விடுதலை இயக்கத்தைச் சாராது.

உரிய வயதடையாதவர்களும் போருக்குள் தள்ளப்படும் இந்தச் சூழல் ஈழத்திற்கு மட்டுமே உரியதன்று. தென்னாப்பிரிக்காவில் இதைப் பார்த்தோம். லெபனானிலும் பாலத்தீனத்திலும் உலகின் வேறு பல பகுதிகளிலும் இன்றும் இதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். இப்படிச் சொல்வது இந்தப் போக்கினை விளக்குவதற்குத்தானே தவிர நியாயப்படுத்துவதற்கன்று.

உ.ரா.வ. போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒன்றைச் சுட்டிக் காட்டலாம் : ஊர்வலங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் போராட்டங்களிலும் தாய்மார்கள் கைக்குழந்தையோடு கலந்து கொள்வதை ஏற்றுக் கொள்கிறீர்கள். பெருமையோடு அறிவித்துக் கொள்ளவும் செய்கிறீர்கள். இது குழந்தை உரிமை மீறலா, இல்லையா? மீறல்தான், ஆனால் இன்றைய சூழலில் இதைத் தவிர்க்க இயலவில்லை என்றுதான் உ.ரா.வ. பதிலளிப்பார்.

இன்று நேற்றல்ல, உலகின் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியாகிய பாரீஸ் கம்யூனிலேயே *(1871)* குழந்தைகள் ஆயுதமேந்திய வரலாறு உ.ரா.வ.வுக்குத் தெரியுமா? **பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இராணுவ வேலைத் திட்டம்** என்ற கட்டுரையில் லெனின் இவ்வாறு எழுதுகிறார்:

**"பாரீஸ் கம்யூனில் ஆண்களோடு கூட பெண்களும் பதின்ம வயதுக் குழந்தைகளும் (teen-age children) போர் புரிந்தார்கள். முதலாளி வர்க்கத்தைத் தூக்கி எறிவதற்காக வரவிருக்கும் போர்க் களங்களிலும் இதுவேதான் நிகழும்."** (V.I. Lenin, selected works, Vol. 1 P. 773)

படிப்பகம்

www.padippakam.com



ஆண் தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்தின் ஆயுதப் படைகளால் சுட்டு வீழ்த்தப்படும்போது பாட்டாளி வர்க்கப் பெண்கள் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று லெனின் இதற்கு விளக்கமளித்தார்.

வெறுங்கையர்களாய் நின்ற தங்கள் தாய் தந்தையரை சிங்களக் காடையரும் அரசப் படையினரும் கொடிய முறையில் கொன்று போட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த ஈழத்து இளம்படியரும் கையில் கருவி எடுத்தார்கள் - தங்கள் உயிரையும் தங்கள் தேசத்தின் மானத்தையும் காப்பதற்காக!

புலிகளைத் தாக்க எந்தத் தடியையும் எடுக்க உ.ரா.வ. தயங்கவில்லை. தமிழக மீனவர்களை விடுதலைப் புலிகள் தாக்கிக் கொலை செய்த நிகழ்வையும் மீனவர்களைப் படகோடு கடத்திச் சென்ற சம்பவத்தையும் நாம் கண்டுகொள்ள மறுக்கிறோமாம்!

இந்திய அரசின் உளவுத்துறை மீனவர்களை வைத்துச் சதி வலை பின்னியதை விளக்கி முன்பே விரிவாக எழுதியிருக்கிறோம் (**இந்திய - சிங்களச் சதிவலை அறுப்போம் - தமிழ்த் தேசம், 2007 வைகாசி**). ஆனால் வாதத்திற்காக இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மை என்றே வைத்துக் கொள்வோம். குற்றச்சாட்டுக்குரிய செயல்களை விடுதலைப் புலிகள் இயக்கம் திட்டமிட்டுச் செய்ததாகக் காவல்துறையே கூட சொல்லவில்லை. தற்செயலாக ஒரு சிறு குழுவினரின் ஒரு திடீர்த் தேவை கருதி இந்தச் செயல் நடைபெற்றது என்பதுதான் காவல்துறையே தந்துள்ள விளக்கம். தமிழக மீனவர்களைக் கடத்துவதாலோ சுட்டுக் கொல்வதாலோ விடுதலைப் புலிகளுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதை அனைவரும் அறிவோம். புலிகள் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளை மீனவ மக்களே நம்பவில்லை என்பதற்கு இதுதான் காரணம். இப்படி இருக்க அதே குற்றச் சாட்டுகளைத் திருப்பிச் சொல்லி புலிகளையும் சிங்களக் கடற்படையையும் சமப்படுத்திக் காட்ட முயல்கிறார் உ.ரா.வ.!

தமிழீழ மக்களின் துன்பதுயரங்களுக்குச் சிங்களப் பேரினவாத அரசே காரணம் என்ற உண்மையை மறைப்பதற்காகவே விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார் உ.ரா.வ.! ஒடுக்குமுறையாளனையும் ஒடுக்குமுறையிலிருந்து விடுதலைக்காகப் போராடுகிறவனையும் ஒரே தட்டில் நிறுத்தும் அதே பழைய தந்திரம்தான் இது.

உ.ரா.வ. எந்தக் குற்றச்சாட்டை மறுப்பதற்காக எழுத முற்பட்டாரோ அந்தக் குற்றச்சாட்டையே அவரது கட்டுரை மெய்ப்பிக்கிறது. அதாவது சிபிஎம் கட்சிக்குத் தமிழ் மக்களின் நலனைக் காட்டிலும் இலங்கையின் இறையாண்மையே பெரிது. ஏனென்றால் இந்த இறையாண்மையைக் காப்பதில் சிங்களப் பேரினவாதத்தின் நலனும் இந்திய பார்ப்பனியத்தின் நலனும் அடங்கியுள்ளன. ஆழ்ந்து பார்த்தால் விளங்கும்: அமெரிக்க வல்லாதிக்கத்தின் நலனும் இதில்தான் அடங்கியுள்ளது. தெற்கு

படிப்பகம்

www.padippakam.com



ஆசியாவில் கொழும்பு - தில்லி - வாஷிங்டன் ஆதிக்க அச்சினைத் தாங்கிப் பிடிப்பதுதான் சிபிஎம் நிலைப்பாட்டின் சாரம். இந்தச் சாரத்தை மறைக்கவே அரசியல் தீர்வு, அமைதித் தீர்வு என்றெல்லாம் பசப்புகிறார் உ.ரா.வ. தெற்காசியாவில் வல்லாதிக்க எதிர்ப்பின் ஈட்டி முனையாகத் திகழ்வது ஈழப் போராட்டம். அப்போராட்டத்துக்கு எதிராகத் தன்னை நிறுத்திக் கொள்வதன் மூலம் வல்லாதிக்கத்துக்குத் தொண்டு செய்கிறது சிபிஎம். உ.ரா.வ. கட்டுரை உணர்த்தும் செய்தி இதுவே.

- *தமிழ்த்தேசம், ஆவணி 2007*

படிப்பகம்

www.padippakam.com

# பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கு வீரவணக்கம்!

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தோழர் சு.ப. தமிழ்ச்செல்வன் சிங்கள வான்படைக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட செய்தி அதிர்ச்சியளிக்கிறது. அவரோடு மேலும் ஐந்து வீரர்களும் கொல்லப்பட்டு வீரச் சாவடைந்துள்ளனர்.

1984இல் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்த தமிழ்ச்செல்வன் இந்திய, சிங்களப் படைகளை எதிர்த்துக் களம் பல கண்டவர். தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நான்காவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றார். 1987 மே மாதம் யாழ்ப் பாணம் தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளராக அமர்த்தப்பட்டார். இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போரில் தென்மராட்சியில் நின்று தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

தமிழ்ச்செல்வன் மன்னார் கிலாபத் துறை இராணுவத் தளம் மீதான தாக்குதலுக்குத் தளபதி யாகச் செயல்பட்டார். பூநகரி படை முகாம் மீதான தாக்குதலின் போது காலிழந்தார். தென் மராட்சி மீட்பு நடவடிக்கையில் கட்டளைத் தளபதியாகப் பங்கு வகித்தார். 1992இல் 'பல்கேய-2' சமரில் சிங்களப் படைக்கு எதிரான சமர், தச்சன்காடு இராணுவ முகாம் மீதான தாக்குதல், காரை நகரில் சிங்களப்படை மீதான தாக்குதல் - இவற்றில் தமிழ்ச்செல்வனின் தலைமைப் பங்கு பெருமைக்குரியது.

1993இல் தமிழீழ அரசியல் துறைப் பொறுப் பாளராகப் பணியேற்று இறுதி வரை அப்பொறுப்பில் திறம்படச் செயல்பட்டு வந்தார். 1994-95இல் சந்திரிகா அரசுடன் நடந்த அமைதிப் பேச்சில் புலிகள் அணிக்குத் தலைமையேற்றார். 2002இல் நார்வே பேச்சுவார்த்தைக் குழுவில் அன்றன் பாலசிங்கத்துடன் சேர்ந்து பணியாற்றினரர். பாலசிங்கம் மறைந்த பின் தமிழ்ச்செல்வனே பேச்சுவார்த்தைக் குழுவின் தலைமையேற்றார்.

தோழர் தமிழ்ச்செல்வன் பேச்சுவார்த்தைக்கென வெளிநாடு செல்லும் போதும் வெளிநாட்டிலிருந்து வரும்போதும் பல முறை கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தைப் பயன்படுத்தியுள்ளார். அப்போது சிங்கள அரசு அவரை விமான நிலையத்தில் சுட்டுக் கொலை செய்திருந்தால் அது எவ்வளவு முறை கேடானதாய் இருந்திருக்குமோ, இப்போது கிளிநொச்சியின் மீது குண்டுவீசிக் கொலை செய்திருப்பதும் அதே அளவு முறைகேடானதே.

படிப்பகம்

www.padippakam.com



தற்செயலாகவோ குறிதவறியோ இந்தத் தாக்குதல் நடந்து விட்டதாகச் சிங்கள அரசு சொல்லவில்லை. "தமிழ்ச்செல்வனைக் கொன்றோம்! மற்றவர்களையும் ஒவ்வொருவராகத் தீர்த்துக் கட்டப் போகிறோம்!" என்று அது அறிவிக்கிறது. போர் நிறுத்தத்தை விலக்கிக் கொண்டதாக அறிவிக்காமலே அது போர் நடத்திக் கொண்டிருக்கிறது.

தமிழ்ச்செல்வன் கொல்லப்படுவதற்கு 10 நாள் முன்புதான் புலிகளின் தற்கொலைப்படையும் வான்படையும் சேர்ந்து அனுராதபுரம் சிங்கள வான்படைத் தளத்தைத் தாக்கி அழிப்பதில் வெற்றி கண்டன. அந்தத் தாக்குதல் முழுக்க முழுக்கப் படையிலக்கின் மீது நடத்தப்பட்டது. படைத்துறை சாராத யாருக்கும் ஒரு கீறல்கூட ஏற்படுத்தவில்லை. இதோடு கிளிநொச்சியை ஒப்பு நோக்கினால், சிங்களப் படையிலக்கு அல்லாத அமைதிச் செயலகத்தையும் மக்கள் குடியிருப்பையும் தாக்கியிருக்கக் காணலாம். அனுராதபுரம் தாக்குதல் புலிகளின் வீரத்தைப் பறைசாற்றியது என்றால், கிளிநொச்சிக் குண்டுவீச்சு சிங்கள அரசின் கோழைத்தனத்தை உலகறியச் செய்தது.

தமிழ்ச்செல்வன் தன் வீரச்சாவிலும் தமிழீழ மக்களுக்கு ஓர் அரசியல் வெற்றியைத் தேடித் தந்துள்ளார். ஆம்! தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஞாயத்தையும் சிங்களப் பேரினவாத அரசின் மிருகத்தனத்தையும் தமிழ்ச்செல்வன் தன் சாவினால் உலகறியச் செய்துள்ளார்.

தமிழ்ச்செல்வனின் வீரச்சாவு தமிழ்நாட்டில் தமிழீழ ஆதரவு உணர்வுகளை ஓங்கச் செய்துள்ளது. தமிழீழத்தின் இழிவான பகைவர்களையும் அது தமிழக மக்களிடையே தோலுரித்துக் காட்டி யுள்ளது.

இன்னொரு தமிழ்ச்செல்வன் நமக்குக் கிடைக்க மாட்டார் என்ற அளவில் அவரது இறப்பு ஈடு செய்ய முடியாத இழப்புதான். ஆனால் அளப்பரிய இழப்புகளைக் கடந்து விடுதலைப் பாட்டையில் இந்த அளவுக்கு முன்னேறி வந்துள்ள தமிழீழ மக்கள் - விடுதலைப் புலிகள் - தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் இந்த இழப்பையும் தாங்கி ஈடு செய்து முன்னேறுவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம். கடைசியாக ஜெனிவா சென்றபோது தோழர் தமிழ்ச்செல்வன் ஆற்றிய உரையை நாம் மறக்கவில்லை:

தமிழீழம் விடுதலையின் வாசலில் நிற்கிறது. ஆனால் வாசலிலேயே நீண்ட காலம் நின்று கொண்டிருக்க முடியாது. விரைவில் உள்ளே நுழைந்தாக வேண்டும்.

பிரிகேடியர் தமிழ்ச்செல்வனுக்கு வீரவணக்கம்!

லெப்டினண்ட் மாவைக்குமரன், மேஜர் கலையரசன், மேஜர் மிகுதன், லெப். கேணல் அலெக்ஸ், லெப்டினண்ட் ஆட்சிவேல், செல்லத்தம்பி ஆகியோருக்கு வீரவணக்கம்!

தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தின் வீரவணக்கம்!

- *தமிழ்த்தேசம், ஐப்பசி 2007*

படிப்பகம்

www.padippakam.com

# பொருந்தாத் தடையின் பூச்சாண்டி மிரட்டல்!

தமிழ்நாட்டில் தடைசெய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாகப் பேசுவது, இரங்கல் கூட்டம் நடத்துவது, பொதுக்கூட்டமோ அரங்கக் கூட்டமோ கருத்தரங்கமோ பட்டிமன்றமோ நடத்துவது, ஊர்வலம் போவது, சுவரொட்டி ஒட்டுவது, துண்டறிக்கை வெளியிடுவது... இவையெல்லாம் சட்டப்படிக் குற்றம் என்று தமிழகக் காவல்துறைத் தலைமை இயக்குநர் (டிஜிபி) இராஜேந்திரன் அறிவித்துள்ளார். (தினகரன், 27-11-2007)

கவியரங்கம் நடத்துவது, கவிதை எழுதி வெளியிடுவது பற்றி மட்டும் சொல்ல மறந்து விட்டார் தமிழகக் காவல்துறையின் தலைமை அதிகாரி. மறைந்த தமிழ்ச்செல்வனைப் போற்றித் தமிழக முதல்வர் கவிதை எழுதி சில நாள் கழித்தே காவல்துறை அதிகாரியின் அறிவிப்பு வந்துள்ளது. அறிவிப்பு வெளியான பிறகு கவிதை எழுதினால் அதுவும் குற்றமாகக் கருதப்படுமோ?

இந்த அறிவிப்பு வெளிவந்த பிறகு தமிழ்நாடெங்கும் தமிழீழ ஆதரவுக் கூட்டங்கள், ஊர்வலங்களுக்குக் காவல்துறை தடை விதித்துள்ளது. அது மட்டுமல்ல, வேறு நோக்கங்களுக்காக நடைபெற இருந்த பல நிகழ்ச்சிகளும்கூட காவல்துறையால் தடை செய்யப்பட்டுள்ளன. காட்டாக, திசம்பர் முதல் நாள் சென்னையில் சேதுக் கால்வாய்த் திட்டத்தை விளக்கி பெரியார் திராவிடர் கழகம் நடத்தவிருந்த பொதுக்கூட்டத்திற்கு முதலில் அனுமதி வழங்கிய காவல்துறை கடைசி நேரத்தில் அந்த அனுமதியை விலக்கிக் கொண்டது. இதற்குக் காவல்துறை அதிகாரி எழுத்து வடிவில் தந்திருந்த காரணம்: பொதுக்கூட்டத்தில் பேசவிருக்கும் சிலர் தடைசெய்யப்பட்ட அமைப்புப் பற்றிப் பேசவிருப்பதாக இரகசியத் தகவல் கிடைத்ததாம்.

திசம்பர் 2ஆம் நாள் தாம்பரத்தில் நடைபெறவிருந்த தோழர் நாத்திக நந்தனார் நினைவேந்தல் - படத்திறப்பு நிகழ்ச்சிக்கு நாம் அனுமதியே கேட்டிராதபோது, அனுமதி மறுத்து அன்று காலை காவல்துறை குறிப்பாணை கொடுத்து அனுப்பியது. அந்தக் குறிப்பாணையில் தாம்பரம் காவல்நிலைய ஆய்வாளர் அனுமதி மறுப்புக்குக் காட்டிய காரணம்: நிகழ்ச்சியில் பேச இருப்பவர்கள் தடைசெய்யப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



இயக்கத்தைப் பற்றிப் பேச இருப்பதாகக் காவல் துறைக்கு இரகசியத் தகவல் கிடைத்திருப்பதுதானாம்!

முடிவில், காவல்துறை உயர்அதிகாரிகளோடு போராடித் தடை நீக்கி நினைவேந்தலை நடத்தி முடித்தோம் என்றாலும், தடை செய்யப்பட்ட அமைப்பு பற்றியோ அதன் தலைவர்களைப் பற்றியோ பேசுவதில்லை என்ற நிபந்தனையை ஏற்று எழுதிக் கொடுத்த பிறகே நமக்கு வழிவிட்டார்கள் என்பது முகாமையான செய்தி.

காவல் துறையினரின் இந்த அணுகுமுறையில் கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், டிஜிபி அறிவிப்பில் தடைசெய்யப்பட்ட இயக்கத்தை ஆதரிப்பது குற்றமாகக் கருதப்பட்டது. ஆனால் நாத்திக நந்தனார் நினைவேந்தல் கூட்டத்தைத் தடை செய்யும் குறிப்பாணை தடைசெய்யப்பட்ட இயக்கம் பற்றிப் பேசுவதையே குற்றமாகக் கருதியது.

தடை செய்யப்பட்ட இயக்கத்தைப் பற்றிப் பேசுவதே குற்றம் என்றால், ஆதரித்தும் பேச முடியாது, எதிர்த்தும் பேச முடியாது என்று பொருள். ஒன்றை ஆதரித்துப் பேசுவதற்கும், அதைப் பற்றிப் பேசுவதற்கும் வேறுபாடு தெரியாத காவல்துறையினரின் அறிவுத்திறம் பற்றி என்ன சொல்வது?

தடை செய்யப்பட்ட இயக்கம் பற்றிப் பேசுவதே குற்றமென்றால், நாம் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசுவதும், செயலலிதா, சுப்பிரமணியசாமி, ஈவிகேஎஸ் இளங்கோவன் போன்றவர்கள் விடுதலைப்புலிகளை எதிர்த்துப் பேசுவதும் குற்றம், இரண்டுமே தடைமீறல்தான் என்றாகிறது. காவல் துறையினரின் இந்த முட்டாள்தனமான அணுகுமுறைக்கு என்ன காரணம்?

சட்டத்தின் ஆட்சி என்ற பார்வையே அவர்களிடம் இல்லாது போய் விட்டது. மேலிடம் சொன்னபடி செய்வது என்பதே அவர்களுக்குச் சட்டமாகிவிட்டது. காவலர் 'ஏட்டையா' உத்தரவு என்கிறார். ஏட்டையா இன்ஸ்பெக்டர் உத்தரவு என்கிறார். இன்ஸ்பெக்டர் துணை ஆணையர் அல்லது துணைக் கண்காணிப்பாளர் உத்தரவு என்கிறார். இவர்கள் ஆணையர் அல்லது கண்காணிப்பாளர் உத்தரவு என்கின்றனர். அவர்கள் தங்களுக்கு மேல் உள்ள தலைமை இயக்குநர் அல்லது டிஜிபி உத்தரவு என்கின்றனர். டிஜிபியோ முதலமைச்சர் சொற்படிச் செயல்படுகிறார். முதலமைச்சர் அவ்வப்போது தன் அரசியல் தேவைகளுக்கு ஏற்றபடி முடிவெடுத்து அந்த முடிவுக்குத் தோதாகக் காவல் துறையை ஆட்டுவிக்கிறார்.

முதலாவதாக, கீழிருந்து மேல்வரை காவல் துறை அதிகாரிகள் எவரும் சொந்த மூளையைப் பயன்படுத்தி முடிவெடுப்பதில்லை. இரண்டாவதாக, சட்டம் பற்றிய கவலையே அவர்களுக்கு இல்லை. காவல் துறை அதிகாரி ஒருவரிடம் யாராவது சட்டம் என்று பேசிப் பாருங்கள். அவர் ஆத்திரப்படவில்லை என்றால்தான் வியப்பு. காக்கிச் சட்டையின் அகரமுதலியில் சட்டம் ஒரு கெட்ட வார்த்தை. அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



மற்ற கெட்ட வார்த்தைகளைப் போலவே இதையும் நம்மிடம் உச்சரிப்பார்கள். ஆனால் நாம் சட்டம் பேசினால் மட்டும் சகித்துக்கொள்ள மாட்டார்கள்.

காவல்துறைத் தலைமை இயக்குநர் வெளியிட்ட அறிவிப்பில் சட்டம் பற்றிப் பேசுகிறார். தடை செய்யப்பட்ட அமைப்பிற்கு ஆதரவாகக் கூட்டம் நடத்துவது, சுவரொட்டி ஒட்டுவது இன்னபிற செயற்பாடுகள் **சட்டப்படிக் குற்றம்** என்று அந்த அறிவிப்புச் சொல்கிறது. சட்டப்படி என்றால் எந்தச் சட்டத்தின்படி? **சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின்படி!** Unlawful Activities (Prevention Act) (Act No. XXXVII of 1967) என்ற இந்தச் சட்டத்தைத் தமிழகக் காவல்துறை தலைமை இயக்குநர் ஒருமுறையாவது படித்ததுண்டா? அல்லது படிக்கக் கேட்டதுண்டா? அல்லது இந்தச் சட்டம் பற்றி சட்ட அறிஞர்களிடம் அறிவுரை கேட்டுப் பெற்றதாவது உண்டா?

சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் (இனி சுருக்கமாக ச.பு.ந. சட்டம்) என்ன சொல்கிறது? அதற்கான விளக்கம் என்ன? என்பதைத் தெரிந்து கொண்டோமானால், காவல் துறையின் புலிப் பூச்சாண்டிக்கு நாம் கொஞ்சமும் அஞ்சத் தேவையில்லை என்ற முடிவுக்கு வரலாம். காவல் துறையினர் எப்படி ஒரு பொம்மைத் துப்பாக்கியைக் காட்டி நம்மை அச்சுறுத்தப் பார்க்கின்றனர் என்பதையும் அவர்களுக்குப் புரிய வைக்கலாம்.

ச.பு.ந. சட்டத்தின்படிதான் இந்திய அரசு 1991இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை விதித்தது. காவல்துறை அதிகாரியின் அறிவிப்பில் தடை செய்யப்பட்ட இயக்கம் என்பது ஐயத்திற்கிடமின்றி விடுதலைப் புலிகளையே குறிக்கும்.

ச.பு.ந. சட்டத்தின்படி விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தது பொருத்தந்தானா என்பதையும், அப்படியே பொருத்தமென்றாலும் அவ்வியக்கத்தை ஆதரிப்பது குற்றமாகுமா என்பதையும் பார்ப்பதற்கு முன் இச்சட்டத்தைப் பற்றி அடிப்படையான சில செய்திகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

பெயரே சொல்வதுபோல், குறிப்பிட்ட சில சட்டப்புறம்பான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவது ச.பு.ந. சட்டத்தின் நோக்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தனி மனிதர்களானாலும், அமைப்புகளானாலும் சட்டப்புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை உறுதியாகத் தடுக்கும் பொருட்டு இயற்றப்பட்ட சட்டமிது.

சட்டப் புறம்பான நடவடிக்கைகள் என்றால் என்ன?

1) இந்திய ஒன்றியத்தின் ஆட்சிப் பரப்பில் ஒரு பகுதியை வேறு நாட்டுக்கு விட்டுக் கொடுக்க முயலுதல், இந்த முயற்சிக்கு ஆதரவளித்தல், இவ்வாறான உரிமைக் கோரிக்கையை ஆதரித்தல்.

2) இந்திய ஆட்சிப் பரப்பில் ஒரு பகுதியைப் பிரித்தல், அதாவது பிரிவினை, இதற்கு ஆதரவு அளித்தல்.

படிப்பகம்

www.padippakam.com



3) இவ்வாறு இந்தியப் பகுதியை வேற்று நாட்டுக்கு விட்டுக் கொடுக்க அல்லது பிரிவினை செய்யத் தனி மனிதர்கள் அல்லது குழுவினரைத் தூண்டுதல்.

இவைதாம் இச்சட்டத்தின்படி சட்டப் புறம்பான நடவடிக்கைகள். சுருங்கச் சொன்னால், இந்திய ஆட்சிப் பரப்பின் எந்தப் பகுதியையும் தனி நாடாகப் பிரிப்பது அல்லது வேற்று நாட்டுக்கு விட்டுக் கொடுப்பது, இவற்றிற்கு முயற்சி செய்தல் அல்லது ஆதரவளித்தல் - இவையே சட்டப் புறம்பான நடவடிக்கைகள். விட்டுக் கொடுப்பும் பிரிவினையும் (cession and secession) என்று சுருக்கமாகச் சொல்லி விடலாம்.

சட்டப் புறம்பான அமைப்பு என்றால் என்ன? மேற்கூறிய சட்டப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகிற, அல்லது மற்றவர்களை ஈடுபடத் தூண்டுகிற அமைப்பு என்று பொருள்.

ஆகவே ச.பு.ந. சட்டத்தின் வழிவகைகள் இந்தியாவிற்குள் பிரிவினைக்கான இயக்கங்களையும் அவற்றிற்கான ஆதரவையும் ஒடுக்கும் நோக்கமுடையவை என்பது தெளிவாகிறது. இந்தியாவிற்கு வெளியே இலங்கையிலோ வேறு நாட்டிலோ பிரிவினைக்காகப் போராடும் இயக்கங்களை ஒடுக்குவதற்கு ச.பு.ந. சட்டத்தில் எள்முனையளவும் இடமில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தி வரும் போராட்டத்தின் நோக்கம் தமிழீழ விடுதலைதான் என்பதில் யாருக்கும் எவ்வித ஐயப்பாடும் இருக்க முடியாது. அவர்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ள தமிழீழ நாட்டின் நிலப்பரப்பில் இந்திய மண் விரற்கடை அளவும் கிடையாது. இலங்கைத் தீவினுள்ளேயே வரலாறு நெடுக தமிழர்கள் வாழ்ந்திருக்கக்கூடிய, இன்றும் வாழ்ந்து வருகிற பல பகுதிகளை அவர்கள் தங்கள் தமிழீழத்திற்குள் சேர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காட்டாக, ஒரு காலத்தில் தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்த அனுராதபுரத்திற்கு அவர்கள் உரிமை கோரவில்லை. தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த மத்திய மலைப் பகுதியில் தமிழர்கள் செறிந்து வாழக்கூடிய பகுதிகளை வேறு சில ஈழ அமைப்புகள் தமிழீழத்தின் பகுதியாகக் கருதியது போல், புலிகள் ஒரு போதும் கருதவில்லை. தொன்மைக் கால வரலாற்றின் படி இலங்கைத் தீவு முழுவதற்குமே தமிழர்கள் உரிமை கொண்டாட முடியும் என்றாலும், புலிகள் இன்றைய இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களை மட்டுமே தமிழீழமாகக் கருதி உரிமை கொண்டாடுகின்றனர். துல்லியமாகச் சொன்னால் திரிகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மூன்று கிழக்கு மாவட்டங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து வட மாவட்டங்களையும் தவிர வேறு எந்த நிலப்பரப்பையும் அவர்கள் தங்கள் தமிழீழத்தில் சேர்த்துக் கொண்டதில்லை.

வெள்ளிடை மலையாக ஒளிரும் இந்த உண்மைகளை எவராலும் மறைக்க முடியாது. தமிழீழத்திற்கான போராட்டம் என்பது இந்தியாவின் எந்தப் பகுதியையும் வேற்று நாட்டுக்கு விட்டுக்

படிப்பகம்

www.padippakam.com



கொடுப்பதற்காகவோ பிரித்துத் தனி நாடாக்குவதற்காகவோ நடத்தப்படுகிற போராட்டம் அல்ல. எனவே ச.பு.ந. சட்டத்தின்படி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்ய வழி இல்லை. ச.பு.ந. சட்டத்தின்படி பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையோ வேறு அயல்நாட்டு விடுதலை இயக்கங்களையோ தடை செய்ய முடியுமென்றால், தமிழீழ விடுதலைக்காகப் போராடும் புலிகளையும் தடை செய்ய முடியும். அது முடியாதென்றால் இதுவும் முடியாது.

இந்திய அரசுக்கு இது நன்கு தெரியும். அதனால்தான் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அது ஒரு காரணமாகக் காட்டவில்லை. அது காட்டியிருந்த காரணங்கள் எல்லாமே பொய்யானவை: தமிழீழ விடுதலைப் புலிகள் அகன்ற தமிழர் தாயகம் அமைப்பதற்காகப் போராடுகிறார்கள் என்று அது காரணம் காட்டியது. அதாவது தமிழகத்தையும் தமிழீழத்தையும் சேர்த்து ஒரே தமிழர் நாடாக்கப் போராடுகிறார்களாம்! இந்தக் குற்றச் சாட்டின் உள் நோக்கம் புரிகிறதல்லவா? இந்திய ஒன்றியத்தின் ஆட்சிப் பரப்பில் ஒரு பகுதியாகிய தமிழ்நாட்டை இந்தியாவிலிருந்து பிரித்து வேற்று நாட்டுக்கு (இலங்கையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் தமிழீழ நாட்டுக்கு) விட்டுக் கொடுக்கப் புலிகள் போராடுகிறார்கள் என்று காட்ட வேண்டும், அப்படிக் காட்டினால்தான் அது ச.பு.ந. சட்டத்தின்படி சட்டப் புறம்பான நடவடிக்கை என்று சொல்லி அவர்களைச் சட்டப் புறம்பான அமைப்பு என்று அறிவித்துத் தடை செய்து ஒடுக்க முடியும்.

இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டைப் பிரித்துத் தனி நாடாக்க முயல்கிறார்கள், அந்த முயற்சிக்கு ஆதரவு கொடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் அதேபோல் கடைந்தெடுத்த ஒரு பொய்தான்.

தமிழ்நாடு தனி நாடாக வேண்டுமா வேண்டாமா என்பதைத் தீர்வு செய்ய வேண்டியவர்கள் தமிழக மக்கள்தாமே தவிர தமிழீழ விடுதலைப் புலிகளோ வேறு எவருமோ அல்லர். தனித் தமிழீழக் கோரிக்கை 1976இல்தான் இயக்கமாக உருவெடுத்தது. ஆனால் 1938இலேயே தந்தை பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்று முழக்கமிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவின் ஒரு பகுதியை வேற்றுநாட்டுக்கு விட்டுக் கொடுப்பதற்கோ பிரித்துத் தனி நாடாக்குவதற்கோ போராடுவது உண்மை என்றால், அதற்காகத்தான் இந்திரா காந்தியின் காலம் தொட்டு இந்தியாவில் அவர்களுக்குப் பயிற்சி முகாம் அமைத்துத் தரப்பட்டதா? அதற்காகத்தான் இந்திய இராணுவம் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்ததா? அதற்காகத்தான் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் வெளிப்படையாகவே அவர்களுக்கு உதவிகள் செய்தாரா? 1987இல் இராசீவ் - செயவர்த்தனா உடன்படிக்கையை அடுத்து இந்திய 'அமைதிப்படை' ஈழத்தின் மீது படையெடுத்து புலிகள் மீது போர் தொடுத்த பிறகும்கூட, அவர்கள் இந்தியாவின் ஒரு பகுதியை வேற்றுநாட்டுக்கு விட்டுக் கொடுப்பதற்கோ பிரித்துத் தனி நாடாக்குவதற்கோ போராடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை யாரும் கூறவில்லையே, ஏன்?

படிப்பகம்

www.padippakam.com



புலிகள் இந்தியாவில் பிரிவினை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள் அல்லது அதற்கு ஊக்கம் கொடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு 1991 மே 21இல் இராசீவ்காந்தி கொல்லப்பட்ட பிறகும் கூட எழவில்லை என்பதே உண்மை. விடுதலைப் புலிகளைத் தடை செய்து இந்திய அரசு பிறப்பித்த ஆணையில்தான் - அதற்கான அறிவிப்பில்தான் - முதன்முதலாக இந்தக் குற்றச்சாட்டு இடம்பெற்றது.

ஆக, இந்தியாவில் புலிகளைத் தடை செய்வதற்கு வேறு சட்டம் இல்லாத நிலையில் ச.பு.ந. சட்டத்தைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்ட இந்திய அரசு அச்சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள காரணங்களைக் காட்டுவதற்கென்றே இந்திய விட்டுக்கொடுப்பும் பிரிவினையுமான குற்றச்சாட்டுகளை புலிகள் மீது புனைந்து இட்டுக்கட்டிச் சுமத்தியது.

புலிகளுக்கெதிரான பயங்கரவாதக் குற்றச்சாட்டும் செல்லாது. புலிகள் இந்தியாவில் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்பதற்கு முதற்பெரும் சான்றாகக் கொள்ளப்படுவது இராசீவ் கொலைதான். ஆனால் இராசீவ் கொலை பயங்கரவாதச் செயல் ஆகாது என்றும், அது வெறும் பழிதீர்ப்பே என்றும், ஆகவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டமாகிய 'தடா' அக்கொலை வழக்கிற்குப் பொருந்தாது என்றும் இந்திய உச்ச நீதிமன்றமே தீர்ப்பெழுதி விட்டது.

ஆகவே இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதற்குச் சட்டத்தின்படியோ உண்மை விவரங்களின்படியோ பொருந்தக்கூடிய காரணம் ஒன்றுகூட இல்லை. இப்படியொரு பொருந்தாத் தடையைச் சொல்லித்தான் பூச்சாண்டி காட்டுகிறது தமிழகக் காவல்துறை.

பொருந்துமோ பொருந்தாதோ, தடை என்று வந்தபின் அதை மீறுவது சட்டத்தின் பார்வையில் குற்றந்தானே என்று கேட்கலாம். சட்டப் புறம்பானதென்று அறிவிக்கப்பட்ட ஓர் அமைப்பை ஆதரிப்பதும் சட்டப் புறம்பான நடவடிக்கைதான். ஆனால் **ஆதரிப்பது** என்பதன் சட்டப்படியான பொருள் என்ன?

அண்மையில் 'இந்து' ஏட்டின் ஆசிரிய உரையில் பிரபாகரன் ஒரு திறமையான படைத் தலைவர் (a talented military leader) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட இயக்கத்தின் தலைவரை இவ்விதம் பாராட்டலாமா? பாராட்டலாம். ஏனென்றால் சட்டப் புறம்பான இயக்கத்தின் தலைவர் இங்கு பாராட்டப்படுவது அவரது சட்டப் புறம்பான நடவடிக்கைக்காக அல்ல. சட்டப் புறம்பான அமைப்பை ஆதரித்தல் என்பதை சட்டப் புறம்பான நடவடிக்கையை ஆதரிப்பதோடு இணைத்தே புரிந்து கொள்ள வேண்டும். சட்டப் புறம்பான இயக்கத்தையோ அதன் தலைவரையோ சட்டப் புறம்பான நடவடிக்கைகளுக்காக ஆதரித்தால் மட்டுமே அதுவும் சட்டப் புறம்பான நடவடிக்கை ஆகும். வேறு எந்தக் காரணத்திற்காக ஆதரித்தாலும் அது சட்டப் புறம்பானது அல்லவே அல்ல. சட்டப் புறம்பான

படிப்பகம்

www.padippakam.com



நடவடிக்கைகள் அல்லாத வேறு எதற்காகவும் நீங்கள் ஆதரிக்கலாம், அரவணைக்கலாம், துணை செய்யலாம், தூக்கி நிறுத்தலாம், போற்றலாம், புகழ்ந்துரைக்கலாம். இதெல்லாம் எவ்வகையிலும் சட்டப் புறம்பானதல்ல.

வேறு வகையில் சொன்னால், தடை செய்யப்பட்ட அமைப்பைத் தடைக்கான காரணங்களை முன்னிட்டு ஆதரிப்பது மட்டுமே தடை மீறலாகும். வேறு காரணங்களை முன்னிட்டு ஆதரிப்பது எவ்வகையிலும் தடை மீறல் ஆகாது. பிரபாகரனைத் திறமையான படைத் தலைவரென்று 'இந்து' எழுதலாம். தமிழீழத்தின் தேசியத் தலைவர் என்று நாமும் எழுதலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னிட்டு ஆதரிக்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் காரணமாகச் சொல்லி புலிகள் தடை செய்யப்பட வில்லை என்பதால் நமது ஆதரவு தடைமீறலாகாது. புலிகள் தமிழகப் பிரிவினைக்காகப் போராடுகிறார்கள் அல்லது மற்றவர்களைப் போராடத் தூண்டுகிறார்கள் என்ற பொய்யை உண்மை என்றே வைத்துக் கொண்டாலும், நாம் அந்த வகையில் அவர்களை ஆதரிக்கவில்லை. அப்படி ஆதரித்தால் மட்டுமே தடை மீறலாகும்.

இறுதியாக ச.பு.ந. சட்டத்தில் குற்றங்களும் தண்டனைகளும் (அத்தியாயம் III) என்றொரு பிரிவு உள்ளது. இந்தப் பிரிவில் குற்றங்களாகக் குறிப்பிடப்படுபவை மூன்றுதான் :

1) சட்டப் புறம்பான அமைப்பில் உறுப்பினராக இருத்தல்.

2) சட்டப் புறம்பான அமைப்பின் நிதிகளைக் கையாளுதல்.

3) சட்டப் புறம்பான நடவடிக்கைகளுக்குப் பயன்படக் கூடியதென்று அறிவிப்புச் செய்யப்பட்ட இடம் தொடர்பான ஆணையை மீறுதல்.

அதாவது தடை செய்யப்பட்ட இயக்கத்தில் உறுப்பினராய் இருப்பதும், அவ்வியக்கத்தின் நிதிகளைக் கையாளுதலும், சட்டப் புறம்பான நடவடிக்கைகளுக்குரிய இடம் தொடர்பான ஆணையை மீறுவதும் குற்றங்கள். இந்தக் குற்றங்களுக்கான தண்டனைகளும் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றன.

மற்றபடி தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது, எழுதுவது, கூட்டம் நடத்துவது, ஊர்வலம் போவது, அவ்வியக்கத்தின் மறைந்த தலைவர் ஒருவருக்கு இரங்கல் தெரிவிப்பது, சுவரொட்டி ஒட்டுவது... இவையெல்லாம் குற்றமென்று அறிவிப்பதற்கு இந்நாட்டில் எந்தச் சட்டமும் இல்லை. அப்படி இருக்குமானால் அது கருத்துரிமைக்கு எதிரானது, அரசமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானது, சனநாயகத்திற்குப் பகையானது என்று உறுதியாகச் சொல்வோம்.

படிப்பகம்

www.padippakam.com



நம் மக்கள் நீண்ட நெடுங்காலம் போராடி எண்ணிலடங்கா இன்னல்கள் உற்று ஈகம் செய்து வென்றெடுத்த உரிமைகளை ஒரு காக்கிச் சட்டைக் காட்டாட்சியிடம் விட்டுத் தரமாட்டோம். காக்கி அதிகாரத்தைக் கட்டுப்படுத்திக் கருத்துரிமைக்குக் காவல்புரியும் கடமை அரசியல் தலைவர்களுக்கு உண்டு. அவர்கள் தங்கள் பதவி அரசியலின் தேவைகளைப் பொறுத்துச் சில நேரம் வீரர்களாய், சில நேரம் கோழைகளாய் இருக்கும் உரிமையை நாம் மறுக்கவில்லை. அவர்களைப் போல் இரட்டை வேடம் பூணும் கலையை நாமறியோம். அவர்களின் குருதி நாளங்களில் சில நேரம் தமிழ்க் குருதியும் சில நேரம் இந்தியக் குருதியும் வேறு சில நேரம் கலப்படக் குருதியும் ஓடட்டும். நாம் தடை போடவில்லை. ஆனால் நமது கருத்துரிமையை, நம் இன மக்கள் போராடும்போது துணை நிற்கிற தேசிய உரிமையை, நம்மினப் போராளிகள் மாவீரர்களாய் மண்ணில் சாயும்போது வீரவணக்கம் சொல்லும் உரிமையை எவர்க்காகவும் எதற்காகவும் இழந்திட ஒப்போம்.

பொருந்தாத் தடைகளின் பூச்சாண்டிகளுக்கு அஞ்சி ஒளிந்து கொள்ளவா இந்தத் தமிழ்நாட்டில் தமிழர்களாய் வாழ்கிறோம்?

- *தமிழ்த்தேசம், கார்த்திகை-மார்கழி 2007*

www.padippakam.com

# 'இந்து'வின் படுகொலைப் பரிந்துரை!

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் இவ்வாண்டு மாவீரர் நாள் உரை குறித்து 'இந்து' ஏடு (2007 திசம்பர் 1) எல்.டி.டி.இ. உயர் தலைவரின் முறைப்பாடு என்ற தலைப்பில் ஆசிரியவுரை தீட்டியுள்ளது.

மாவீரர் நாள் உரையில் இந்துவுக்கு உறுத்தலாயிருக்கும் பகுதியை முதலில் எடுத்துக் கொள்வோம். பிரபாகரன் சொல்கிறார் :

எமது பிராந்தியத்திலே உலகப் பெரு வல்லரசுகளின் இராணுவ, பொருளாதார, கேந்திர நலன்கள் புதைந்து கிடப்பதை நாம் நன்கு அறிவோம். அந்த நலன்களை முன்னெடுக்க உலக வல்லரசுகள் முனைப்புடன் முயற்சிப்பதையும் நாம் விளங்கிக் கொள்கிறோம். இதற்கு இலங்கைத் தீவில் நெருக்கடிநிலை நீங்கி, சமாதானமும், நிலையான நல்லாட்சியும் தோன்ற அனைத்துலக நாடுகள் ஆர்வமும் அக்கறையும் காட்டுவதையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம். இதே நேரம் பேரினவாதச் சிங்கள அரசு உலக நாடுகளின் நலன்களையும் அவை எமது பிராந்தியத்திற் பதிந்திருப்பதையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறது. போலியான பொய்யான பரப்புரைகள் வாயிலாக உலக நாடுகளைத் தமது வஞ்சக வலைக்குள் வீழ்த்தி, தமிழரது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் திருப்பி விடுகின்ற கைங்கரியத்தைச் செய்து வருகிறது. சிங்கள அரசின் வஞ்சக வலைக்குள் வீழ்ந்து, உலக நாடுகள் எமது பிரச்சனையில் எதிர்மறையான தலையீடுகளைச் செய்வதுதான் எமக்கும் எமது மக்களுக்கும் வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

உலக நாடுகள் குறிப்பாகப் பெரு வல்லரசுகள் சிங்கள அரசிற்குச் சார்பாக நடந்து வருகின்றன. சிங்கள அரசு தமிழின அழிப்பை மூர்க்கமாக மேற்கொள்வதையும், அப்பட்டமாகப் போர் நிறுத்த மீறல் செய்துகொண்டே புலிகள் மீது பழி சுமத்தி வருவதையும் இந்நாடுகள் கண்டுங்காணாமல் நடந்துகொள்கின்றன. மொத்தத்தில் சிங்கள அரசின் பொய்ப் பரப்புரையை அவை நம்புகின்றன.

*"தமிழீழ விடுதலைப் புலிகள் இன்றைய உலகில் தனிமைப்பட் டிருப்பதற்கு பிரபாகரனின் மாவீரர் நாள் உரையே சான்று'* என

படிப்பகம்

www.padippakam.com



மகிழ்ச்சி கொள்கிறது இந்து.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கக்கூடிய அரசு ஏதும் உலகில் இல்லை என்பது மட்டுமல்ல, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ளன. இந்தியாவின் நிலைப்பாடு குறித்துச் சொல்லத் தேவையில்லை. சீனம், பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற அரசுகள் சிங்கள அரசுக்கு ஆயுதம் கொடுக்கின்றன. இதையெல்லாம் எண்ணித்தான் புலிகள் உலகில் தனிமைப்பட்டிருப்பதாக இந்து சொல்கிறது. இந்த உண்மைகள் வெளிப்படையானவை, யாவரும் அறிந்தவை. இவற்றுக்கு பிரபாகரன் உரையிலோ வேறு எங்குமோ சான்று தேடவேண்டிய தேவையில்லை. ஆனால் ஒரு விடுதலை இயக்கத்தின் வெற்றியும் தோல்வி யும் உலகநாடுகளின் அறிந்தேற்பைப் பொறுத்ததன்று. அது அந்தந்த நாட்டு மக்களின் அறிந்தேற்பையும் ஆதரவையும் பங்கேற்பையும் பொறுத்ததே.

இந்து ஆசிரியருக்கு வரலாறு தெரியும்தானே? *1789*இல் பிரெஞ்சுப் புரட்சி அன்றைய அய்ரோப்பிய அரசுகளின் ஆதர வோடுதான் நடைபெற்றதா? பிரெஞ்சுப் புரட்சியின் வெற்றியைக் கண்டு அய்ரோப்பியப் பிரபுத்துவ அரசுகள் கிலி கொண்டனவே தவிர, அப்புரட்சியை அறிந்தேற்று விடவில்லை. ஆனால் பிரெஞ்சுப் புரட்சி அய்ரோப்பிய வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் புதுப்பாட்டை வகுத்தது என்பதை மறுக்க முடியுமா?

*1871*இல் உலகின் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியாகிய 'பாரிஸ் கொம்யூன்' நிகழ்ந்தபோது எந்த அரசும் அதை அறிந்தேற்கவோ ஆதரிக்கவோ இல்லை. பாரிஸ் கொம்யூன் முடிவில் நசுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதன் வரலாற்று முக்கியத்துவத்தை மறுக்க முடியுமா?

உலக வரலாற்றுப் போக்கையே புரட்டிப் போட்டது உருசியாவின் நவம்பர் புரட்சி (*1917* நவம்பர் *7*). அந்தப் புரட்சியை அன்றைய உலக நாடுகள் எதுவும் ஏற்கவில்லை என்பது மட்டுமல்ல, எல்லா வல்லாதிக்க அரசுகளும் புரட்சியை ஒழிக்கப் படையெடுக்கவும் செய்தன. அதனாலேயே உருசியப் புரட்சி தவறாகி விடுமா?

*1949* அக்டோபர் முதல்நாள் வெற்றி கண்ட சீனத்துச் செம் புரட்சியை அமெரிக்க வல்லரசும் அதன் கூட்டாளிகளும் உடனே அறிந்தேற்றார்களா? செஞ்சீனத்தை முற்றுகையிட்டு அழிக்க சீட்டோ, சென்டோ போன்ற இராணுவ ஒப்பந்தங்களை உருவாக்கினார்களே! அது மட்டுமா? சீன மக்களால் துரத்தியடிக்கப்பட்ட கோமிண்டாங் ஓடுகாலிக் கும்பல் தைவானில் நிறுவிய அரசுக்கு உண்மையான சீனம் (தேசிய சீனம்) என்று அறிந்தேற்பு வழங்கி, உலகின் மிக அதிக மக்கள் தொகை கொண்ட மக்கள் சீனத்தின் இருப்பையே ஏற்க மறுத்தார்களே! ஐக்கிய நாடுகள் அமைப்பில் அதற்கு உறுப்பாண்மைகூட கிடைக்காமல் இருபது ஆண்டுக்கு மேல் முட்டுக் கட்டை போட்டார்களே! இதனால்

படிப்பகம்

www.padippakam.com



எல்லாம் செஞ்சீனம் மறைந்து போய்விட்டதா? வேறு வழியில்லை என்றானபோது மக்கள் - சீனத்தை அமெரிக்காவும் ஐ.நா.வும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்றே ஏன்?

1959இல் கியூபப் புரட்சியைப் பிற இலத்தீன் - அமெரிக்க நாடுகளே ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இன்று வல்லாதிக்க எதிர்ப்புக்கும் உறுதிக்கும் அந்த நாடுகளெல்லாம் கியூபாவையே வழிகாட்டியாகக் கருதவில்லையா?

இந்துவுக்கும் இந்திய அரசுக்கும் பிடித்தமான ஓர் எடுத்துக்காட்டைத் தருவதானால், 1972ல் வங்க தேசம் விடுதலை பெற்றதை இந்தியாவும் சோவியத்து ஒன்றியமும் சோசலிச முகாமைச் சேர்ந்த கிழக்கு அய்ரோப்பிய நாடுகளுக்கும் மட்டுமே முதலில் ஏற்றுக் கொண்டன. வங்க தேசத்தை ஐ.நா. உறுப்பு நாடாக்கியதற்கு எதிராக - பாகிஸ்தான் - அமெரிக்காவோடு சேர்ந்து பெரும்பாலான அரசுகள் வாக்களித்தனவே, நினைவிருக்கிறதா? முடிவில் அதே அரசுகள் பாகிஸ்தான் உட்பட வங்கதேசத்தை அறிந்தேற்று அதனோடு உறவு ஏற்படுத்திக் கொள்ளவில்லையா?

ஒரு விடுதலைப் போராட்டமோ, சமூகப் புரட்சியோ வெற்றி பெறுவதற்கு உலக நாடுகளின் அறிந்தேற்பும் ஆதரவும் இன்றியமையா நிபந்தனைகள் அல்ல. இருந்தால் நல்லது, இல்லா விட்டாலும் மோசமில்லை என்னும் படியான காரணிகளே அவை.

பொதுவாகச் சொன்னால், நிலைபெற்ற அரசுகள் புதிய மாற்றங்களை விரும்புவதில்லை. மாற்றத்தைக் கொண்டுவரும் ஆற்றல்களை ஆதரிப்பதில்லை. இருப்பதை அப்படியே வைத்துக் கொள்வதிலேயே இந்த அரசுகளுக்கு நாட்டம் உள்ளது.

குறிப்பாகச் சொன்னால், இன்றைய உலகில் அமெரிக்க வல்லாதிக்கத்தின் கை ஓங்கியுள்ளது. விடுதலை ஆற்றல்களுக்குப் புறத் துணையாகவேணும் அமையக்கூடிய சோசலிச முகாம் சிதைந்து போய்க் கிடக்கிறது. இந்தப் பின்னணியில் விடுதலை இயக்கங்களை ஏற்றுக் கொள்ள உலக நாடுகள் முன்வருவது எளிதன்று. இதன் பொருள் உலகம் ஒரு - துருவ உலகம் ஆகிவிட்டது என்பதன்று. வல்லாதிக்க எதிர்ப்பு அரசுகள் குறைந்து போய்விட்டனவே தவிர வல்லாதிக்க எதிர்ப்பு ஆற்றல்கள் குறைந்தோ நலிந்தோ போய்விட வில்லை. அந்த ஆற்றல்கள் அரசுகளாக இல்லாது போனாலும் இயக்கங்களாக வலுப் பெற்று வருகின்றன. தேசிய விடுதலை இயக்கங்கள் உலக வரலாற்றைத் தீர்வு செய்யும் நிலை வளர்ந்து வருகின்றது.

விடுதலைப் புலிகளையானாலும், வேறு உண்மையான தேசிய விடுதலை இயக்கங்களையானாலும் உலக அரசுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து எதிர்த்தாலும் முறியடிக்க முடியாது. விடுதலை இயக்கங்கள் அரசுகளிடமிருந்து தனிமைப்படலாம். ஆனால் அவை மக்களிடமிருந்துதான் தனிமைப்படக் கூடாது. அவற்றினது வலிமையின்

படிப்பகம்

www.padippakam.com



ஊற்றுக்கண் மக்கள்தாமே தவிர அரசுகள் அல்ல.

பிரெஞ்சுப் புரட்சியைப் போல், உருசியப் புரட்சியைப் போல், சீனப் புரட்சியைப் போல், கியூபப் புரட்சியைப் போல், கொரியப் புரட்சியைப் போல்... இன்று ஈழப் புரட்சியும் ஆதிக்க அரசுகளிடமிருந்து தனிமைப்பட்டு உள்ளது. அந்தப் புரட்சிகளைப் போலவே இந்தப் புரட்சியும் மறுக்கவியலா வரலாற்று நியாயத்துடன் தமக்கொரு புதுவாழ்வு தேடும் மக்களைச் சார்ந்து நிற்கிறது. அந்தப் புரட்சிகளையெல்லாம் பின்னொரு கட்டத்தில் உலக அரசுகள் ஒப்புக்கொள்ள நேரிட்டது போலவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அதனால் முகிழ்க்கவிருக்கும் தமிழீழ அரசையும் உலக நாடுகள் அறிந்தேற்க வேண்டிய கட்டாயம் வந்தே தீரும். அப்போது தமிழீழ அரசு கொழும்புக்கும் தில்லிக்கும் கூட நட்புக் கை நீட்டும் நாள் வரும். அன்றாவது இந்து திருந்துமா பார்ப்போம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களிடமிருந்து தனிமைப் பட்டிருந்தால்தான் கவலைப்பட வேண்டும். அப்படி அவர்கள் தனிமைப்பட்டிருப்பதாக இந்துவால் எடுத்துக்காட்ட முடியுமா? விரல்விட்டு எண்ணத்தக்க இளைஞர்கள் தோற்றுவித்த ஒரு குழு இன்று ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக வளர்ந்து நிற்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியுமா? எருமை மாட்டை விற்று வாங்கிய ஒற்றைத் துப்பாக்கியோடு ஆயுதப் பயிற்சி மேற்கொண்டவர்கள் சங்கர் முதல் தமிழ்ச்செல்வன் வரை சற்றொப்ப இருபதாயிரம் போராளிகளின் உயிரிழப்பிற்குப் பிறகும் இந்துவாலேயே மறுக்க முடியாத இராணுவ வலிமையோடு களத்தில் நிற்கிறார்களே, மக்கள் ஆதரவில்லாமலா இது நடந்தது? விடுதலை செய்ய வேண்டிய நிலப்பரப்பில் கிட்டத்தட்ட முக்கால் பங்கை முற்றாக விடுவித்துத் தனி ஆட்சி அமைப்பை நிறுவியிருப்பது, வெறும் கெரில்லாப் படையாகத் தொடங்கி முப்பத்தைந்து ஆண்டு காலப் போராட்டத்தினூடாகத் தரைப்படை, கடற்படை, வான்படை என்று முப்படையாக அணிவகுத்திருப்பது... இந்த அரும்பெரும் சாதனைகள் மக்கள் ஆதரவும் பங்கேற்பும் இல்லாமலா நிகழ்ந்தன?

"வெறும் 2000 பொடியன்கள்" தானே என்று ஏகடியம் செய்து இலட்சம் படையினரைக் கொண்டுபோய் இறக்கிய இந்திய வல்லரசுக்கு அதன் வாழ்வில் என்றுமே மறக்க முடியாத பாடத்தைத் தந்து திருப்பி அனுப்பினார்களே புலிகள், இதுவும் கூட மக்கள் ஆதரவும் பங்கேற்பும் இல்லாமலா நடந்தது?

தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழீழ மக்களிடமிருந்து தனிமைப் படுத்தும் முயற்சியில் படுதோல்வி அடைந்த இந்துவும் இந்தியப் பார்ப்பனிய ஆற்றல்களும் தமிழக மக்களிடமிருந்து அவர்களை அயன்மைப்படுத்தும் முயற்சியில் வெற்றி கண்டது மெய்தான். இராசீவ்காந்தி கொல்லப்பட்டது போன்ற நிகழ்வுகளை அவை இதற்குப் பயன்படுத்திக் கொண்டன. பொய்க் காரணங்களைக் கூறி இந்திய

படிப்பகம்

www.padippakam.com



அரசு விதித்த பொருந்தாத் தடையும், தடா, பொடா போன்ற அடக்குமுறைச் சட்டங்களும் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய உண்மைச் செய்திகளை முழு அளவில் தமிழக மக்களிடம் கொண்டு செல்ல விடாமல் தடுத்து விட்டன.

மூடுபனி இப்போது விலகி வருகிறது. தமிழக மக்களிடம் தமிழீழ ஆதரவு எழுச்சி மீண்டும் வளர்ந்து வருகிறது. அண்மையில் சிங்கள வான்படையின் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கான வீர வணக்க நிகழ்வுகள் தமிழகமெங்கும் நடைபெற்றன.

தமிழக முதலமைச்சரே தமிழ்ச் செல்வனுக்காக இரங்கல் கவிதை எழுதியதும், இந்தக் கவிதையைத் தமிழகத்தின் காங்கிரசுக் கற்றுக் குட்டிகள் மட்டுமல்லாமல், அனைத்திந்திய காங்கிரசுக் குழுவே கண்டிக்க முற்பட்டதும், இறந்த வருக்காக இரங்கல் கூட்டம் நடத்துவதைக்கூட சட்டவிரோதம் என்று தமிழகக் காவல்துறையின் தலைமை அதிகாரியே அறிவித் திருப்பதும்... இவையெல்லாம் தமிழகத்தில் தமிழீழப் போராட்டம் தொடர்பான மக்களின் பார்வை மாறிவருவதற்கும், இந்த மாற்றத்தைக் கண்டு தமிழ்ப் பகைவர்கள் பீதி அடைந்திருப்பதற்குமான அறிகுறிகளே தவிர வேறல்ல.

இந்துவின் சிங்கள இரத்தினத்தையும் இந்தப் பீதி தொற்றிக் கொண்டிருப்பதன் அறிகுறிதான் அதன் ஆசிரியவுரைப் பிதற்றல்:

"தன் சொந்த மக்களுக்கும் தீவு நாட்டைச் சேர்ந்த சக நாட்டவர்க்கும் இத்தனைக் கொடுமையும் துன்பமும், உறுதியின்மையும் ஏற்படச் செய்துள்ள திறமைமிக்க இராணுவத் தலைவர்" பிரபாகரன்!

1948இல் பிரித்தானியர்களிட மிருந்து இலங்கை சுதந்திரம் பெற்று அதிகாரத்தைத் தம் கையில் பெற்ற சிங்களவர்கள் தமிழினத்தை இல்லாதொழிக்க இயற்றிய சட்டங்கள், மலையகத் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டமை - தமிழர்களின் அடையாளத்தை இவ்விதம் சிங்களப் பேரினவாதம் முற்றிலுமாக விழுங்கப்பார்த்தது. இந்த வரலாறு முழுவதையும் மூடி மறைத்து, இலங்கைத் தீவில் தமிழர்கள், சிங்களர்கள் இரு தரப்பினரின் துன்ப துயரத்துக்கும் பிரபாகரனைக் கூண்டிலேற்றுகிறது இந்து.

தமிழின இருப்பை உறுதி செய்துகொள்ளவும் சம உரிமைகளோடு வாழ்வதற்காகப் போராடவும் 1949இல் தந்தை செல்வநாயகம் அவர்களால் தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்டது. தொடர்ந்து தமிழர்கள் நடத்திய அறவழிப் போராட்டங்களைச் சிங்கள இனம் வன்முறை கொண்டு ஒடுக்கியது. இதெல்லாம் நடக்கையில் பிரபாகரன் பிறக்கக்கூட இல்லை அல்லது குழந்தையாகவே இருந்தார்! ஆனால் இதற்கும் அவரையே காரணமாய்க் காட்டுகிறது 'அறிவார்ந்த' இந்து!

சிங்களவர்களால் 1972இல் உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்பு

படிப்பகம்

www.padippakam.com



சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்றது. பௌத்த சமயத்துக்குச் சிறப்புரிமை வழங்கியது. சிங்களப் பேரினவாத அரசு தமிழர்களைச் சமமாக நடத்தவில்லை என்பது மட்டுமல்ல, அவர்களின் இன இருப்பையே இல்லாதொழிக்க முற்படுவதையும் தமிழர்கள் நன்கு உணர்ந்தனர்.

தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழர் ஐக்கியக் கூட்டணி 1976இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூட்டித் தனித் தமிழீழத் தீர்மானத்தை இயற்றி, தமிழர் விடுதலைக் கூட்டணியாக உருப்பெற்றது. காங்கேசன் துறை இடைத்தேர்தலில் தமிழீழக் கோரிக்கையை முன்னிறுத்திப் போட்டியிட்டுத் தந்தை செல்வா மாபெரும் வெற்றி கண்டார். 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் விடுதலைக் கூட்டணி தமிழீழ மக்கள் முன் வைத்த ஒரே கோரிக்கை 'தனித்தமிழீழம்!' வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 19 தொகுதிகளில் 18 தொகுதிகளை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி வெற்றி கண்டது. இதன்வழி தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலைக்குத் தமது சனயாகக் கட்டளையைத் தந்தனர். தமிழீழ மக்களின் இந்தச் சனநாயகக் கட்டளையைச் சிங்களப் பேரின வாதம் மதிக்காமல், வன்முறை கொண்டு தொடர்ந்து நசுக்கியது. இதன் எதிர்வினையாகவும் மக்களைப் பாதுகாக்கவும் தமிழ் இளைஞர்கள் போராளிக் குழுக்களாக இணைந்து ஆயுதம் தரித்தனர். இதற்கெல்லாம் முன்னதாக, 1972இலேயே ஆயுதமெடுத்த 'புதிய தமிழ்ப் புலி'களில் ஒருவரே பிரபாகரன்.

தமிழீழக் கோரிக்கை வரலாற்றுத் தேவையால் எழுந்ததே தவிர பிரபாகரனின் தீவிரவாதக் கற்பனையில் உதித்ததன்று.

'இலங்கைத் தீவு இரத்தத் தீவு' ஆனதன் வரலாற்றுக் காரணங்களைப் பார்க்க மறுத்து எல்லா வற்றுக்கும் பிரபாகரன் ஒருவரே காரணம் என்று விரல் நீட்டும் இந்துவின் அறியாமை பரிதாபத்துக்குரியது. இறுதியாகப் பார்த்தால் எதிர்வகையில் சிங்களப் பேரின வாதமும், நேர் வகையில் தமிழீழக் கோரிக்கையுமே பிரபாகரனைப் பெற்றெத்தன என்பதே உண்மை. பிரபாகரனின் மக்கள் சார்ந்த அரசியலையும் அதன் நீட்சியாக எழுந்த விடுதலைப் போரையும் மறைக்கவே அவரைத் திறமைமிக்க இராணுவத் தலைவர் என்று போற்றுவதுபோல் பாசாங்கு செய்கிறது இந்து.

மாவீரர் நாள் உரையில் பிரபாகரன் சொல்கிறார்:

"அன்று இந்தியா தனது தெற்கு நோக்கிய வல்லாதிக்க விரிவாக்கமாக எமது தேசிய பிரச்சனையிலே தலையீடு செய்தது. அடிப்படையில் அந்த ஒப்பந்தம் தமிழரது நலனுக்காகவோ நல்வாழ்விற் காகவோ செய்யப்பட்டதன்று. தீர்வு என்ற பெயரில் 57இல் கைச்சாத்தான பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் இருந்த அதிகாரங் களைக்கூடக் கொண்டிராத எலும்புத்துண்டு போன்ற ஒரு அரைகுறைத் தீர்வை இந்தியா அன்று எம் மக்கள் மீது கட்டிவிட முயற்சித்தது. ஓர் இலட்சம்

படிப்பகம்

www.padippakam.com



இராணுவத்தினரின் பக்கபலத்தோடும் இரண்டு அரசுகளின் உடன்பாட்டு வலிமையோடும் எட்டப்பர் குழுக்களின் ஒத்துழைப்போடும் அந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்திட இந்தியா தீவிரமாக முயற்சித்தது. தமிழரது தேசியப் பிரச்சனையின் அடிப்படைகள் எதையும் தொட்டு நிற்காத, தமிழரின் அரசியல் அபிலாசைகள் எதையும் பூர்த்தி செய்யாத அந்த அரைகுறைத் தீர்வைக்கூடச் செயற்படச் சிங்களப் பேரின வாதிகள் அன்று அனுமதிக்க வில்லை."

இது குறித்து இந்து எழுதுகிறது:

*"20 ஆண்டு முன்பு இந்தியா செய்த அதே தவற்றை சர்வதேசச் சமூகம் செய்வதாகக் குறை கூறுகிறார். ஆனால் 1987 சூலைக்குப் பிறகு நடந்தவற்றைப் பற்றிக் குறிப்பே இல்லை. புலிகள் இராசீவ் காந்தியைப் படுகொலை செய்ததும் வேறு பல தீவிரவாத, பயங்கரவாதச் செயல்களையும் விட்டுவிடுகிறார்."*

இராசீவ் - செயவர்த்தனா ஒப்பந்தத்தையும், அதைத் தமிழீழ மக்கள் மீது சுமத்த நடத்திய படையெடுப்பையுமே இந்தியா செய்த தவறு எனக் குறிப்பிடுகிறார் பிரபாகரன். இராசீவ் - செய வர்த்தனா ஒப்பந்தக் கைச்சாத்திடலுக்கு நேரில் சென்ற இந்து ராம், அந்த ஒப்பந்தத்தையும் இந்தியப் படையெடுப்பையும் மாய்ந்து மாய்ந்து ஆதரித்த அவர் இப்போது என்ன சொல்கிறார்? ஒப்பந்தமும் படையெடுப்பும் வெற்றி பெறாதது ஏன்? இது பற்றிய ஒரு விவாதத்துக்கு அவர் தயாரா? 1987க்குப் பிறகு நடந்தவற்றைப் பற்றி பிரபாகரன் ஒன்றும் சொல்லவில்லையாம்.

இராசீவ் - செயவர்த்தனா ஒப்பந்தம் என்பது தமிழர்களைக் கலந்து கொள்ளாமலே அவர்களின் அமைப்புகள் பங்கேற்காமலே இந்தியாவும் சிங்களமும் செய்து கொண்ட ஒப்பந்தம். மூன்றாம் தரப்பினரான இந்தியாவும் இன ஒடுக்குமுறைக்குக் காரணமான சிங்களமும் செய்துகொண்ட ஒப்பந்தம். தமிழர்களுக்குச் சமத்துவமும் சமஉரிமையும் கொடாமல் அவர்களின் விருப்பங்களை எவ்வகையிலும் நிறைவு செய்யாத ஒப்பந்தம். தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத, சிங்கள மக்களும் ஒப்புக்கொள்ளாத இந்த ஒப்பந்தம் என்னாயிற்று? அதன் வரலாற்றுப் பங்களிப்பு என்ன? சொல்லுமா இந்து. அது இந்தியா செய்த தவறு என்று பிரபாகரன் சொல்வது ஒரு மென்மையான குற்றாய்வுதான். இதுகூட பொறுக்கவில்லை இந்துவுக்கு!

இராசீவ் - செயவர்த்தனா ஒப்பந்தம் ஓர் அரைகுறைத் தீர்வைத் திணிக்க முயன்றது என்கிறார் பிரபாகரன். வரலாற்று நீரோட்டத்தில் அது அடித்துச் செல்லப்பட்டு விட்டது என்பதே இதற்குப் போதிய சான்றல்லவா?

ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்தியாவும் சிங்களமும் ஒப்பந்தக் கூறுகளைச் செயல்படுத்தவில்லை என்பதும், அதனாலேயே திலீபன் பட்டினிப் போர் தொடுத்து உயிர்நீத்தார் என்பதும் இந்துவுக்குத்

படிப்பகம்

www.padippakam.com



தெரியாதா? புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட புலிகள் நஞ்சுண்டு மாண்டதற்கும் இந்திய அரசே பொறுப்பு என்பது குறித்து இந்து என்ன சொல்கிறது?

புலிகளிடம் ஆயுதப் பறிப்புச் செய்த இந்தியாவே துரோகக் குழுக்களுக்கு 'ரா' உளவு அமைப்பு மூலமாக ஆயுதங்களைக் கொண்டு போய்க் கொடுத்தது. தக்க சான்றுகளோடு மெய்ப்பிக்கப்பட்ட இந்த உண்மையை இந்து மறைக்க முயல்கிறது. இந்திய அமைதிப் படைத் தளபதியாக இருந்த அர்கிரத் சிங் அண்மையில் வெளியான தமது நூலில் இந்த உண்மையைப் போட்டு உடைத்தாரே, இதுவும் புலிகளின் பரப்புரையே என்று இந்துவால் ஒதுக்கித் தள்ள முடியுமா?

1987 சூலைக்குப் பின் நடந்தவற்றைப் பற்றி பிரபாகரன் உரையில் குறிப்பே இல்லை என்று வருத்தப்படுகிறது இந்து. ஆனால் 1987 சூலைக்குப் பின் நடந்தவற்றில் இந்துவுக்கு நினைவிருப்பது 'இராசீவ் கொலையும் வேறு பல தீவிரவாத, பயங்கரவாதச் செயல்களும்' மட்டுமே. 1987 சூலைக்கும் 1991 மே 21க்கும் இடைப்பட்ட சற்றொப்ப நான்காண்டு காலத்தில் நிகழ்ந்தவை எதுவும் இந்துவுக்கு நினைவில்லை. ஈழ மண்ணில் இந்தியப் படை நிகழ்த்திய கொடுமைகள் கண்டு மனம் பொறுக்காமல்தானே நம் மதிப்புக்குரிய - இந்துவின் மதிப்புக்கும் உரிய - நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் "IPKF என்றால் அமைதிப்படையன்று, அது Indian People Killing Force - மக்களைக் கொல்லும் இந்தியப் படை" என்று சாடினார். புலிகள் ஒரு கொசுவை அடித்தால்கூட கண்டித்து ஆசிரியவுரை தீட்டும் இந்து இந்தியப் படை ஈழமண்ணில் நிகழ்த்திய கொலைகள், வன் கொடுமைகள் பற்றிய முனகியதுகூட இல்லையே, ஏன்?

அமைதிப்படைத் தளபதி அர்கிரத் சிங் தமது நூலில் எழுதியுள்ளபடி, "இந்தியத் தூதர் தீட்சித் பிரபாகரன் பேச்சு நடத்த வரும்போது சுட்டு விடு, இது பிரதமர் ஆணை" என்று கட்டளையிட்டது பற்றி 'இந்து' என்ன சொல்கிறது? பிரபாகரன் உத்தரவுப்படிதான் இராசீவ் கொல்லப்பட்டார் என்றே வைத்துக் கொண்டாலும், பிரபாகரனைக் கொல்ல முதலில் உத்தரவிட்டது இராசீவ் காந்திதான் என்பதை இந்தியப் படைத் தளபதியே வெளிப்படுத்தி விட்டாரே! அயல்நாட்டுத் தலைவரைப் படுகொலை செய்வதற்கு சூழ்ச்சி செய்யும் முற்றுரிமையை இராசீவ் காந்திக்கே வழங்கியுள்ளதா இந்து?

பயங்கரவாதம் என்பதில் குடிப் பயங்கரவாதம் (individual terrorism) போலவே அரசப் பயங்கரவாதமும் (state terrorism) உண்டு என்பதும், பொதுவாக அரசப் பயங்கரவாதத்தின் எதிர்வினையே குடிப்பயங்கரவாதம் என்பதும் இந்து ஆசிரியரின் அரசியல் அறிவுக்கு எட்டவில்லையா? இந்திய, சிங்கள அரசுகளின் பயங்கரவாதச் செயல்களை ஒருபோதும் கண்டிக்காமல் பல வகையிலும் நியாயப்படுத்தி வரும் இந்துவுக்குப் புலிகளின் பயங்கர வாதம் பற்றிப் பேசத் தகுதி

படிப்பகம்

www.padippakam.com



இல்லை.

இந்து எழுதுகிறது:

*"இலங்கை இனச் சிக்கலுக்கு இராணுவத் தீர்வை நாட வேண்டாமென்று கொழும்புக்கு எடுத்துச் சொல்லும்படி உலகத்திற்கு அறம்போதித்து 14 மணிநேரம் கூட ஆகவில்லை. பிரபாகரன் உடல் ஊனமுற்ற ஒரு பெண்ணை மனித வெடிகுண்டாக அனுப்பித் தன் பரம வைரியும் சமூகநலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவைக் கொல்ல முயன்றுள்ளார். அடுத்த 24 மணி நேரத்தில் கொழும்பு புறநகர்ப் பகுதியில் பெரிய துணிக்கடையில் புலிகள் ஒரு சிப்பக் குண்டை வெடிக்கச் செய்து 19 அப்பாவி உயிர்களைப் பறித்துள்ளனர். இலங்கை இனச் சிக்கலுக்கு அதாவது தமிழர் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது."*

தமிழீழ விடுதலைக் கொள்கைக்கு இரண்டகம் செய்து, சிங்களப் பேரினவாதத்தின் கைத்தடி ஆனவர்தான் டக்ளஸ் தேவானந்தா. தன் தலைமையில் ஈபிடிபி எனும் ஆயுதக் குழுவை நடத்திக் கொண்டிருப்பவர். தற்போது இலங்கையின் சமூகநலத் துறை அமைச்சராக இருக்கிற தேவானந்தா தமிழகத்தில் இருந்தபோது சூளைமேட்டில் திருநாவுக்கரசு என்ற தலித் இளைஞரை அநியாயமாகச் சுட்டுக் கொன்றவர். ஈழத்துச் செல்வந்தர் ஒருவரின் குழந்தையைக் கடத்திச் சென்று பிணைத் தொகை கேட்டவர். இவரையும் கருணாவையும் போன்ற துரோகிகள்தாம் இந்துவின் கதாநாயகர்கள்!

கொழும்பின் பெரிய துணிக்கடை ஒன்றில் சிப்பக்குண்டு வைத்ததாகப் புலிகள் மீது எவ்வித ஆதாரமுமின்றிப் பழி சுமத்துகிறது 'இந்து'. இத்தனை ஆண்டு கால வரலாற்றில் புலிகள் ஒருபோதும் சிப்பக்குண்டு வைத்து அப்பாவிகளைச் சாகடிக்கும் வேலையைச் செய்ததில்லை. சாமான்ய சிங்கள மக்களின் உயிருக்குப் புலிகள் சிறுதீங்கும் விளைவிப்பதில்லை என்ற உண்மைக்கு கட்டுநாயகா, அனுராதபுரம் வான்படைத் தளங்கள் மீது அவர்கள் நடத்திய தாக்குதலே சான்று.

அப்பாவி உயிர்கள் மீது உண்மையிலேயே கரிசனம் உண்டா இந்துவுக்கு? 2001 போர் நிறுத்த அறிவிப்புக்குப் பிறகு தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சார்ந்த மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமைப் போராளியுமான ஜோசப் பரராசசிங்கம் கிறிஸ்துமஸ் நாளில் தேவாலயத்தில் வழிபாட்டில் இருந்தபோது சுட்டு வீழ்த்தப் பட்டாரே...

பி.பி.சி. செய்தியாளர் நிர்மலா ராஜன், ஈழத்து இதழாளர் அய்யாத் துரை நடேசன், படையியல் ஆய்வாளர் சிவராம தராக்கி ஆகிய ஊடகத் துறையினர் சுட்டுக் கொல்லப்பட்டார்களே... இந்த அப்பாவி உயிர்கள் குறித்துக் கவலைப்பட்டுள்ளதா இந்து?

படிப்பகம்

www.padippakam.com



இலங்கை இனச்சிக்கலுக்கு இராணுவத் தீர்வு காண முடியாது என்று வகுப்பெடுக்கிறது இந்து. மாவீரர் நாள் உரையில் பிரபாகரன் குறிப்பிடுவதைக் கேளுங்கள்:

"இராணுவ அடக்குமுறை என்ற அணுகுமுறை மூலம் தமிழரின் தேசியப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்பதை மகிந்த அரசு இனியும் உணர்ந்து கொள்ளப் போவதில்லை. இராணுவ மேலாதிக்கத்தை எட்டிப் பிடிக்க வேண்டும், தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துச் சிங்களமயமாக்கி விட வேண்டும் என்ற ஆதிக்க வெறியும் சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து அகன்றுவிடப் போவதில்லை. தொடர்ந்தும் கோடிகோடியாகப் பணத்தைக் கொட்டி உலகெங்கிலிருந்தும் அழி வாயுதங்களையும் பேராயுதங்களையும் தருவிக்கவே மகிந்த அரசு முனைப்புடன் செயற்படுகிறது. எனவே மகிந்த அரசு தனது தமிழின அழிப்புப் போரைக் கைவிடப் போவதில்லை."

பிரபாகரனை அமைதியின் பகைவராகவும் பயங்கரவாதியாகவும் படம்பிடித்துக் காட்ட முற்படுகிறது இந்து.

1994ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் நாள் சந்திரிகா இலங்கையின் அதிபர் பொறுப்பேற்றார். அவர் பதவி ஏற்றபின் பிரபாகரன் தாமாக முன்வந்து நவம்பர் 19ஆம் நாள் போர் நிறுத்தத்தை அறிவித்தார். இரு தரப்பும் முறையாய்ப் போர் நிறுத்தம் அறிவித்துச் செயற்படுத்து முன்... இதுவரை போர்ச் சேதங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அன்றாட வாழ் வினைச் சீர்செய்தாக வேண்டும் என்றும், அவர்கள் சுதந்திர நடமாட்டத்திற்கும் அச்சமற்ற வாழ்விற்கும் திரும்ப வேண்டும் என்றும் அவர் தெளிவாக வலியுறுத்தினார்.

தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவது, மீன்பிடிக்கும் உரிமையை மீட்டளிப்பது, நிரந்தரமாகப் போர்நிறுத்தம் கடைபிடிப்பது ஆகிய கோரிக்கைகளை சந்திரிகா அரசிடம் புலிகள் வலியுறுத்தினார்கள். இவற்றில் ஒன்றைக்கூடச் செயற்படுத்தவேயில்லை சந்திரிகா. தமிழ் மக்கள் மீதான படையெடுப்புகளையும் சிங்கள இராணுவம் நிறுத்திக் கொள்ளவில்லை.

1995 மார்ச் 28ஆம் நாளுக்குள் சந்திரிகா அரசு தமிழ் மக்கள் மீதான தடைகளுக்கும் போருக்கும் முற்றுப்புள்ளி வைக்காவிடில் போர் நிறுத்த அறிவிப்பு குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டி வரும் என பிரபாகரன் அறிவித்தார். இதன் பிறகும் நிலைமை மாறவில்லை. பிரபாகரன் அப்போதும் பொறுமை இழக்காது 1995 ஏப்ரல் 19ஆம் நாள் வரை போர் நிறுத்தத்தை நீட்டித்தார். சிங்களப் பேரினவாத அரசு அப்போதும் தன் நிலையை மாற்றிக் கொள்ளவில்லை.

2002ஆம் ஆண்டு ஆனையிறவுப் போரில் வென்று பெருவலிமை யோடு இருந்த நிலையில் பிரபாகரன் போர் நிறுத்தம் அறிவித்தார். விடுதலைப் புலிகள் மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக் கொண்டனர்:

படிப்பகம்

www.padippakam.com



1. அதியுயர் பாதுகாப்பு வளையங்களிலிருந்து சிங்கள இராணுவத்தை விலக்கிக் கொள்ள வேண்டும்.

2. தமிழ் மக்கள் மீன்பிடிப்ப தற்கான தடைகள் நீக்கப்பட வேண்டும்.

3. சிங்கள அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டுவரும் துரோகக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும்.

நார்வே அரசின் அனுசரனை யோடு இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டது சிங்கள அரசு. இவற்றை நிறைவேற்றுவதற்குக் கால வரம்பும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால் ஒன்றைக்கூட சிங்கள அரசு நடைமுறைப்படுத்தவில்லை. துரோகக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையாததோடு தன் வேலைக்கு அவர்களைப் பயன் படுத்தியும் கொண்டது.

ஆழிப் பேரலையால் பாதிக்கப் பட்ட தமிழ்ப் பகுதிகளில் துயர் தணிப்புப் பணிகள் மேற்கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் கவுசல்யன், பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட மூத்த தளபதி சங்கர், திரிகோண மலையின் மூத்த தளபதி பாவா உள்ளிட்ட 200 விடுதலைப் புலிகள் துரோகக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்டனர். ஒப்பந்தத்துக்கு மாறாகச் சிங்களப் பேரினவாதத்தின் வளர்ப்பில் துரோகக் குழுக்கள் செய்து வந்த படுகொலைகளை ஐ.நா. மனித உரிமை ஆணையமும், அய்ரோப்பிய கண்காணிப்புக் குழுவுமே அறிக்கையிட்டுச் சுட்டிக் காட்டின. சிங்களப் பேரின வாதத்தை ஆதரித்து நிற்கும் அமெரிக்கா கூட துரோகக் குழுக்களின் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அறிவுறுத்தியது. இந்தச் செய்திகள் எல்லாம் கூடக்குறைய இந்து ஏட்டிலும் வந்தவைதாம்.

போர்நிறுத்தம் செயலில் இருந்த போதுதான் ஜோசப் பரராசசிங்கம் படுகொலை செய்யப்பட்டார். ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் பொங்குடுத் தீவில் தர்சினி எனும் இளம்தமிழ்ப்பெண் சிங்களக் கடற்படையினரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானாள். அது வெளியே தெரியக்கூடாது என்று அப்பெண்ணின் உடல் உறுப்புகளையும் சிதைத்து சிங்களக் கடற்படையினர் படுகொலை செய்தனர். இதனைக் கண்டித்து ஊர்வலம் சென்ற யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள் மீது தடியடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

போர்நிறுத்தத்திற்கு எதிரான இந்நிகழ்வுகள் எதற்கும் விடுதலைப் புலிகள் பதிலடி கொடுக்கவில்லை. போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதற்கு நேர்மையாக நடந்து கொள்வதிலேயே பிரபாகரன் உறுதியாக இருந்தார். அதே போது தமிழீழ மக்கள் தம்மைத் தாமே காத்துக் கொள்ள ஆயுதம் தரித்தனர். யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற இரண்டு கொலை களுக்கு 'எல்லாளன் படை' உரிமை கொண்டாடியது. 'மட்டு-அம்பாறை பொங்கியெழும் படை',

படிப்பகம்

www.padippakam.com



"புலிகளைப் போல் நாங்கள் பொறுமை காக்க முடியாது" என்றே அறிவித்தது.

இத்தனைக்குப் பிறகும் 2003 அக்டோபர் 31ஆம் நாள் பிரபாகரன் மீண்டும் 'இடைக்காலத் தன்னாட்சி ஆணையம்' குறித்த திட்டத்தை முன்வைத்தார். அப்போது இத்திட்டத்தை 'இடைக்காலத் தனியரசுக்கான திட்டம்' என்று இந்து ஏகடியம் செய்தது. சிங்கள அரசு இத் திட்டத்தை ஏற்கவும் இல்லை. மாற்றுத் திட்டம் ஏதும் முன்மொழியவும் இல்லை.

இப்போது அதிபராக இருக்கிற இராசபட்சர் இலங்கை ஒற்றை ஆட்சியின் கீழ்தான் செயல்படும் என்று உறுதியளித்து, அமைதி முயற்சிக்கும் அதை மேற்கொள்ளும் நார்வேவுக்கும் எதிராகப் பரப்புரை செய்து, சிங்கள இனவெறிக் கட்சிகளின் ஆதரவோடு தேர்தலில் வென்றவர் என்பது கவனத்துக்குரியது. இடைக்காலத் தன்னாட்சி ஆணையத் திட்டத்தின் அடிப்படையில் மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும் என பிரபாகரன் வலியுறுத்தினார். சர்வதேச நாடுகளுக்கும் அமைதி முயற்சியைத் தொடங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். ஆனால் தமிழ் மக்கள் குடியிருப்புகள், மருத்துமனைகள் மீது குண்டு போட்டுப் படுகொலை செய்வதை இராசபட்சர் அரசு நிறுத்திக் கொள்ளவில்லை. அமைதிச் சிறகை முறித்துப் போட்டது சிங்களப் பேரினவாதம். இந்துவின், சிங்கள இரத்தினம் புலிகள் பயங்கரவாதிகள் என்று பொய் பரப்புகிறது.

எத்தனைத் தடைகள் வந்த போதும் அவற்றையெல்லாம் தாண்டி அமைதிவழித் தீர்வுக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்தான் அழுத்தம் கொடுத்தார். போரில் பெரு வலிமை பெற்று விளங்கியபோதும் அமைதியை நாடியவர் அவரே. சந்திரிகாக்களும் ரணில்களும் இராசபட்சர்களும் தமிழ் மக்கள் மீது போரைச் சுமத்தியவர்கள் உலகை ஏய்ப்பதற்காகவே அமைதி நாடகம் ஆடியவர்கள். இந்த நாடகத்துக்கு அவ்வப்போது வசனம் எழுதிக் கொடுப்பதே இந்துவின் கைங்கரியம்.

சிங்கள அரசின் போர் நிறுத்த மீறலை எத்தனை அரசுகள் கண்டித்தன? சிங்கள வான்படை குண்டு வீசிக் கொன்ற செஞ்சோலைக் குழந்தைகளுக்காக எத்தனை அரசுகள் வருந்தின? உலகறிந்த அமைதித் தூதுவர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட ஐந்து புலிகளைப் படுகொலை செய்து விட்டு, இனி ஒவ்வொருவராகக் கொல்வோம் என்றும் கொக்கரித்த சிங்கள அரசை எத்தனை நாடுகள் கண்டித்தன?

மாவீரர் நாள் உரையில் பிரபாகரன் சொல்கிறார்:

"...சமாதானத்திற்காக உழைத்த எமது தவப்புதல்வன் தமிழ்ச்செல்வனைச் சர்வதேசம் சமாதானம் பேசியே சாகடித்திருக் கிறது..."

படிப்பகம்

www.padippakam.com



இந்த 2007ஆம் ஆண்டில் இந்து 'புதிய யோசனை' ஒன்றை முன் வைக்கிறது.

"இலங்கையின் ஒற்றுமை - ஒருமைப்பாட்டின் கட்டமைப்புக்கு உட்பட்டு கூட்டாட்சி வழியில் பேசித் தீர்ப்பதன் மூலமே நியாய மான, நிலையான தீர்வுகாண முடியும். ஆனால் இன்று உலகில் பெரும்பாலானவர்களுக்கு நன்கு புரிவது என்னவென்றால் பயங்கர வாத விடுதலைப் புலிகளால் அரசமைப்புக்குட்பட்ட அவ்வகைத் தீர்வை ஏற்றுக் கொள்ள முடியாது..."

1988ஆம் ஆண்டு பிரேமதாசா காலத்தில் விடுதலைப்புலிகள் ஓர் அரசியல் கட்சியாக வடக்கு- கிழக்கு மாகாணத்தில் தேர்தலில் போட்டியிட முன்வந்தனர். அப்போதே 'தனிநாடு, பிரிந்து போவது குறித்துப் பேசினால் கடும் தண்டனை வழங்க வழி செய்யக் கூடிய இலங்கை அரசமைப்பின் 6ஆவது பிரிவை நீக்க வேண்டும், இந்தப் பிரிவை உள்ளடக்கிய இலங்கை அரசமைப்பின் மீது உறுதி ஏற்க முடியாது' என அறிவித்தவர்கள் புலிகள்.

பாலத்தீன மக்களிடம் போய் இஸ்ரேலின் ஒற்றுமை - ஒருமைப் பாட்டின் கட்டமைப்புக்கு உட்பட்டுத் தீர்வு காணச் சொல்ல முடியுமா இந்துவால்? செர்பிய அரசமைப்புக்கு உட்பட்டு கொசோவாவின் உரிமைக் கோரிக்கைக்குத் தீர்வுகாணும்படி கேட்க முடியுமா? ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி, உலகிற்கு இளைத்தவர்கள் தமிழர்கள்தாமா?

இலங்கை அரசமைப்பு என்பது தமிழ்த் தேசிய இனத்துக்கு ஓர் அடிமை முறி. அதுவே சிக்கல் என்னும்போது அதற்கு உட்பட்டுத் தீர்வு காண வேண்டும் என்று சொல்வது நோய் நீங்காத வகையில் மருந்து சாப்பிடச் சொல்வதைப் போன்றதே.

பாகிஸ்தான் அரசமைப்புக்கு உட்பட்டுத்தான் வங்கதேசத்தின் பிறப்புக்கு இந்தியா உதவியதா? என்பதை இந்து சொல்லட்டும். இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்ட தீர்வைத்தான் காண வேண்டும் என்று தமிழீழ மக்களைக் கட்டாயப்படுத்த சிங்களத்துக்கோ இந்தியத்துக்கோ இந்துத்துவத்துக்கோ உரிமை இல்லை. உலக அரசுகள் எல்லாம் கூடி அப்படி ஒரு தீர்வைச் சொன்னாலும் தமிழீழ மக்களும் புலிகளும் பிரபாகரனும் அதை ஏற்க வேண்டிய தேவையில்லை. உலகில் பெரும்பான்மையின் கருத்து பற்றி இந்து பேசுகிறது.

அட மண்டூகமே! தமிழீழ மக்களில் பெரும்பான்மையினர் என்ன விரும்புகிறார்கள் என்பதைப் பொறுத்து அவர்களின் வருங்காலம் உறுதி செய்யப்படுமே தவிர, 'உலகப் பெரும்பான்மை' என்ன விரும்புகிறது என்பதைப் பொறுத் தன்று.

பிரபாகரன் அமைதித் தீர்வை நாடவில்லையாம். அவர் பயங்கர வாதியாம், போர் வெறியராம், அப்பாவி மக்களை படுகொலை செய்யும் 'போல்பாட்டி'யராம்! கம்பூச்சிய மக்களைக் கூட்டம் கூட்டமாய்க்

படிப்பகம்

www.padippakam.com



கொன்றுபோட்ட போல்பாட்டுடன் பிரபாகரனை ஒப்பிட்டு மகிழ்வது இந்துவுக்கு வாடிக்கையே. ஆனால் தமிழர்கள் மீது இனப்படுகொலையை ஏவிய இந்திய ஆட்சியாளர்களையோ சிங்கள ஆட்சியாளர்களையோ இந்து ஒருபோதும் இட்லரியக் கொலைகாரர்களாக வர்ணித்ததில்லை.

சரி, இந்து சொல்லும் அமைதித் தீர்வுதான் என்ன?

"எல்.டி.டி.ஈ. கணக்கில் கொள்ளத்தக்க அரசியல்-இராணுவ ஆற்றலாக இருந்து வரும்வரை - அல்லது திரு. பிரபாகரன் அதன் உயர் தலைவராக இருந்து வரும் வரையாவது - தமிழர் சிக்கலை நியாயமான, நிலையான முறையில் தீர்க்க வழியில்லை."

அண்ணா சாலை அக்கிரகாரத்தின் அந்தரங்கம் அம்பலமாகி விட்டது. விடுதலைப் புலிகளின் அரசியல் - இராணுவ ஆற்றலை ஒடுக்கினால்தான் தீர்வு வருமாம்! விடுதலைப் புலிகளை எப்படி யாவது ஒழித்துக் கட்டவேண்டும் என்பதே இதன் பொருள். இராணுவ ஆற்றலை இராணுவத்தைக் கொண்டுதான் ஒடுக்க முடியும் என்பது இந்துவுக்குத் தெரியாததல்ல. ஆகவே போர் நிறுத்தம் வேண்டாம், படை நடத்து என்று சிங்கள அரசிற்கு அது கீதோபதேசம் செய்கிறது. இது அமைதித் தீர்வா, வன்முறைத் தீர்வா என்பதை எவரும் எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

இதற்கொரு மாற்றுத் தீர்வும் இந்துவின் கைவசம் உள்ளது. அது பிரபாகரனின் தலைமை இருக்கக் கூடாது என்பதே. பிரபாகரனைத் தலைமையிலிருந்து இறக்குவதற்கு எந்த வழியும் சொல்லவில்லை இந்து இதிலிருந்தே தெளிவாகிறது. பிரபாகரனைப் படுகொலை செய்ய வேண்டும் என்பதே அதன் அழுத்தமான பரிந்துரை. அலங்காரச் சொற்களுக்குள் கொலைக் கருவியை மறைத்து வைத்துக் கொண்டு இரைதேடும் இந்துவின் இரத்த வெறியைப் புரிந்து கொள்வோம்.

- தமிழ்த்தேசம், கார்த்திகை-மார்கழி 2007

படிப்பகம்

www.padippakam.com

# வீழ்த்தப்பட்ட வெண்புறா வேங்கையாய்ச் சிலிர்த்தெழும்!

தமிழீழத்தில் குற்றுயிரும் குலையுயிருமாய்த் துடித்துக் கொண்டிருந்த அமைதிப் புறாவை ஒரேயடியாகக் கொன்றே விட்டது சிங்களப் பேரினவாத அரசு.

2001 போர்நிறுத்த உடன்பாட்டை அது கை கழுவிவிட்டது. அத்தோடு போர்வெறிக் கூச்சலும் தொடங்கி விட்டது.

"கிழக்கை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டோம், வடக்கில் யாழ் குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கிறது, எஞ்சியிருக்கும் வன்னிப் பெருநிலத்தையும் வெகு விரைவில் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விடுவோம், ஆறு மாதத்தில் புலிகளை அறவே ஒழித்து விடுவோம்" என்றெல்லாம் சிறிலங்கா இராணுவத் தளபதி கொக்கரித்துள்ளார்.

இது நடக்குமா, நடக்காதா? என்பது ஒருபுறம் இருக்கட்டும். போர் நிறுத்தத்தை நீக்கம் செய்வதாக சிங்கள அரசு அறிவித் திருப்பதும், ஆறு மாதத்தில் புலிகளை அறவே ஒழித்து விடுவோம் என்று படைத் தளபதி முழங்கியிருப்பதும் ஒன்றைத் தெளிவாக வெளிப்படுத்தி விட்டன. அதாவது சிங்கள் அரசுக்கு அமைதித் தீர்வு, அரசியல் தீர்வு என்பதில் எல்லாம் துளியும் நம்பிக்கையில்லை. அது முழுக்க முழுக்க இராணுவத் தீர்வையே நாடுவது பட்டப்பகல் போல் வெட்ட வெளிச்சமாகி விட்டது. இதற்குப் பிறகும் புலிகளைப் பார்த்து "வன்முறையைக் கைவிடுங்கள், பேச்சுவார்த்தை மூலம் சிக்கலுக்குத் தீர்வு காண முயலுங்கள்"! என்று யாரும் அறிவுரை சொல்லிக் கொண்டிருக்க முடியாது, பாருங்கள்!

இராசபட்சரின் சிங்களப் படை ஆறு மாத காலத்தில் புலிப் படையைப் பூண்டோடு அழித்து விடுவதாகவே வாதத்திற்கு வைத்துக் கொள்வோம். அத்தோடு சிக்கல் தீர்ந்து விடுமா? இலங்கைத் தீவின் தேசிய இனச் சிக்கல் என்பது பிரபாகரனின் கண்டுபிடிப்பு அன்று. தேசிய இனச் சிக்கல்தான் புலிகளைப் பிறப்பித்ததே தவிர, புலிகள் சிக்கலைப் பிறப்பிக்கவில்லை. புலிகளைப் பூண்டோடு ஒழித்து விட்டால் அதன் பிறகும் சிக்கல் மிஞ்சி நிற்கும். அது புதிய புலிகளைப் பிறப்பிக்கும். அப்படியானால் இராணுவத் தீர்வு காண்பதற்குப் புலிகளை ஒழித்தால் போதாது, அவர்களின் விளைநிலமாகத் திகழும் ஈழத்

படிப்பகம்

www.padippakam.com



தமிழினத்தையே ஒழித்துக் கட்ட வேண்டும். ஆகவே சிங்களப் பேரினவாதம் எதிர்பார்க்கும் தீர்வு என்பது தமிழின அழிப்பே தவிர வேறன்று, இனப் படுகொலையே தவிர வேறன்று.

எனவே போர்நிறுத்த நீக்கமும், கிழக்கைப் பிடித்துக் குடா நாட்டைப் பிடித்து வன்னியைப் பிடித்து முழுக்கப் பிடிக்கப் போகிறோம் என்ற சாற்றுகையும் சிங்கள அரசின் போர்வெறி அந்தரங்கத்தையும், தமிழின அழிப்பு நோக்கத்தையும் உலகறியச் செய்து விட்டன. இவ்வாறு இது ஒருபுறம் சிங்கள அரசுக்கு அரசியல் தோல்வி! மறுபுறம் புலிகளுக்கு அரசியல் வெற்றி!

வெகுவிரைவில் புலிகளை ஒழித்து விடுவோம் என்று சிங்களப் படைத் தளபதிகளும் அரசியல் தலைவர்களும் வீரவசனம் பேசுவது இது முதல் முறையன்று. கடந்த 1979 முதற்கொண்டே இந்த வசனம் அடிக்கடி பேசப்பட்டு வருவதுதான். உச்சரிக்கிற ஆட்கள் மாறியுள்ளனரே தவிர வசனம் மாறவில்லை.

விசயரத்னா, அதுலத் முதலி, அனிருத்த ரத்தவத்தை... இந்த வரிசையில் இப்போது கோத்தபய இராசபட்சர்! சிங்களப் போர்வெறியின் குறியீடுகளாக விளங்கிய இவர்களைப் போலவே வரிசையாக வந்து போன படைத்தளபதிகள்... இன்றைக்கிருக்கும் சரத் பொன்சேகா வரை! அத்தனை பேரும் வெகு விரைவில் புலிகளை ஒழிக்கப் புறப்பட்டவர்கள் தாம்! பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது! அவர்கள் ஒழித்துக் கட்டுவதற்குப் புலிகளும் இருந்து கொண்டே இருக்கிறார்கள்! வலுப்பெற்று வளர்ந்து கொண்டும் இருக்கிறார்கள்.

சிங்களத் தளபதியின் கொக்கரிப்பு, தமிழகத்தில் தமிழினப் பகைவர்களைக் குதூகலிக்கச் செய்திருப் பது போலவே, தமிழின உணர்வாளர்களைக் கவலை கொள்ளச் செய்திருப்பது மெய். பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனின் வீரச் சாவும், அடுத்து ஒவ்வொருவராக முடிக்கப் போகிறோம் என்று பகைவன் செய்த அறிவிப்பும் (செய்கிறவன் சொல்ல மாட்டான்!) தலைவர் பிரபாகரனே தீர்ந்தார் என்று திட்டமிட்டுப் பரப்பப்பட்ட வதந்தியும் நம்மவர்களின் கவலையைக் கூடுதலாக்கி விட்டன.

முதலாவதாக, அது ஒரு போர்க்களம், அங்கே எந்நேரமும் எதுவும் நிகழலாம் என்பது உண்மை. இரண்டாவதாக, வெற்றிப் பாதை என்பது நேர்கோட்டில் அமைவதன்று. வளைவுகள், திருப்பங்கள், ஏற்ற இறக்கங்கள் நிறைந்த மலைப்பாதை அது. இழப்புகளும் காயங்களும் இல்லாத போர்க்களம் எதுவுமில்லை. ஆனால் எத்தனையோ உறுதியின்மைகளுக்கு நடுவில் விடுதலைப் போருக்குள்ள உறுதியான வரலாற்று ஏரணத்தை (historical logic) உள்வாங்கிக் கொள்ள வேண்டும். விடுதலைப் போர்கள் மக்களுக்கானவை, விடுதலைப் போர்களின் பகைவர்கள் 'மக்களுக்கு எதிரானவர்கள் என்பதே இந்த' வரலாற்று ஏரணத்துக்கு அடிப்படை. வரலாற்று நோக்கில் மக்களே வெல்லற்கரிய ஆற்றல் படைத்தவர்கள். பகைவர்கள் - பிற்போக்காளர்கள் - அந்த

படிப்பகம்

www.padippakam.com



நேரத்துக்குப் பேராற்றல் மிக்கவர்களாகத் தோன்றினாலும் வரலாற்றுப் போக்கில் கோழைகள், தோழர் மாவோ சொன்னது போல் வெறும் 'அட்டைப் புலிகள்'.

மக்களாற்றலை இனங் கண்டு அணிதிரட்டி ஒழுங்கமைத்து, விடுதலைப் போராட்டத்தில் வழிநடத்துவதே விடுதலை இயக்கத்தின் பணி. இதனைப் புலிகள் சிறப்புறச் செய்துள்ளார்கள், இனியும் செய்வார்கள் என்பதே அவர்களின் வெற்றி இரகசியம்.

இந்திய-சீன எல்லைப் போர், இந்திய-பாகிஸ்தான் போர்கள்... இவை போன்று சட்டெனத் தொடங்கி சட்டென முடிவதன்று விடுதலைப் போர். இந்தப் போர்களெல்லாம் சில நாளில் முடிந்து போயின. ஆனால் பொதுவாக விடுதலைப் போர் என்பது நீண்டு செல்லக்கூடிய ஒன்று. 'நீடித்த போர்' (protracted war) என்று மாவோ சொல்வார். சீன விடுதலைப் போர் கிட்டத்தட்ட முப்பதாண்டு நீடித்தது. வியத்நாம் விடுதலைப் போரும் அப்படித்தான்.

அரபு நாடுகளுக்கும் இசுரேலிய அரசுக்கும் இடையே நடந்த போர்கள் நாட்கணக்கில் நடந்து முடிந்தன. ஆனால் பாலத்தீன விடுதலைப் போர் ஆண்டுக் கணக்கில் நீண்டு செல்வதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

விடுதலைப் போர் நீண்டு செல்லக்கூடிய போராக இருப்பதோடு பல்வேறு வடிவங்களில் நடைபெறக் கூடியதுமாகும். நாடுகளுக்கிடையிலான போர்கள் பொதுவாக மரபுவழிப் போர் முறையிலேயே நடைபெறும். ஆனால் விடுதலைப் போர்கள் பொதுவாகக் கரந்தடிப் (கெரில்லா) போர்முறையிலிருந்து மரபுவழிப் போர் முறைக்கு வளர்ந்து செல்லும். இதுவும்கூட நேர்கோட்டு வளர்ச்சியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. ஒரே நேரத்தில் வெவ்வேறு களங்களில் வெவ்வேறு போர்முறைகளில் சமர் புரிய வேண்டி வரலாம். ஒரே களத்தில் வெவ்வேறு போர் முறைகளை இணைக்கவும் நேரிடலாம். மரபுவழிப் போர்முறைக்கு வளர்ந்த பிறகு மீண்டும் கரந்தடிப் போர்முறைக்குத் திரும்பிச் செல்லவும் நேரிடலாம். எல்லாப் போர்முறைகளையும் நிறுத்தி வைத்து விட்டு அரசியல் போராட்டங்களில் தங்கி நிற்கவும் வேண்டி வரலாம். உணர்ச்சியின்பாற் பட்டோ விருப்புவெறுப்புகளைச் சார்ந்தோ இந்த மாற்றங்களைச் செய்ய முடியாது, செய்யக் கூடாது. புறநிலைமைகளையும் அக ஆற்றல்களையும் காய்தல் உவத்தலின்றி கணித்துப் போர் முறைகளையும் போராட்ட வடிவங்களையும் தீர்மானிக்க வல்ல விடுதலை இயக்கமே இறுதியில் வெல்லும். வள்ளுவர் வழிகாட்டுகிறார்:

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்

- திருக்குறள் 471.

இந்த அளவுகோல்களைத் தமிழீழ விடுதலைப் போருக்குப் பொருத்திப் பாருங்கள். கடந்த முப்பதாண்டு காலத்தில் அது

படிப்பகம்

www.padippakam.com



எப்படியெல்லாம் வளர்ந்து இந்த நிலையை அடைந்துள்ளது? அது எத்தகைய திருப்பங்களை யெல்லாம் கடந்து வந்துள்ளது? அது கண்ட வெற்றிகளும் தோல்விகளும் என்ன? ஏற்றங்களும் சரிவுகளும் என்ன? இவற்றையெல்லாம் தொகுத்து எழுதப் புகின் வரலாறாகி விடும். எடுத்துக்காட்டுக்குச் சிலவற்றை மட்டும் நினைவுகூர்வோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கரந்தடிப் போர் முறையிலிருந்தே விடுதலைப் போரைத் தொடங்கினார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. 1984இலேயே யாழ் மாவட்டத்தை அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டார்கள். அவர்கள் மரபுவழிப் போர் முறைக்கு மாறும் செயல்வழி இந்தியப் படையெடுப்புக்கு முன்பே தொடங்கி விட்டது. ஆனால் இந்தியப் படையெடுப்பு அவர்களை முழுக்க முழுக்கக் கரந்தடிப் போர்முறைக்கு தள்ளி விட்டது. தமிழீழ நிலப்பரப்பு முழுவதையும் இந்தியா தன் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த போதே அம்மக்களின் மனப் பரப்பை இழந்தது. இந்தியப் படை ஈழத்தில் நுழைந்ததற்கும் புலிகள் மீது ஆயுதத் தாக்குதல் தொடுத்ததற்கும் இடைப்பட்ட குறுகிய காலத்தில் புலிப்படை போரை நிறுத்தி வைத்து விட்டு வெகுமக்களின் அறப் போராட்டங்களை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த அறப் போராட்டத்தின் உச்சமாகத்தான் சொட்டு நீரும் அருந்தாமல் திலீபன் பட்டினிப் போர் புரிந்து மாண்டான்.

விடுதலைப் போரில் புலிகள் இராணுவ வகை யில் நிலப்பரப்பை இழப்பதும் மீட்பதும் மீண்டும் இழப்பதும் மீண்டும் மீட்பதும்... புதிய செய்திகளே அல்ல. முழு நிலப்பரப்பையும் கைப்பற்றுவ தாலேயே விடுத்லைப் போரை நசுக்கி விடலாம் என்று மனப்பால் குடிக்கும் சிங்களப் பேரின வாதம் இந்தியப் படையின் பட்டறிவைக் கணக்கில் கொண்டதாகத் தெரியவில்லை. முழு நிலப்பரப்பையும் கைப்பற்றிய பிறகு இந்தியா முழுத் தோல்வியுடன் ஈழத்தை விட்டு வெளியேற நேரிட்டது என்பதை சிங்களம் மறந்து விட்டது போலும்.

இந்தியப் படை வெளியேறியதிலிருந்து இன்று வரை மரபுவழிப் போர்முறை, கரந்தடிப் போர் முறை, அரசியல் போராட்டங்கள் என்று தேவையைப் பொறுத்து அனைத்துச் செயல்வடிவங்களுக்கும் புலிகளின் உத்திகள் இடமளிப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீண்டு செல்லும் விடுதலைப் போரில் விடுதலைப் படையின் தளப்பகுதிகளும் மாற்றத்துக்கு உட்பட்டவையே. சீனப் புரட்சியின் புகழார்ந்த நிகழ்வுகளில் ஒன்றாகிய நெடும்பயணம் (Long march) இதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும். சீனத்தின் தெற்கே அமைந்த காண்டனை விட்டு வடக்கே சோவியத்து நாட்டின் எல்லையை ஒட்டிய யேனானுக்குத் தளமாற்றம் செய்ய வேண்டியதாயிற்று. அதற்காக அவர்கள் காட்டிய வீரம் ஈடிணையற்றது, செய்த தியாகம் அளப்பரியது.

யாழ்ப்பாணம்தான் தொடக்கத்தில் புலிப்படையின் தலைமைத் தளமாகத் திகழ்ந்தது. யாழ்ப்பாணத்தைத் திரும்பக் கைப்பற்ற சிங்களப் பேரினவாத அரசுகள் துடியாய்த் துடித்தன. மக்கள் செறிந்து வாழும்

படிப்பகம்

www.padippakam.com



யாழ்ப்பாணத்தின் மீது படை செலுத்துவது பாரிய அளவில் பொதுமக்களின் உயிரிழப்புக்குக் காரணமாகி, மோசமான அரசியல் விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்ற அச்சம் ஜெயவர்த்தனாவுக்கே இருந்தது. ஆனால் சந்திரிகா எந்தக் கவலையும் இல்லாமல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் போரை ஏவினார். பொதுமக்களின் உயிரிழப்பைத் தவிர்க்கும் நோக்குடன் புலிப்படை யாழை விட்டு வெளியேறி வன்னிக் காட்டுக்குப் பின்வாங்கிற்று. புலிப்படையோடு ஐந்து இலட்சம் மக்களும் வெளியேறிச் சென்றார்கள். சந்திரிகா எதனைத் தன் இராணுவ வெற்றியாகக் கொண்டாடினாரோ அதுவே அவரின் மிகப் பெரிய அரசியல் தோல்வியும் ஆயிற்று.

வன்னியையும் கைப்பற்றி விட்டால் புலிகளை ஒழித்து விடலாம் என்று சந்திரிகா கனவு கண்டார். அதற்காகவே 'ஜெயசிக்குறு' என்ற சிங்களப் பெயரில் படை நடவடிக்கை ஒன்றைத் தொடங்கினார். ஜெயசிக்குறு என்றால் 'வெற்றி உறுதி' என்று பொருளாம். வவுனியாவிலிருந்து புறப்பட்ட ஜெயசிக்குறு படையணிகள் வன்னிப் பெருநிலப்பரப்பினுள் நுழைந்து புலிப்படையின் கடும் எதிர்ப்பைச் சமாளித்துக் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறின. புலிப்படை சிங்களப் படையைத் தடுத்துக் கடுஞ் சமர் புரிந்து பாரிய இழப்புகளை உண்டுபண்ணுவதும் சற்றே பின்வாங்கி மீண்டும் தடுத்துப் போரிடுவதுமாக நகர்ந்து கொண்டிருந்தது. ஒன்றரை ஆண்டு காலம் இந்தப் போர் நீடித்தது. வன்னிப் பெருநிலத்தின் மையமான மாங்குளம் வரை சிங்களப் படை முன்னேறி வந்து விட்டது. அகலக் கால் வைத்து அளவுக்கு அதிகமாகத் தலையை நுழைத்து புலி வாயில் மாட்டிக் கொண்டதை அதன் பிறகே சிங்களப் படையால் உணர முடிந்தது.

ஜெயசிக்குறு என்றால் வெற்றி உறுதிதான் - சிங்களத்துக்கு அல்ல, புலிப்படைக்கே என்பதுதான் முடிவு. சிங்களப் படை ஒன்றரையாண்டு காலம் பேரிழப்புகளோடு போர் நடத்திக் கைப்பற்றிய நிலப்பரப்பைப் புலிப்படை மூன்றேநாளில் மீட்டது. கிளிநொச்சியில் வீரப்பெண் விதூஷா வெற்றிக் கொடி ஏற்றிய போது புலிப்படையின் வலிமையைப் புவியறிந்தது.

ஜெயசிக்குறு வெற்றியும் அடுத்து ஆனையிரவு வெற்றியும் தந்த பெருவலிமையோடுதான் புலிகள் தாங்களாகவே போர்நிறுத்தம் அறிவித்தார்கள். அமைதிவழித் தீர்வுக்கு அவர்கள் தந்த வாய்ப்பைச் சிங்களப் பேரினவாதம் பயன்படுத்திக் கொள்ளத் தவறியது.

புலிகளை அழிப்பதன் மூலம் ஈழத் தமிழினத்தைக் காப்பற்றதாக்கி, அடக்கியொடுக்கி, இலங்கைத் தீவை முழுக்க முழுக்க சிங்கள பௌத்த நாடாக்கிக் கொள்வதே கொழும்புவின் நீண்டகாலத் திட்டம். இத்திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியில் இந்தியாவும் அமெரிக்காவும் உடந்தை. சிங்களப் பேரினவாதம், இந்தியப் பார்ப்பனியம், அமெரிக்க வல்லாதிக்கம் ஆகியவை தமிழீழத்துக்கு எதிரானதோர் அச்சாகச் செயல்பட்டு வருகின்றன. கொழும்பு, தில்லி, வாசிங்டன் ஆகிய மூன்று முனைகளைக் கொண்ட இந்த அச்சை உடைத்தெறியும் அரசியல்-

படிப்பகம்

www.padippakam.com



படையியல் ஆற்றலாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் வளர்ந்து, வருவதைத் தடுக்கவே உலகப் பிற்போக்கு துடியாய்த் துடிக்கிறது.

எளிதில் வரப்பெற்றதன்று புலிகளின் வலிமை. இணையிலா வீரமும் ஈடிலா ஈகமும் மட்டுமல்ல, இவற்றுக்கும் மேலே தேர்ந்து தெளிந்த விடுதலை அரசியலும்தான் அவர்களை இந்த நிலைக்கு உயர்த்தியுள்ளது.

"யாழைப் பிடித்து விட்டோம், கிழக்கைப் பிடித்துக் கொண்டிருக்கிறோம்" என்று சிங்களம் கொக்கரித்துக் கொண்டிருந்த போதே ஓசையின்றி ஒரு புதிய படையணி வன்னித் தாயின் வயிற்றில் வளர்ந்து கொண்டிருந்தது. அதுவே புலிகளின் வான்படை. பகைவனின் படையிலக்குகளைக் குறி தவறாமல் தாக்கி விட்டுப் பத்திரமாகத் தளம் மீண்டு அது தன் பிறப்பை உலகிற்கு அறிவித்துக் கொண்டது. தற்கொடைத் தாக்குதல் முறையும் வான்படைக் குண்டு வீச்சும் இணைந்த புதுமையான எல்லாளன் போர் நடவடிக்கையில் சிங்கள வல்லூறுகள் சிதறக் கண்டோம்.

புலிகள் தமது வரலாற்றில் எத்தனையோ இழப்புகளையும் தோல்விகளையும் கூட சந்தித்துள்ளார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் இத்தனை இழப்புகளினூடாகவும் தோல்விகளினூடாகவும் அவர்கள் வளர்ந்துள்ளார்களா? இல்லையா? இல்லை என்று விடையளிக்க மாற்றாரும் துணிய மாட்டார்.

புலிகள் அரசியல் வகையில், இராணுவ வகையில் பல தவறுகளும் கூடச் செய்திருக்கலாம். நாம் மறுக்கத் தேவையில்லை. அவர்களும் கூட மறுக்க மாட்டார்கள். பிழையாப் பெருமை (infallibility) போப்புகளுக்கு மட்டுமே இருக்கலாம். லெனின் கூறியதுபோல், தவறே செய்யாமலிருக்க ஒரே வழி செயல்படாமலிருப்பதுதான். ஆனால் எல்லாத் தவறுகளையும் மீறி விடுதலைக் குறிக்கோளில், அதற்காகத் தம் மக்களை அணிதிரட்டி அரசியல்-இராணுவக் களங்களில் வழிநடத்துவதில் அவர்கள் சரியாகவே இருந்துள்ளார்கள் என்பது உறுதி. உள்ளூர்ப் பிற்போக்காளர்கள் தொடங்கி உலகப் பிற்போக்காளர்கள் ஈறாக எல்லாரும் புலிகளை நஞ்சாய் வெறுப்பதே அவர்கள் சரியாக இருப்பதற்குச் சான்று எனலாம்.

புலிகளால் ஆபத்து! என்று தமிழ்நாட்டுக் கழிசடைகள் சொல்கின்றன. புலிகளால் பேராபத்து! என்று இந்திய அரசு மிரள்வது மட்டுமல்ல, அதன் உளவு நிறுவனங்கள் புலிகளுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யாத நாளில்லை. இதோ அமெரிக்க உளவு நிறுவனம் (FBI) சொல்கிறது: விடுதலைப் புலிகள் இயக்கம்தான் உலகிலேயே மிகவும் ஆபத்தானது.

புதுயார்க்கின் இரட்டைக் கோபுரத்தைத் தகர்த்து உலக அளவில் இயங்கும் அல்கொய்தாவை விடவும், தங்கள் நாட்டுக்குள் தங்கள் மக்களைச் சார்ந்து நின்று போராடும் விடுதலைப் புலிகளே ஆபத்தானவர்கள் என்று அமெரிக்க உளவு நிறுவனம் கருதுகிறது என்றால், வல்லாதிக்கம் தன் கொடும் பகையெனக் கருதுவோரை வல்லாதிக்க எதிர்ப்பாளர்கள் தம் உயிர் நட்பெனத் தாங்க வேண்டாமா? இந்தியாவில், தமிழகத்தில் வல்லாதிக்க எதிர்ப்பாளர்கள் - இடதுசாரிகள்

படிப்பகம்

www.padippakam.com



- முற்போக்காளர்கள் இது குறித்துச் சிந்தித்துப் பார்க்கட்டும்.

போர்நிறுத்தத்தைச் சிங்கள அரசு கைவிடுவதாக அறிவித்திருப்பதை நார்வே கண்டித்துள்ளது. வேறு பல அரசுகளும் கூட குறை கூறியுள்ளன. புலிகளோ போர்நிறுத்தத்தைத் தொடரவே விருப்பம் தெரிவித்துள்ளனர். முடியவே முடியாது. போர் நடத்தியே தீருவோம் என்று சிங்கள அரசு முரசு கொட்டுகிறது. பிரபாகரன் இருக்கும் வரை அமைதி இல்லை என்று இந்து வழியில் இராச பட்சரும் சொல்லி விட்டார். சிங்களத்துக்குக் கொலைவெறி தலைக்கேறிவிட்டது தெளிவு. வன்னிப் போர்க்களத்தில் வாங்கிக் கட்டாமல் அது தணியப் போவதில்லை.

அமைதிப் புறாவை வீழ்த்தி விட்ட இறுமாப்பில் சிங்களப் பேரினவாத அரசு சிரித்துக் கொண்டிருக்கிறது. வீழ்த்தப்பட்ட வெண்புறா வெகு விரைவில் வேங்கையாய்ச் சிலிர்த்தெழும். அப்போது தெரியும் சிரிப்பது யார்? வரலாற்றின் காலக் குண்டு வெடித்து சிங்களப் பேரினவாதம் சின்னாபின்னமாய்ச் சிதறக் கண்டு கதறப் போவது யார்? என்று.

மாவீரர் கனவு பலிக்கும், தமிழீழம் நாளை பிறக்கும் என்பது கண்டு மகிழ வேண்டிய கனவன்று. அது போராடி அடைய வேண்டிய இலக்கு என்பதைப் புலிகளும் தமிழீழ மக்களும் நன்கறிவார்கள். வீரமும் ஈகமும் பாவிய விடுதலைப் போராட்டப் பாதையில் அவர்கள் உறுதியாக முன்னேறிச் செல்லும்போது பயணத் துணை நாமின்றேல் வேறு யார்? கலங்காத் தெளிவுடனும் கனிந்த துணிவுடனும் நம் கடமையை நாம் செய்வோம்.

- *சமூகநீதித்தமிழ்த்தேசம், தை (சனவரி) 2008*

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிக்கவும்... பரப்பவும்...




| | | | |
|---|---|---|---|
| தனி இதழ் | - | ரூ. | 8/- |
| ஓராண்டுக் கட்டணம் | - | ரூ. | 100/- |
| ஆறாண்டுக் கட்டணம் | - | ரூ. | 500/- |
| புரவலர் | - | ரூ. | 1000/- |

எல்லாத் தொடர்புகளுக்கும்

சிவ. காளிதாசன்
1434 (36/22), இராணி அண்ணா நகர், சென்னை - 600 078.
பேச : 9283222988

படிப்பகம்